எனக்கு காலணியை அணிய வைத்தவளே!
கல்வியை நான் கற்க
வியர்வையை சிந்தியவளே!
என்னுயிர் காக்க
உன்னுயிரை தர துணிந்தவளே! வார்த்தையால் நீ
பட்ட இன்னல்களை என்னால் சொல்ல
முடியவில்லை! அம்மா!! அம்மா!

**G. அபிநயா ஸ்ரீ**
IInd Year B.A ENGLISH

## புத்தக காதலன்

உன்னை பார்க்கும் தடை உடைத்து
உன்னை நெருங்க பயந்தேன்
உன்னை நெருங்கியதும்
உன்மேல் காதல் கொண்டேன் ...!

அந்த காதல் என்
சிறையிலிருந்து மீட்டு
சிறகு கொடுத்து
வானில் பறக்க வைத்து
சிம்மாசனத்தில் ராணியாய்
அமர வைத்த என் புத்தக
காதலனுக்கு நன்றி.

**S. Jegadeeshwari**
BBA II Year

## கண்டேன் அம்மா !

உன் சுமையில்
என் சுகம் கண்டேன் !
உன் துடிப்பில்
என் துக்கம் கண்டேன் !!
உன் உணர்வில்
என் உயிரைக் கண்டேன் !
உன் நட்மில்
என்
நன்மை கண்டேன் !!
என் ஆயுள் உன் அன்பில்
என் ஆயுள் கண்டேன்!
உன் கோபப் பேச்சில்
என் திருத்தம் கண்டேன் !!
உன் உருகலில்
என் வளர்ச்சி கண்டேன் !
உன்னால் மட்டுமே இன்று
நான் என்னைக் கண்டேன் அம்மா !!

**இந்திர குமாரி. கு**
II B.A., English

## என் மனதின் சிறகுகள்

அழகைப் பார்த்து மயங்காதே,
அது உன்னை விரைவில் ஏமாற்றி விடும்!
ஆசை வார்த்தைகளில் மூழ்காதே, ஆசை
அதிகம் பொங்க, ஆபத்தும் அதிகம் நெருங்கும்!
இன்பமே நிலைக்க விரும்பாதே, துன்பத்தையும்
ஏற்கும் தைரியத்தையும் வளர்த்து கொள்!
ஈகையை இயன்றவரை செய், அப்போது தான்
நீ கையேந்த வேண்டிய நிலை இருக்காது!
உயர்ந்த பண்புகளையே கடைபிடி,
நிச்சயம் ஓர்நாள் மிகசக் சிறந்த உயரத்தை
தொடுவாய் !
ஊரார் பேச்சை வாங்கிக்கொள், உனக்கும் தோன்றும்
நல்லதை காதில் எடு, கெட்டதை காற்றில் விடு
எண்ணம்போல் வாழ்க்கை! அதனை
ஏழையிலும் மறவாதே!
ஐயம் தவிர்த்து வீரம் கொள்!
ஒளியை நோக்கி பயணம் செய்.
ஓடை வாழ்க்கை கடலில் நீந்த பயிற்சி தரும்
ஔடதமாய் இரு, உன்னை நேசிப்போருக்கு!

**ரா. கௌசிஹா**
வணிகவியல் மற்றும் கணினி பயன்பாடு
முதலாமாண்டு

## நட்பு

நீ வெற்றி பெறும் பொழுது சொல்வேன்
நீ என் நண்பன் என்று நீ தோல்வி அடையும்
பொழுது சொல்வேன் நான் உன் நண்பன் என்று
பழகும் முன் முகம் பார்த்து வரும் ஒரு சில நட்பு
பழகியபின் அன்பு பார்த்து வரும் ஒரு சில நட்பு
சுயநலம் பார்த்து வரும் ஒரு சில நட்பு
பணம் பார்த்து வரும் ஒரு சில நட்பு
துன்பம் வரும் போது மட்டுமே தெழியும் எது
உண்மையான நட்பு என்று !!

**யோகேஸ்வரி .பா**
II B.A., English

## SECOND TO NONE

There is a voice that calls me within It's not the same as the common din for it invokes me a sort of passion. It appeals to me to leave a lasting impression and to chase my dreams for saking all fun. It is the desire to be second to none. And made the mistake of looking back capitalizing on the opportunity. Many competitors flourished and hopes of victory had almost perished. Then, the inner voice investigated me to continue to run. It is the desire to be second to none. The moving water tells me to move on and let by gones be bygones. The soothing breeze brings a mesmerizing scent but the inner voice compels me to shine like the sun. It is the desire to be second to none. Sometimes the mirage distracts me in my stifling task and the shadowy trees tempt me to stop and ask the deep sea entices me to stand still and to just realise my will and again the inner voice remains me of my mission.

It is the desire to be second to none. I enjoy the pain, the inner voice brings me will . This torture to help me reach somewhere?

I want the agony to stir me to shatter every shackle in this tormenting world ! All the odds shall I be able to tackle. I shall definitely get the job done and accomplish my desire to be second to none.

**M.P. NIVITHA SANKARI**

**III B.Sc., Computer Science Shift I**

## வாழ்க்கை

பகலவன் தன் பணியை முடித்து விடைபெறும் பொன்னிற மாலை நேரம். குயில்கள் கானம் பாடும் மரங்களுக்கு நடுவே ஒரு சிறய குடிசை, அது தான் செல்வனின் வீடு.

செல்வன் பத்தாம் வகுப்பு படிக்கும் சிறுவன். செல்வனின் தாய் பள்ளிக்குச் சென்றுள்ள தன் மகன் எப்போது வருவான் என்று ஆவலாக வாசலினையே பார்த்துக் கொண்டிருந்தாள். செல்வனும் வீட்டிற்கு வந்தாயிற்று. ஆனால், பள்ளி முடித்து வீடு திரும்பும் வேளையில் வழக்கமாக இருக்கும் உற்சாகமும் புன்சிரிப்பும் இன்று அவனிடத்தில் இல்லை.

செல்வனின் தாய் அறிவொளி, என்னப்பா உடம்பு ஏதும் சரி இல்லையா? என்று கேட்க, செல்வன் கடுகடுப்பான குரலில் உடம்புக்கெல்லாம் ஒன்னும் இல்லை என்றான். என்ன நடந்தது செல்வா, இன்றைக்கு ஏன் இவ்வளவு கோவமா பேசுற...

ஆமாம்மா கோவம் தான். அதுவும் என் மேல் தான் என்றான் செலவன். அட...! என்ன சொல்ற செல்வா உனக்கு உன் மேல கோவமா? ஏன்டா நீ ஏதாவது தப்புப் பண்ணியா என்ன?

அதெல்லா இல்ல மா. எனக்கு இப்பெல்லாம் என்னையே எனக்கு பிடிக்கமாட்டிங்கறது; என்னோட இந்த எடுப்பான பல்லும், கண்மை போல இருக்ற என்னோட நிறமும், குச்சி மாதிரி இருக்ற உடம்பும் எனக்கு சுத்தமாப் பிடிக்கல. இதனாலேயே எல்லோரும் என்ன கிண்டல் பண்றாங்க.

என்னோட நண்பர்கள் எல்லாருமே படிப்பில் ரொம்ப ஆர்வமா இருக்காங்க. ஆனா எனக்கு எப்பவும் விளையாட்டு மட்டும் தான் பிடிச்சிருக்கு அதுலதான் ரொம்ப ஆர்வமும் இருக்கு. நா ஏம்மா அவங்களைப் போல இல்ல. நான் மட்டும் வித்யாசமா இருக்ற மாதிரி தோணுது என்று கண்களில் கண்ணீர் நிறைந்திருக்க தழுதழுத்த குரலில் சொன்னான் செல்வன்.

செல்வனை ஆரத் தழுவிக் கொண்ட அவன் அன்னை அட அசடே..... இந்த விடயத்துக்காகவா இவ்வளவு சோகமா இருக்க. கண்ணா இங்கு பாரு அழகுங்கறது உன்னோட வெளி தோற்றதுல இல்ல, அது உன்னோட மனதில் தான் இருக்கு. ஆயிரம் அழகான முகங்களை விட ஒரு அழகான இதயமே சிறந்தது.

செல்வா.... உனக்குன்னு ஒரு தனித்துவம் இருக்கு. இங்க எல்லார்க்கும் எல்லா திறமையும் இருகிறது இல்ல. ஆனா ஒவ்வொருதருக்கும் ஏதாவது திறமை நிச்சயமா இருக்கும். யாருடனும் உன்னை ஒப்பிடாதே.

நீ உன்னோட இந்த வாழ்க்கையை முழுவதுமா ஏத்துக்கனும். நீ உன்னோட வாழ்க்கையை முழுவதுமா ஏத்துகிட்டினா.. உனக்கு உன்னையும், உன்னோட வாழ்க்கையையும் பிடிக்கும் என்று செல்வனின் தாய் அறிவொளி அவனுக்கு அறிவூட்டினாள். தாயின் சொல்கேட்டு மகிழ்ந்தான்! வாழ்க்பைபாடம் உணர்ந்தான்.

**மு. சந்திரா**
இளங்கலை தமிழ் இலக்கியம் இரண்டாம் ஆண்டு

## ரேம்போ

ஆறு வருடங்கள் கழித்து, கிராமத்தில் இருக்கும் தன் தாத்தாவைப் பார்க்கச் செல்கிறான். ரேம்போ சென்ற முறை தாத்தா ரேம்போவிற்கு மூங்கில் விதையைப் பரிசாகக் கொடுத்திருந்தார். ரேம்போ தன் தாத்தாவிடம், அவர் கொடுத்த மூங்கில் விதையின் ஐந்து வருட பயணத்தைச் சொல்வதாக இச்சிறுகதை ஆரம்பமாகிறது.

ரேம்போ தாத்தா கொடுத்த மூங்கில் விதையை தன் வீட்டுத் தோட்டத்தில் நட்டு வைக்கிறான். ஒவ்வொரு நாளும் அந்த இடத்திற்குச் சென்று தண்ணீர் ஊற்றுகிறான். உரம் போடுகிறான். தினமும் அங்கு சென்று அக்கறையுடன் பாரத்துக்கொள்கிறான். அந்த இடத்தைச் சுற்றி முளைக்கும் காட்டுச் செடிகளைப் பிடிங்கி எரிகிறான். இவ்வாறு பெரும் ஆசையோடும், எதிர்ப்பார்ப்போடும் நாட்கள் கழிகிறது. ஒரு நாள், இரண்டு நாள், மூன்று நாள் அல்ல. ஒரு வாரம் இரண்டு வாரம் மூன்று வாரம் அல்ல. ஒரு மாதம், இரண்டு மாதம், மூன்று மாதம் இல்லவே இல்லை. பல நாட்கள் பல வாரங்கள் பல மாதங்கள் உருண்டோடியும் எந்த அசைவும் இல்லை. ஆனாலும் நம்பிக்கை இழக்காமல் ரேம்போ, அதற்குத் தொடர்ந்து நீர் ஊற்றி, உரமிட்டு செய்ய வேண்டிய அனைத்துப் பராமரிப்புகளையும் செய்கிறான்.

ஒரு வருடம் செல்கிறது, இரண்டு வருடம் கழிந்தது மூன்று வருடம் ஓடுகிறது. என்னவொரு ஏமாற்றம். இன்னும் நிலம் நிலமாகத்தான் இருக்கிறது. ஒரு மாற்றம் கூட இல்லை. ரேம்போவிற்கு மனதில் பல எண்ணங்கள் ஒருவேளை விதை அழுகிப்போயிருக்குமோ எனது காலம், நேரம், முதலீடு, உழைப்பு எல்லாம் வீணாகிவிடுமோ, என்ற கவலை வேறு ஒரு பக்கம். சுற்றியிருப்பவர்கள் ரேம்போவை கேலி செய்கின்றனர். இருந்தாலும் ரேம்போ தன்னம்பிக்கையை விடாமல் தொடர்ந்து தன் உழைப்பைப் போடுகிறான். நான்கு வருடங்களும் ஆகின. ஒரு துரும்பு கூட மண்ணை விட்டு எதுவும் வெளியில் வரவில்லை. ரேம்போ உழைக்கிறான். உழைக்கிறான். உழைத்துக்கொண்டே இருக்கிறான். மொத்தமாக ஐந்து வருடங்கள் கழிகிறது. இதோ இப்போது ஒரு மாற்றம் மண்ணில் ரேம்போவின் முகத்தில் சந்தோசம். ஐந்து வருட உழைப்பின் பிரதிபலனை ரேம்போ காணப்போகிறான். யாரும் எதிர்பார்க்காத அளவிற்கு மூங்கில் வேகமாக வளரத் தொடங்குகிறது. 10 அடி, 20 அடி என 90 அடிகள் வரை உயர்ந்து நிற்கிறது. ரேம்போ பூரித்துப்போகிறான். ஐந்து வருட உழைப்பின் பலனை வெறும் ஆறே வாரங்களில் கண்முன்னால் காண்கிறான். ரேம்போ அவன் உழைப்பிற்கேற்ற கூலி உடனே கிடைக்காவிட்டாலும் அதைப் பொறுமையுடனும், விடாமுயற்சியுடனும் கடந்து பெரும் கூலியை அடைந்து விடுகிறான்.

இவ்வாறு மூங்கில் விதை விதைத்தது முதல் வளர்ந்து மரமானது வரை உள்ள அனைத்து நிகழ்வுகளையும் தாத்தாவிடம் சொல்லி முடிக்கிறான் ரேம்போ.

இம்முழு நிகழ்வைக் கேட்டு முடித்து, தாத்தா ரேம்போவிடம் கூறினார் எந்தவொரு மகத்தான சாதனையும் நீண்டகால உழைப்பின் மூலம் தான் சாத்தியமாகும். தொடர்ந்து முயற்சி செய்தால் தோல்வியும் ஒரு நாள் தோற்றுப் போகும் என்ற வாழ்க்கைத் தத்துவங்களைக் கூறி தாத்தா, ரேம்போவை வாழ்க்கையில் முன்னேறு சாதனை புரிய விடாமுயற்சி மிகவும் அவசியம் என்கிறார்.

முயற்சி திருவினை யாக்கும் முயற்றின்மை
இன்மை புகுத்தி விடும்.

**சல்மா**
Physics I Year

## சிகரம் தொடும் சிறகுகள்

சிகரம் பெரிதென்று
சிந்தை கலங்காதே!
சிந்தனை சிறகடித்து,
பறந்து பார் - சிகரம்
உன் காலடியில்.

இமயம் பெரிதென்று - கலங்காதே!
உன் இமைக்குள்ளேதான்
இமயம் என்பதை மறந்துவிடாதே!
விண்ணை பிளந்து வீரியம எடு
விவேகம் உன்னில் இருக்கிறது.

ஏடுகளில் உன் ஏகாந்தத்தை காட்டு
உலகம் உன் உள்ளங்கையில்!

படிப்பு சுமை என்று நினைக்காதே!
தாய் இடுப்பு சுமை என்று
இறக்கி வைத்திருந்தால்
உனக்கேது படிப்பு சுமை!

இறக்கி வைத்த கல்லை
சிலை வடித்து சிரம் மேல்
கரம் கூப்பி வழிபட வைத்த
சிற்பியல்லவா நமது ஆசிரியப் பெருமக்கள்!

மறந்து விடாதே மறுபிறவி
என்பது சாத்தயமில்லை நம்பிக்கை!

மாதா, பிதா, குரு, குருகுளம்
இவை நான்கும் உன்னை
சிம்மாசனத்தில் அமர வைத்து
அழகு பார்த்த நான்கு கால்கள்

மறுக்கவும் முடியாது !
மறக்கவும் முடியாது !

நாளை ஓர் நாள் நானும் நீதான் !
முன்பொரு நாள் நீயும் நான் தான் !

**எம். மோனிகா தேவி**
இளங்கலை முதலாமாண்டு தமிழ்இலக்கியம்

## தமிழன்

தமிழ் என்ற சொல்லுக்கு அர்த்தம் தந்தவனே!
தமிழ் என்ற வார்த்தையிலே தமிழனாக இருப்பவனே !
உனது புகழ் எடுத்துச் சொல்ல தமிழே முன் நிற்கிறது !
உலகில் பல பூஞ்சோலைகள் இருந்தாலும், தமிழா நீ
இராணுவம் என்னும் பூஞ்சோலையில் சேர்ந்து
தமிழ் நாட்டையும், தமிழ் மக்களையும் பூக்களைப் போல்
பாதுகாக்கின்றாய் !
உன்னை இந்த உலகிற்குக் கொண்டுவரும் அம்மாவின்
கருவுக்குள்ளே நி தமிழ் மொழியை அறியாமையுடன்
கற்றுக்கொள்கிறாய் தமிழா !
மண்ணின் வாசத்தையும் நாட்டினையும் நீ மட்டுமே
பாதுகாக்க முடிகிறது தமிழா !
நமது தேசியக் கொடியில் இருக்கும் சக்கரம்போல்
தலைநிமிர்ந்து நடக்கும் தமிழனும் நீயே!
தாமரை மலர் மலர்வதற்கு துணை இருப்பது தண்ணீர் ஆனால் நீயோ !
எந்த துணையும் இல்லாமல் என்றும் மலர்ந்து காணப்படுகிறாய்
தமிழின் மொழியை பரப்ப ஒருபோதும் துணைகள் தேவையில்லை, தமிழா !
நீ பேசும் உன் பேச்சினிலே தமிழை என்றும் பரப்புகிறாய்
உன் நெஞ்சுக்குள் இருக்கும் முயற்சி தமிழ் முயற்சி !
உன் இரத்தத்தில் இருக்கும் முயற்சி தமிழ் வளர்ச்சி !

**தமிழரசி**
இளங்கலை முதலாமாண்டு வரலாறு

## ஆசை ... ஆசை ...!

தோழியே...!

உன்னிடம் சிரித்துப் பேச ஆசை
உன் தலையை வருடிவிட ஆசை
உன் மடியில் படுத்து உறங்க ஆசை
உன்னுடன் விளையாடி மகிழ ஆசை
என் இன்பத்தை உன்னிடம் பகிர்ந்துகொள்ள ஆசை
உன் துன்பங்களைத் தாங்கிகொள்ள ஆசை
நீ வெற்றி பெறும்பொழுது கைதட்டிட ஆசை
நீ சோர்வடையும் பொழுது தோள் கொடுக்க ஆசை
உன்னுடன் உணவருந்திட ஆசை
உன் பிறந்ததினத்தைக் கொண்டாடிட ஆசை
உன் சுட்டிதனத்தை ரசித்திட ஆசை
உன் அன்பைப் பெற்றிட ஆசை
உன் அழகை வியக்க ஆசை
உன் அறிவைப் பாராட்டிட ஆசை
உனக்காக வாழ்ந்திட ஆசை
உன் நட்பை இறுதிவரை பெற்றிட ஆசை
நம் நட்பை உலகம் பாராட்டிட ஆசை
மறு ஜென்மம் என்றிருந்தால் ... அதில்
உன் மகளாய்ப் பிறந்திட

ஆசையோ ... ஆசை!

இப்படிக்கு உங்கள் அன்புத்தோழி ...

**தர்ஷினி**
B.Com., CA, II Year

## எதுவும் கடந்துபோகும்

காலம் உன்னைப் பார்த்து சிரிக்கும் நீ
துன்பத்தில் சோர்ந்த போது!
காலம் உன்னைப் பார்த்து பரிதாபப்படும் நீ
இன்பத்தில் களிக்கும் போது!
காலம் உன்னைப் பார்த்து இன்பப்படும் நீ
அவமானத்தில் தவிக்கும் போது
காலம் உன்னைப் பார்த்து கவலைப்படும் நீ
பெருமையில் மிதக்கும் போது!
காலம் உன்னைப் பார்த்துப் பெருமைப்படும்
எதுவும் கடந்து போகும்
என்று நீ உணரும் போது.

**விஷ்ணுபிரியா**
I Year BA., History

## ஒரு அம்மாவின் கவிதை

பட்டினி கிடந்து
பள்ளியில் சேர்த்தேன்
கல்லும் மண்ணும் சுமந்து
கல்லூரியில் சேர்த்தேன்
வெயிலில் வெந்து
வேலையில் சேர்த்தேன்
மகனே நீயோ
என்னை எளிதாய்ச்
சேர்த்து விட்டாய்
முதியோர் இல்லத்தில்

**சந்தியா**
I Year BA., Tamil




**M. Jayasri**
BBA III Year




**A. Salma**
Physics - I Years



**Hema .K**
B.Sc., Botany (EM) Ist Year




**Dhanushree .K**
B.Sc., Botany (EM) Ist Year




**P. Nagalakshmi**
I, B.Sc., Maths





**M. Gayathri**
III B.Com., CA II Shift



**A. Madhushree**
B.Com., I Year



**M. Jayabharathi**
I B.Sc., Mathamatics



**பா. நித்யஸ்ரீ**
இளங்கலை தமிழ் இலக்கியம்
இரண்டாமாண்டு



**B. Jothipriya**
III Year BBA




**K. Sneha**
BBA III Year




**S. Munishwari**
B.A., Economics II Year




**G. Gayathri**
B.A., English



T. Priyanka
B.Com., CA 3rd Year




**A. Madhushree**
B.Com., I Year



**Abinaya Shree .G**
B.Sc., Botany I Year

# மன்ற விழாக்கள்

## தமிழ்த் துறை



முனைவர். **சு. பூங்கொடி** M.A., M.Phil., P.hd.,
இணை பேராசிரியர் மற்றும் துறைத் தலைவர்
அரசு கலைக் கல்லூரி (தன்னாட்சி), கோவை

## ஆங்கிலத் துறை




டாக்டர். **மோகனகிரி** M.A., M.Phil., P.hd.,
இணை பேராசிரியர், அரசுக் கலை கல்லூரி, (தன்னாட்சி)
கோவை

## வரலாற்றுத்துறை



திரு. **K. பொன்னுசாமி**
**Veerarajendiran Archarological and Historial Research Center, Tirupur**

## பொருளியல் துறை



திரு. **B. கீதா**, M.A., M.Phil., Ph.D., உதவிப்பேராசிரியர்,
PSG கலை மற்றும் அறிவியல் கல்லூரி, கோவை

## கணிதத்துறை



**முனைவர். க. பத்மாவதி**
இணைப்பேராசிரியர், தாவரவியல் துறை
எல்.ஆர்.ஜி. அரசு மகளிர் கலைக் கல்லூரி

## இயற்பியல் துறை



டாக்டர். **N. விஜயகுமார்**
Principal, Sri KGS Arts College, Srivaikundam
Tirunelveli

## வேதியியல் துறை



டாக்டர். **ஜெயசெந்தில் குமார்** M.Tech., MBA
External Faculty, Petrolium Conservation and Research Association, Southern Region, Govt. of India

## தாவரவியல் துறை



டாக்டர். **கே. காளிமுத்து**
இணைப்பேராசிரியர், அரசு கலைக் கல்லூரி, கோவை

## விலங்கியல் துறை



டாக்டர். **S. சோமசுந்தரம்**
Head and Assistant Professor, Dept. of Zoology
Nallamuthu Gounder Mahalingam College

## இயற்பியல் கணினிப்பயன்பாட்டுத்துறை



டாக்டர். **P. ஹேமலதா** Ap in Physics
GAC (A), Coimbatore

## மின்னணுவியல் துறை



**திரு. தமிழரசன்மணி**
Chief Creative Officer,
Maayaa Smart Automation

## நுண்ணுயிரியல் துறை




**திருமதி. கே. கவிதா**
District Microbologist
Tirupur District

## உணவு மற்றும் ஊட்டச்சத்தியல் துறை



டாக்டர். **N. சபீதா**
Associate Professor and Head of
Nutrition and Dietetics Department
Vellalar College for Women, Erode

## கணினி அறிவியல் துறை



டாக்டர். **K. சம்சத் பானு** DMHP
Psychologist

## வணிகவியல் துறை




திரு. **K. அண்ணாமலை**
Managing Director
Annamalai Capital Services Pvt Ltd., Coimbatore

## வணிகவியல் மற்றும் கணினிப் பயன்பாட்டுத் துறை




திரு. **R. ராஜேஷ்**
பேராசிரியர், வணிகவியல் துறை,
இந்துஸ்தான் கலை அறிவியல் கல்லூரி, கோவை

## வணிக நிர்வாகவியல் துறை



டாக்டர். **M.V. ராதாகிருஷ்ணன்**
Assistant Professor in PG & Research Department of Zoology
Chikkanna Government Arts College, Tirupur

# பேரவை விழாக்கள்

## சுதந்திர தின விழா



## குடியரசு தினவிழா



## நூலக மன்ற விழா



## புத்தக கண்காட்சி



## விளையாட்டு விழா





## திறன் மேம்பாட்டு பயிற்சி






## சுற்றுச்சூழல் சார்புக் குழு



## நூலக வார விழா



## பேரவை நிறைவு விழா







# எல். ஆர். ஜி.

**அரசு மகளிர் கலைக் கல்லூரி, திருப்பூர் - 4.**

**தேசியத் தர மதிப்பீடு B**

## ஆண்டு மலர்

## 2021 - 2022

## மலர் ~ 62

**தொலைபேசி எண்**
**0421 2210300**

**தொலை அச்சு**
**0421 2214933**

**மின்னஞ்சல்**
**lrggac@gmail.com**

# மலர்க்குழு

## தலைவர்

முனைவர். **மெய்.இரெ. எழிலி** எம்.ஏ., எம்.ஃபில்., பி.எச்.டி.,

முதல்வர்

## பதிப்புக்குழு

முனைவர். **மு. அவையாம்பாள்**
உதவிப் பேராசிரியர். தமிழ்த்துறை

முனைவர். **கோ. புவனேஸ்வரி**
உதவிப் பேராசிரியர். தமிழ்த்துறை

## பேராசிரியர்கள்

முனைவர். **மா. தமிழ்மலர்**
இணைப் பேராசிரியர் மற்றும் தமிழ்த்துறைத் தலைவர்

முனைவர். **ஜோ. கிரிஜா ஆரோக்கியமேரி**

முனைவர். **ஜா. அமைதி அரசு**

முனைவர். **ஏ.ஆர். ஈஸ்வரி**

முனைவர். **ச. அமுல்செல்வி**



முனைவர். **மெய்.இரெ. எழிலி** எம்.ஏ., எம்.ஃபில்., பி.எச்.டி.,

**முதல்வர்**

இன் சொலால் ஈத்து அளிக்க வல்லார்
குறிப்பின் குறிப்பு உணர்வார்
குறித்தது கூறாமைக் கொள்வார்
காட்சிக்கு எளியவராய் திகழ்பவர் எம் முதல்வர்

## வாழ்த்துக்களுடன்

*ஏற்ற மிகு*

எல்.ஆர்.ஜி. கல்லூரியின்
2021 – 2022 ஆம் ஆண்டு மலர் படைக்க
அன்பிற்குரிய மாணவச் செல்வங்கள்
அனைவரிடமும்

அவர்தம்
எண்ணக் கருத்துக்களை
எழுத்துருவில் வடிவமைக்க
அழைப்பு விடுத்தோம்

திறமைமிக்க
மாணவர்கள் தம் எண்ணக் குவியல்களை
வண்ண வண்ண முத்துக்களில்
வடிவமைத்துத் தந்தனர்

மாணவர்களின் சிந்தனை உளி
செதுக்கிய
பேசும் கவிதைகளையும்
பேசா ஓவியங்களையும்
பொன் மாலை போல்
தொடுத்துக் கொடுத்துள்ளோம்.

கல்லூரி மாணவியரின்
கருத்துக் கோவைகளை
ஆண்டு மலரில்
அழகாய் மலர்ந்திடச் செய்த
மாணவப் படைப்பாளர்கள்
அனைவரையும்
ஒருங்கிணைத்த
முதல்வர்
மற்றும் பேராசிரியர்கள் அனைவருக்கும்
நன்றி கூறுகிறோம்.

**உங்கள் கரங்களில் ஆண்டுமலர்**
**மணம்வீசத் தொடுத்துத்தந்த**
**பதிப்புக்குழு**

# பொருளடக்கம்


1. கல்லூரி ஆண்டறிக்கை ...
2. படைப்புகள் ...
3. ஓவியங்கள் ...
4. விழாப் புகைப்படங்கள் ...

# எல்.ஆர்.ஜி.

## அரசு மகளிர் கலைக் கல்லூரி, திருப்பூர்.

# கல்லூரி ஆண்டறிக்கை 2021 – 2022

*ஆன்ம அதிர்வலையில் ஆழ்ந்திருக்கும்*
*மேற்கு மலை அடுக்கம்*
*குறுமணல் கொழித்தோடும்*
*நொய்யல் நதி தீரம்*
*பின்னலாடையில் மின்னும்*
*கொங்கின் இதயம் நம் திருப்பூர்*
*கார் அஞ்சு கரதலத்தால் மிளிரும் – நம்*
*எல்.ஆர்.ஜி. அரசு கல்லூரி*
*சாமானியரை சாதிக்க வைக்கும்*
*எழில்மிகு கலைக் கல்லூரி*

திருப்பூர், ஈரோடு, கோவை, நீலகிரி மாவட்டங்களிலேயேமகளிருக்காக நடத்தப்படும் ஒரே அரசு மகளிர் கலைக் கல்லூரி நமது எல்.ஆர்.ஜி.அரசினர் மகளிர் கலைக் கல்லூரி. இந்தக் கல்லூரி தமிழ் நாடு அரசு ஆணையுடன் 1971 ஆம் ஆண்டு ஜூலைத் திங்கள் 15-ம் நாள்221மாணவிகளுடன்செயல்படத் தொடங்கியது.திருப்பூர் மாவட்டத்தில் மகளிர்க்கென்று தனிக்கல்லூரி அமைவதற்கு அடித்தளம் அமைத்துக் கொடுத்து நிலத்தை நன்கொடையாக வழங்கிய மதிப்பிற்குரிய (L) லஷ்மிநாய்க்கன்பாளையம் (R) ராமசாமி (G) கோவிந்தராஜுலு நாயுடு (LRG) ஐயா மற்றும் அவர்தம் குடும்பத்தினரை நன்றியுடன் நினைவு கூர்கிறோம். ஐம்பது ஆண்டுகள் கல்விப்பணியினை நிறைவு செய்து, வரவிருக்கும் கல்விஆண்டில் பொன் விழாவை நோக்கிச்செல்லும் நம் கல்லூரி.

நம் கல்லூரியில் இளங்கலையில் தமிழ், ஆங்கிலம், வரலாறு, பொருளியல், ஆகிய பாடப்பிரிவுகளும், இளம் அறிவியலில் கணிதம், இயற்பியல், இயற்பியல் கணினிப்பயன்பாட்டியல், வேதியியல், விலங்கியல், நுண்ணுயிரியல், தாவரவியல், மின்னணுவியல், கனிணி அறிவியல், உணவு அறிவியல் மற்றும் ஊட்டச்சத்தியல் ஆகியபாடப் பிரிவுகளும், இளம் வணிகவியலில், வணிகவியல் மற்றும் வணிகவியல் கணினிப்பயன்பாட்டியல், வணிக நிர்வாகவியல் ஆகிய பாடப்பிரிவுகளும் பயிற்றுவிக்கப்படுகின்றன.

மேலும் முதுகலையில் தமிழ், ஆங்கிலம், வரலாறு, பொருளியல், ஆகிய பாடப்பிரிவுகளும், முதுநிலைஅறிவியலில் கணிதம், வேதியியல், விலங்கியல், கனிணி அறிவியல் ஆகிய பாடப் பிரிவுகளும்,முதுகலை வணிகவியலும்,ஆராய்ச்சி மேற்படிப்பில் ஆங்கிலம், வணிகவியல், பொருளியல், கணிதம், இயற்பியல், வேதியியல், விலங்கியல் மற்றும் கனிணி அறிவியல் பாடப்பிரிவுகளும் பயிற்றுவிக்கப்படுகின்றன. இக்கல்வியாண்டில் மொத்தம் 3605 மாணவியர்கள் பயின்று வருகின்றனர்.

**பணியிடங்கள் விபரம்**

1. முதல்வர் உட்பட அரசினரால்அங்கீகரிக்கபட்டபேராசிரியர்களின் மொத்தப்பணியிடங்கள் - 144
2. நிரப்பப்பட்டபேராசிரியர்களின்பணியிடங்கள் (முதல்வர் உட்பட) - 80
3. ஆசிரியர் அல்லாத பணியாளர்களின்மொத்தப்பணியிடங்கள் - 30
4. நிரப்பப்பட்ட ஆசிரியர் அல்லாத பணியாளர்களின் மொத்தப்பணியிடங்கள் - 07
5. அரசு நியமித்தகௌரவவிரிவுரையாளர்கள் - 41
6. பெற்றோர் ஆசிரியர் கழகத்தால்நியமிக்கபட்டவர்கள் - 22
7. முன்னாள் மாணவர் சங்க நிதியிலிருந்துநியமிக்கபட்டவர்கள் - 16
8. கணினி அறிவுப் பயிற்சி திட்ட நிதியிலிருந்துநியமிக்கபட்டவர்கள் - 04
9. விளையாட்டு குறியீட்டாளர் - 01

**02. இந்தக் கல்வியாண்டில் மொத்தம் மூன்று பேராசிரியர்கள் நம் கல்லூரியிலிருந்து பணியிட மாற்றம் பெற்றும், பதவி உயர்வு பெற்றும் சென்றுள்ளனர். அவர்கள்**

| எண் | துறை | பேராசிரியர்கள் |
|---|---|---|
| 1 | கணிதம் | முனைவர். ஜானகி, அரசு கலைக்கல்லூரி, புலியகுளம் (Deputation) |
| 2. | வரலாறு | முனைவர். நசிம்ஜான், அரசு கலைக்கல்லூரி, காங்கேயம் முதல்வர் |
| 3 | தாவரவியல் | முனைவர். கீ. கீதா, கல்வியல் கல்லூரி, கோவை, முதல்வர் |

**03. இந்தக் கல்வியாண்டில் பணியிட மாற்றம் பெற்று நம் கல்லூரிக்கு வந்த பேராசிரியர்கள் - இல்லை**

**04. இந்தக் கல்வியாண்டில் முனைவர் பட்டம் பெற்ற பேராசிரியர்கள் - 5**

**05. இந்தக் கல்வியாண்டில் பணி நிறைவு பெறும் பேராசிரியர்கள் - 1**

**06. இந்தக் கல்வியாண்டில் புத்தறிவு பயிற்சி பெற்றோர் விபரம்**

| எண் | பேராசிரியர் சார்ந்த துறைகள் | பெயர் | பயிற்சி நாட்கள் | புத்தறிவி பயிற்சி பல்கலைக்கழகம் |
|---|---|---|---|---|
| 1. | தமிழ் | முனைவர். A.R. ஈஸ்வரி<br>முனைவர் M. அவையாம்பாள்<br>முனைவர். J. கிரிஜா ஆரோக்கியமேரி<br>முனைவர். M. அமுல் செல்வி | 05.08.21-18.08.21<br>05.08.21-18.08.21<br>08.09.21-21.09.21<br>08.09.21-21.09.21 | கேரளா பல்கலைக் கழகம்<br>கேரளா பல்கலைக் கழகம்<br>பாரதியார் பல்கலைக் கழகம்<br>பாரதியார் பல்கலைக் கழகம் |
| 2 | ஆங்கிலம் | முனைவர். M. கீதா<br>முனைவர். ஆலிவ் தம்பி<br>முனைவர் கல்பனா கார்த்தி | 27.09.21-11.10.21<br>27.09.21-11.10.21<br>12.05.22-25.05.22 | ராமானுஜம் கல்லூரி, டெல்லி<br>ராமானுஜம் கல்லூரி, டெல்லி<br>பாரதிதாசன் பல்கலைக்கழகம் |

| எண் | பேராசிரியர் சார்ந்த துறைகள் | பெயர் | பயிற்சி நாட்கள் | புத்தறிவு பயிற்சி பல்கலைக்கழகம் |
|---|---|---|---|---|
| 3 | பொருளியல் | முனைவர். S. மாலதி<br>முனைவர் N. மணிமேகலை<br><br>முனைவர் N. மணிமேகலை<br>முனைவர் V.B. உஷா | 01.07.21-14.07.21<br><br>01.07.21-14.07.21<br>06.10.21-20.10.21<br>02.05.2022<br>01.07.21-14.07.21<br>06.10.21-20.10.21 | பாக்தா போல் சிங் மஹிலா விஷ்வா வித்லயா பல்கலைக்கழகம்<br>ஹரியானா<br>ராமானுஜம் கல்லூரி, டெல்லி<br>அரசு மகளிர் கலைக் கல்லூரி<br>அரசு மகளிர் கலைக்கல்லூரி, திண்டுக்கல்<br>ராமானுஜம் கல்லூரி, டெல்லி |
| 4 | கணிதம் | முனைவர். R. தேவி<br>முனைவர் J மைக்கேல் அன்னா ஸ்பின்னெலி | 08.12.21-21.12.21<br>25.02.2022<br>03.03.2022 | மதுரை காமராஜர் பல்கலைக்கழகம்<br>ராமானுஜம் கல்லூரி, டெல்லி |
| 5 | இயற்பியல் | முனைவர் A. கிங்ஸ்டன் சலோமன் ஜீவராஜ் | 19.09.2021<br>-29.09.2021 | மைசூர் பல்கலைக்கழகம், மைசூர் |
| 6 | இயற்பியல் கணினிப்பயன்பாடு | முனைவர்.N. மீனாட்சி சுந்தரம் | 08.09.21-21.09.21 | பாரதியார் பல்கலைக்கழகம் |
| 7 | வேதியியல் | முனைவர். S. அன்னபூரணி<br>முனைவர் N. சுகந்தி<br>முனைவர் T. சாந்தி | 29.12.21-11.1.22<br>27.1.21-9.2.21<br>27.1.22-9.2.22 | பாரதியார் பல்கலைக்கழகம்<br>சென்னை பல்கலைக்கழகம்<br>சென்னை பல்கலைக்கழகம் |
| 8 | விலங்கியல் | முனைவர். ஷீபா. N<br>முனைவர். பானுரவிகணேஷ்<br>முனைவர். சுதா.S<br>முனைவர். சுமதி P | 10.11.21-23.11.21<br>2.12.21-15.12.21<br>2.12.21-15.12.21<br>15.2.22-28.2.22 | பாரதியார் பல்கலைக்கழகம்<br>சென்னை பல்கலைக்கழகம்<br>சென்னை பல்கலைக்கழகம்<br>சென்னை பல்கலைக்கழகம் |
| 9 | தாவரவியல் | திருமதி. ரூபினி<br>முனைவர் R. குருசாமி<br>முனைவர் T. பாலசரவணன் | 10.11.21-23.11.2021<br>2.6.22-15.6.22<br>2.6.22-15.6.22 | பாரதியார் பல்கலைக்கழகம்<br>பாரதியார் பல்கலைக்கழகம்<br>பாரதியார் பல்கலைக்கழகம் |
| 10 | நுண்ணுயிரியல் | முனைவர்.அ. கு. இலக்குமி வேண்மாள்<br>முனைவர். தி. விஸ்வநாதன் | 24.05.-06.06.2021<br>24.05-06.06.2021 | AMET பல்கலைக்கழகம்<br>AMET பல்கலைக்கழகம் |
| 11 | உணவு அறிவியல் மற்றும் ஊட்டச்சத்தியல் | முனைவர் G. சுபா | 06.08.-19.08.2021 | ராமானுஜம் கல்லூரி, டெல்லி |
| 12 | மின்னணுவியல் | முனைவர். K.வெண்மதி | 9.3.21-15.3.21<br>24.5.21-6.6.21<br>5.1.22-11.1.22 | பாரதியார் பல்கலைக்கழகம்<br>பாரதிதாசன் பல்கலைக்கழகம்<br>AMET பல்கலைக்கழகம் |
| 13 | கணினி அறிவியல் | முனைவர் A. அன்பரசி<br>முனைவர்.N. விமலா<br>முனைவர் T. ஜெயலட்சுமி | 02.06 .21-16.06.21<br>02.06.21.-16.06.21<br>02.06.21.-16.06.21 | ராமானுஜம் கல்லூரி, டெல்லி<br>ராமானுஜம் கல்லூரி, டெல்லி<br>ராமானுஜம் கல்லூரி, டெல்லி |
| 14 | வணிகவியல் | முனைவர் M. கிருஷ்ணவேணி<br>முனைவர். J. சுகந்தி<br>முனைவர். J. சுகந்தி<br>முனைவர் R. அம்சவேணி | 28.12.21-11.1.22<br>2.6.21-16.6.21<br>25.6.21-8.7.21<br>24.9.21-7.10.21 | பாரதியார் பல்கலைக்கழகம்<br>ராமானுஜம் கல்லூரி, டெல்லி<br>ராமானுஜம் கல்லூரி, டெல்லி<br>கேரளா பல்கலைக்கழகம் |
| 15 | வணிக நிர்வாகவியல் | திருமதி G. வேதா | 02.06.22-15.06.22 | பாரதியார் பல்கலைக்கழகம் |

## 07. தமிழ்நாடு உயர்கல்வித் துறை மாநிலக் கவுன்சிலின் இன்சர்வீஸ் ஆசிரியர் பயிற்சித் திட்டம்

| எண் | துறை | ஆசிரியர் பெயர் | பயிற்சி காலம் | பயிற்சி பெற்ற இடம் |
|---|---|---|---|---|
| 1 | தமிழ்த் துறை | முனைவர் அமுல்செல்வி | 05.05.2022-06.05.2022 | TANSCHE, உதகை |
| 2 | ஆங்கிலம் | முனைவர் கல்பனா கார்த்தி | 05.05.2022-06.05.2022 | TANSCHE, எல்.ஆர்.ஜி. அரசு கலைக் கல்லூரி, திருப்பூர் |
| 3 | பொருளியல் | முனைவர் M. சிவமணி<br>முனைவர் V.B. உஷா | 05.05.2022-06.05.2022 | TANSCHE, பாரதியார் பல்கலைக்கழகம் கோயம்புத்தூர் |
| 4 | கணிதம் | முனைவர் J மைக்கேல் அன்னா ஸ்பின்னெலி<br>R முனைவர். தேவி | 05.05.2022-06.05.2022 | TANSCHE, கோவை அரசு கல்லூரி, கோயம்புத்தூர் |
| 5 | இயற்பியல் | முனைவர் பிரியா<br>முனைவர் கிங்ஸ்டன் சாலமன் ஜீவராஜ் | 05.05.2022-06.05.2022 | தமிழ்நாடு மாநில உயர்கல்வி கவுன்சில் உதகையில் உள்ள அரசு கலைக்கல்லூரியில் வாழ்நாள் இயற்பியல் அறிவியல் பாடத்தில் பணியிடை ஆசிரியர் பயிற்சி நிகழ்ச்சியை நடத்தியது. |
| 6 | விலங்கியல் | முனைவர். ஷீபா. N<br>முனைவர். பானுரவிகணேஷ்<br>முனைவர். சுதா.S<br>முனைவர். சுமதி P | 05.05.2022 - 06.05.2022 | தமிழ்நாடு மாநில உயர்கல்வி கவுன்சில் உதகையில் உள்ள அரசு கலைக்கல்லூரியில் வாழ்நாள் அறிவியல் பாடத்தில் பணியிடை ஆசிரியர் பயிற்சி நிகழ்ச்சியை நடத்தியது. |
| 7 | தாவரவியல் | திருமதி. M. ரூபினி<br>முனைவர் R. குருசாமி<br>முனைவர் T. பாலசரவணன்<br>முனைவர் வினோதினி<br>முனைவர் சிவகுமார் | 05.05.2022 - 06.05.2022 | தமிழ்நாடு மாநில உயர்கல்வி கவுன்சில் உதகையில் உள்ள அரசு கலைக்கல்லூரியில் வாழ்நாள் அறிவியல் பாடத்தில் பணியிடை ஆசிரியர் பயிற்சி நிகழ்ச்சியை நடத்தியது. |
| 8 | இயற்பியல் (கணினிப்பயன்பாடு) | முனைவர் N. மீனாட்சி சுந்தரம் | 05.05.2022-06.05.2022 | TANSCHE, கோவை அரசு கல்லூரி, கோயம்புத்தூர் |
| 9 | கணிணி அறிவியல்துறை | முனைவர் A. அன்பரசி<br>முனைவர்.N. விமலா<br>முனைவர் T.ஜெயலட்சுமி<br>முனைவர் வித்யா பானு | 05.05.2022-06.05.2022 | TANSCHE, எல்.ஆர்.ஜி. அரசு கலைக் கல்லூரி, திருப்பூர் |
| 10 | வணிகவியல் துறை | முனைவர். S. கௌசல்யா தேவி<br>முனைவர் R. அம்சவேணி | 05.05.2022-06.05.2022 | TANSCHE, பாரதியார் பல்கலைக்கழகம், கோயம்புத்தூர் |
| 11 | வணிகவியல் கணினிபயன்பாட்டுத்துறை | முனைவர் சசிகலா<br>முனைவர் நாகநந்தி | 05.05.2022-06.05.2022 | TANSCHE, பாரதியார் பல்கலைக்கழகம், கோயம்புத்தூர் |
| 12 | நூலகத் துறை | முனைவர் அனுராதா | 05.05.2022-06.05.2022 | TANSCHE, பாரதியார் பல்கலைக்கழகம், கோயம்புத்தூர் |

## 08. இந்த கல்வியாண்டில் தேசிய மற்றும் சர்வதேச கருத்தரங்கங்கள் மற்றும் பயிற்சிப் பட்டறைகளில் பங்குபெற்ற பேராசிரியர்கள்

| எண் | துறை | தேசிய அளவில் | சர்வதேச அளவில் | மொத்தம் |
|---|---|---|---|---|
| 1 | பொருளியல் துறை | 3 | | 3 |
| 2 | வணிகவில் துறை | 2 | | 2 |
| 3 | கணிதவியல் | 3 | | 3 |
| 4 | வணிகவியல் கணினிபயன்பாட்டுதுறை | - | 5 | 5 |
| 5 | தாவரவியல் | 1 | | 1 |
| 6 | கணிணி அறிவியல் துறை | 6 | | 6 |
| 7 | உணவு அறிவியல் மற்றும் ஊட்டச்சத்தியல் | 2 | | 2 |
| 8 | நூலகத் துறை | 3 | | 3 |

## 09. இந்த கல்வியாண்டில் தேசிய மற்றும் சர்வதேச கலை/வணிக/ அறிவியல் ஆராய்ச்சி இதழ்களில் ஆய்வுக் கட்டுரைகள் வெளியிட்ட பேராசிரியர்கள்

| எண் | துறை | பேராசிரியர்கள் தேசிய பன்னாட்டு கருத்தரங்க ஆய்விதழ் | JOURNAL DETAILS |
|---|---|---|---|
| 1 | விலங்கியல் துறை | **முனைவர். மூர்த்திகுமார்**<br>Adverse effect of Acacia Nilotica on Freshwater snail<br>Studies on Behavioural response of freshwater fish, Tilapia(Oreochromis mossambicus) exposed to synthetic pyrethroid cypermethrin<br>Impact of Textile effluent on bacterial biodiversity in noyyal river bed soil, Tirupur | Asian journal of organic and medicinal chemistry 20222456-8937<br>Journal of emerging technologies and innovative research (JETIR) 2022<br>2349-5162<br>Journal of emerging technologies and innovative research (JETIR) 20222349-5162 |
| 2 | தாவரவியல் | **பால சரவணன்**<br>நொதித்தல் முறையின் கீழ் தேங்காய் வகைகளில் இருந்து வெர்ஜின் தேங்காய் எண்ணெய் உற்பத்தி பற்றிய ஒப்பிட்டு ஆய்வு | |
| 3 | இயற்பியல் | **Dr. A. KINGSON SOLOMON JEEVARAJ**<br>Synthesis and characterization of Zinc doped Beryllium Oxide : Ethylene glycol Nanofluids, | Songklanakarin Journal of Science and Technology , May 2022 (Accepted for Publication) |
| 4 | வேதியியல் | **Dr.T.SANTHI**<br>Electrochemical degradation of reactive red 195 from its aquous solution using titanium electrodes<br>DR. K. PARVATHI AND DR.. T. SANTHI Ricinus communis activated charcoal preparation characterization and application for methyl red adsorptive removal | ASIAN JOURNAL OF CHEMISTRY vol. 33, No.8 (2021), 1919-1922.<br>ORIENTAL JOURNAL OF CHEMISTRY, 2021 |
| 5 | வணிகவியல் மற்றும் கணினிப்பயன்பாட்டுத் துறை | **Dr. SASIKALA**<br>A study on sustainable growth of microfinance in women self-help group bank linkage model in India during 2014-15 to 2018-19<br>An analysis on progress of micro finance under SHG-Bank linkage programme in India<br>The role of microfinance in empowering women economically through self help group with special reference to Conoor Taluk<br>Mrs.N.Sathya (Guest Lectures)<br>Service quality of new generation private sector banks in Tirupur City) Service quality perception of new generation private sector Banks in Tirupur City) | Out heritage journal 2021 ISSN :0378-4568, vol51,No1(II) 2021<br>Sadar Patel Institute of Economics and Sccial Research –anvesak<br>2021 ISSN:0378-4568, vol 51, No1(II)<br>JETIR march 2020 Vol (7,Issue 3(<br>IJR Sep 2021 Vol8,Issue 9. ISSN-2348-795 |
| 6 | வணிகவியல் துறை | **DR. K BRINDHA**<br>Application of Internet Things in Indian Agriculture<br>**Dr.V.Kanchana**<br>Study on Evaluation of Challenges and Benefits in Successful Implementation of Supplu chain management by manufacturing companies in Coimbatore<br>Study on supply chain management practices followed by select manufacturing company Coimbatore district<br>**Dr. A. KOWSALYA DEVI**<br>Factors influencing consumer behavior towards eco friendly packages,<br>A Study on Consumer Awareness Towards FMGV Products Pricing Strategies | Out heritage journal 2021 ISSN :0378-4568, vol51,No1(II) 2021<br>Sadar Patel Institute of Economics and Sccial Research –anvesak<br>2021 ISSN:0378-4568, vol 51, No1(II)<br>JETIR march 2020 Vol (7,Issue 3(<br>IJR Sep 2021 Vol8,Issue 9. ISSN-2348-795 |

| எண் | துறை | பேராசிரியர்கள் தேசிய பன்னாட்டு கருத்தரங்க ஆய்விதழ் | JOURNAL DETAILS |
|---|---|---|---|
| 7 | கணிதவியல் | **Dr. A. MANOMANI**<br>On Chromatic Zagreb Indices of Some Cycle related Graphs" "Chromatic Topological Indices of VPH(m,n) and Nanotorus".<br>"Computation of Chromatic Zagreb Indices of nanotubes and nanotori "Chromatic Topological Indices of Certain Fullerene Polymers"API<br>Notes on Interval Valued Intuitionistic Fuzzy Topological Spaces" "Bipolar on Interval Valued Intuitionistic Fuzzy Mappings<br>"Bipolar on Interval Valued Intuitionistic Necessity operators" "Bipolar on Interval Valued Intuitionistic Fuzzy Generalised Closed Sets " | "Journal of Xi'an University of Architecture and Technology ,(Vol 13,2021(6)).Pages 495-509 International Advanced research Journal in Science ,Engineering and Technology,(Vol8,2021(6)),Pages 123-127<br>"API Conference Proceeding 2385,January 2022,Pages 130041:1-5 (Scopus Indexed Journal)<br>Conference Proceedings (Accepted for Publication)<br>International Journal of Advanced Research in Science ,Communication and Technology ,Volume 4 Issue 2, April 2021<br>Journal of Xi an University of Architecture and Technology ,(Vol 13,2021(6)),Pages 692-701 Compliance Engineertring Journal ,Volume XII ,Issue 7,2021,Pages 72-81<br>International Journal of All Research education and Scientific Methods" Volume 9,Issue 5,May 2021,Pages 1647-1657 |
| 8 | கணினி அறிவியல் | **A. ANBARASI**<br>A concatenation of deep and texture features for medicinal trash image classification using EnSegNet-DNN-based transfer learning<br>**N .VIMALA**<br>A Hybrid TF-IDF and N-Grams based feature Extraction Approach for Accurate Detection Fake News on Twitter Data<br>An Efficient Privacy Preserving using map reduce based international Data Encryption Algorithm and weighted auto encoder Cluster Head Selection Algorithm in WSN Using MOPSO<br>**V. SUHASINI**<br>A Hybrid TF-IDF and N-Grams Based Feature Extraction Approach for Accurate Detection of Fake News on Twitter Data. | " Multi –parametric multiple kernel deep neural network for crop yield prediction ,ISSN:17.3.20022 |
| 9 | நூலகத் துறை | **Book Chapter**<br>1.The Landmarks of Open Acccess Movement of Scholarly Publications and its Impact on the Online Intensive Reading.<br>2.Virtual Reading Guidelines and Initiatives by WHO to mitigateInfodemic: A Pandemic Parallel.<br>Web Usability and its influence on the Online Reading Strategies of the Digital native Students.<br>TheIoT and its proliferating potential to enhance the Readership in the Libraries | Book title –Innovative Librarianship: Accelerating Open Access Editor – DrS.Dhanavandan Year : June' 2022<br>**BOOK TITLE :** Contemporary Problems and Prospects in Library and Information centers<br>Year : 2022, Mayas Publication<br>Journal of Advances in Library and Information Sciences (online)<br>Volume – 10(2)<br>ISSN NO –2277 2219.<br>Journal- MVM Journal of Research.<br>ISSN NO - 2395- 2962 |

| எண் | துறை | பேராசிரியர்கள் தேசிய பன்னாட்டு கருத்தரங்க ஆய்விதழ் | JOURNAL DETAILS |
|---|---|---|---|
| 10 | ஆங்கிலம் | **Dr. K GEETHA**<br>A journey towards self realization in the God of small things<br>Elements of realism in the novel "The palace of illusions"<br>**Dr. OLIVE THAMBI**<br>Family dynamics in literature<br>**Dr.V.MALAR**<br>Diasporic consciousness in the writing of chitra Bannerjee, Jhumpa Lahiri and Kiran Desai _A glimpse<br>Language in India strength for today and hope for tomorrow,<br>Racism and Opression in Maya Angelou and toni Morrison | Vo. 8, Issue 3, ISSN:2349-6002<br>In ternational Journal of analytical reviews, E-ISSN2348-1269, P-ISSN2349-5138<br>Journal of Fundamental and competitive research,<br>Vol VIII, No 1 (XIII):ISSN: 2277-7067<br>Vol 22:4 April 2022-ISSN 1930-2490<br>Journal of Asiatic society of Mumbai ISSN:0972-0766<br>Vol:XCV, No.06, 2022 |

## ஆய்வுப்புல வளமையராகச் சென்ற பேராசிரியர்கள்

| No. | Prof. Department | Topic | Journal Details |
|---|---|---|---|
| 1 | Dr. L. Priya<br>Physics Dept. | Research Methodology 27.04.2022 | Geethanjali Insititute of Technical Studies, Udaipur. |
| 2 | Dr. A. Kingson Solomon Jeevaraj<br>Physics Dept. | Uses of Nano Particales in Synthesis of Electricity from Salarenergy | Nirmala College, Coimbatore. |

## 2020-2021 ஆம் கல்வியாண்டில் பாரதியார் பல்கலைக்கழகத் தரவரிசைப் பட்டியலில் இடம் பெற்ற மாணவியர்கள்

நமது கல்லூரியில் 2020-2021 ஆம் கல்வியாண்டில் மொத்தம் 30 (22 இளநிலை, 8 முதுநிலை) மாணவியர்கள் பாரதியார் பல்கலைக்கழகத் தரவரிசைப் பட்டியலில் இடம் பெற்றுள்ளனர். இவர்களில் கீழ்க்கண்ட 3 மாணவியர் பல்கலைக்கழகத் தரவரிசைப் பட்டியலில் முதல் இடம் பெற்றுள்ளனர்.

1. செல்வி **K. ஜோதிகா,** இளநிலை தாவரவியல்
2. செல்வி **B. மோகனப்பிரியா,** இளநிலை மின்னணுபியல்
3. செல்வி **M. அனுசியா,** இளநிலை இயற்பியல் மற்றும் கணினிப் பயன்பாடு

| எண் | துறை | இளநிலை முதுநிலை | மாணவியின் பெயர் | தரம் |
|---|---|---|---|---|
| 1 | தமிழ் இலக்கியம் | இளநிலை | M. பாண்டிமீனா | நான்காம் இடம் |
| | | முதுநிலை | S. சுபலட்சுமி | ஆறாம் இடம் |
| 2 | ஆங்கில இலக்கியம் | இளநிலை | M. ஜெபரோஸ்லின் | ஆறாம் இடம் |
| 3 | வரலாறு | இளநிலை | G. ஜெகதீஸ்வரி | ஆறாம் இடம் |
| | | | G. திவ்யா | எட்டாம் இடம் |
| | | | M. ஐஸ்வர்யா | ஒன்பதாம் இடம் |
| | | | S. சுதா | பத்தாம் இடம் |
| | | முதுநிலை | G. கலையரசி | மூன்றாம் இடம் |
| | | | V. யோகேஸ்வரி | நான்காம் இடம் |
| 4 | பொருளியல் | இளநிலை | M. கௌசல்யா | ஐந்தாம் இடம் |
| | | | V. கமலி | எட்டாம் இடம் |
| | | முதுநிலை | P. தேவிகா | இரண்டாம் இடம் |
| | | | S. இந்துரேகா | நான்காம் இடம் |

| எண் | துறை | இளநிலை முதுநிலை | மாணவியின் பெயர் | தரம் |
|---|---|---|---|---|
| 5 | தாவரவியல் | இளநிலை | M. ஜோதிகா | முதலாம் இடம் |
| | | | S. சௌமியா | மூன்றாம் இடம் |
| | | | P. டெல்லி ஈஸ்வரி | நான்காம் இடம் |
| | | | J. அந்தோணி லீமா ரோஸி | ஐந்தாம் இடம் |
| | | | D. தேன்மொழி | ஏழாம் இடம் |
| 6 | வேதியியல் | முதுநிலை | R.B. ரூபா | எட்டாம் இடம் |
| 7 | விலங்கியல் | இளநிலை | S. ஶ்ருநிவிதாஶ்ரீ | நான்காம் இடம் |
| | | முதுநிலை | B. சௌந்தர்யா | நான்காம் இடம் |
| | | | M. பிரியங்கா | ஐந்தாம் இடம் |
| 8 | மின்னணுவியல் | இளநிலை | B. மோகனப்பிரியா | முதலாம் இடம் |
| | | | D. ஹேமலதா | இரண்டாம் இடம் |
| 9 | உணவு அறிவியில் மற்றும் ஊட்டச்சத்தியல் | இளநிலை | G. வைஷ்ணவி | இரண்டாம் இடம் |
| 10 | இயற்பியல் மற்றும் கணினிப் பயன்பாடு | இளநிலை | M. அனுசூயா | முதலாம் இடம் |
| | | | Y. அட்சயக்கனி | இரண்டாம் இடம் |
| | | | R. ஹரிணி | மூன்றாம் இடம் |
| | | | N. ஜனனி | நான்காம் இடம் |
| | | | J. மைதிலி | நான்காம் இடம் |

### 10. இக்கல்லூரியில் ஆய்வியல் நிறைஞர் / முனைவர் (M.Phil/Ph.D) பயின்று பட்டம் பெற்ற மாணவியர்கள் விபரம்

| எண் | துறை | Ph.D., மாணவியர்கள் | M.Phil., மாணவியர்கள் |
|---|---|---|---|
| 1 | ஆங்கிலம் | S. பாரதி<br>S. சாலினி<br>R. பிருந்தா<br>R.A. ஹேமலதா | |
| 2 | வணிகவியல் | N. உமா மகேஸ்வரி<br>R. ஆனந்தி<br>S. சங்கீதா<br>P. புவனேஸ்வரி<br>P. ஆனந்தி<br>P. சங்கீதா<br>சாதனாபிரியா<br>A. திலகவதி | S. ஹேமலதா<br>S. மஞ்சுளா<br>M. ஜெயசூர்யா |
| 3 | விலங்கியல் | - | M. கவிதா |

### 11. பல்கலைக்கழகத் தேர்வில் தேர்ச்சி விகிதம்.

சென்ற ஆண்டு (2020-2021) நடைபெற்ற பாரதியார் பல்கலைக்கழகத் தேர்வில் இளநிலையில் 96 சதவீதமும், முதுநிலையில்98 சதவீதம் மாணவியர்களும் தேர்ச்சியடைந்து நம் கல்லூரிக்குப் பெருமை சேர்த்துள்ளார்கள்.

| எண் | துறை | தேர்ச்சி பெற்றவர்கள் | தேர்ச்சி சதவீதம் | Distinction |
|---|---|---|---|---|
| 1 | தமிழ் | 56 | 95 | 32 |
| | | 19 | 95 | 13 |
| 2 | ஆங்கிலம் | 61 | 100 | 1 |
| | | 34 | 100 | 4 |
| 3 | வரலாறு | 78 | 96 | - |
| | | 25 | 89 | 2 |

| எண் | துறை | தேர்ச்சி பெற்றவர்கள் | தேர்ச்சி சதவீதம் | Distinction |
|---|---|---|---|---|
| 4 | பொருளியல் | 79 | 96 | 2 |
| | | 10 | 100 | 2 |
| 5 | கணிதம் | 58 | 100 | 34 |
| | | 33 | 100 | 16 |
| 6 | இயற்பியல் | 18 | 100 | 12 |
| 7 | இயற்பியல் (கணினிப்பயன்பாடு) | 39 | 93 | 12 |
| 8 | வேதியியல் | 41 | 95 | - |
| | | 4 | 100 | 11 |
| 9 | விலங்கியல் | 37 | 100 | 9 |
| | | 14 | 100 | 10 |
| 10 | தாவரவியல் | 44 | 100 | 14 |
| 11 | நுண்ணுயிரியல் | 32 | 100 | 4 |
| 12 | உணவு அறிவியல் மற்றும் ஊட்டச்சத்தியல் | 24 | 83 | 4 |
| 13 | மின்னணுவியல் | 19 | 100 | 12 |
| 14 | கணினி அறிவியல் | 110 | 100 | 31 |
| | | 30 | 100 | 24 |
| 15 | வணிகம் | 131 | 99 | 23 |
| | | 25 | 100 | |
| 16 | வணிகம் (கணினிப்பயன்பாட்டு துறை) | 124 | 95 | 27 |
| 17 | வணிக நிர்வாகவியல் | 58 | 100 | 3 |
| | மொத்தம் | 1203 | 98 | 302 |

## 12. துறை வாரியாக மன்ற விழாக்கள்

| எண் | துறை / தேதி | சிறப்பு விருந்தினர்கள் / பேராசிரியர்கள் | தலைப்பு |
|---|---|---|---|
| 1 | தமிழ்த்துறை<br>27.04.2022 | திரு. **புகழ்**<br>Short film director | Short Film Director Puzhal Short Filim On Community Portrayal |
| 2 | ஆங்கிலத் துறை<br>22.04.2022 | முனைவர். **விஜய சாமுண்டீஸ்வரி**<br>அரசு கலைக்கல்லூரி, கோவை. | Literary Techniques And Mass Media |
| 3 | வரலாற்றுத்துறை<br>13.04.2022 | முனைவர். **R. சுரேஷ்** | Women's Role In Government Jobs |
| 4 | பொருளியல் துறை<br>18.04.2022 | **MR. R. SHANKAR. MBA.** | Skill Needed For Present Day Export-Present Guidelines |
| 5 | கணிதத்துறை<br>12.04.2022 | **DR. P. RAJESWARI**<br>Assistant Professor Mathematics<br>Chikkanna Govt Arts College Tirupur | Applications Of Mathematics |
| 6 | இயற்பியல் துறை<br>20-04-2022 | **DR.N. SIVAKUMAR,** Assistant Professor,<br>Department Of Physics,<br>Chikkaiah Naicker College, Erode | Importance Of Nano Structured Lithium Ion Batteries For Present And Future Generations |
| 7 | இயற்பியல் கணினி பயன்பாட்டு துறை<br>26.04.2022 | முனைவர். **HARESH N. PANDYAN**<br>Associate Professor Dept Of Physics<br>Chikkanna Government Arts College, Tirupur | Thaughts And Concepts In Physics Innovation |
| 8 | வேதியியல் துறை<br>12.04.2022 | **R. சசிபிரபா** | Topic: Choose to challenge |

| எண் | துறை / தேதி | சிறப்பு விருந்தினர்கள் / பேராசிரியர்கள் | தலைப்பு |
|---|---|---|---|
| 9 | விலங்கியல் துறை 20.04.2022 | **Dr. Reni Prabha.A** Associate Professor& Head, Department of Zoology Chikkiah Naicker College, Erode 638004. | Wonders of Zoology |
| 10 | தாவரவியல் துறை 20.04.2022 | முனைவர். **அப்துல் கஃபூர்** உதவிப் பேராசிரியர், தாவரவியல் துறை கொங்குநாடு கலை மற்றும் அறிவியல் கல்லூரி கோயமுத்தூர். | BONSAI-An art to learn and practice |
| 11 | மின்னணுவியல் துறை 04.05.2022 | **VIGNESHWARAN,** Technical Support EngineerÖ Vimivrosystems Pvt Ltd Perungudi, Chennai | Workshop-handtraining Simulation Using Pic Micro Controller |
| 12 | கணினி அறிவியல் துறை 19.04.2022 | **MR. JEEVA PERIYASAMY** | Create, Compile And Execute Your Future in It |
| 13 | நுண்ணுயிரியல் துறை 20.04.2022 | Student Participants | Poster Presentation |
| 14 | உணவு அறிவியல் & ஊட்டச்சத்தியல் துறை 20.04.2022 | **Dr. S. KARPAGAM** Assistant Professor, Costume Design And Fashion Department, Chikkanna Government Arts College, Tirupur | Fanrication Techniques |
| 15 | வணிகவியல் துறை 22.04.2022 | **DR. A. MAHADEVAN** Professor, Sri Ganesh School Of Management Salem | Financial Management of Women Enterpreneruers |
| 16 | வணிகவியல் க.ப. துறை 21.04.2022 | திரு. R. **பிரகாஷ்** உதவிப் பேராசிரியர், தாவரவியல் துறை கொங்குநாடு கலை மற்றும் அறிவியல் கல்லூரி கோயமுத்தூர். | Excellence Through Meditation |
| 17 | வணிக நிர்வாகவியல் துறை 12.0.42022 | திரு. **கோபிநாத்** உந்துதல் பேச்சாளர் | வங்கி தேர்வு பயிற்சி திருப்பூர் |
| 18 | நூலக விழா 23.04.2022 | முனைவர். **மெர்சி லிடியா,** உதவிப் பேராசிரியர், நூலகம் மற்றும் தகவல் அறிவியல்துறை, வேளாளர் மகளிர் கல்லூரி, ஈரோடு | வாசிப்பு பழக்கத்தின் தேவை |

## 13. கல்லூரிப் பேரவை

2021 - 2022 ஆம் கல்வி ஆண்டிற்கான கல்லூரிப் பேரவை உணவு அறிவியல் & ஊட்டச்சத்தியல் துறை பொறுப்பில் செயல்பட்டு வருகிறது. பேரவைப் பொறுப்பாளர்களாக கீழ்க்காணும் மாணவிகள் தேர்ந்தெடுக்கப்பட்டனர்.

| பேரவைப் பொறுப்பு | மாணவியின் பெயர் | ஆண்டு | துறை |
|---|---|---|---|
| தலைவர் | தீபிகா .D | III BA | பொருளாதாரம் |
| துணைத் தலைவர் | நாஸ்ரீன் .A | III B.Sc., | கணினி அறிவியல் |
| செயலர் | அபிநயா .C | III B.Sc., | தமிழ் |
| பொருளாளர் | ஜெயலட்சுமி .S | III BA | பொருளாதாரம் |
| நுண்கலை மன்றச் செயலர் | ஹனீபாஸ் பர்வீன் .S | III BA | வரலாறு |
| விளையாட்டுத்துறைச் செயலர் | பவித்ரா .P | III BA | வரலாறு |

## 14. பேரவை நடத்திய விழாக்கள்

| எண் | நாள் | விழாக்கள் | தலைமை - கல்லூரி முதல்வர் (பொறுப்பு) அவர்கள் |
|---|---|---|---|
| 1 | 15-08-2021 | சுதந்திர தின விழா | நம் கல்லூரி முதல்வர் முனைவர். திருமதி. மெய். ரெ. எழிலி இந்திராணி அவர்கள் கொடியேற்றி சுதந்திர தின உரை நிகழ்த்தினார். |
| 2 | 17-09-2021 | சமூக நீதி தினம் | காலை 11.30 மணியளவில் அரங்கத்தில் அனைத்து ஊழியர்களும் மாணவர்களும் சமத்துவ உறுதிமொழி எடுத்துக் கொண்டனர். |

| எண் | நாள் | விழாக்கள் | தலைமை – கல்லூரி முதல்வர் (பொறுப்பு) அவர்கள் |
|---|---|---|---|
| | | பெண்கள் மற்றும் குழந்தைகளுக்கு எதிரான வன்முறை மீதான உறுதிமொழி | பல்வேறு துறைகள் மூலம் பெண்கள் மற்றும் குழந்தைகளுக்கு எதிரான வன்கொடுமைகளை ஒழிக்க உறுதிமொழி எடுத்து அறிக்கை அனுப்பப்பட்டது. |
| 3 | 01-011-2021 | வாக்காளர் விழிப்புணர்வு கணக்கெடுப்பு மற்றும் பிரசாரம் | எல்.ஆர்.ஜி.அரசு மகளிர் கலைக்கல்லூரியில், காலை 11.00 மணிக்கு ஏ.வி.ஹாலில், புதிய வாக்காளர்களுக்காக, அரசு புள்ளியியல் துறை, திருப்பூர் ஒன்றியத் துறை இணைந்து, வாக்காளர் விழிப்புணர்வு கணக்கெடுப்பு மற்றும் பிரசாரம் மேற்கொண்டது. |
| 4 | 04.12.2021 | மாணவர் சங்கத் தேர்தல் | சத்துணவு மற்றும் உயிர்வேதியியல் ஆய்வகத்தில் காலை 10-11.30 மணிக்கு மாணவர் சங்க தேர்தல் நடத்தப்பட்டது. |
| 5 | 26.01.2021 | குடியரசு தின விழா | நம் கல்லூரிமுதல்வர் முனைவர். திருமதி மெய்.ர..எழிலி கொடியேற்றி குடியரசு தின உரை கழ்த்தினார். |
| 6 | 10.06.2022 | குழந்தைத் தொழிலாளர் ஒழிப்பு உறுதிமொழி | குழந்தை தொழிலாளர் ஒழிப்பு தினத்தையொட்டி, ஆசிரியர்கள் மற்றும் மாணவர்களால் குழந்தை தொழிலாளர் ஒழிப்பு உறுதிமொழி 12.30 மணிக்கு எடுக்கப்பட்டது. |
| 7 | 16.06.2022 | பல்கலைக்கழகத் தேர்வில் பரிசு வென்றவர்களுக்குப் பரிசு | RUSA மண்டபத்தில் காலை 11 மணி முதல் மதியம் 12 மணி வரை, முதன்மைப் பொறுப்பாளரும், கணிதத் துறைத் தலைவருமான திருமதி. இந்திராணி அவர்கள், கல்லூரி முதல்வர் பொறுப்பு இந்நிகழ்ச்சியில் அனைத்து துறைத் தலைவர்களும் . ஆசிரியர்களும், மாணவர்களும் கலந்து கொண்டனர் |
| 8 | 21.06.2022 | சர்வதேச யோகா தினம் | சர்வதேச யோகா காலை 10-11 மணிக்கு எங்கள் வளாகத்தில் கொண்டாடப்பட்டது. வாழும் கலை யோகா ஆசிரியை திருமதி பி. கலாமணி, மாணவர்களுக்கு சில எளிய யோகா நுட்பங்களைக் கற்றுக் கொடுத்ததுடன், ஆரோக்கியமான வாழ்க்கைக்கான சில குறிப்புகளையும் வழங்கினார். மேலும், சிறந்த ஆரோக்கியத்திற்காக எளிய நாளுக்கு நாள் யோகா செய்ய மாணவர்களை ஊக்குவித்தார். இதில் ஏராளமான மாணவர்கள் ஆர்வத்துடன் கலந்து கொண்டனர் |

## நுண்கலை மன்றம்

நமது கல்லூரியில் நுண்கலை மன்றமானது இயற்பியல் துறை பொறுப்பில் செயல்பட்டு வருகிறது. கலையரங்கம் இல்லாத காரணத்தால் இக்கல்வி ஆண்டில் (2021-22), ஏப்ரல் 18 முதல் 22 வரை ஐந்து நாட்கள், நுண்கலை மன்றப் போட்டிகள் துறைவாரியாக சிறப்பாக நடத்தப்பட்டன.

மேடையில்லாப் போட்டிகளான வினாடிவினா, உபயோகமற்ற பொருட்களை உபயோகமாக்குதல், ரங்கோலி, மெகந்தி இடுதல், வரைதல், நெருப்பின்றி சமைத்தல், சிகை அலங்காரம், காய்கறி செதுக்குதல், பூக்கள் அலங்காரம், போஸ்டர் விளக்கக் காட்சி போன்ற போட்டிகளும், மேடைப் போட்டிகளான தனிநபர் பாடல், தனி நபர் நடனம், குழு நடனம், நுகர் பொருட்கள் விளம்பரப்படுத்துதல் போன்ற போட்டிகளும் நடைபெற்றன.

ஒவ்வொரு துறையிலும் நடைபெற்ற மூன்று வெவ்வேறு போட்டிகளில் வெற்றி பெற்ற மாணவிகளுக்கு, முதல், இரண்டாம் மற்றும் மூன்றாம் பரிசுகள் வழங்கப்பட்டன.

## கல்லூரி நூலகம்

மாணவிகளின் மேம்பாட்டிற்காக, கல்லூரி நூலகம் காலை ஒன்பது மணி முதல் மாலை ஐந்துமணி வரை செயல்பட்டுவருகிறது. தினசரிகள், வாரமாத பத்திரிக்கைகள் மற்றும் பல அறிய நூல்களுடன் மத்தியஅரசின் INFLIBNET NLIST என்ற இணைய சேவை மூலம் ஆறாயிரத்திற்கு மேற்பட்ட மின் ஆராய்ச்சி இதழ்கள் மற்றும் இலட்சத்திற்கும் மேற்பட்ட மின்நூல்கள் வழங்கப்பட்டுவருகிறது. இக்கல்வியாண்டில் பொதுநூலகள் மற்றும்துறை சார்ந்த நூல்கள் பெற்று வழங்க ரூபாய் ஐம்பதாயிரம் ஒதுக்கப்பட்டது. கல்லூரி நூலகம் சார்பாக பல இணைய வழி நிகழ்ச்சிக்கள் நடைப் பெற்றன. கல்லூரி நூலக மன்றத் தொடக்க விழா சிறப்பாக நடைபெற்றது. கல்லூரிமுதல்வர், தலைமை வகிக்க, முனைவர் மெர்சிலிடியா, உதவிப் பேராசிரியர், நூலகம் மற்றும் தகவல் அறிவியல்த்துறை, வேளாளர் மகளிர் கலைக் கல்லூரி, ஈரோடு சிறப்புரையாற்றினார்.

## கல்லூரி நூலக நிகழ்ச்சிகள்

| மாதம் | வாசகர் வட்டம் நிகழ்ச்சி | தேதி & நேரம் | சிறப்பு விருந்தினர் |
|---|---|---|---|
| மே 2021 | நூல்மதிப்புரை என் இனிய எந்திரா - சுஜாதா | மே 25 மாலை 6.30 இணையவழி | மதிப்புரை வழங்கிய மாணவி சசிவர்ஷினி. இரண்டாம் ஆண்டு வேதியியல் |
| ஜூன் 2021 | நூல் மதிப்புரை கிடை - கி.ரா. | ஜூன் 27 காலை 11 மணிக்கு இணையவழி | சிறப்பு விருந்தினர் கிரிஜா ஆரோக்கியமேரி உதவிபெராக்சிரியர், தமிழ்த்துறை, எல்.ஆர்.ஜிஅரசுமகளிர்கலைக் கல்லூரி, திருப்பூர் |
| ஜூலை 2021 | நூல்மதிப்புரை கோபல் ல கிராமம் - கிரா. | ஜூலை 26, மாலை 5மணிக்கு. இணையவழி | சிறப்புவிருந்தினர் முனைவர்.புவராணி, ஆங்கிலத்துறை கௌரவ விரிவுரையாளர் ,எல்ஆர் ஜி அரசு மகளிர் கலைக் கல்லூரி, திருப்பூர் |
| ஆகஸ்ட் 2021 | NDLI & NLIST | ஆகஸ்டு 16, மாலை 4.30 மணி. இணையவழி | சிறப்புரை :- :முனைவர்க.ராமசாமி, கல்லூரி நூலகர் எம்.வி முத்தையா அரசு மகளிர் கலைக் கல்லூரி, திண்டுக்கல். மத்திய அரசின் இணைய வளங்கள் பற்றிய விழிப்புணர்வு நிகழ்ச்சி |
| செப்டெம்பர் 2021 | ஆசிரியர் தினம் சிறப்பு நிகழ்ச்சி<br>புதுமைப் பெண் - ஜீவா | செப்டம்பர் 05 2021 மாலை 6 மணி இணையவழி<br>செப்டம்பர் 29, மாலை 6.30 மணி இணையவழி | சிறப்பு விருந்தினர் : முனைவர். எஸ்தர், முன்னாள் முதல்வர், எல்.ஆர்.ஜி.அரசு மகளிர் கலைக் கல்லூரி, திருப்பூர்<br>சிறப்புவிருந்தினர்: முனைவர். நிர்மலா தேவி, துறைத் தலைவர், வணிக நிர்வாகவியல், எல்ஆர்ஜி அரசு மகளிர் கலைக் கல்லூரி திருப்பூர் |
| அக்டோபர் 2021 | வெ. இறையன்புவின் சிறுகதைகள் | 29 அக்டோபர், மாலை 6.30 மணி. இணையவழி | சிறப்புவிருந்தினர்: முனைவர் இந்திரா, கௌரவ விரிவுரையாளர், தமிழ்த்துறை, எல்ஆர்ஜிஅரசு மகளிர் கலைக் கல்லூரி, திருப்பூர் |
| நவம்பர் 2021 | மங்கையர் மலர் மாத இதழ் நுவம்பர் 2021 இரண்டாம் இதழ் | நவம்பர் 30, மாலை 6.30 மணி. இணையவழி | சிறப்பு விருந்தினர் முனைவர் ப.பத்மாவதி, துறைத்தலைவர் தாவரவியல் துறை, எல்ஆர்ஜி அரசு மகளிர் கலைக் கல்லூரி, திருப்பூர் |
| டிசம்பர் 2021 | படைப்பாற்றலை வளர்த்துக் கொள்வது எப்படி? | டிசம்பர் 31 2021, மாலை 6.30 மணி இணையவழி | சிறப்பு விருந்தினர்: Jc எஸ். ஏ. முத்துபாரதி கல்லூரி நூலகர், நிப்ட்-ட்டி கல்லூரி, திருப்பூர் |
| ஜனவரி 2022 | இணைய வழி தேர்வில் இணையற்ற வெற்றிக்கான அணுகுமுறைகள் | ஜனவரி 29, மாலை 6.30 மணி. இணையவழி | முனைவர் ஆ. தலையூர் சூரியக் குமார், எழுத்தாளர், சொற்பொழிவாளர், ஆசிரியர், அரசு மேல்நிலைப்பள்ளி ,கும்பக்கோணம் |
| பிப்ரவரி 2022 | புதுக்கவிதை- ஒரு பார்வை | பிப்ரவரி 28, மாலை 6.30 மணி. இணையவழி | கவிஞர்ஆழ்வைகண்ணன், தமிழாசிரியர், பாரதிகிட்ஸ்கேஷத்ராலயா, திருப்பூர் |
| மார்ச் 2022<br>மார்ச் 2022 | கதைகேளு...கதைகேளு... Online Story Telling<br>Heart fullness, தியானப் பயிற்சி- ஓர் அறிமுகம் | பிப்ரவரி 28, மாலை 6.30 மணி. இணையவழி<br>மார்ச் 28, மாலை 6.30மணி இணையவழி | கல்லூரி நூலகம், எம்.வி.முத்தையாஅரசுமகளிர் கலைக்கல்லூரி, திண்டுக்கல்-உடன்இணைந்துநடத்தப்பட்டது.<br>திருந.பிரகாஷ் அவர்கள், Heartfullness" தியானப்பயிற்சிஆசிரியர், திருப்பூர் |
| ஏப்ரல் 2022<br>எப்ரல் 2022 | Adaptations of Academic Books and Copyright concerns in the Digital Age "<br>கல்லூரி நூலகம் மன்ற விழா | ஏப்ரல் 23, 2022. மாலை 6.30 மணி இணையவழி<br>ஏப்ரல் 2022, கல்லூரி வளாகம் | முனைவர் மூ.ஆறுமுகம், .நூலகர், பி எஸ் ஜி தொழில் நுட்பக் கல்லூரி, கோவை.<br>முனைவர் மெர்சி லிடியா, உதவிப் பேராசிரியர், நூலகம் மற்றும் தகவல் அறிவியல்த்துறை, வேளாளர் மகளிர் கல்லூரி, ஈரோடு |
| மே 2022 | Tips and Techniques for Newspaper Reading for Competitive Exams " | மே 30 3022, மாலை 6.30 மணி. இனையவழி | முனைவர். நஸீம்ஜான், முதல்வர் காங்கேயம்அரசுக் கலைக்கல்லூரி, காங்கேயம். |
| ஜூன் 2022 | How to crack UGC NET/SET paper to gain Lectureship | ஜூன் 16 2022 மாலை 6.30மணி. இணையவழி | சிறப்புவிருந்தினர்: திருஏ.ஸ்ரீனிவாசன், கணினி அறிவியல் பேராசிரியர் மற்றும் நிறுவனர், உதயம் NET Online Tutoring, கோவை |

## நாட்டு நலப்பணித் திட்டம் (NSS)

கல்லூரிமுதல்வர் அவர்களைத் தலைவராகக் கொண்டு, உதவி பேராசிரியர்கள் முனைவர் N. சுகந்தி (வேதியியல் துறை), முனைவர் R. SUDHA (விலங்கியல் துறை), முனைவர், R. சிவமணி (பொருளியல் துறை) ஆகியோரைத் திட்ட அலுவலர்களாகவும் கொண்டு நாட்டு நலப்பணித் திட்டம்சிறப்பாக செயல்பட்டு வருகிறது.நமது கல்லூரி சார்பில் அனைத்துத் துறைகளிலிருந்தும் மூன்று அலகுகளுக்கு நூறு மாணவிகள் வீதம் முந்நூறு மாணவிகளைத் தேர்வு செய்து மாணவியர்களுக்கு நாட்டு நலப் பணித் திட்டத்தின் குறிக்கோள்களையும் ஆளுமைத் திறமைகளையும் வெளிப்படுத்தும் விதமாக விழிப்புணர்வு முகாம்களும்பேரணிகளும் கருத்தரங்குகளும் நடைபெற்றன.

| எண் | மாதம் | தேதி | நிகழ்ச்சிகள் | நேரம் |
|---|---|---|---|---|
| 1 | ஜூன் | 11.06.2021 | சுவாச ஆரோக்கியம் மற்றும் நோய் எதிர்ப்பு சக்திக்கான யோகா | 3 |
| 2 | | 21.6.2021 | சர்வதேச யோகா தினம் - webinar | 2 |
| 3 | ஜூலை | 24.07.2021 | பிளாஸ்டிக் பையை தவிர்த்து பருத்தி பையைப் பயன்படுத்துங்கள் -விழிப்புணர்வு இணையதளம் | 2 |
| 4 | ஆகஸ்ட் | 01.08.2021 | ஸ்வாட்ச் பாரத் உறுதிமொழி எடுக்கப்பட்டது | 1 |
| 5 | செப்டம்பர் | 04.09.2021 | கொரோனா தடுப்பூசி முகாம் | 1 |
| 6 | | 07.09.2021 | வாக்காளர் சேர்க்கை முகாம் | 5 |
| 7 | | 7.09.2021 | பெண்கள் உரிமைகள் பற்றிய விழிப்புணர்வு நிகழ்ச்சி | 3 |
| 8 | | 19.09.2021 | கோவிட் 19 ஆர்டி பிசிஆர் சோதனை-முகாம் 1 | 7 |
| 9 | | 20.09.2021 | கோவிட் 19 ஆர்டி பிசிஆர் சோதனை-முகாம் | 2 |
| 10 | | 21.09.2021 | சர்வதேச அமைதி தினம் - சுவரொட்டி தயாரிக்கும் போட்டி | 3 |
| 11 | | 24.09.2021 | என்எஸ்எஸ் தின விழா - மரக்கன்றுகள் மற்றும் மரக்கன்றுகள் விநியோகம் | 5 |
| 12 | | 30.09.2021 | ஆரம்பத்திலிருந்தே Eat smart Webinar | 2 |
| 13 | அக்டோபர் | 01.10.2021 | கொரோனா தடுப்பூசி முகாம் 2 | 6 |
| 14 | | 05.10.2021 | திருப்பூர் கலெக்டர் அலுவலகத்தில் பிளாஸ்டிக் இல்லாத சுத்தம் | 5 |
| 15 | | 08.10.2021 | கொரோனா தடுப்பூசி முகாம் 3 மற்றும் தடுப்பூசி விழிப்புணர்வு நிகழ்ச்சி | 4 |
| 16 | நவம்பர் | 01.11.2021 | ஊழலுக்கு எதிரான விழிப்புணர்வு நிகழ்ச்சி | 2 |
| 17 | | 15.11.2021 | கண் சிகிச்சை முகாம்: திருப்பூர் லோட்டஸ் மருத்துவமனையுடன் இணைந்து கண் பரிசோதனை | 7 |
| 18 | | 17.11.2021 | 'புகையிலை எதிர்ப்பு' பிரச்சாரம் மற்றும் உறுதிமொழி எடுக்கப்பட்டது | 2 |
| 19 | | 25.11.2021 | மத நல்லிணக்கம் மற்றும் தேசிய ஒருமைப்பாட்டை மேம்படுத்த பேரணி | 2 |
| 20 | டிசம்பர் | 11.12.2021 | கொரோனா தடுப்பூசி முகாம் 3 | 6 |
| 21 | | 11.12.2021 | வளாகத்தை சுத்தம் செய்தல் | 5 |
| 23 | ஜனவரி | 06.01.2022 | கொரோனா தடுப்பூசி முகாம் 4 | 6 |
| 24 | | 07.01.2022 | கொரோனா தடுப்பூசி முகாம் 5 | 6 |
| 25 | | 07.01.2022 | வளாகத்தை சுத்தம் செய்தல் | 4 |
| 26 | பிப்ரவரி | 09.02.2022 | வளாகத்தை சுத்தம் செய்தல் | 4 |
| 27 | | 28.02.2022 | தன்னார்வலர்களுக்கு என்எஸ்எஸ் நோக்குநிலை | 3 |
| 28 | மார்ச் | 01.03.2022 | குடற்புழு நீக்க திட்டம் - குடற்புழு நீக்க மாத்திரைகள் விநியோகம் | 4 |
| 29 | | 07.03.2022 | திருப்பூர் டாக்டர் அகர்வால்ஸ் மருத்துவமனையுடன் இணைந்து கண் பரிசோதனை | 6 |
| 30 | | 07.03.2022 | இணைந்த கரங்கள் அறக்கட்டளை திருப்பூர் இணைந்து மாணவர்களுக்கு இலவச கராத்தே வகுப்பு | 5 |
| 31 | | 07.03.2022 | சர்வதேச மகளிர் தின விழா– திருப்பூர் ரோட்டரி சங்க தலைவர் திருமதி சிவகாமி சிறப்புரை | 3 |
| 32 | | 24.03.2022 | விழிப்புணர்வு பேரணி - உலக காசநோய் தினம் | 3 |

## ஸ்வயம் (SWAYAM)

மத்திய அரசின் சேவைத்தளமான ஸ்வயம் SWAYAM அனைத்துதுறை சார்ந்த பாடத்திட்டங்களும் இலவசமாக இணையவழியில் கற்றிட வழிவகுக்கும் ஒரு அமைப்பாகும்.கல்லூரி மாணவிகள் இத்தளத்தில் பதிவு செய்து பயன்பெற்றிட வழிகாட்டவும்,ஊக்குவிக்கவும் கல்லூரி SWAYAM" குழு செயல்பட்டு வருகிறது. முனைவர் எல். ப்ரியா, உதவி பேராசிரியர், இயற்பியல் துறை,முனைவர் அ.அன்பரசி, உதவி பேராசிரியர்,கணினி அறிவியல் துறை மற்றும் திருமதி கி.அனுராதா,கல்லூரி நூலகர் இதன் ஒருங்கிணைப்பாளர்களாக இருந்து சிறப்பாக செயலாற்றி வருகிறார்கள். இத்தளத்தில் ஐநூறாக்கும் மேற்ப்பட்ட மாணவிகள் பதிவு செய்து பயன் பெறுகிறார்கள்.

## இளைஞர் செஞ்சிலுவை சங்கம் (Youth Red Cross Society) (YRC)

RED RIBBON CLUB/YOUTH RED CROSS CLUB கல்லூரி முதல்வர் அவர்களைத் தலைவராகக் கொண்டு உதவிப் பேராசிரியர்கள் முனைவர் ஐ. சுகந்தி (வணிகவியல் துறை), முனைவர் ச. கிருஷ்ணவேணி (வேதியியல் துறை) ஆகியோரை ஒருங்கிணைப்பாளராகவும் கொண்டு செயல்பட்டு வருகின்றது. 04-10-2021 அன்று ஒருங்கிணைப்பாளர்கள், சங்கத்தின் நோக்கம், ஒய் ஆர் சி / ஆர் ஆர் சி மாணவர் உறுப்பினர்களின் பங்கு மற்றும் ஆரோக்கியமான வாழ்க்கை முறைகளை வளர்ப்பதற்கும், இரத்த தானம் செய்வதற்கும் தங்களின் உதவிகள் வழங்குவதற்கு மாணவர் சமூகத்தினரிடையே விழிப்புணர்வை ஏற்படுத்துவதன் அவசியம் குறித்து எடுத்து கூறினார்கள். இந்தியா சுதந்திரம் அடைந்த 75 ஆண்டுகளை நினைவுகூரும் வகையில், தமிழ்நாடு மாநில எய்ட்ஸ் கட்டுப்பாட்டுச் சங்கம், திருப்பூர் மற்றும் RRC இணைந்து, மாவட்ட அளவிலான இணையவழி வினாடி-வினா போட்டிகள், HIV விழிப்புணர்வு, இரத்த தானம் மற்றும் காசநோய் ஆகிய தலைப்புகளில் 22-03-2022 முதல் 24-03-2022 வரை நடத்தியது. திருப்பூர் மாவட்டத்தில் மொத்தம் 215 மாணவ, மாணவியர் பங்கேற்றனர், அதில் 149 எல்.ஆர்.ஜி கல்லூரி மாணவிகள் பங்கேற்று பின்வரும் பரிசுகளை வென்றுள்ளனர்.

| தலைப்புகள் | மாணவியர் | வகுப்புகள் | பரிசுகள் | ரூ. |
|---|---|---|---|---|
| எச்ஐவி விழிப்புணர்வு | K. பாண்டிமீனா | III BCOM | 2வது | 2000 |
| | K. நிவேதா | III BCOM | 3வது | 1000 |
| இரத்த தானம் | V. ஸ்வாதி | II MCOM | 1வது | 3000 |
| | S. தாரணி | II MCOM | 2வது | 2000 |
| | M. மோனிகா | I MCOM | 3வது | 1000 |
| காசநோய் | K. வான்மதி | II MCOM | 1வது | 3000 |
| | S. தாரணி | II MCOM | 2வது | 2000 |
| | V. ஸ்வாதி | II MCOM | 3வது | 1000 |

25-5-2022 அன்று எச்.ஐ.வி-எய்ட்ஸ் குறித்த விழிப்புணர்வு நிகழ்ச்சியை ஒய்ஆர்சி/ஆர்ஆர்சி ஏற்பாடு செய்தது. திரு.சிவகுமார், மாவட்ட மேற்பார்வையாளர் HIDS கட்டுப்பாட்டு துறை, திருப்பூர் உரையில் எய்ட்ஸ் நோய்க்கான காரணங்கள், பரவும் முறை, அறிகுறிகள், சிகிச்சை மற்றும் முன்னெச்சரிக்கைகள் குறித்து மக்களிடையே விழிப்புணர்வை ஏற்படுத்த வேண்டும் என்றும்,. கல்லூரியின் ஆர்ஆர்சி மாணவர்கள் தங்கள் தீவிர ஈடுபாட்டின் மூலம் இந்த திட்டத்தை வெற்றிகரமான ஒன்றாக மாற்றவும் கேட்டுக்கொண்டனர்.

தேசிய உயர்கல்வித் திட்டம் (Rashtriya Uchchatar Shiksha Abhiyan) (RUSA)

ரூசா (RUSA) ராஷ்ட்ரிய உச்சதர் சிக்ஷா அபியன் என்றழைக்கப் படும் தேசிய உயர்கல்வித் திட்ட ம் முனைவர் த. பாலசரவணன் தாவரவியல் துறை, முனைவர் கி. ராஜேந்திரன் மின்னணுவியல் துறை அவர்களைப் பொறுப்பாளர்களாகவும் கொண்டு செயல்பட்டு வருகிறது.

மத்திய மாநில அரசின் நிதி உதவியின் கீழ் செயல்படும் ரூசா (RUSA) ராஷ்ட்ரிய உச்சதர் சிக்ஷா அபியன் என்றழைக்கப்படும் தேசிய உயர்கல்வித் திட்டத்தின் மூலம் இந்தகல்வியாண்டில் (2021-2022) நமது கல்லூரியின் ரூசா கட்டிடத்தின் முதல் தளம் கட்டுமான பணிகள் முடிந்து 28.08.2021 அன்று தமிழக முதல்வர் அவர்களால் காணொலி காட்சி மூலம் தொடங்கி வைக்கப்பட்டது.

RUSA முயற்சியில் LIFE LEADERSHIP PROGRAM FOR GIRL STUDENTS" என்ற தலைப்பில் GA Foundation உடன் இணைந்து 3.12.2021 அன்று நமது கல்லூரியின் தாவரவியல் ஆய்வகத்தில் இந்த விழிப்புணர்வு நிகழ்ச்சி நடத்தப்பட்டது.

RUSA சார்பாக இணைய வழி பயிற்சி பட்டறை நமது கல்லூரி மாணவர்களுக்காக 11.02.2022 அன்று Nee for responsible Social Media Presence – TN Case Study என்ற தலைப்பில் ஏற்பாடு செய்யப்பட்டது. சிறப்பு விருந்தினராக Ms. Lavanya, Additional Superintendent of Police அவர்கள் கலந்துகொண்டு சிறப்பித்தார்கள். சுமார் 500 மாணவியர்கள் இந்நிகழ்ச்சியில் கலந்து கொண்டு பயன் பெற்றார்கள்.

RUSA சார்பாக இணைய வழி பயிற்சி பட்டறை நமது கல்லூரி மாணவர்களுக்காக 27.04.2022 – 29.04.2022 வரை மூன்று நாட்கள் A Life Skills Workshop" என்ற தலைப்பில் ஏற்பாடு செய்யப்பட்டது. சுமார் 500 மாணவியர்கள் இந்நிகழ்ச்சியில் கலந்து கொண்டு பயன் பெற்றார்கள்.

RUSA மூலம் இந்த கல்வியாண்டில் Rs. 9,97,071-க்கு (ரூபாய் ஒன்பது லட்சத்து தொண்ணூற்று ஏழு ஆயிரத்து எழுபத்தி ஒன்று) பல்வேறு துறைகளுக்கான உபகரணங்கள் வாங்கப்பட்டுள்ளன.

### வேலை வாய்ப்பு பயிற்சி (Placement Training)

கல்லூரி முதல்வர் அவர்களைத் தலைவராகக் கொண்டு, உதவிப் பேராசிரியர்கள் முனைவர் ந. மணிமேகலை (பொருளியியல் துறை), முனைவர் வெ.சு.காஞ்சனா(வணிகவியல் துறை) முனைவர் சு. அன்னபூரணி (வேதியியல் துறை), முனைவர் ஜி. நிர்மலா, ஆங்கில துறை), ஆகியோரை ஒருங்கிணைப்பாளர்களாகக் கொண்டு போட்டித் தேர்வுகளுக்கு இலவச வேலை வாய்ப்பு பயிற்சி வகுப்புகள்சிறப்பாக செயல்பட்டு வருகிறது.

### பொதுப்பணித் துறை (PWD)

நமது கல்லூரியில் ரூபாய் 4 லட்சம் பொருட்செலவில் மின் வேலை ( Electrical Work) ரூபாய் 1,45,029 பொருட்செலவில் குடிநீர், கழிப்பறைகள் மற்றும் B & C Block சிறப்பாக சீரமைத்துக் கொடுத்துள்ளனர்.

### முன்னாள் மாணவியர் சங்கம் (Old Students Association)

நமது கல்லூரியின் முன்னாள் மாணவியர் சங்கம் நம் கல்லூரி முதல்வர் தலைமையில் மின்னணுவியல் துறை உதவிப் பேராசிரியர் முனைவர் க. வெண்மதி, விலங்கியல் துறை உதவிப்பேராசிரியர் முனைவர் பானு ரவிகணேஷ், ஆங்கிலத் துறை உதவிப்பேராசிரியர் முனைவர் வெ.மலர், தமிழ்த்துறை உதவிப்பேராசிரியர் முனைவர் ச. அமுல் செல்வி மற்றும் வேதியியல் துறை உதவிப்பேராசிரியர் முனைவர் சு. அன்னபூரணி ஆகியோர்களைப் பொறுப்பாளர்களாகக் கொண்டு சிறப்பாக செயல்பட்டு வருகிறது.

இச்சங்கத்தின் மூலம் 5 கௌரவ விரிவுரையாளர்களும் 8 ஆய்வக உதவியாளர்களும் நியமிக்கப்பட்டு சங்க நிதியிலிருந்து ஊதியம் வழங்கப்பட்டு வருகிறது.

### சுழல் சங்க கிளை (Rotary Club)

நமது கல்லூரியில் ரோட்டரி கிளப் **ROTARY Club** முதல்வர் அவர்களின் தலைமையிலும், தாவரவியல் பேராசிரியர் முனைவர். R. குருசாமி ஆகியோர் பொறுப்பிலும் செயல்பட்டு வருகிறது.

ரோட்டராக்ட் கிளப் மற்றும் தாவரவியல் துறை இணைந்து நடத்திய நிகழ்ச்சியானது 'மகளிரும் சட்ட உதவியும்' என்னும் தலைப்பில் நடைபெற்றது. இது நமது எல்.ஆர்.ஜி. அரசு மகளிர் கலைக் கல்லூரியில், தாவரவியல் துறையில், கடந்த மே மாதம் 12 ஆம் நாள் நடைபெற்றது

கணிதவியல் துறையின் தலைவரும் பேராசிரியருமான திருமதி சு. இந்திராணி அவர்கள் இந்நிகழ்ச்சியைத் தொடங்கி வைத்தார் மற்றும் தாவரவியல் துறைத்தலைவரும் பேராசிரியருமான முனைவர் K. பத்மாவதி அவர்கள் இந்நிகழ்ச்சிக்கு வரவேற்புரை அளித்து அனைவரையும் வரவேற்றார்.

இந்நிகழ்ச்சிக்கு சிறப்பு விருந்தினராக வருகை புரிந்த திரு. P திருஞானசம்பந்தம் அவர்கள் 'மகளிரும் சட்ட உதவியும்' என்னும் தலைப்பில் உரையாற்றினார். இளம் தலைமுறையினர் அறிந்து கொள்ள வேண்டிய பல சட்டங்களையும் அதன் பயன்களையும் அவர் எடுத்துரைத்தார்.

'குழந்தைப் பருவம் முதல் முதுமைப் பருவம் வரையில் உள்ள பெண்களின் பாதுகாப்புச் சட்டம், பெண் கல்வி, பெண்களுக்கு வேலைவாய்ப்பு, பெண்களின் சொத்துரிமை, பெண்களுக்கு மருத்துவ உதவி, மகளிரின் தாய் சேய் நலத் திட்டம் போன்ற பல்வேறு சட்டங்களின் சிறப்பம்சங்களைப் பற்றி அவர் எடுத்துரைத்தார். 1970 ஆம் ஆண்டு முதல் இன்று வரை அமல்படுத்தியுள்ள பல்வேறு சட்டங்களையும் அதன் பயன்களையும் பற்றி அவர் எடுத்துரைத்தார்.இவ்வாறு அவர் தனது உரையை நிகழ்த்தினார். மாணவியர்களின் நலன் கருதி, இந்நிகழ்ச்சியை முனைவர் யூ.குருசாமி ஐயா மற்றும் முனைவர் வீ.பாலசரவணன் ஐயா ஆகியோர் இணைந்து ஒருங்கிணைத்தனர். 'மகளிர்களுக்கான சட்ட உதவிகள்' பற்றிய விழிப்புணர்வை நமது மாணவிகளிடையே உண்டாக்கினர். தாவரவியல் துறை சார்ந்த நூற்றுக்கும் மேற்பட்ட மாணவிகள் இந்நிகழ்ச்சியில் கலந்து கொண்டு பயனடைந்து உள்ளனர்.

### பெற்றோர் ஆசிரியர் கழகம் Parent Teacher Association (PTA)

நமது கல்லூரியில் பெற்றோர் ஆசிரியர் கழகம் சிறப்பாக நடைபெற்று வருகிறது. இச்சங்கத்தின் தலைவராக கல்லூரி முதல்வர் அவர்களும், துணை தலைவராக முனைவர் விஸ்வநாதன், நுண்ணுயிரியல் துறை, முனைவர் நிர்மலா தேவி, ஆங்கில துறை அவர்களை ஆசிரியர் குழு உறுப்பினர்களாகக்கொண்டு நம் கல்லூரியில் செயல்பட்டு வருகின்றது. மாதந்தோறும் பெற்றோர் ஆசிரியர் ஆலோசனை கூட்டம் நடத்தப்பட்டு மாணவியர் நலன்களுக்கான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு சிறப்புடன் செயல்பட்டு வருகிறது.இக்கழக நிதியிலிருந்து ஒன்பது பணியாளர்களுக்கு ஊதியம் வழங்கப்பட்டு வருகிறது.

### நுகர்வோர் பாதுகாப்பு குழு (CONSUMER CLUB)

நம் கல்லூரி முதல்வர் முனைவர் மெய். ஆர். எழிலி. அவர்கள் தலைமையில், முனைவர் சா. ஜானகி, கணிதத் துறை, முனைவர் ந. ஷீபா விலங்கியல் துறை, அவர்களை ஆசிரியர் குழு உறுப்பினர்களாகக்கொண்டு நம் கல்லூரியில் ஊழல் தடுப்பு விழிப்புணர்வு வாரத்தினை

(26.10.2021முதல் 01.11.201முன்னிட்டு இணைய வழியில் (30.10.2021 ) அன்று மாணவிகளுக்குத் தமிழில் பேச்சு போட்டி 'சமுதாய ஊழல் தடுப்பில் மாணவர்களின் பங்கு ' என்ற தலைப்பிலும், கவிதைப் போட்டி ஊழலற்ற இந்தியா என்ற தலைப்பிலும், கட்டுரைப் போட்டி 'ஊழல் தடுப்பும், தடுக்கும் விதிகளும்' என்ற தலைப்பிலும் போட்டிகள் நடைபெற்றன. முனைவர் ர. பானு ரவிகணேஷ் முனைவர் செ. சுதா ஊழல் தடுப்பு குறித்தும், பொறுப்பான குடிமகனின் கடமை பற்றியும் உரையாற்றினர்.தேசிய நுகர்வோர் தினம் மற்றும் உலக நுகர்வோர் உரிமைகள் தினத்தினை முன்னிட்டு இணைய வழியில் தமிழ் மற்றும் ஆங்கில வாயிலாக கவிதை போட்டி 'விளம்பரங்களின் விளக்கம்–ஒரு தெளிவான பார்வை' என்ற தலைப்பிலும், கட்டுரைப் போட்டி (25/02/2022) அன்று போட்டிகள் நடைபெற்றன.

## கணினிஅறிவுப் பயிற்சித் திட்டம் (CLP)

2000– 2001 கல்வி ஆண்டு முதல் தமிழக அரசின் கணினி அறிவுப் பயிற்சித்திட்டம் மூலமாக மாணவிகளுக்குக் கணினி அறிவுப் பயிற்சி நடைபெற்று வருகிறது. இத்திட்டத்தின் மூலமாக இக்கல்வியாண்டில் 909 மாணவியர்கள் பயிற்சி பெற்றுள்ளனர். இத்திட்டம் நமது கல்லூரி முதல்வர் அவர்களைத் தலைவராகவும், உதவி பேராசிரியர் முனைவர் யூ.காந்திமதி, நுண்ணுயிரியல் துறை,வணிகவியல் மற்றும் கணினி மற்றும் பயன்பாட்டியல் துறை உதவி பேராசிரியர் முனைவர். தி. நாகந்தி ஆகியோர்களைப் பொறுப்பாளர்களாகவும் கொண்டு 4 கணினி ஆசிரியர்களுடன் சிறப்பாக செயல்பட்டு வருகிறது.

## சுற்றுச் சூழல் குழு (Eco Club)

நமது கல்லூரியில் சுற்று சூழல் குழு (Eco Club) நமது கல்லூரியில் முதல்வர் தலைமையில், விலங்கியல் துறை பேராசிரியர் முனைவர். ப. சுமதி மற்றும்தாவரவியல்துறைபேராசிரியர்திருமதி. ம. ரூபிணி ஆகியோர் பொறுப்பில் செயல்பட்டுவருகிறது. கல்லூரி மாணவிகளுக்கான பாலினம் மற்றும்கல்வி குறித்த பயிற்சி 20.5.2022 அன்று சமூக கல்விமற்றும் முன்னேற்றமையம் (CSED) சுற்றுசூழல் குழு இணைந்து நடத்தியது. இதில் நூற்றுக்கும் மேற்பட்ட மாணவியர் பங்கு பெற்றனர்.

## கல்வி உதவித் தொகை

2021–2022 ஆம் கல்வியாண்டில் கீழ்க் கண்டவாறு கல்வி உதவித் தொகை வழங்கப்பட்ட விவரம் :

பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினர் நலத்துறையின் மூலம் 1870 மாணவிகளும் கல்வி உதவித் தொகை (ரூ. 6462189) பயன்பெறவுள்ளனர். ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறையின் மூலம் 744 மாணவிகளும் ரூ. 4434180) பயன் பெறவுள்ளனர்.

## தூய்மை இந்தியா (Clean India) Swachh Bharath

தூய்மை இந்தியா (Clean India) Swachh Bharath தூய்மை இந்தியா – ஸ்வாச் பாரத் (Swachh Bharath) திட்டமானது முதல்வர் அவர்களைத் தலைவராகக் கொண்டு உதவி பேராசிரியர்கள் முனைவர். கவா.பா. உஷா (பொருளியல் துறை) மற்றும் முனைவர். வேதா (வணிக மேலாண்மை துறை அவர்களை பொறுப்பாளர்களாகவும் கொண்டு தூய்மை இந்தியா பணிகள் சிறப்பாக நடைபெற்று வருகின்றது. தூய்மைப்பணித் தொடர்பாகப் பிரச்சாரம் ஒவ்வொரு வாரமும் நடைபெற்றது. என் குப்பை என் பொறுப்பு எனது வையகம் எனது பெருமை என உறுதியுடன் மாணவிகள் கல்லூரி வளாகத்தில் வாரந்தோறும் தூய்மைப்பணி மேற்கொண்டனர்.

## மென் திறன் பயிற்சி 2021-22 (Soft Skills Training 2021-22)

எங்கள் கல்லூரியில், மென்திறன்பயிற்சி, உயர்கல்விக்கான தமிழ்நாடு மாநில கவுன்சில்நிதிஉதவியுடன்25.04.2022 முதல் 18.05.2022 வரை நடத்தப்பட்டது. பயிற்சித் திட்டத்தில் அனைத்து இறுதி ஆண்டு மாணவிகளும் பங்கு பெற்றனர். பயனுள்ளகற்றல் சூழலை உறுதி செய்வதற்காக பங்கேற்பாளர்கள் குழுக்களாக பிரிக்கப்பட்டனர். 25பேராசிரியர்கள்மென் திறன் பயிற்சியாளர்களாக மாணவிகளுக்கு பயிற்சி அளித்தனர். மொத்தம் 1165 மாணவர்கள் பயிற்சியில் பங்கேற்றனர். பயிற்சியின் போது மாணவிகளுக்கு அவர்களின் வாழ்க்கையில் வெற்றி பெற தேவையான பல்வேறு திறன்கள் கற்பிக்கப்பட்டன. குறிப்பாக, சுய அறிமுகம், குழு உரையாடல், பொதுவான தொடர்பு கொள்வதற்கு தேவையான திறன், ரெஸ்யூம் எழுதுதல், மின்னஞ்சல் அனுப்புதல், குழு விவாதம் மற்றும் தனிப்பட்ட நேர்காணல்கள் ஆகியவைகற்பிக்கப்பட்டன. முழுப் பயிற்சிக் காலத்திலும் மாணவிகள்மென்திறன் பயிற்சியில் உற்சாகமாக பங்குகொண்டனர். பயிற்சியின் செயல்திறனை அளவிட 17.05.2022 அன்று இறுதி மதிப்பீடுகள் நடத்தப்பட்டன. 18.05.2022 அன்று, பயிற்சித் திட்டத்தைப் பற்றி மாணவிகள்தங்கள் கருத்துக்களைச் சமர்ப்பித்தனர். இறுதி நிறைவு விழா 19 மே 2022 அன்று நடைபெற்றது. கோயம்புத்தூர் அரசு மகளிர் கல்வியியல் கல்லூரியின் முதல்வர் டாக்டர்.எஸ்.கீதா தலைமை விருந்தினராகப் பங்கேற்றார். விழாவில், பயிற்சி நிகழ்ச்சியில் பங்கேற்ற அனைத்து மாணவிகளுக்கும் பயிற்சி நிறைவு சான்றிதழ்கள் வழங்கப்பட்டன

## உடற்கல்வித்துறை / விளையாட்டு செயற்பாடுகள்

நமது கல்லூரியில் உடற்கல்வித்துறை முனைவர். கு. கல்பனாகார்த்தி, ஆங்கிலத்துறை அவர்களின் பொறுப்பில் செயல்பட்டுக் கொண்டிருக்கிறது. மாணவிகளுக்கிடையேஓட்டப்பந்தயம், கபடி, எறிபந்து, இறகு பந்து, சதுரங்கம், டேக்வாண்டோ, குத்துச்சண்டை ஆகிய விளையாட்டுகளுக்குப் பயிற்சிகள் கொடுக்கப்பட்டு பாரதியார்பல்கலைக்கழகம் நடத்திய பல்வேறு போட்டிகளுக்கு அழைத்து செல்லப்பட்டனர். இரண்டாம் ஆண்டு ஆங்கிலம் பயிலும் மாணவி.D.பிளஸி, பாரதியார் பல்கலைக் கழகம் நடத்திய அனைத்து கல்லூரிகளுக்கிடையேயான

குத்துச்சண்டை போட்டியில் கலந்து கொண்டு வெண்கலப்பதக்கம் வென்றார். மூன்றாம் ஆண்டுபயிலும் P. நர்மதா என்ற மாணவி பாரதியார் பல்கலைக்கழகம் நடத்திய அனைத்து கல்லூரிகளுக்கிடையேயான டேக்வாண்டோ போட்டியில் வெண்கலப் பதக்கம் வென்றார்.

| Date of event/activity | Name of the event/activity | Name of the student participated |
|---|---|---|
| 01-12-2021 | BHARATHIAR UNIVERSITY, Volleyball Tournament | 1.SherilT (I BA English)<br>2.M.Gayathri(I B.Sc, Chemistry)<br>3.M.Pragalya( B.Sc Computer Science)<br>4.M.Bhoomika(I B.Sc Botany)<br>5.B.Rekha(I B.Com)<br>6.M.Vaishnavi(I B. Com)<br>7.V.Rakshitha(I BA Tamil)<br>8.B.Nandhini( I B.Sc Chemistry)<br>9.B.Dhivya(II BBA)<br>10.K.Nandhini(I BSc ComputerScience<br>11.B.Anju(II BA Economics)<br>12.S.Selvalakshmi(I B. Com CA)<br>13.Abirami.P II MA History) |
| 08-12-2021 | BHARATHIAR UNIVERSITY, Boxing Tournament | 1. D.Blessy (II BA English)<br>2. S.Malar(I B A History) |
| 18-12-2021 | BHARATHIAR UNIVERSITY Kabbadi | 1.MonishaR (I BA Economics,)<br>2.Vaishnavi. M. (I B.Com)<br>3.Rakshitha(I BA Tamil)<br>4.Rekha.B (I B. Com)<br>5.Sheril.T.(I BAEnglish)<br>6.Bhoomika. M. (IB.ScBotany)<br>7.Abirami.P(I BA Tamil) |
| 09/04/2022<br>-11/04/2022 | Athletics | P.Narmatha(III BA Economics) |
| 01-03-2022 | BHARATHIAR UNIVERSITY Taekwondo | P. Narmadha. ( III BA Economics) |
| 17/01/2022<br>& 18/01/2022 | BHARATHIAR UNIVERSITY Chess Tournament | 1.Manju.P. (I B.Sc Physics)<br>2.Anitha.A (I B.Sc Physics)<br>3.Janani.S (II B.Sc Computer Science) |
| 17/01/2022<br>& 18/01/2022 | BHARATHIAR UNIVERSITY Chess Tournament | 1.Manju.P. (I B.Sc Physics)<br>2.Anitha.A (I B.Sc Physics)<br>3.Janani.S (II B.Sc Computer Science) |

## TAMIL NADU STATE COUNCIL FOR HIGHER EDUCATION (TANSCHE)

தமிழ்நாடு மாநில உயர்கல்வி மன்றம் (TANSCHE) மூலம் தமிழ்நாட்டில் உள்ள அனைத்து அரசு மற்றும் அரசு உதவி பெறும் கலை அறிவியல் கல்லூரிகளில் பணி புரியும் பத்து வருடங்களுக்குக் குறைவான அனுபவமுள்ள உதவிப் பேராசிரியர்களுக்கு பணியிடைப் பயிற்சி (In - Service Teacher Training Program) 5.5.2022 மற்றும் 6.5.2022 ஆகிய இரண்டு தினங்கள் நடத்தப்பட்டது. தமிழ்நாடு மாநில உயர்கல்வி மன்றம் சிறப்பாக செயல்படும் கல்லூரி என்ற நிலையில் நமது எல்.ஆர்.ஜி. அரசு மகளிர் கலைக் கல்லூரியை கோயம்புத்தூர் மண்டலத்தின் கணினி பயன்பாட்டியல் & தொழில்நுட்பம் மற்றும் ஆங்கிலம் ஆகிய இவ்விரு பாடப்பிரிவுக்கான பயிற்சி மையமாக அறிவித்தது. இப்பயிற்சி மையத்தில் ஏறத்தாழ 90 பேராசிரியர்கள் கலந்து கொண்டு பயன்பெற்றனர்.

கணினிப் பயன்பாட்டில் மற்றும் தொழில் நுட்பம் பாடப்பிரிவிற்கு முனைவர் கே. சரோஜினி, கணினி அறிவியல் துறைத்தலைவர் ஒருங்கிணைப்பாளராகவும், ஆங்கில பாடப் பிரிவிற்கு முனைவர் கே. கீதா, ஆங்கிலத்துறை தலைவர் ஒருங்கிணைப்பாளராகவும், முனைவர் கே. ராஜேந்திரன், உதவிப் பேராசிரியர், மின்னணுவியல் துறை பயிற்சி மையத்தின் ஒருங்கிணைப்பாளராக கொண்டு அனுபவமிக்க பேராசிரியர்கள் மற்றும் தொழில்நுட்ப வல்லுநர்கள் உதவியுடன் பயிற்சி அளிக்கப்பட்டது. பயிற்சியின் நிறைவாக நமது கல்லூரியின் முதல்வர் முனைவர் எம்.ஆர். எழிலி அவர்களின் முன்னிலையில் தமிழ்நாடு மாநில உயர்கல்வி மன்றத்தின் ஆராய்ச்சி அலுவலர் முனைவர். ஜெயசுதா அவர்கள் பயிற்சியில் பங்கேற்ற உதவிப் பேராசிரியர்களுக்கு சான்றிதழ்களை வழங்கி மதிப்பீட்டு உரையாற்றினார்.

# கவிதைகள்

## பெண்மை

சமயலறையே உலகம் என்றில்லாமல்
உலகையே ஆள தொடங்கிவிட்டாள் பெண்
பெண்ணாக பிறப்பதில் பெருமை கொள் பெண்ணினமே !!
இன்பத்தை உண்டாக்கி துன்பததை உடைத்தெறியும்
பெண்ணே
உன்னால் தானே இங்கு ஓர் உயிர் உருவாகிறது.
பெண் என்பதில் பெருமை கொள்
உன்னை மதிப்பவர்களுக்கு மலராகவும்
மிதிப்பவர்களுக்கு முள்ளாகவும் இருக்க கற்றுக்கொள்!
மனதில் ஆயிரம் கவலை இருப்பினும்
உதட்டில் சிறு புன்னகையை பூட்டிக்கொள்
நீ இருக்கும் இடத்தை சிறப்பாக வைத்துக்கொள் !
ஒரு துளி உதிரத்தையும் உயிராக மாற்றும் நீ
சிறு துளி கண்ணீரையும் உயிராக மாற்றும் நீ
சிறு துளி கண்ணீரையும் யாருக்காகவும்
விடாதே யாரையும் விட வைக்காதே!
சில நேர சுமைகளை கூட பாரமாக
எண்ணும் இவ்வுலகில் - சுமைகளை
சுகங்களாக எண்ணி வாழ்கின்ற அழகி நீ!
சாதனையோடு சரித்திரம் படைக்க கடவுள்
படைத்த கற்பகவிருட்சம் நீ
சூரியன் இன்றி பூமி இயங்காது
பெண்கள் இன்றி இந்த பூவுலகம் இயங்காது
தன்னம்பிக்கையுடன் தடம் பதித்து
கொண்டிரு பெண்ணே!!
உனக்கான பாதை பூவால் மலர்ந்து
உன் வருகைக்கு காத்திருக்கிறது
எதிர்பார்ப்புகளை குறைத்தும்
எதிர்வினைகளை எதிர்த்தும்
எதிர்நீச்சல் போடு!!
மென்மையாக இருப்பதால் தான் பெண்மை
எனும் பெயர் பெற்றாயோ
உனக்குள் இருக்கும் சக்தி அது
உனக்கே தெரியாமல் உன்னுள் உண்டு
மனோபலம் மகளிர்க்கே சிறப்பு.

**செ. விமலா**
B.Sc.,CS I Year
(II Shift)

## கல்லூரி

பக்கங்களை
புரட்டச் சொல்லுவதில்லை
ஒரு புத்தகமாய்
உன்னையே இருத்தச் செய்வது....

சமன்பாடுகளைத்
தீர்ப்பதல்ல,
சிக்கல்களை சீராக்குகிறது
சமன்பாடுகளாய்
உன்னையே ஆக்கி...

பயிற்சிறை தருவதல்ல
ஆய்வகத்தல்,
விளைவுகளை மாற்றச்சொல்கிறது
ஆய்வகமாய் உன்னையே மாற்றி...

பாரதியைப்
படிக்கச் செய்வதில்லை
புரட்சியாய் உன்னையே
வெடிக்க வைப்பது...

ஷேக்ஸ்பியரை
அறியக் கொடுப்பதல்ல
கவிதையாய் உன்னையே
பொழியக் கொடுப்பது.

கற்பிப்பது மட்டுமல்ல
உன்னையே கல்லூரியாய்
உலவச் செய்வது....

திருமதி. **மாலதி பாலாஜி** MCA., M.Phil., (Ph.D.,)
கௌரவ விரிவுரையாளர்
கணினி அறிவியல் துறை
B.Sc.,CS I Year
(II Shift)

## நினைவுகள்

பள்ளி பருவ தோழியின் நினைவு
சொல்ல தெரியாத நினைவாக...
பருவ கால கல்லூரியின் நினைவு
சொல்லில் அடங்கா நினைவாக
பருவ கால காதல் நினைவு
சொந்தமில்லா நினைவாக - திருமணத்திற்கு
முன்இருந்த தாய்வீட்டு நினைவு
புரிதல் உடைய நினைவுகளாக மாறி
இறுதியில் நினைவொன்றையே நிரந்தரமாக்கி
இவ்வுலகை விட்டு செல்கிறோம்...
வெறும் நினைவாகவே!

## கடல் கரை

நான் பலரின் கால்தடத்தினைப் பெற்றேன்
என் காதலி கோபம் கொண்டு
அதனைக் கொண்டு சென்றாள்
அலையாக வந்து!

**ர. ரம்யா**
இளங்கலை தமிழ் இலக்கியம்
மூன்றாம் ஆண்டு

## நண்பன்

சில நேரங்களில்
தாயையும் மிஞ்சுகிறாய்
சில நேரங்களில்
என் குழந்தையாய்
கெஞ்சுகிறாய் !
இரண்டுமே இனிக்கிறது
என்றென்றும்
எனக்காக
என் நிழலாக
நண்பனே நீ!!

மாயமான இவ்வுலகில்
மாயங்கள் செய்பவனாக
என்று மாறினாய் ??
ஆம்! அன்று என்
அன்னையாய் நீ!
இன்று என்
தந்தையாய் நீ!
என்றும் எனக்காக
என் நிழலாக
நண்பனே நீ!!

**திவ்யா**
தமிழ் இலக்கியம் முதலாம் ஆண்டு

## நட்பு

ஒரு துளி
கண்ணீரைத் துடைப்பது
நட்பு அல்ல...
மறு துளி
வராமல் தடுப்பது
தான் நட்பு....

தடுமாறும் போது
தாங்கிப் பிடிப்பவனும்
தடம்மாறும் போது
தட்டி கேட்பவனும்
உண்மையான **நண்பன்** !

**இனிதா**
I B.Sc., இயற்பியல் துறை

## உதிர்ந்த இலையின் வாழ்க்கை

உயரத்தில் இருந்திட்டு
உலாவிடும் மனிதர்களைப் பார்த்திட்டு
பலத்த காத்தால் தடிக்கிட்டு
பொத்தென்று விழுந்திட்டு
மனிதனால் மிதிப்பட்டு
மண்ணுக்குள் மட்கிட்டு
வாழ வந்தாய பூமிக்கு
வாக்கப்பட்டாய கிளைகளுக்கு
மீண்டும் உழைக்க......

## சரிநிகர்

உலகம்
ஆலமரமானால்
அதில்,
ஆண்களும்
பெண்களும்
விழுதுகள்தான்

**மு. கீர்த்தனா**
இளங்கலை தமிழிலக்கியம்
மூன்றாமாண்டு

## கம்மல்

காற்றில் பறக்கும் பூ போல
காற்றோடு ஆடுகிறதே செவிப்பூ
செவியின் உள்ளே இசை
செவிப்பூவின் ஓசை

**செ. காயத்ரி**
இளங்கலை தமிழ் இலக்கியம்
மூனறாம் ஆண்டு, தமிழ்த்துறை

## கல்லூரி வாழ்க்கை

பள்ளிக்கூடம் என்ற கருவறையிலிருந்து
கல்லூரி என்ற குடும்பத்தில்
காலடி எடுத்து வைத்த - அந்த
அற்புதமான நாள் - விண்வெளியில்
கால் பதித்தது போல்
அழகிய உணர்வு...

கல்லூரி என்ற கூட்டுக் குடும்பத்தில்
குடும்பத்தின் மூத்தோர் பொறுப்பில் கல்லூரி முதல்வரும்
குடும்பத் தலைவர் பொறுப்பில் துறைத்தலைவர்களும்
ஈடு இணையற்ற தாய் பொறுப்பில் பேராசிரியர்களும்
சிப்பிக்குள் இருக்கு முத்து - போல்
ஏராளமான நண்பர்கள்
அடங்கிய அழகியக் குடும்பம்
எமது கல்லூரி

பூக்கள் தூவி சந்தனம் தடவி
ஆடல் பாடல், விருந்துடன்
வரவேற்பு விழா

ஒருவருக்கொருவர் அறிமுகம்
பேராசிரியர்கள் கற்பித்தப் பாடம்
கற்க முயன்ற கல்வி
கற்றுக்கொண்டதைக் கற்றல்
அடிப்படையிலாக எதிர்கொண்ட தேர்வு...

பல ஆசைகளுடன் அடியெடுத்துவைத்தோம்
ஆசைகள் நிராசையாகப்
பற்றிக் கொண்ட நோயின் தாக்கம் (கொரனா)
பல கனவுகள் தோல்வியைக்கண்டு மீண்டும் கல்லூரி
கண்ணீருடன் கட்டியணைத்த
தோழமையின் பாசம்...

பேராசிரியர்களின் பேரன்பு
கற்றுக்கொடுத்த கல்வி
பகிர்ந்த அனுபவம்...
தோழிகளுடலான நட்பு
பகிர்ந்த இன்ப, துன்பம்
கேளிக்கையான சண்டைகள்...
துறைத்தலைவர், பேராசிரியர்களிடம்
வாங்கியத் திட்டுக்கள் - இவை
வெறும் திட்டல்கள் அல்ல
எங்கள் புத்தியை கூர்மையாக்கிய வாள்...

காலம் கடந்து செல்ல
வாங்கிய திட்டுக்கள் நினைவுல் வர
ஆனந்த கண்ணீர் கண்களில்...

கல்லூரி என்ற குடும்பத்தின் - பிரியாவிடை
இலட்சிய இலக்கின் பயம்

பிரியாவிடையின் இன்ப வலி
ஆனந்த கண்ணீர்
மறக்க முடியா நினைவுகள்
பார்த்து இரசிக்கும் புகைப்படங்கள்
நினைவுகளாக...

கனா காணும் காலங்களாக
எனது கல்லூரி வாழ்க்கை

**ப. லோகப்பிரியா**
இளங்கலை தமிழ் இலக்கியம்
மூன்றாமாண்டு

## காலம் கடந்த உண்மைகள்

வண்ணப் பூச்சிகளும்
வட்டம் போடும் வண்டுகளும்
செந்தமிழ் பாடல்களும்
தேன்பா நிறைந்த இலக்கணங்களும்

காதல் செய்திகளும்
காலம் கடந்த உண்மைகளும்
கோவில் சிற்பங்களும்
சிற்பம் சொல்லும் கலைகளையும்

சங்கப் பாக்களும்
சங்கம் வளர்த்த தமிழர்களும்
தமிழ் பெருமைகளும்
தமிழ் செய்த தொண்டுகளும் கேளாய்
கேட்க கேட்க ......

**ஆ. பிருந்தா**
ஆங்கில இலக்கியம்

## அழகு

பெண் அழகு
அவள் முகத்தில் இல்லை...
அவள் காட்டும்
அன்பிலும் நடத்தையிலும்
உள்ளது !...
ஆணின் அழகு
அவன் பணத்தில் இல்லை...
அவன் பெண்ணுக்குத்
தரும் மரியாதையில்
உள்ளது...

## அம்மா



தமிழன் உயிர்
எழுத்துக்களில்
முதலாகி மெய்
எழுத்துக்களில்
இடையாகி
உயிர் மெய்
எழுத்துக்களில்
கடையாகி
முற்று பெற்று
வரும் பெயர்
கொண்ட
அற்புத பிறவி
"**அம்மா**"

தந்தை கொடுத்த உயிரணு ஒன்றை.
தன்னுயிர் வருடி பத்து
மாதம் கழித்து நாடி வர செய்த
**அன்னையே !**

நின் நிகர் உலகில் உளதோ?
நாடி பெற்ற நாய் முதலா
நாழிகை தவறா உணவெடுத்து
உயிர்ப்பிண்டத்தில் உறுப்புகளை
உருசேர்ப்பாய் ஒன்பது வாரத்தில்
இரத்த நாளங்கள் அதை ஒரு சேர
ஒருங்கிணைத்து தொப்புள்
கொடியில் கொடை கொடுப்பாய்
அண்டத்தின் உன்னத உறவே!!

உண்ணும் உணவை அடுத்தவர்க்கு
ஈயும் மாந்தர் கண்டேன்
உண்ணும் சத்துக்களை இரத்தமாய்
கொடை கொடுக்கும் முதல் உயர்ந்த
கொடையாளி உனையன்றி உளரே!

எத்தனை இடர்கள் ஆயினும்
நாற்பது வாரங்கள் தடவி தடவி உன்
கரங்களால் வயிற்றின் ஊடே உயிர்
சுவாசத்தை வளர்த்த
அன்னையே...!!

ஒப்பில்லா உயிர்வலி
கொண்டினும் தன் மகவு உலகை
பார்க்கும் நொடிப்பொழுதில் தன்
வலி மறந்து உலகை பூரிப்பாயே
உனக்கு நிகர் உறவுண்டோ
இவ்வுலகில் ...!!

அகரம் பயிலும் முதல் வார்த்தையே
அம்மா அம்மா!
அப்பாவின் நிழலில் ஓடி ஓடி
வளர்த்தெடுக்கும் உயிருறவே
அம்மா ...!!

**ஆ. தர்ஷினி**
இளங்கலை தமிழ் இலக்கியம்
முதலாமாண்டு

## கல்லூரி

சிரித்து பேசிய நில நிமிடங்கள்
சிந்தனை முழுதும் சிதறிக் கிடக்கும்!
நினைத்து நினைத்து பார்க்கும்போது
நெஞ்சம் மீண்டும் அந்த இடம் கேட்கும்!

காற்றில் மிதந்த கார்முகிலாய்
காலங்கள் சென்றன கணக்கின்றி
சற்றே திரும்பி பார்த்தபோது
விழிகள் நிரம்பின கண்ணீர்துளியால்!

இனி எப்போதும் கிடைக்காத பொற்காலம்
இனிதே முடிவடைந்து மூன்றாண்டாய்!
எந்த இறைவன் வரம் கொடுப்பான்
என் கல்லூரி வாழ்க்கை மீண்டும் செல்ல!!

**க. லாவண்யா**
வேதியியல்துறை

## சில உண்மைகள்

**வாலிபம்**

நிறைய நேரம் உள்ளது
ஆரோக்கியமும் உள்ளது
ஆனால் பணம் இல்லை!

**இளமை**

ஆரோக்கியம் உள்ளது
பணம் உள்ளது
ஆனால் நேரம் இல்லை!

**முதுமை**

நேரமும் பணமும் உள்ளது...
ஆனால் ஆரோக்கியம் இல்லை!

**ர. அனுஷா**
தமழ் இலக்கியம்
முதலாம் ஆண்டு

## ஏங்கும் கண்களின் ஈரம்

அலைப்பேசியில் அழைப்பாயா...
கடிதங்கள் எழுதவாயா ... இல்லை
புறாக்களின் மூலம் தூது அனுப்புவாயா...
என்னை காண நீ வருவாயா ... இல்லை
உன்னை காண நான் வருவேனா...
யார் அழைத்து செல்வார் என்னை?
என்று ஏக்கத்துடன் காத்திருக்கும் கண்கள்...

**கண்ணாடி**

உண்மைகளை மட்டும் வெளிப்படுத்தும்
அதிசயம்...

**முகம்**

அமாவாசை இரவிலும்
மின்மினிப் பூச்சிபோல்
மின்னுகிறத அவளின்
முகம்....

**தலையணை**

பல வலிகளையும்
பல இன்ப. தன்பங்களையும்
பதுக்கி வைத்து வாழ்கிறது....
தாய் தந்தையின் அரவணைப்பை
தேடி அலையும் பிள்ளைக்கு
அரவணைப்பு தருகிறது...
தலையணை.....

**கி. துர்காதேவி**
இளங்கலை தமிழ் முதலாமாண்டு

## நட்பு

நட்பு என்பது இனிமையானது!
இன்பத்தில் மட்டுமல்ல
துன்பத்தில் துள்ளிவரும் வரை
மனம் என்னும் கல்லில்
வடித்த சிலை தான் நட்பு!
இருளில் கூட ஒளி விடும்
சிந்தனை தான் நட்பு!
உள்ளம் என்னும் இடத்தின்
தெளிந்த நீரோடை தான் நட்பு
சோகமான நேரம் கூட மாறிப்போகும்
வலிகள் கூட தொலைந்து போகும்
நண்பர்கள் உடன் இருந்தால்
நட்பு என்னும் மூன்று எழுத்தால்
நாம் அனைவரும் ஒன்றாக சேர்ந்தோம்.

**எம். தாரணி**
வேதியியல் துறை

## ஆசிரியர்

வெறும் கல்லாய் இருந்த எம்மை,
பட்டை தீட்டி ஜொலிக்கும் வைரமாய்
மாற்றிய தன்னலமற்ற எமது
ஆசான்களுக்கு நிகர் புவியில் யாரும் உண்டோ!

பறக்கும் பட்டமல்ல நம்
ஆசிரியர்கள் நம்மை உயர
உயர பறக்க வைக்கும்
நூலாகியவர்கள் நம் ஆசிரியர்கள்!

இன்று வரையிலும் இனிமேலும்
நாங்கள் காணும் வெற்றிகளுக்கு
நாங்கள் அடையும் புகழ்களுக்கு
உரியவர்கள் நீங்கள் தானே !!!

**V. பிரியா**
B.A., பொருளியல் துறை

## Space Facts...

1. There are more stars in the universe than grains of sands on earth
2. One day on venus is longer than one year
3. The sunset on mars appears blue
4. One million earth can fit inside the sum
5. There is a planet made of diamonds which is twice the size of earth.
6. The hottest planet in our solar system is 450°C
7. Space is completely silent.
8. The sun mass takes up 99.86% of the solar system
9. There are more trees on Earth than stars in milky way
10. A full NASA space suit costs $ 12,000,000

M. ELAKIYA
I B.Sc., Physics

## Physics Quotes

1. Energy is liberated matter, matter is energy waiting to happen
2. Not only is the universe stranger than we think, it is stranger than we can think
3. The laws of physics is the canvas God laid down on which to paint his master piece - Dan Brocon
4. Physicists have come to realize that mathematics, when used with sufficient care, us a proven pathway to truth - Brain Greene
5. Theoretical physics is the entertainment branch of physics.

V. Priyadharshini
I. B.Sc., Physics

## வாசிப்பை நேசிப்போம்

**முன்னுரை :**

அறிவு மனிதனுக்குத் தேவையான ஆயுதமாகும். புத்தகமே அதற்கு அடிப்படையாக விளங்குகின்றது. மனிதனின் கண்டுபிடிப்புகளில் மிகச் சிறந்தது புத்தகமே என்றார், ஆல்பர்ட் ஐன்ஸ்டீன். புத்தகம் ஒரு காலத்தின் வரலாறு அதன் சிறப்பைக் காண்பதே இக்கட்டுரையின் நோக்கம்.

**வாசிப்போம்**

எழுத்துக்கள் மூலம் வரலாறு பதிவு செய்யப்படுகிறது. குழந்தைகள் பேச ஆரம்பிக்கும் முன்பே, நாம் புத்தகம் வாசித்துக் காட்ட வேண்டும் என்கின்றனர் உளவியல் வல்லுநர்கள். அதனால் குழந்தைகளின் மூளை வளர்ச்சியும் அறிவுத் திறனும், முடிவு எடுக்கும் திறனும் அதிகரிக்கும்.

**தேர்ந்தெடுக்கும் முறை :**

சான்றோர்களின் அனுபவங்களே புத்தகங்களாக மிளிர்கின்றன. புத்தகங்களை தேந்தெடுப்பதில் கவனமாக இருப்பது மிகவும் அவசியமானது. தினமும் அரை மணி நேரம் புத்தகம் வாசிப்பதால் நம் பேச்சுத் திறனும் அறிவுத் திறனும் அதிகரிக்கும். புத்தகம் ஒரு மனிதனின் சிறந்த நண்பன். சிறந்த தகவல்கள், துன்பமான சூழ்நிலைகளில் சிறந்த முடிவுகளை எடுக்க புத்தகம் உதவுகிறது. புத்தகம் வாசிப்பதால் அறிவுரைகளும் நீதிகளும் நமக்கு வாழ்க்கையில் முன்னேற பல பாதைகளை காட்டுகிறது.

**உலக புத்தகத் தினம்**

யுனெஸ்கோ (UNESCO) உலகக் கல்வி நிறுவன அமைப்பு புத்தகங்கள் படிக்கும் வழக்கத்தை ஊக்குவிக்க 1995-ல் உலக புத்தக தினத்தை அறிவித்தது. அன்று முதல் ஏப்ரல் 24 ன்று உலகப் புத்தக தினமாக கடைபிடிக்கப்பட்டு வருகிறது உலகின் புகழ் பெற்ற எழுத்தாளர்களான ஷேக்ஸ்பியர், இன்கா கார்கிலாசோ போன்றோர் இறந்ததும் சில புகழ் பெற்ற ஆங்கில எழுத்தாளர்கள் பிறந்ததும் ஏப்ரல் 23-ல் இவர்களை நினைவுகூறும் வகையில் தான் ஏப்ரல் 23 அன்று உலக புத்தக தினமாக கொண்டாடப்படுகிறது.

**உறுதிமொழி**

புத்தக தினத்தில் அனைவரும் புத்தகம் வாங்க வேண்டும் என உறுதிமொழி எடுங்கள். நண்பர்கள் மற்றும் உறவினர்களுக்குப் புத்தகங்களை பரிசாக அளியுங்கள். ஒன்றாகக் கூடி புத்தகங்களை வாசிப்போம். புத்தகம் தான் சமூக மாற்றத்துக்கான திறவுகோல். புத்தகம் வாசிப்பதை ஒரு இயக்கமாக செய்வோம்.!

**முடிவுரை :**

புத்தகம் வாசிப்போம் !
அறிவை வளர்ப்போம் !
வாசிப்பின் அவசியத்தை
அனைவருக்கும் உணர்த்துவோம் !!!

**ந. ஆலியா**
முதலாமாண்டு இயற்பியல்

இந்த பூமியில் உயிர்கள் நிலைத்து வாழ வேண்டும் என்றால் சுற்றுச்சூழல் பாதுகாப்பாகவும் ஆரோக்கியமாகவும் இருக்க வேண்டும்.

**முன்னுரை :**

நாட்டின் தூய்மை நமக்கெல்லாம் பெருமை.
சுத்தம் சோறு போடும்
என்பது பழமொழிகளாகும்.

மனிதன் உட்பட அனைத்து ஜீவராசிகளும் வாழ்வதற்கு ஏற்ற இடம் தான் புவி மண்டலம் ஆகும். நாம் எப்போதும் இத்தகைய சுற்றுச்சூழல் தூய்மையை பாதுகாக்க வேண்டும். சூழலானது முன்பு போல் இல்லாமல் தற்காலத்தில் அதிகம் மாசுப்பட்டுள்ளது. இத்தகைய நிலைக்குக் காரணம் நாம் அனைவருமே.

நிலம், நீர், காற்று, வளி என அனைத்தும் நம்மால் மாசுப்படுத்தப்படுகின்றது. இதனால் பல பிரச்சனைகளை நாம் எதிர்நோக்க வேண்டியுள்ளது. எனவே சுற்றுச் சூழல் பாதுகாப்பு அவசியமான ஒன்றாகும். இதனை இக்கட்டுரையில் காண்போம்.

**நிலம் :**

அகழ்வாரைத் தாங்கும் நிலம்போல என்பதற்கிணங்க தோண்டத் தோண்ட வளங்களைக் கொடுக்கும் இம்மண்ணில் தாவர இனங்கள் மட்டுமின்றி பல நன்மை செய்யும் நுண்ணுயிர்கள் வாழ்கின்றன.

ஆனால் மண்ணுக்குக் கெடுதல் செய்கின்றோம். நவீனமயமாக்கலானால் பல கெடுதலை விளைவிக்கும் கழிவுகள், கட்டடக் கழிவுகள் முதலானவற்றை மண்ணுக்குள் போட்டு அங்குள்ள மேல் மண்ணை உரமற்றதாக்குகின்றோம். இந்நிலையிலிருந்து நீங்கி மண்ணைத் தூய்மையானதாகவும், சத்துள்ளதாகவும் பாதுகாக்க வேண்டும்.

**நீர்**

நீரின்றி அமையாது உலகு என்பார்கள். உலகுக்கு முக்கியமான நீரானது இன்று பல மாசடைவினைச் சந்தித்து வருகின்றது. ஏரிகள், குளங்கள், கால்வாய்கள் எனப் பலவிதமான நீர்நிலைகளும் ஆக்கியரமிக்கப்படுகின்றன. இவை வீடுகளாகவும், கட்டடங்களாகவும் மாறியுள்ளன.

ஆறுகள் எல்லாம் தொழிற்சாலைக் கழிவு நீர்க்கால்வாய்களாகவும், கடல் ஒரு மலரும் குப்பைத் தொட்டியாகவும் மாறி நீர் வாழ் உயிர்கள் மடிவதற்கு காரணமாகின்றன. மாசற்ற நீரைக் காப்பாற்றி மண்ணுயிர்கள் வாழவழி செய்வோம்.

**காற்று**

ஆலைப் புகையின் அடத்தியினால் காலை சூரியன்
கண் விழிப்பதில்லை என்றான் ஒரு கவிஞன்

நவீனமயமாதலே காற்று மாசுபட முக்கிய காரணம் ஆகும். தொழிற்சாலை மற்றும் வாகனங்களில் பயன்படுத்தப்படும் அதிகப்படியான எரிபொருள் பயன்பாடு வெளியாகும் புகைகள் காற்றை மாசுபடுத்தி சுவாசப் பிரச்சனை உட்பட பல நோய்களையும் கொடுக்கின்றன. மோட்டார் வாகனங்களின் புகையால் காற்று மாசுப்பட்டு ஆகாயத்தில் சில தூய்மைக் கேட்டினை விளைவிக்கின்றன.

அதுமட்டுமின்றி அமிலமழை, ஓசோனில் ஓட்டை என பல பயங்கரமான ஆபத்துக்களை எதிர்நோக்க வேண்டியுள்ளது. காற்றை சுத்தப்படுத்தும் காடுகளை அழிப்பதனால் இந்த ஆபத்துக்களை சந்திக்க வேண்டியுள்ளது. காற்று மாசுபடுவதைத் தடுத்து உயிர்வளி காற்று உயிரைப் போற்றுறுவோம்.

**மு. மதுபாலா**
இளங்கலை பொருளாதாரம்
இரண்டாம் ஆண்டு

## கல்வியின் சிறப்பு

முன்னுரை :

கற்கை நன்றே கற்கை நன்றே பிச்சை புகினும் கற்கை நன்றே என்பது வெற்றிவேற்கை. வாழ்க்கையில் எவ்வளவு வறுமை நிலை வந்தாலும் கல்வி கற்பதை மட்டும் நிறுத்தி விடக்கூடாது. தமிழ்கள் 3000 ஆண்டுகளுக்கு முன்பே ஒப்பற்ற இலக்கியங்கள் காப்பியயங்களைப் படைக்கும் அளவிற்கு சிறந்த கல்வியறிவுடையவர்களாக காணப்பட்டனர்.

இதற்கு அக்காலத்தில் எழுந்த புகழ்பெற்ற இலக்கியங்களான எட்டுத்தொகை பத்துப்பாட்டு நூல்களே சாட்சியாகும்.

கேடில் விழுச்செல்வம் கல்வி ஒருவற்கு
மாடல்ல மற்று பிற

என்கிறார் பொய்யாமொழி புலவர். அதாவது உலகத்தில் மனிதர்களுக்குக் கல்விதான் சிறந்த செல்வம் ஏனைய செல்வங்கள் இதற்கு இணையாகாது என்பது இதன்பொருள். இக்கட்டுரையில் கல்வியின் சிறப்புகள் பற்றி காணலாம்.

கல்வியின் அவசியம்

நம் வாழ்க்கையை முன்னேற்றும் சக்திவாய்ந்த கருவி கல்வி ஆகும். கல்வி ஒருவருடைய அறிவையும், ஆற்றலையும் உயர்த்தி சமூகத்தில் நல்ல மரியாதையை ஏற்படுத்தி தரும். கல்வி ஒழுக்கத்தைக் கற்றுக் கொடுப்பதோடு நேரத்தின் மதிப்பை நமக்கு உணர்த்துகிறது. கல்வி கற்றவர்களுக்கு வேலைவாய்ப்பு அதிகமாக கிடைக்கிறது.

கல்வி ஒருவருக்கு எந்தெந்த இடத்தில் எவ்வாறு அணுக வேண்டும் என்பதையும், கருத்துப்பரிமாற்றத் திறனையும் கற்றுத் தருகிறது. கல்வி ஒரு மனிதனின் அறிவை திறக்கும் திறவுகோல் ஆகும். மனிதனை ஒரு முழுமையான ஆற்றல் உள்ள மனிதனாக மாற்றம் அடைய செய்வது கல்வியாகும்.

கல்வி என்பது ஒவ்வொரு; மனிதனின் வாழ்விலும் இன்றியமையாததாகிறது. அறிவைப் பெறாவிட்டால் எந்வொரு முழுமையான திறனையும் அடைய முடியாது என்பதை நினைவில் கொள்ள வேண்டும்.

கற்றோரின் பெருமைகள் :

கல்வி அறிவில் சிறந்தவர்கள் ஒரு சமூகத்தில் உயர்வாக மதிக்கப்படுவார்கள். ஒரு செல்வந்தன் காலச் சூழ்நிலையால் ஏழையாகலாம் ஆனால், கல்வி அறிவுடையவன் அவ்வாறு இல்லை தனது நிலையை மேலும் உயர்த்தி கொள்வான்.

இதனை ஔவையார் கூறுகையில் மன்னனும் **மாசற கற்றோனும் சீர்தூக்கின் மன்னனில் கற்றோன் சிறப்புடையன் மன்னற்குத் தன்தேசம் அல்லாமல் சிறப்பில்லை கற்றோர்க்கு சென்ற இடமெல்லாம் சிறப்பு** என்று கற்றவர்களின் பெருமையை பாடுகிறார். நாட்டின் அரசனையெ வழிநடத்தும் அமைச்சர் சிறந்த கல்வி அறிவுடையவராகவெ இருப்பர்.

கல்வியால் தாழ்ந்தவர்கள் என்று கூறுமளவிற்கு வெருமில்லர். கல்வியால் பல்வேறுப்பட்ட நபர்கள் உயர்வடைந்தள்ளனர். அப்துல் கலாம், அம்பேத்கர், சுந்தர்பிச்சை போன்ற பலர் கல்வியால் உயர்வு அடைந்தவர்களாவர். இவர்கள் சிறுவயதிலிருந்தே கல்வி மேல் கொண்ட ஆர்வமே இவர்களை உலகம் கொண்டாடும் மனிதர்களாய் ஆக்கியுள்ளது. சிறந்த கல்வி மனிதனை உயர் இடத்திற்கு இட்டுச் செல்லும் என்பதனை நாம் அறிய முடிகின்றது.

**கற்றதன் பயன் :**

நாம் பெற்று கொள்கின்ற பயன் நமக்கு மட்டும் பயன்படுவதாய் இருக்க கூடாது. அந்த இந்த சமூகத்துக்கும் நாட்டுக்கும் பயன்படும் வகையில் நாம் சேவையாற்ற வேண்டும். அறியாமையில் இருப்பவர்களுக்கு நாம் கல்வி அறிவினால் உதவி செய்ய முடியும் நல்ல எண்ணங்களும் சிறந்த செயல்களையும் செய்ய வேண்டும் அதுவே கல்வியின் படி நாம் ஒழுகுவதே கற்ற கல்வியின் பயனாகும் என்கிறார் வள்ளுவர்.

கல்வியின் பயன்களாவன, கல்வி கற்பதன் மூலம் எல்லா வளங்களும் கிடைக்கும். கல்வியால் வாழ்க்கையில் எதிர்படும் இடர்களையெல்லாம் வெல்ல முடியும். மனபயத்தினை போக்கும் வல்லமை கல்விக்கு உண்டு. கல்வியானது வறுமையில் கைகொடுக்கும். கல்வியானது நிலையானது வாழ்வில் எப்போதும் தொடரக்கூடிய ஓர் செலவமாகும்.

இளமையில் கல்வி கற்கும்போது கல்வியானது நம்மை உயர்ந்த நிலைக்கு இட்டுச் செல்லும். உயர் பதவிகளையும் பெற்று தரும். இதன் மூலம் பொருளாதார ரீதியாகவும், சமூக ரீதியாகவும் வாழ்க்கை தரத்தை உயர்வடையச் செய்யலாம்.

**கல்லாமையின் விளைவு :**

கல்வி அறிவினைப் பெற விளையாதவர்களை திருவள்ளுவர் விலங்குகள் என்று குறிப்பிடுகின்றார். கல்வி அறிவு இல்லாதவர்கள் மனித பண்புகள் இன்றி தவறான வழிகளில் செல்வார்கள். அது அவர்களது அழிவுக்கு வழிவகுக்கும் கல்வி கண்போன்றது. கற்காமல் விடுவது இரு கண் இன்றி வாழ்வதனை போன்று அமைந்துவிடும்.

இதனைத் திருவள்ளுவர் கண்ணுடையோர் என்போள் கற்றோர் இல்லாதோர் முகத்திரண்டு புண்ணுடையர் என்று கல்லாதவர்களைப் பார்வை இல்லாதவர்களாகச் சுட்டிக்காட்டிவதனூடாக கல்லாமையின் விளைவுகளையும் எடுத்து காட்டுகிறார்.

கல்லாமை என்பது கல்வி கற்றலைச் செய்யாமையைக் குறித்தது. கல்லாதவன் கூட்டத்தில் பேசத் தகுதியற்றவன். அவன் மற்றவருடன் உரையாட இயலாதவன். கல்வியில்லாதவனுடைய வாழ்க்கை தாழ்வுநிலை பெற்றதாகும்.

**முடிவுரை :**

உலகின் விலைமதிப்பற்ற அழியாச் செல்வமான கல்வியினை நாம் அடைவதற்குப் பாடுபட வேண்டும். நாம் பெற்ற கல்வியை நம் வாழ்க்கையில் கடைப்பிடித்து ஒழுகல் நன்று. கல்வியினை பெறுவது அனைவரது உரிமை ஆகும். உரிமைகளை விட்டுக் கொடுக்காமல் கல்வியினை ஆர்வத்துடன் சிறுவயதிலிருந்தே கற்க வேண்டும்.

இந்த உலகையே மாற்றக்கூடிய ஒரு பலமான ஆயுதம் உண்டு. அது தான் கல்வி என்கிறார். தென்னாப்பிரிக்காவின் ஜனாதிபதியாக இருந்த தலைவர் நெல்சன் மண்டேலா.

படிப்பால் மட்டுமே பாரதத்தை பாராள செய்யலாம் என்ற டாக்டர் அப்துல் கலாமின் வார்த்தைகளை போல நாமும் கல்வியின் அவசியத்தை உணர்ந்து கற்று மேன்மை அடைந்து கொள்ள வேண்டும். பிறப்பிலும் இறப்பிலும் கூடவே வரும் கல்விச் செல்வத்தை அடைந்து வாழ்வில் வளம் பெறுவோம்.

**M. ஹரிணி**
இரண்டாம் ஆண்டு பொருளியல் துறை (த.வ)




**எம். ஆர்த்தி**
வேதியியல் துறை



**K. Gowri**
II B.Sc., Mirobiology




**M. Kavery**
B.Sc., Maths (UG)




**N. Rahamath Nisha**
B.Com., I Year, II Shift




**ப. ரஞ்சனி**
இளங்கலை தமிழ் இலக்கியம், மூன்றாமாண்டு




**V.S. Porthika**
B.Sc., Maths (UG)




**K. Madhumitha**
II B.Sc., Chemistry




**மௌனிகா**
வேதியியல் துறை




**J. Jayanthi**
BBA - Ist Year





**R. Rajashree**
B.Sc.,CS I[st] & II[nd] Shift




**V. Radha**
I. B.Com., II Shift




**S. Vaishanavi**
I. B.Com., Mandela Art



**இ. சஹானா**
இளங்கலை தமிழ் இலக்கியம், மூன்றாமாண்டு



**S. Harini Sivagnanam**



**S.K. Punitha Dharshini**


Ist B.A., English Literature




**T. Vennila**
BBA - I Year




**J. Jayanthi**
BBA - I Year




**S. Rithika**
B.A. English I Year



**செ. முனீஸ்வரி**
B.A Economics (TM) I Year




**J. Sudharsana**
I B.Sc., (CS) Shift II




**J. Kowsalya**
B.Sc., Microbilogy




**ஆ. புன்னகையரசி**
II B.Sc., CS (Shift - I)





**R. Nikhitha (EM)**
II BA Economics





**செ. முனீஸ்வரி**
B.A Economics (TM) I Year




**க. லாவண்யா**
வேதியியல் துறை




**Raveenadevi**
B.A., Economics




**K. Karpagaa**
II BA Economics




**G.V. Saktheeswari**
II B.Sc., Computer Science (Shift I)




**M. Safrin**
B.A., English Literature 1st Year



**J. Sudharsana**
I B.Sc., (CS) Shift _II



**கி. துர்கா தேவி**
இளங்கலை தமிழ் முதலாமாண்டு



**K. Gowri**
B.Sc., Microbiology

# மன்ற விழாக்கள்

## தமிழ்த் துறை



**திரு. புகழ்**
குறும்பட, ஆவணப்பட இயக்குநர்

## ஆங்கிலத் துறை



முனைவர். **விஜய சாமுண்டீஸ்வரி**
ஆங்கில, உதவிப்பேராசிரியர், அரசு கல்லூரி, கோவை

## வரலாற்றுத்துறை



முனைவர் **R. சுரேஷ்**

## பொருளியல் துறை



திரு. **K. சங்கர்**
நிர்வாக இயக்குநர்

## கணிதத்துறை



டாக்டர். P. **ராஜேஸ்வரி**
உதவிப்பேராசிரியர், கணிதத்துறை
சிக்கண்ணா அரசு கலைக் கல்லூரி

## இயற்பியல் துறை



முனைவர். **N. சிவக்குமார்**
உதவிப் பேராசிரியர், சிக்கையா நாயக்கர் கல்லூரி, ஈரோடு

## வேதியியல் துறை



திருமதி. **R. சசிபிரபா**

## தாவரவியல் துறை



முனைவர். **அப்துல் கஃபூர்**
உதவிப்பேராசிரியர், கொங்குநாடு கலை மற்றும் அறிவியல் கல்லூரி,
கோயம்புத்தூர்

## விலங்கியல் துறை



முனைவர். **A. ரேனி பிரபா**
இணைப்பேராசிரியர் மற்றும் விலங்கியல் துறைத் தலைவர்
சிக்கையா நாயக்கர் கல்லூரி, ஈரோடு

## இயற்பியல் கணினிப்பயன்பாட்டுத் துறை



முனைவர். **ஹரேஷ் N. பாண்டியன்**
இணைப்பேராசிரியர், சிக்கண்ணா அரசு கலைக் கல்லூரி
திருப்பூர்

## மின்னணுவியல் துறை



திரு. **விக்னேஷ்வரன்**
பொறியாளர், பெருங்குடி, சென்னை

## நுண்ணுயிரியல் துறை



**மாணவர்களின் பங்கேற்பு**

## உணவு மற்றும் ஊட்டச்சத்தியல் துறை



முனைவர். S. **கற்பகம்**
உதவிப்பேராசிரியர், சிக்கண்ணா அரசு கலைக் கல்லூரி
திருப்பூர்

## கணினி அறிவியல் துறை



திரு. **ஜீவா பெரியசாமி**

## வணிகவியல் துறை



முனைவர். A. **மகாதேவன்**
பேராசிரியர், சேலம்

## வணிகவியல் மற்றும் கணினிப் பயன்பாட்டுத் துறை



திரு. **R. பிரகாஷ்**
உதவிப் பேராசிரியர், கொங்குநாடு கலை அறிவியல் கல்லூரி
கோயம்புத்தூர்


## வணிக நிர்வாகவியல் துறை



திரு. **கோபிநாத்**
வங்கித்தேர்வு பயிற்சி மைய உந்துதல் பேச்சாளர்

# பேரவை விழாக்கள்

## சுதந்திர தின விழா

## குடியரசு தினவிழா




**Voter's Awareness Programme:**



**Abolisition Of Untouchability Oath:**



# திறன் மேம்பாட்டு பயிற்சி










# நூலகம்






# சுற்றுச்சூழல் சார்புக் குழு





## சுழல் சங்கக் கிளை



## பயிற்சிப் பட்டறை - தாவரவியல்



## நாட்டு நலப்பணித் திட்டம்



கரைப்புதூர் நாட்டு நலப்பணித்திட்ட முகாம் நிறைவு



இலவச கண்சிகிச்சை முகாம்



தூய்மைப் பணியில் நாட்டு நலப்பணித் திட்ட மாணவிகள்



மத நல்லிணக்கப் பேரணி

# எல். ஆர். ஜி.

## அரசு மகளிர் கலைக் கல்லூரி, திருப்பூர் - 4.

**தேசியத் தர மதிப்பீடு B**

## ஆண்டு மலர்

**2020 - 2021**

**மலர் – 51**

**தொலைபேசி எண்**
0421 2210300

**தொலை அச்சு**
0421 2214933

**மின்னஞ்சல்**
lrggac@gmail.com

# மலர்க்குழு

## தலைவர்

முனைவர். **மெய்.இரெ. எழிலி** எம்.ஏ., எம்.ஃபில்., பி.எச்.டி.,

முதல்வர்

## பதிப்புக்குழு

முனைவர். **மு. அவையாம்பாள்**
உதவிப் பேராசிரியர். தமிழ்த்துறை

முனைவர். **கோ. புவனேஸ்வரி**
உதவிப் பேராசிரியர். தமிழ்த்துறை

## பேராசிரியர்கள்

முனைவர். **மா. தமிழ்மலர்**
இணைப் பேராசிரியர் மற்றும் தமிழ்த்துறைத் தலைவர்

முனைவர். **ஜோ. கிரிஜா ஆரோக்கியமேரி**

முனைவர். **ஜா. அமைதி அரசு**

முனைவர். **ஏ.ஆர். ஈஸ்வரி**

முனைவர். **ச. அமுல்செல்வி**

## வாழ்த்துக்களுடன்

*ஏற்ற மிகு*

எல்.ஆர்.ஜி. கல்லூரியின்
2020 – 2021 ஆம் ஆண்டு மலர் படைக்க
அன்பிற்குரிய மாணவச் செல்வங்கள்
அனைவரிடமும்

அவர்தம்
எண்ணக் கருத்துக்களை
எழுத்துருவில் வடிவமைக்க
அழைப்பு விடுத்தோம்

திறமைமிக்க
மாணவர்கள் தம் எண்ணக் குவியல்களை
வண்ண வண்ண முத்துக்களில்
வடிவமைத்துத் தந்தனர்

மாணவர்களின் சிந்தனை உளி
செதுக்கிய
பேசும் கவிதைகளையும்
பேசா ஓவியங்களையும்
பொன் மாலை போல்
தொடுத்துக் கொடுத்துள்ளோம்.

கல்லூரி மாணவியரின்
கருத்துக் கோவைகளை
ஆண்டு மலரில்
அழகாய் மலர்ந்திடச் செய்த
மாணவப் படைப்பாளர்கள்
அனைவரையும்
ஒருங்கிணைத்த
முதல்வர்
மற்றும் பேராசிரியர்கள் அனைவருக்கும்
நன்றி கூறுகிறோம்.

**உங்கள் கரங்களில் ஆண்டுமலர்**
**மணம்வீசத் தொடுத்துத்தந்த**
**பதிப்புக்குழு**

# பொருளடக்கம்


1. கல்லூரி ஆண்டறிக்கை ...
2. படைப்புகள் ...
3. ஓவியங்கள் ...
4. விழாப் புகைப்படங்கள் ...



முனைவர். **மெய்.இரெ. எழிலி** எம்.ஏ., எம்.ஃபில்., பி.எச்.டி.,

**முதல்வர்**

இன் சொலால் ஈத்து அளிக்க வல்லார்

குறிப்பின் குறிப்பு உணர்வார்

குறித்தது கூறாமைக் கொள்வார்

காட்சிக்கு எளியவராய் திகழ்பவர் எம் முதல்வர்

# எல்.ஆர்.ஜி.

## அரசு மகளிர் கலைக் கல்லூரி, திருப்பூர்.

# கல்லூரி ஆண்டறிக்கை 2020 – 2021

*ஆன்ம அதிர்வலையில் ஆழ்ந்திருக்கும்*
*மேற்கு மலை அடுக்கம்*
*குறுமணல் கொழித்தோடும்*
*நொய்யல் நதி தீரம்*
*பின்னலாடையில் மின்னும்*
*கொங்கின் இதயம் நம் திருப்பூர்*
*கார் அஞ்சு கரதலத்தால் மிளிரும் – நம்*
*எல்.ஆர்.ஜி. அரசு கல்லூரி*
*சாமானியரை சாதிக்க வைக்கும்*
*எழில்மிகு கலைக் கல்லூரி*

திருப்பூர், ஈரோடு, கோவை, நீலகிரி மாவட்டங்களிலேயே மகளிருக்காக நடத்தப்படும் ஒரே அரசு மகளிர் கலைக் கல்லூரி நமது எல்.ஆர்.ஜி. அரசினர் மகளிர் கலைக் கல்லூரி. இந்தக் கல்லூரி தமிழ் நாடு அரசு ஆணையுடன் 1971 ஆம் ஆண்டு ஜுலைத் திங்கள் 15-ம் நாள் 221 மாணவிகளுடன் செயல்படத் தொடங்கியது. திருப்பூர் மாவட்டத்தில் மகளிர்க்கென்று தனிக்கல்லூரி அமைவதற்கு அடித்தளம் அமைத்துக் கொடுத்து நிலத்தை நன்கொடையாக வழங்கிய மதிப்பிற்குரிய எல். லஷ்மிநாய்க்கன்பாளையம், ஆர். ராமசாமி ஜி. கோவிந்தராஜுலு நாயுடு ஐயா மற்றும் அவர்தம் குடும்பத்தினரை நன்றியுடன் நினைவு கூர்கிறோம். நாற்பத்தி ஒன்பது ஆண்டுகள் கல்விப்பணியினை நிறைவு செய்து வரவிருக்கும் கல்வி ஆண்டில் பொன் விழாவை நோக்கி செல்கிறது நம் கல்லூரி.

நம் கல்லூரியில் இளங்கலையில் தமிழ், ஆங்கிலம், வரலாறு, பொருளியல் ஆகிய பாடப்பிரிவுகளும், இளம் அறிவியலில் கணிதம், இயற்பியல், இயற்பியல் கணினிப்பயன்பாட்டியல், வேதியியல், விலங்கியல், நுண்ணுயிரியல், தாவரவியல், மின்னணுவியல், கனிணி அறிவியல், உணவு அறிவியல் மற்றும் ஊட்டச்சத்தியல் ஆகிய பாடப்பிரிவுகளும், இளம் வணிகவியலில், வணிகவியல் மற்றும் வணிகவியல் கணினிப்பயன்பாட்டியல், வணிக நிர்வாகவியல் ஆகிய பாடப்பிரிவுகளும் பயிற்றுவிக்கப்படுகின்றன.

மேலும் முதுகலையில் தமிழ், ஆங்கிலம், வரலாறு, பொருளியல் ஆகிய பாடப்பிரிவுகளும், முதுநிலைஅறிவியலில் கணிதம், வேதியியல், விலங்கியல், கனிணி அறிவியல் ஆகிய பாடப்பிரிவுகளும், முதுகலை வணிகவியலும், ஆராய்ச்சி மேற்படிப்பில் ஆங்கிலம், வணிகவியல், பொருளியல், கணிதம், இயற்பியல், வேதியியல், விலங்கியல் மற்றும் கனிணி அறிவியல் பாடப்பிரிவுகளும் பயிற்றுவிக்கப்படுகின்றன. இக்கல்வியாண்டில் மொத்தம் 3605 மாணவியர்கள் பயின்று வருகின்றனர்.

**1. பணியிடங்கள் விபரம்**

| | | |
|---|---|---|
| 1. | முதல்வர் உட்பட அரசினரால் அங்கீகரிக்கப்பட்ட பேராசிரியர்களின் மொத்தப் பணியிடங்கள் | - 143 |
| 2. | நிரப்பப்பட்ட பேராசிரியர்களின் பணியிடங்கள் (முதல்வர் உட்பட) | - 82 |
| 3. | ஆசிரியர் அல்லாத பணியாளர்களின் மொத்தப் பணியிடங்கள் | - 30 |
| 4. | நிரப்பப்பட்ட ஆசிரியர் அல்லாத பணியாளர்களின் மொத்தப் பணியிடங்கள் | - 09 |
| 5. | அரசு நியமித்த கௌரவ விரிவுரையார்கள் | - 41 |
| 6. | பெற்றோர் ஆசிரியர் கழகத்தால் நியமிக்கப்பட்டவர்கள் | - 08 |
| 7. | முன்னாள் மாணவர் சங்க நிதியிலிருந்து நியமிக்கப்பட்டவர்கள் | - 11 |
| 8. | கணினி அறிவுப் பயிற்சி திட்ட நிதியிலிருந்து நியமிக்கப்பட்டவர்கள் | - 04 |
| 9. | விளையாட்டுக் குறியீட்டாளர் | - 01 |

**2. பணியிட மாற்றம் பெற்றுச் சென்ற பேராசிரியர்கள் - 3**

1. கணிதத்துறை - முனைவர். மு. ஆனந்தி, அரசுக்கலைக்கல்லூரி, புலியகுளம்
2. வணிகவியல் துறை - முனைவர். அம்சலட்சுமி, அரசுக்கலைக்கல்லூரி, புலியகுளம்
3. கணினி அறிவியல் துறை - முனைவர். கீதா, அரசுக்கலைக் கல்லூரி, புலியகுளம்

**3. பணியிட மாற்றம் பெற்று வந்த பேராசிரியர்கள்** - இல்லை

**4. முனைவர் பட்டம் பெற்ற பேராசிரியர்கள்** - எவருமிலர்

**5. பணி நிறைவு பெற்றவர்** - இல்லை

**6. புத்தறிவு (Refresher) பயிற்சியில் பங்கு பெற்ற பேராசிரியர்கள்**

**புத்தறிவு பயிற்சியானது இணைய வழியின் மூலமாகவே நடைபெற்றது**

| | | |
|---|---|---|
| 1. | முனைவர். கோ. புவனேஸ்வரி | - தமிழ்த்துறை, பாரதியார் பல்கலைக்கழகம், கோவை |
| 2. | முனைவர். பானுரவிகணேஷ் | - விலங்கியல்துறை, சென்னை பல்கலைக்கழகம், சென்னை |
| 3. | முனைவர். கே. ராஜேந்திரன் | - மின்னணுவியல் துறை, ராஜஸ்தான் பல்கலைக்கழகம், ஜெய்பூர் |
| 4. | முனைவர். கே. வெண்மதி | - மின்னணுவியல் துறை, ராஜஸ்தான் பல்கலைக்கழகம், ஜெய்பூர் |
| 5. | முனைவர். கே. வெண்மதி | - மின்னணுவியல் துறை, ராஜஸ்தான் பல்கலைக்கழகம், ஜெய்பூர் |
| 6. | முனைவர். ஆர். குருசாமி | - தாவரவியல் துறை, கேரள மத்திய பல்கலைக்கழகம் |
| 7. | முனைவர். டி. பாலசரவணன் | - தாவரவியல் துறை, கேரள மத்திய பல்கலைக்கழகம் |
| 8. | முனைவர். எஸ். அன்னபூரணி | - வேதியியல் துறை, பாரதியார் பல்கலைக்கழகம், கோவை |
| 9. | முனைவர். ந. சுகந்தி | - வேதியியல் துறை, பாரதியார் பல்கலைக்கழகம், கோவை |
| 10. | முனைவர். ஜே. சார்லட் விமல் | - வேதியியல் துறை, பாரதியார் பல்கலைக்கழகம், கோவை |
| 11. | முனைவர். கே. பார்வதி | - வேதியியல் துறை, பாரதியார் பல்கலைக்கழகம், கோவை |

12. முனைவர். டி. சாந்தி - வேதியியல் துறை, சென்னை பல்கலைக்கழகம், கோவை

13. முனைவர். ஆ.கு. இலக்குமிவேண்மாள் - நுண்ணுயிரியல் துறை, அமிதி பல்கலைக்கழகம்,

14. திருமதி. ஆர். காந்திமதி - நுண்ணுயிரியல் துறை, பாரதிதாசன் பல்கலைக்கழகம், திருச்சிராப்பள்ளி

15. திருமதி. ஜெ. ஜெயசித்ரா - உஸ்மானியாபல்கலைக்கழகம், ஹைதராபாத்
- பாரதியார்பல்கலைக்கழகம், கோவை

16. முனைவர். பா. எஸ்தர் - உஸ்மானியா பல்கலைக்கழகம், ஹைதராபாத்
- பாரதிதாசன் பல்கலைக் கழகம், கோவை

17. முனைவர். இல. பிரியா - ராஜஸ்தான் பல்கலைக் கழகம், ஜெய்ப்பூர்

18. திருமதி. கி. அனுராதா - கல்லூரி நூலகர், ராஜஸ்தான் பல்கலைக் கழகம், ஜெய்ப்பூர்

19. முனைவர். எஸ். சசிகலா - வணிகவியல் மற்றும் கணினிப்பயன்பாட்டுத் துறை, பாரதியார் பல்கலைக்கழகம்

20. முனைவர். ஆர். உஷா தேவி - வணிகவியல் மற்றும் கணினிப்பயன்பாட்டுத் துறை, மிசோரம் பல்கலைக்கழகம்

21. முனைவர். டி. நாகநந்தினி - வணிகவியல் துறை, பாரதியார் பல்கலைக்கழகம்

மொத்தம் 21 பேராசிரியர்கள் புத்தறிவு / புத்தாக்க / குறுகிய காலப் பயிற்சிகளில் பங்கேற்றனர்

**7. தேசிய மற்றும் சர்வதேச கலை / வணிக / அறிவியல் ஆராய்ச்சி இதழ்களில் ஆய்வுக் கட்டுரைகள் வெளியிட்ட பேராசிரியர்கள்**

| எண் | துறை | பேராசிரியர்கள், ஆய்வுக்கட்டுரை தலைப்பு ஆய்விதழ் தலைப்புகள் |
|---|---|---|
| 1. | **Economics** | **Dr. R. Selvi**<br>1. “COVID -19 PANDEMIC AND ITS ECONOMIC IMPACT ON SELECTED HOUSEHOLD” Published in Vol-44-No. 01(IV), January _March 2021 if Sambodhi with ISSN : 2249-6661 UGC Care Approved, Peer Reviewed and Referred Journal Impact Factor 5.80<br>2. “RURAL DEVELOPMENT THROUGH AGRI-ENTREPRENEURSHIP” published in NABARD Sponsored National Conference on Sustainable Agriculture and Farmers Welfare for Rural Development held on 25th & 26th February 2021 with ISBN : 978-93-84734-93-0 |
| 2. | **Economics** | **Dr. V.B. USHA**<br>“Volatility in the Indian Stock market : Evidence form S & P CNX 500” Journal of Computational and Theoretical Science, Vol. 17, No. 4, April 2020. 1826-1830 (Scoplus listed). (e ISSN : 1546-1963) DOI : https://doi.org/10.1166/jctn.2020.8447-joint publication |

| எண் | துறை | பேராசிரியர்கள். ஆய்வுக்கட்டுரை தலைப்பு ஆய்விதழ் தலைப்புகள் |
|---|---|---|
| 3. | **Maths** | **Dr. A. Manonmani**<br>1. Notes on Bipolar Interval valued intuitionistic Fuzzy Topological space PUBLISHED IN International Journal of Advanced Research in Science, Communication and Technology<br>**Mrs. S. Jeyalakshmi**<br>1. On pgrbeta closed sets in Topological spaces; International journal of innovative research in Science, Engineering & Technology<br>2. Binary regular beta closed sets and binary regular beta open sets in Binary topological spaces; The International journal of analytical and experimental model analysis<br>3. Binary Pre generalised regular beta closed sets in Binary topological spaces; international journal of Mathematics trends & Technology |
| 4 | **Physics** | **J. Jeyachitra**<br>1. Inorganic Chemistry Communication, "Enhancing the Electrochemical Performance by Structural Evolution in O3-NaFe1-xMgxO2 Cathodes for Sodium-Ion Batteries", Available online 4 march 2021, 108528.<br>2. International Journal of Emerging Technologies and Innovative Research, "Insitu Carbon-coated NaFeO2 as a positive electrode for Sodium-Ion batteries." ISSN : 2349-5162, Vol. 7, Issue 10, Page No. 3599-3607, October - 2020. |
| 5 | **Botany** | Harnessing the antibacterial activity of Quercus infectoria and Phyllanthus embica against antibiotic - resistant Salmonella Typhi and Salmonella Enteritidis of poultry origin.<br>Nair, A., Balasaravanan, T., Jadhav, S. Mohan, V and Kumar, C. Veterinary World, 2020, 13: 1388-1388<br>Analysis of Quantity and Quality Features of Virgin Coconut Oil Produced in Selected Coconut varieties under Fresh-Dry Method.<br>N. Muthukkannan and T. Balasaravanan.<br>Annals of the Romanian Society for Cell Biology, 2021, 25(4) 8357-8374 |
| 6 | **Electronics** | Dr. K. Rajendran, Pt-free and efficient counter electrode with nanostructured CoNi2S4/rGO for dye - sensitized solar cells, Inorganic Chemistry Communication, Vol. 126, 2021 |
| 7 | **Microbiology** | A.K. lakkumi Venmal<br>GC-MS Analysis of Phytochemicals in Hexane Extract of Amaranthus Tricolor Stem - Journal of Advanced Scientific Research (Dec, 2020) |
| 8 | **Food Science a and Nutrition** | Dr. G. Suba - Jan 2021 Indian Journal of Nutrition and Dietectics Quality Evaluation of Value Added Cookies: |
| 9 | **Library** | **K. Anuradha**<br>1. E-Bibliotherapy : A substantial practice to sustain the reading habit of the youngsters in the Google Era" Emperor International Journal of Library and Information Technology Research Vol. 1 : Issue : 5, ISSN : 2582-6972(o)<br>2. Significance of Soft Skills in Librrianship in the context of Five laws of Library Science; Google Era Librarian Ship; Tools Techniques and Skills, ISBN : 9788194781912, Muthra Publishers. |

## 8. NO OF SEMINARS/ CONFERENCE WORKSHOPS ATTENDED

| S.NO | NAME OF DEPARTMENT | NAME OF FACULTY | NATIONAL | INTERNATIONAL |
|---|---|---|---|---|
| 1 | Food Science and Nutrition | G. Suba<br>Dr.R.Parimala | 1<br>1 | -<br>3 |
| 2 | Zoology | Dr.Banu raviganesh<br>Dr.Litty Koria | 4<br>4 | 7<br>3 |
| 3 | Physics | Mrs. J. Jayachitra<br>Dr. P.Esther<br>Dr. L.Priya<br>Dr.A.Kingson Solomon Jeevaraj | 7<br>1<br>11<br>15 | 1<br>0<br>3<br>7 |
| 4 | Computer Science | Dr. T.Jayalakshmi<br>V. Punithavathi | 13<br>4 | 2<br>1 |
| 5 | B.com(ca) | Dr.R.ushadevi<br>Dr.sasikala S<br>Dr. T. Nagananthi | 1<br>1<br>1 | -<br>- |
| 6 | physics CA | Dr. Elakkina Kumaran A<br>Dr. N. Meenakshi Sundaram | 1<br>1 | 1<br>1 |
| 7 | English | Dr. K. Geetha<br>Dr. Olive Thambi | 3<br>3 | -<br>- |
| 8 | Central Library | K.Anuradha | 5 | 2 |
| 9 | Botany | Dr.S.Geetha<br>Dr.K.Padmavathi<br>Dr.R.Gurusamy<br>Dr.T.Balasarvanan<br>Dr.R.Sivakumar<br>Dr.S.Vinodhini | 1<br>5<br>2<br>2<br>2<br>17 | -<br><br>-<br>-<br>-<br>Nil |

### 9. பாரதியார் பல்கலைகழகத்தின் சென்ற 2019-20 கல்வியாண்டில் பல்கலைக்கழகத் தரவரிசைப் பட்டியலில் இடம் பெற்ற மாணவியர்கள்

பாரதியார் பல்கலைக்கழகத்தின் சென்ற 2019-2020 கல்வியாண்டில் பல்கலைக் கழகத் தரவரிசைப் பட்டியலில் LRG கல்லூரி மாணவியர்கள் மொத்தம் 31 பேர் இடம் பெற்றனர். இவர்களில் இளநிலையில் 03 மாணவியரும், முதுநிலையில் 02 மாணவியரும் பல்கலைக்கழகத் தரவரிசைப் பட்டியலில் **முதல்** இடம் பெற்றனர்.

**இளநிலை - முதல் இடம்**

| வ.எண். | துறை | மாணவி |
|---|---|---|
| 1<br>2<br>3 | வரலாறு<br>கணிதம்<br>இயற்பியல் கணினிப் பயன்பாடு | கோ. ப்ரியா<br>ரா. ஜீவிதா<br>ச. ஷோபிகா |

**முதுநிலை - முதல் இடம்**

| வ.எண். | துறை | மாணவி |
|---|---|---|
| 1 | வரலாறு | சீ. தீபா |
| 2 | பொருளியல் | ப. சங்கீதா |

**பல்கலைக் கழக தரவரிசைப் பட்டியலில் இடம் பெற்றவர்கள்.**

| எண் | துறை | இளநிலை/ முதுநிலை | மாணவியர் பெயர் | தர வரிசை |
|---|---|---|---|---|
| 1 | தமிழ் | இளநிலை | கி. ராஜேஸ்வரி | ஒன்பதாம் இடம் |
| | | முதுநிலை | கி. லோகநாயகி<br>க. ரம்யா | நான்காம் இடம்<br>ஆறாம் இடம் |
| 2 | வரலாறு | இளநிலை | கோ. பிரியா<br>நா. லாவண்யா<br>மு. யசோதா<br>ர. நந்தினி<br>பா. பேபிஷாலினி | முதலாம் இடம்<br>மூன்றாம் இடம்<br>ஐந்தாம் இடம்<br>எட்டாம் இடம்<br>பத்தாம் இடம் |
| | | முதுநிலை | சீ. தீபா<br>கா. பிரபா | முதலாம் இடம்<br>நான்காம் இடம் |
| 3 | பொருளியல் | இளநிலை | வெ. சரண்யா<br>சு. பிரியா<br>மு. தேவிகலா | ஐந்தாம் இடம்<br>எட்டாம் இடம்<br>பத்தாம் இடம் |
| | | முதுநிலை | ப. சங்கீதா | முதலாம் இடம் |
| 4 | கணிதம் | இளநிலை | ரா. ஜீவிதா<br>வி. கவிதா<br>ஜெ. பிரியதர்ஷினி<br>கோ. பிரீத்தி | முதலாம் இடம்<br>மூன்றாம் இடம்<br>ஐந்தாம் இடம்<br>ஏழாம் இடம் |
| 5 | விலங்கியல் | இளநிலை | ச. தாரணி<br>மோ. காவ்யா<br>மு. சுவலட்சுமி | இரண்டாம் இடம்<br>நான்காம் இடம்<br>எட்டாம் இடம் |
| | | முதுநிலை | மு. லோகநாயகி | ஐந்தாம் இடம் |
| 6 | வேதியியல் | இளநிலை | ஷ. விமலா<br>இரா. திவ்யா | இரண்டாம் இடம்<br>பத்தாம் இடம் |
| | | முதுநிலை | ப. காயத்ரி | ஏழாம் இடம் |
| 7 | தாவரவியல் | இளநிலை | கா. சுமையா சுல்தானா<br>அ. ஆத்மிகா | நான்காம் இடம்<br>எட்டாம் இடம் |

| எண் | துறை | இளநிலை/ முதுநிலை | மாணவியர் பெயர் | தர வரிசை |
|---|---|---|---|---|
| 8 | இயற்பியல் க.ப. | இளநிலை | ச. ஷோபிகா<br>மோ. ஆர்த்தி<br>வி. புவனேஸ்வரி | முதலாம் இடம்<br>இரண்டாம் இடம்<br>மூன்றாம் இடம் |
| 9 | உணவு அறிவியல் மற்றும் ஊட்டச்சத்தியல் | இளநிலை | பி. ருக்ஷானா பர்வீன் | இரண்டாம் இடம் |

**10. இக் கல்லூரியில் ஆய்வில் நிறைஞர் / முனைவர் (M.phil / Ph.D) பயின்று பட்டம் பெற்ற மாணவர்கள் விபரம்**

| எண் | துறை | M. Phil மாணவியர்கள் | Ph.D. மாணவியர்கள் |
|---|---|---|---|
| 1 | கணிதம் | 2 | 1 |
| 2 | விலங்கியல் | 1 | |

**11. பல்கலைக்கழகத் தேர்வில் தேர்ச்சி விகிதம்**

சென்ற ஆண்டு நடைபெற்ற பாரதியார் பல்கலைக்கழகத் தேர்வில் இளநிலையில் 96 சதவீதமும், முதுநிலையில் 98 சதவீதமும் மாணவியர்கள் தேர்ச்சியடைந்து நம் கல்லூரிக்குப் பெருமை சேர்த்து உள்ளனர்.

**12. கல்லூரிப் பேரவை**

2020-2021 ஆம் கல்வி ஆண்டிற்கான கல்லூரிப் பேரவை உணவு அறிவியல் & ஊட்டச்சத்தியல் துறை பொறுப்பில் செயல்பட்டு வருகிறது.

**பேரவை நடத்திய விழாக்கள்**

| எண் | நாள் | நிகழ்வுகள் | சிறப்பு விருந்தினர்கள் |
|---|---|---|---|
| 1. | 15-08-2020 | சுதந்திர தின விழா | அன்று நம் முதல்வர் (பொறுப்பு) திருமதி இந்திராணி அவர்கள் கொடியேற்றி சுதந்திர தின உரை நிகழ்த்தினார். |
| 2. | 26-01-2021 | குடியரசு தின விழா | நம் கல்லூரி முதல்வர் முனைவர் எழிலி அவர்கள் கொடியேற்றி குடியரசு தின உரை நிகழ்த்தினார். |

தமிழ்த்துறை இலக்கண இலக்கியத் திறனறித்தேர்வு 24-06-2020 முதல் 26-06-2020 வரை 3 நாள்கள் நடைபெற்றது. இணைய வழியின் மூலமாக போட்டியில் பங்கு பெற்றவர்க்கு சான்றிதழ்கள் வழங்கப்பட்டன.

**கல்லூரி நூலகம் 2020-2021**

மாணவிகளின் மேம்பாட்டிற்காக கல்லூரி நூலகம் காலை பத்து மணி முதல் மாலை நான்கு மணிவரை செயல்பட்டு வருகிறது. தினசரிகள், வார மாத பத்திரிக்கைகள் மற்றும் பல அறிய நூல்களுடன் மத்திய அரசின் INFLIBNET NLIST என்ற இணைய சேவை மூலம் ஆறாயிரத்திற்கு மேற்பட்ட மின ஆராய்ச்சி இதழ்கள் மற்றும் இலட்சத்திற்கும் மேற்பட்ட மின் நூல்கள் வழங்கப்பட்டு வருகிறது. இக்கல்வியாண்டிற்குத் தேவையான நூல்கள் பெற்று வழங்க மாநில அரசு, ஒதுக்கிய நிதி ரூபாய் இரண்டு இலட்சம். இக்கல்வியாண்டில் நூலகம் சார்பாக இரண்டு இணைய வழி கருத்தரங்கங்கள் நடத்தப்பட்டன மற்றும் நூலகர் தின விழாவை முன்னிட்டு மாணவிகளுக்குப் பல்வேறு போட்டிகள் நடத்தப்பட்டு பரிசுகள் வழங்கப்பட்டன.

**SWAYAM** "ஸ்வயம்"

மத்திய அரசின் சேவைத்தளமான ஸ்வயம் SWAYAM அனைத்துத்துறை சார்ந்த பாடத்திட்டங்களும் இலவசமாக இணைய வழியில் கற்றிட வழிவகுக்கும் ஒரு அமைப்பாகும். கல்லூரி மாணவிகள் இத்தளத்தில் பதிவு செய்து பயன்பெற்றிட வழிகாட்டவும், ஊக்குவிக்கவும் கல்லூரி SWAYAM குழு செயல்பட்டு வருகிறது. முனைவர் எல்.ப்ரியா. உதவிப் பேராசிரியர், இயற்பியல் துறை, முனைவர் அ. அன்பரசி, உதவிப் பேராசிரியர், கணினி அறிவியல்துறை மற்றும் திருமதி. கி. அனுராதா, கல்லூரி நூலகர் இதன் ஒருங்கிணைப்பாளர்களாக இருந்து சிறப்பாக செயலாற்றி வருகிறார்கள். இத்தளத்தில் ஐநூறுக்கும் மேற்ப்பட்ட மாணவிகள் பதிவு செய்து பயன் பெறுகிறார்கள்.

மாணவிகளுக்கு இணைய வழி ஸ்வயம் பாடங்களைப் பற்றி விழிப்புணர்வு வழங்கிட Enriching Academics with Moocs : Special Emphasis on Swayam: என்ற தலைப்பில் 01/10/2020 அன்று இணையவழி கருத்தரங்கம் முதல்வர் தலைமையில் நடத்தப்பட்டது. முனைவர் திரு. மந்திராசலம், நூலகர் மற்றும் ச்வயம் ஒருங்கிணைப்பாளர், CIT கல்லூரி, கோவை சிறப்புரையாற்றினார்.

**நாட்டு நலப்பணித் திட்டம் (NSS)**

கல்லூரி முதல்வர் அவர்களைத் தலைவராகக் கொண்டு உதவிப் பேராசிரியர்கள் முனைவர் சா. கௌசல்யா தேவி (வணிகவியல் துறை), முனைவர் ஆர். சுதா (விலங்கியல் துறை) முனைவர். சிவமணி (பொருளியல் துறை) ஆகியோரைத் திட்ட அலுவலர்களாகவும் கொண்டு நாட்டு நலப்பணித் திட்டம் சிறப்பாக செயல்பட்டு வருகிறது. நமது கல்லூரி சார்பில் அனைத்துத் துறைகளிலிருந்தும் மூன்று அலகுகளுக்கு நூறு மாணவிகள் வீதம் முந்நூறு மாணவிகளைத் தேர்வு செய்த மாணவியர்களுக்கு நாட்டு நலப்பணித் திட்டத்தின் குறிக்கோள்களையும் ஆளுமைத் திறமைகளையும் வெளிப்படுத்தும் விதமாக விழிப்புணர்வு முகாம்களும் பேரணிகளும் கருத்தரங்குகளும் நடைபெற்றன.

**இளைஞர் செஞ்சிலுவை சங்கம்** (Youth Red Cross Society) (YRC)

உதவிப் பேராசிரியர்கள் முனைவர் ஜே. சுகந்தி (வணிகவியல் துறை) மற்றும் முனைவர் எஸ். கிருஷ்ணவேணி (வேதியியல் துறை) ஆகியோரை அலுவலர்களாகக் கொண்டு இளைஞர் செஞ்சிலுவை சங்கம் சிறப்பாக செயல்பட்டு வருகிறது.

**தேசிய உயர்கல்வித் திட்டம்** (Rashtriya Uchehatar Shiksha Abhiyan) (RUSA)

ரூசா (RUSA) ராஷ்ட்ரிய உச்சதர் சிக்ஷா அபியன் என்றழைக்கப்படும் தேசிய உயர்கல்வித் திட்டம் முனைவர் த. பாலசரவணன் தாவரவியல் துறை, முனைவர். கி. ராஜேந்திரன் மின்னணுவியல் துறை அவர்களைப் பொறுப்பாளர்களாகவும் கொண்டு செயல்பட்டு வருகிறது மத்திய மாநில அரசு நிதி உதவியின் கீழ் செயல்படும் ரூசா (RUSA) ராஷ்ட்ரிய உச்சதர் சிக்ஷா அபியன் என்றழைக்கப்படும் தேசிய உயர்கல்வித் திட்டத்தின் மூலம் இந்த கல்வியாண்டில் ரூ. 70 லட்சம் மதிப்பில் நான்கு கூடுதல் வகுப்பறைகள் கட்டப்படவும், ஆய்வக உபகரணங்கள் மற்றும் கணினி உபகரணங்களும் வாங்கப்படவும் உள்ளன.

**வேலை வாய்ப்பு பயிற்சி** (Placement Training)

கல்லூரி முதல்வர் அவர்களைத் தலைவராகக் கொண்டு, உதவிப் பேராசிரியர்கள் முனைவர் ந. மணிமேகலை (பொருளியியல் துறை), முனைவர் வெ.சு. காஞ்சனா (வணிகவியல் துறை), முனைவர். சு. அன்னபூரணி (வேதியியல் துறை), (முனைவர் ஜி. நிர்மலா, ஆங்கில துறை) ஆகியோரை ஒருங்கிணைப்பாளர்களாகக் கொண்டு போட்டித் தேர்வுகளுக்கு இலவச வேலை வாய்ப்பு பயிற்சி வகுப்புகள் சிறப்பாக செயல்பட்டு வருகிறது.

**பொதுப்பணித் துறை** (PWD)

நமது கல்லூரியில் ரூபாய் 10 லட்சம் பொருட் செலவில் குடிநீர், கழிப்பறைகள் சிறப்பாக சீரமைத்துக் கொடுத்துள்ளனர்.

**முன்னாள் மாணவியர் சங்கம்** (Old Students Association)

நமது கல்லூரியின் முன்னாள் மாணவியர் சங்கம் நம் கல்லூரி முதல்வர் தலைமையில் மின்னணுவியல் துறை உதவிப்பேராசிரியர் முனைவர். க. வெண்மதி, விலங்கியல் துறை உதவிப்பேராசிரியர் முனைவர் பானு ரவி கணேஷ், ஆங்கிலத்துறை உதவிப் பேராசிரியர் முனைவர். வெ. மலர் மற்றும் தமிழ்த்துறை உதவிப்பேராசிரியர், முனைவர் ச. அமுல் செல்வி ஆகியோர்களைப் பொறுப்பாளர்களாகக் கொண்டு சிறப்பாக செயல்பட்டு வருகிறது.

இச்சங்கத்தின் மூலம் 6 கௌரவ விரிவுரையாளர்களும் 5 ஆய்வக உதவியாளர்களும் நியமிக்கப்பட்டு, சங்க நிதியிலிருந்து ஊதியம் அளிக்கப்பட்டு வருகிறது.

நமது கல்லூரியில் 2018-2019 ஆம் கல்வியாண்டில் தேர்ச்சி பெற்ற 815 இளநிலை மற்றும் 180 முதுநிலை மாணவியர்களின் பட்டச் சான்றிதழ்கள், நம் கல்லூரி முதல்வர் அவர்களால்

துறைத்தலைவர்களிடம் ஒப்படைக்கப்பட்டு பொறுப்பாசிரியர்கள் வாயிலாக மாணவியர்களுக்கு வழங்கப்பட்டன.

**சூழல் சங்க கிளை (Rotary Club)**

நமது கல்லூரியில் சுற்றுக் சூழல் குழு (Eco Club) முதல்வர் அவர்களின் தலைமையிலும், விலங்கியல் துறை பேராசிரியர் முனைவர் ப. சுமதி தாவரவியல் துறை பேராசிரியர் திருமதி. ம. ரூபிணி ஆகியோர் பொறுப்பிலும் செயல்பட்டு வருகிறது. இக்குழுவின் சார்பாக மரம் வளர்த்தல், நெகிழி ஒழிப்பு சுற்றுச சூழலைப் பாதுகாத்தல் மற்றும் நீர் ஆதாரங்களைப் பாதுகாத்தல் போன்ற செயல்பாடுகள் செயல்படுத்தப்பட்டு வருகின்றது.

**பெற்றோர் ஆசிரியர் கழகம் (Parent Teacher Association (PTA)**

நமது கல்லூரியில் பெற்றோர் ஆசிரியர் கழகம் சிறப்பாக நடைபெற்று வருகிறது. இச்சங்கத்தின் தலைவராக கல்லூரி முதல்வர் அவர்களும், துணைத் தலைவராக தாவரவியல் துறைத் தலைவர் முனைவர் சு. கீதா அவர்களும் செயல்பட்டு வருகின்றனர். மாதந்தோறும் பெற்றோர் ஆசிரியர் ஆலோசனை கூட்டம் நடத்தப்பட்டு மாணவியர் நலன்களுக்கான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு சிறப்புடன் செயல்பட்டு வருகிறது. இக்கழக நிதியிலிருந்து ஒன்பது பணியாளர்களுக்கு ஊதியம் வழங்கப்பட்டு வருகிறது.

**நுகர்வோர் பாதுகாப்பு குழு (Consumer Club)**

நம் கல்லூரி முதல்வர் முனைவர். மெய்.இரெ. எழிலி அவர்கள் தலைமையில், முனைவர். ந. ஷீபா விலங்கியல் துறை மற்றும் முனைவர் சா. ஜானகி, கணிதத் துறை ஆகியோர் குழ உறுப்பினர்களாகக் கொண்டு மாணவிகளுக்குப் பல்வேறு விழிப்புணர்வுக் கூட்டங்களும், போட்டிகளும் நம் கல்லூரியில் இணைய வழியில் நடைபெற்றன.

**கணினி அறிவுப் பயிற்சித் திட்டம் (CLP)**

2000 - 2001 கல்வி ஆண்டு முதல் தமிழக அரசின் கணினி அறிவுப் பயிற்சித்திட்டம் மூலமாக மாணவிகளுக்குக் கணினி அறிவுப் பயிற்சி நடைபெற்று வருகிறது. இத்திட்டத்தின் மூலமாக இக்கல்வியாண்டில் 850 மாணவியர்கள் பயிற்சி பெற்றுள்ளனர். இத்திட்டம் நமது கல்லூரி முதல்வர் அவர்களைத் தலைவராகக் கொண்டு 5 கணினி ஆசிரியர்களுடன் சிறப்பாக செயல்பட்டு வருகிறது.

**கல்வி உதவித் தொகை**

2020-21ம் கல்வியாண்டில் பிற்படுத்தப்பட்டோர் நலத்துறை மூலம் 1811 மாணவியர்களும் ரூ. 52,1825/- சிறுபான்மையினர் நலத்துறை மூலம் 26 மாணவியர்களும் ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறை மூலம் 701 மாணவியர்களும் கல்வி உதவித் தொகை (ரூ. 4081607) பெறவுள்ளனர்.

2020-21 ம் கல்வியாண்டில் தமிழ் வழியில் பயிலும் 464 இளநிலை மாணவியர்களுக்கு ஊக்கத்தொகையாக ரூ. 4,76,000 தமிழ் வழியில் கல்வி உதவித் தொகை பெற்று வழங்கப்பட்டது.

**தூய்மை இந்தியா**

தூய்மை இந்தியா ஸ்வாச் பாரத் திட்டமானது நமது கல்லூரி முதல்வர் அவர்களைத் தலைவராகக் கொண்டு திருமதி. ஜி. வேதா, உதவிப் பேராசிரியர் (BBA) முனைவர். V.B. உஷா. பொருளியல் துறை அவர்களைப் பொறுப்பாளர்களாகவும் கொண்டு தூய்மை இந்தியா பணிகள் சிறப்பாக நடைபெற்று வருகின்றது. மேலும் திருப்பூர் மாநகராட்சி உதவியுடன் நம் கல்லூரி வளாகத்தில் வழக்கமான தூய்மைப்பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றது.

**உடற்கல்வித் துறை / விளையாட்டுச் செயற்பாடுகள்**

நமது கல்லூரியில் உடற்கல்வித் துறை, ஆங்கிலத்துறையைச் சார்ந்த முனைவர் கல்பனா கார்த்தி அவர்களின் பொறுப்பில் செயல்பட்டுக் கொண்டிருக்கிறது. மாணவிகளுக்கிடையே ஓட்டப் பந்தயம், சதுரங்கம், ஈட்டி எறிதல், கபடி, கோ கோ, எறிபந்து, இறகுபந்து, நீளம் தாண்டுதல் ஆகிய விளையாட்டுகளுக்குப் பயிற்சிகள் கொடுக்கப்பட்டுப் போட்டிகள் நடைபெற்றன.

# கவிதைகள்

## மகிழ்ச்சி

உலகில், உறவுகளின் எதிர்பார்ப்பே **மகிழ்ச்சி**
குழந்தையின் முகத்தை பார்க்கும்போது அம்மாவிற்கு - **மகிழ்ச்சி**
அப்பா என குழந்தை முதலில் பேசினால் அப்பாவிற்கு - **மகிழ்ச்சி**
கணவனின் உண்மை வார்த்தை மனைவிக்கு - ம**கிழ்ச்சி**
மனைவியின் ஆசை சமையல் கணவனுக்கு - **மகிழ்ச்சி**
முதல் வெற்றி வாழ்விற்கு **மகிழ்ச்சி**
மகிழ்ச்சியில் கிடைக்கும் அனுபவம் **மகிழ்ச்சி**
துன்பத்தில் கிடைக்கும் அனுபவம் **மகிழ்ச்சி**
மரத்தின் மகிழ்ச்சி நிழலில்
நீரின் மகிழ்ச்சி தாகத்தில்
வெயிலின் மகிழ்ச்சி குளிரில்
குளிரின் மகிழ்ச்சி வெயிலில்
எதிர்பார்த்தது கிடைப்பது மட்டுமே மகிழ்ச்சி - அல்ல
எதிர்பாராததை ருசிப்பதும் மகிழ்ச்சியே.....

## தியாகம்

மெழுகுவர்த்தியின் தியாகத்தில் தான் இருள் நீங்கியது
வேண்டாம் என்று அம்மா ஒதுக்கும் அரைவயிறு
சோற்றின் தியாகத்தில் என் பசி ஆறியது
அப்பா போடும் கிழிந்த சட்டையின் தியாகத்தில்
தான் நான் வண்ண உடுப்பு உடுத்தினேன்
தாய் மகள் தங்கை அக்கா என இத்தனை
அவள்களும் செய்யும் தியாகத்தில் தான்
சூரியன் உதித்து மறைவது போல்
இயல்பாக உலகம் இயங்குகிறதோ!
ஒருவர் கொடுத்ததை இழப்பதே தியாகம் - அல்ல
தன்னிடம் இருப்பதை இழப்பதே தியாகம்

**ரம்யா. ர**
இளங்கலை தமிழ் இலக்கியம்
இரண்டாம் ஆண்டு

## அன்னையின் முத்தம்

அன்னையே
புதிதாய் உலகிற்கு வந்த எனக்கு
வரவேற்பாய் அமைந்தது உன் முத்தம்
எனக்கு வலி தோன்றும் போதெல்லாம்
மருந்தாய் அமைந்தது உன் முத்தம்
ஆதரவற்ற உணர்வு தோன்றும் போதெல்லாம்
பேராதரவாய் நின்றது உன் முத்தம்
என் வெற்றிகளுக்குப் பரிசுகள் பல
கிடைத்தாலும் உன்முத்தத்திற்கு ஈடான
பரிசு இவ்வுலகினில் எங்கேனும் உண்டோ?
இந்த அன்பிற்குக் கட்ன்பட்டவளானேன்
இக்கடனைத் தீர்க்க முடியாதவளாய்
அனைத்துப் பிறவிகளிலும் உன்னைஎன்
மகளாக்க விரும்பும்உன் கடன்பட்ட மகள் !!!

## வரம் தந்த தேவதை

அறிமுகம் கொடுத்த தேவதை
ஆற்றல் அளித்த தேவதை
இரக்கம் கொடுத்த தேவதை
ஈகை அளித்த தேவதை
உயிர் கொடுத்த தேவதை
ஊன் அளித்த தேவதை
எழில் கொடுத்த தேவதை
ஏக்கம் தீர்த்த தேவதை
ஐயம் தெளித்த தேவதை
ஒழுக்கம் கொடுத்த தேவதை
ஓங்கச் செய்த தேவதை
ஔவியம் அளித்த தேவதை
ஆதியும் அந்தமும் ஆகி
எனக்கு ஊனாகி உயிரான
அன்புத் தேவதை என் அம்மா!




## கவிதை மழை

நான் இந்த உலகிற்கு
வரும் முன்னரே
கேட்டு இரசித்திட்ட அழகான இசை
அம்மாவின்
இதயத்துடிப்பு மட்டுமே!



இந்த உலகில் எதை அளந்தாலும்
அம்மாவின் பாசத்தை
அளவிட முடியாது ....


சிரிப்பு மழையாக மழலை
அன்பு குடையாக தாய்......!!

## நிலா

அந்திசாயும் பொழுதில்
இரவு வானில்
கலைந்து போனது மேகக் கூட்டங்கள்
எட்டிப் பார்த்தாள்
இரவு நிலா .......

என் நட்சத்திரத் தோழிகள்
எங்கே சென்றனர் ....

கனவு என்னும் படகில்
பயணிக்க முற்படும்
அனைத்து உள்ளங்களுக்கும்
சுகமான இரவு.....



**அ. மகாலட்சுமி**
இளங்கலை தமிழ் இலக்கியம்
இரண்டாம் ஆண்டு

## யார் இவர்கள் ? ஏன் இவர்கள் ?

தம்மை மிதிப்பவரை மதியா - எவரும்
ஆனால் நோயுறாதே என்னை மிதி என்பார் இவர்

வளரும் நகம் கூட தேவையன்று வெட்டப்படுகின்றன
ஆனால் புலனறியா துளை வழிபிற உளவா
இவர் கட்டுப்படுத்துகிறார்

நம்மிடம் உள்ள தீதை பிறர் பெறா
பிறரிடம் இருந்து தீதை யாம் பெறா -
முகத்தை மறைத்து அகத்தை காக்கிறார்

அரசியல் நோக்கற்று நம்மை அரவணைக்க
உயிர்வளி அளிக்கிறார்கள் - யார் இவர்கள் ?

அவ்வுயிர் வளியில் கடிய கரிய வளியை
சேர்க்கின்றோம் நாம் - ஏன் இவர்கள் ! ?

விடை :

1. மிதியடி
2. கையுறை, சானிடைஷர்
3. மாஸ்க்
4. மரங்கள் - $O_2$

**ம. சுபத்ரா**
தாவரவியல், மூன்றாமாண்டு

## உன்னால் முடியும் ....

சோகம் மட்டுமே
வாழ்க்கை கிடையாது !
சுகமாகவே எந்நாளும்
வாழ்ந்து விடவும் முடியாது !
சிமிட்டும் நம் இமைகள்
ஒரு நொடி இருட்டினால்தான்
நம்மால் பல நொடிகள்
வெளிச்சத்தில் வாழ முடியும் ... !

## தன்னம்பிக்கை

தோற்றால் புலம்பாதே **போராடு**
கிண்டலடித்தால் கலங்காதே
**மன்னித்துவிடு**
தள்ளினால் தளராதே **துள்ளியெழு**
நஷ்டப்பட்டால் **நடுங்காதே**
**நிதானமாய் யோசி**
ஏமாற்றிவிட்டால் ஏங்காதே
**எதிர்த்துநில்**
**வெற்றிநிச்சயம் ....!**

**ஜி. சிநேகா**
உணவு மற்றும் ஊட்டச்சத்தியல்
இரண்டாமாண்டு

## தமிழ்

**அன்புடன் தமிழ் எழுதிக் கொள்வது**
ஆண்டவனின் அன்பு மொழி தமிழ்
இளமை மாறாமல் இனிது விளங்கி
ஈசன் குமரனின் இன்ப மொழியாக
உணர்வினில் உயிரில் கலந்து
ஊக்கம் பெற்றே சிறந்தோங்கி
எல்லா மொழியினும் முந்து நிலையினில்
ஏற்றம் பெற்றும் எளிமையாகி
ஐயம் அகற்றி அறிவீந்தும் தமிழ்
ஒருவர்க் கொருவர் உறவாடி மகிழ்ந்து
ஓங்கலிடைத் தோன்றி என இலக்கணம் புகழ
ஔவையின் மூச்சிலும் பேச்சிலும் கலந்து விளங்குவதில்
பெருமதிம் கொள்கிறேன்.

இப்படிக்கு தமிழ்

**ப. ரஞ்சனி**
இளங்கலை தமிழ் இலக்கியம், இரண்டாம் ஆண்டு

## என்றென்றும் என் மனதில் ......!

இரவு மணி எட்டை எட்ட,
தலைப்புச் செய்தியாக "நாளை கல்லூரிகள் திறப்பு" !
முகமும் மனமும் மலர்ந்தவளின்
நிழலிரவு நித்திரையற்றுப் பயணித்தது !
பகலவனோடு நான் விழித்தெழும் நேரமும்
மாறியிருந்தது !
முன்போலவே ஆர்ப்பரிப்போடும் அவசர
அவசரமாகவும் காலைப்பொழுதில் நான்....
மீண்டும் எங்களின் வருகை....
கல்லூரிக்கு மட்டுமல்ல; எங்களது நட்பிற்குள்ளும் !
எண்ணற்ற கனவுகளோடும் காத்திருப்போடும்,
கல்லூரி வாசலில் நான் ....
என் நட்புப் பட்டாளத்தைக் காண !

அதற்குள் மூன்றாமாண்டு மாணவிகளாக
நாங்கள், இரண்டாண்டுகள் ஓடியிருந்தன
ஆயினும் பசுமை மாறா பொன் நினைவுகள்
எங்களோடு ஆயிரமாயிரம் !
அவற்றுள் புகைப்படமாய் பல நூறுகளும்;
ஒலி, ஒளிப் பதிவுகளாய் சில நூறுகளும் !
முதல் நாள், முதல் சண்டை எனத் தொடங்கியது
முடிவிலா நாள், முடிவிலா நட்பு எனத் தொடர....
வேண்டும் என்வாழ்வில் !
நீங்களும் உங்களது உன்னத நட்பும்
அன்பாக, ஆதரவாக ....
அறிவாக அதட்டலாக .....
அரவணைப்பாக ஆச்சரியமாக ....
என் செல்ல அரக்கிகளாக ........
இன்றும் என்றும் என்றென்றும் என்மனதில்.....

**செ. அஜிதா**
இளங்கலை - இயற்பியல்
மற்றும் கணினிப்பயன்பாடு
மூன்றாமாண்டு

## நட்பு

உப்பு இருந்தால் தானே உணவு சுவைக்கும்
நட்பு இருந்தால் தானே வாழ்க்கை இனிக்கும்

ஒரு துளி கண்ணீரைத் துடைப்பது நட்பு அல்ல
மறு துளி வராமல் தடுப்பது தான் நட்பு

உதடுகள் சிரிப்பது ஊருக்குத்
தெரியும் ஆனால்
உள்ளம் அழுவது யாருக்கத் தெரியும்
நண்பனைத் தவிர

## பெண்கள்

உலகை நகர்த்தும்
இயற்கை கடிகாரம் பெண்கள்

சில நேர சுமைகளை
கூட பாரமாய் கருதும் உலகில்
சுமைகளை சுகங்களாக
எண்ணி வாழ்கிறாள் பெண்........

**பி. திவ்யா**
வணிக நிர்வாகவியல்
முதலாமாண்டு

## நட்சத்திரங்கள்

இருட்டு வானில்
எட்டிப் பார்க்கும்
குட்டி மின் மினிப் பூச்சிகள்
அமாவாசை வானில்
அழகு நிலாவைத் தேடி
அலையும் அடிமைக் கூட்டம்
இரவு ராஜ்ஜியத்தில்
நிலவு ராணியுடன்
உலாப் போகும் உப்பரிகை தோழிகள்

## அம்மா

உயிரை வருத்தி உயிர் தந்தவள்
உதிரம் பெருக்கி உருவம் தந்தவள்
உடல் வருத்தி உணவு கொடுத்தவள்
தன் உறக்கம் மறந்து உறங்கச் செய்தவள்
நாம் உலகம் அறிய உயிரையும் தருபவள்
நம் தாய்

**ச.ஜெ. ஆறுமுகசெல்வி**
வணிகநிர்வாகவியல் முதல் ஆண்டு
இரண்டாம் சுழற்சி

## கனவு மெய்பட வேண்டும்

மனித வாழ்வில் - முதல்
மகத்தான வெற்றி என்பது
கனவுகளைச் சுமப்பது தான்...
இவ்வுலகில்
பணம் இல்லாதவன் - ஏழை அல்ல
கனவு இல்லாதவனே ஏழை !
கனவில்லாத வாழ்க்கை
கலங்கரை விளக்கில்லாத
கப்பலைப் போல...
கனவு எனும் விந்தினைக் கொண்டு
முயற்சி எனும் கருவை உருவாக்கி
வெற்றி எனும் மழலையை ஈன்றெடு!
கனவு மெய்ப்பட வேண்டும்
ஆம்... ஆம்.. கனவு மெய்ப்பட
காலந்தோறும் போராட வேண்டும்
போராட்டமே வாழ்க்கை
போராடத் தயாராக இரு...
கனவு மெய்ப்படும்!
காலம் கடந்ததை எண்ணி
கவலைப்பட்டு ஏங்காதே! ...
கனவு மெய்ப்பட
கண்களை மூடி உறங்காதே!
வாழ்வில் வெற்றி பெற
கனவை உருவாக்கு !

அந்த கனவை நினைவாக்கு!
கற்பனைகளும் அழகிய சொற்களும்
கொண்டு பிறப்பது கவிதை ...
ஆசைகளும் கடமைகளும்
கொண்டு பிறப்பது கனவு !
கனவு எனும் விதையை நட்டு
உழைப்பு எனும் நீரை ஊற்றினால்
வெற்றி எனும் மரம் வளர்ந்து
மகிழ்ச்சியாகிய மலர்களைத் தூவும்!
கனவு என்ற சொல்லிற்குக்
கர்த்தாவாக விளங்குபவர்
கலாம்.. ஆம்.. அப்துல்கலாம்!
கலாமை முன்மாதிரியாய்க் கொண்டு
கனவை முக்கியமானதாய்க் கொண்டு
முயற்சிக்கலாம்! சாதிக்கலாம்!
நிச்சயமாக ஒருநாள்
நம்முடைய கனவை
மெய்ப்பிக்கலாம்!
கனவு, கனவு, கனவு, கனவு !...
அதையே மூச்சாய் கொண்டு
அனுதினமும் நீ உலாவு!
திறந்திடும் வெற்றிக் கதவு !!

## கற்க வேண்டிய பாடம் எது?

கற்க வேண்டிய பாடம் எது?
நியூட்டனின் விதிகளையா?
இல்லை... இல்லை ...
நியூட்டனுக்கு ஆப்பிள்
தூண்டுகோலான விதத்தை
கற்க வேண்டிய பாடம் எது?
அப்துல்கலாமின் அக்னிச் சிறகுகளையா?
இல்லை... இல்லை...
அக்னியை சிறகாக்கி அகலமெங்கும்
ஆட்சிசெய்த அற்புதத்தை!
கற்க வேண்டிய பாடம் எது?
கம்பரின் இராமாயணத்தையா?
இல்லை... இல்லை....
கம்பரின் கவித்திறப் புலமையை!
கற்க வேண்டிய பாடம் எது?
இராமானுசரின் கணித சூத்திரத்தையா?
இல்லை.. இல்லை..
இராமனுசரின் இரகசிய நுணக்கங்களை!
கற்க வேண்டிய பாடம் எது?
பெரியாரின் கொள்கைகளையா?
இல்லை... இல்லை...
பெரியாரின் பகுத்தறிவுத் திறனை!
கற்க வேண்டிய பாடம் எது?
லமார்க்கியின் குளோனிங் முறையையா?
இல்லை... இல்லை...
அவரின் குதர்க்கமான சிந்தனையை!
கற்க வேண்டிய பாடம் எது?
பெற வேண்டியது எது?
இல்லை... இல்லை...

இல்லவே இல்லை
மதிப்பு வாய்ந்த மதிநுட்பத்திறனை!
வாழவேண்டிய வாழ்க்கை எது?
வெற்று வாழ்க்கையையா?
இல்லை... இல்லை...
வெற்றி வாழ்க்கையை!

அர்த்தமுள்ள வாழ்வை வாழ்வோம்
அகிலம் எங்கும் ஆளுவோம்
தாய்மொழிக் கல்வியை ஊட்டுவோம்
தனித்திறமைகளை நாட்டுவோம்.

**சு. சுபலட்சுமி**
முதுகலை தமிழ் இலக்கியம்
இரண்டாம் ஆண்டு

## கொரானா

உலகத்தையே உலுக்கிக்
கொண்டிருக்கும் கொடிய நோய்
கொரானா எனும் கம்சனை
அழிக்க அவதரித்த கிருஷ்ணர்களே
மருத்துவர்கள்.

## நினைவுகள்

நிஜங்களை விட நினைவுகளே அழகானவை !
ஏனெனில் நிஜங்கள் அழிந்து விடும்
நினைவுகள் என்றுமே நிரந்தரமானவை...
அது அழிவதில்லை நம் நினைவை விட்டு ...!

**பி. சங்கீதா**
தாவரவியல், மூன்றாமாண்டு (த.வழி)

## அப்பா

தந்தையின் கடலளவு கோபம்கூட
நொடிப்பொழுதில் அடங்கி விடுகிறது
தன் மகளின் சிறு கண்ணீர் துளிகளில்
வாழ்க்கை என்பது மிக எளிது
நமக்கு கற்றுக்கொடுக்கும் ஆசிரியர் நம்
தந்தையாக இருந்தால்

**பி. திவ்யா**
வணிக நிர்வாகவியல்
முதலாமாண்டு

## என் அம்மா

என் அம்மாவை நினைக்கிறேன்!
புத்தாடையின்றி
பொன் நகையின்றி
சீவி முடித்து சிங்காரிப்பும் இன்றி
எப்போதும்
அள்ளி முடித்து கொண்டையுடன்
அதிலே மங்கலமாய் ஒரு கண்ணிப்பூவும்
மங்கல (மங்கலான) நிலையில்
நெற்றியில் நீர்வடிந்து குங்குமமும்
சாப்பிடு சாப்பிடு என்று
தட்டிலே உணவைப் போட்டுவிட்டு
அப்படியே சட்டியைக் கழுவி
கவிழ்த்தும் போதும்
அம்மா சாப்பிட்டாளா
என்று கேட்காத நான்
இப்போது
நாலு சட்டத்திற்குள்
அம்மாவின் முகம் சுவரில்
நான் அழகாய்
நான் நலமாய்
நான் வசதியாய்
இருப்பதைப் பார்த்து மௌனமாய்..................
என் இதயம் மொழி இல்லாமல்

## A FRIEND

I Wonder what thou art to me!
Somtimes burning like the sun;
I Wonder what thou art to me!
Somtimes preaching like a priest;
I Wonder what thou art to me!
Sometimes caring like a nurse;
I Wonder what thou art to me!
A Philosopher?
A Guide?
No, I am both!
I am your friend!

**Dr. B. Priyadharshini**
(Guest Lecturer)
English Department

## Facts that you won't believe are true

Sea Lions have rhythm They are the only animal able to clap to a beat.

While you sleep you can't smell anything even really, really bad or potent smells.

Some tumors can grow hair, teeth, bones, even fingernails

Your brain uses 10 watt of energy to think and does not feel pain.

The smallest country in the world takes up 2 square miles : Vatican City.

Hippopotamus milk is pink

Cats are not able to taste anything that is sweet

Kangaroos can not walk backwards

Your fingernails grow faster when you are cold.

Apple sauce was the first good eaten in space by astronauts

**S. Suganya**
(Guest Lecturer)
English Department

## Education

Education is a must
It removes your dust;
Always have a thirst
So that it makes you the best!
Education is primary
Other things are secondary;
It is our right that
Raises our life bright!
Education is a tool
That stops you becoming a fool;
Get rid of Ignorance
Then you will get confidence!
Education builds positive thoughts
And teachers life's greatest lessons !!!

**P. Amutha**
(Guest Lecturer)
English Department

## Tongue Twister

**Benefits of Tongue Twister**

- Tongue Twisters have been proven to clarity and improve their pronounciation of words
- Tongue Twister shows words and sounds how we have trouble with pronouncing
- Tongue Twister helps to warm up our speaking ability
- Tongue Twister also stretch and strengthen the muscles which we use to speak.
- It may also help with continued successful brain function. It can provide information on the brain speech - planning process
- Tongue twister are a great way to practice and improve pronunciation skills and fluency speaking.

*International Tongue Twister Day*
*Celebrated every second Sunday*
*in November*

**Let try this :**

- A twister of twists once twisted a twist, A twist that the twisted was a three - twisted twist;

  If in twisting a twist one twist should untwist, The untwisted twist would untwist the twist.
- I Scream, you Scream, we al scream for ice scream
- Birdie birdie in the sky laid a turdie in my eye
  It cows could fly I'd have a cow pie in my eye.
- I slit the sheet, the sheet I slit,
  and on the slitted sheet I sit.
- Imagine an imaginary menageric manager managing an imaginary mengerie.
- Six sick hicks nick six slick bricks with picks and sticks
- Any noise annoys an oyster but a noisy noise annoys an oyster more.
- Can you can a can as a canner can can a can?
- I saw a kitten eating chicken in the kitchen.
- Round the rough and rugged rock the ragged rascal rudely ran.

**B. Samsath**
(Guest Lecturer)
English Department

## இணைய வழியில் படித்து இதயத்தைத் தொட்டது

கோபம் எதனால் வருகிறது என்று ஒரு ஆராய்ச்சி நடத்தப்பட்டது. அதில் ஒவ்வொருவரும் ஒவ்வொரு விதமாக பதில் தந்திருந்தார்கள். ஒருவர் கூறினார். நான் பணிபுரியும் அலுவலகத்தில் நான் கூறுவதை யாரும் கேட்பதில்லை நான் ஒன்று சொன்னால் அவர்கள் ஒன்று செய்கிறார்கள் இதனால் கோபம் உடனே வந்துடுது என்றார் மற்றொருவர் யாராவது என்னை தவறா சொல்லிட்டாங்கன்னா பட்டுன்னு கோபம் வந்துடும் என்றார் அடுத்தவர் நான் செய்யாததை செய்த மாதிரி சொல்லிட்டாங்கன்னா அவ்வளவுதான் அவங்க என்கிறார் இன்னொருவர் சொன்னதை திரும்ப திரும்ப சொன்னா, நான் என்ன செய்வேன்னு எனக்கே தெரியாதுன்னு சொல்கிறார் வேறொருவரோ, நினைச்சத கிடைக்கலைன்னா சும்மா விடமாட்டேனுட்டார் இப்படி ஒவ்வொருவரும் தங்களுக்கு எதனால் கோபம் வருகிறது என்று கருத்து தெரிவித்தனர் இப்படி அடுத்தவர்கள் ஏதாவது செய்தால் இவர்களுக்கு கோபம் ஏற்படுமாம். அது சரி நீங்களே ஏதாவது தவறு செய்தால் உங்கள் மீது கோபப்படுவீர்களா? என்றதற்கு அது எப்படீங்க நம்ம மேலேயே நம்ம கோபப்படுவோமா என்றனர். கோபம்னா என்ன? கோபம் என்பது அடுத்தவர்கள் செய்யும் சிறு சிறு தவறுகளுக்கு நமக்கு நாமே கொடுத்துக்கொள்ளும் தண்டனைக்கு பெயர் தாங்க கோபம். அதுமட்டுமல்லாமல் நாம் நம் கோபததை குறைக்க அடுத்தவர்களிடம் இதே கோபத்ததுடன் செயல்பட்டால் நட்பு நசுங்கி போகும். உரிமை ஊஞ்சலாடும். நமக்கு நாமே கொடுத்துக்கொள்ளும் தண்டனை என்ன? சவுக்கு எடுத்து சுளீர்... சுளீர்ன்னு நம்மளையே அடித்துக்கொண்டால் மட்டுமே அதுக்கு பெயர் தண்டனை இல்லீங்க, கோபம் ஏற்படுவதால் பதற்றம் (டென்ஷன்) உண்டாகிறது. இதனால் நமது உடல், மனம் இரண்டும் பாதிக்கப்படுகிறது இந்த பாதிப்பால் நரம்புத்தளர்ச்சி, ரத்த அழுத்தம், மன உளைச்சல், நடுக்கம் போன்ற உபாதைகள் உண்டாகிறது. இதைத் தடுக்க டாக்டரிடம் சென்று மாத்திரை மருந்து சாப்பிடுவோம்.

இதே நிலை நீடித்தால் ஒரு மன நோயாளி போல் ஆகிவிடுவோம். இது பொய்யல்ல. சத்தியமான உண்மை இது. அன்பின் வேறொரு விதமான வெளிப்பாடுதான் கோபம். முதல்ல அடுத்தவங்களுக்கு கோபம் வர்ற மாதிரி நீங்க நடக்காதீங்க. அடுத்தவர்கள் குறை சொல்லாதீங்க எதையும் அடுத்தவர்களிடம் எதிர்பார்க்காதீங்க. அவங்க உங்க மேல கோபப்பட்டா முதல்ல சாரின்னு மன்னிப்பு கேளுங்க. ஈகோ பார்க்காதீங்க. நீங் கோபப்படுற மாதிரி அடுத்தவங்க நடந்து கொள்கிறார்கள் என்று வைத்து கொள்வோமே. முதல்ல பிளீஸ் என்னை கொஞ்சம் யோசிக்க விடுங்கன்னு அமைதியாயிடுங்க. யார்மேல தவறுன்னு சிந்தியுங்க.. கொஞ்ச நேரத்தில் எல்லாம் சரியாயிடும். அப்படி இல்லைன்னா அந்த இடத்தை விட்டு நகருங்க. தனியா உங்காந்து யோசிங்க. அடிக்கடி யாரிடம் கோபப்படுகிறீர்களோ அவர்களிடம் மனம் விட்டு சந்தோஷமாக சிரித்து பேசுங்ககள். அடுத்தவர்ளே தவறு செய்திருந்தால் கூட நீங்க நல்லது பண்ணுங்க. அடுத்தவங்க என்ன செஞ்சுட்டாங்கன்னு கோபப்படுறோம். என்ன நடந்துருச்சு பெருசா. என்னத்த இழந்துட்டோம். மரணம் ஒன்று தான் மாபெரும் இழப்பு. அதை தவிர வேறொன்றுமே இழப்பு கிடையாது. எல்லாத்தையும் சமாளிச்சுடலாம்ங்ற முடிவுக்கு வாங்க. வீட்டு பெரியவர்கள் திட்டும் போது கவனித்திருப்பீர்கள். என்னத்த பெரிசா சாதித்து கிழிச்சன்னு. நாட்காட்டியில் உள்ள தேதி பேப்பரைக் கிழிச்சால் மட்டும் போதாது. ஒவ்வொரு நாளும் தூங்கச் செல்லும் முன் இன்றைக்கு என்ன சாதிச்சோம்னு யோசிச்சிட்டு தூங்குங்க. அடுத்தவர்களுக்கு நல்லது பண்ணாட்டியும் கோபம்ங்ற கொடிய நோயைப் பரப்பாமல் இருந்தாலே, நீங்க அவங்களுக்கு நல்லது செஞ்ச மாதிரிதான். தூக்கு மாட்டி தற்கொலை செய்து கொள்பவன் கூட ஒரு செகண்ட் யோசிச்சான்னா தனது முடிவை மாற்றிக்கொள்வான். நமக்கோ ஆறு அறிவை ஆண்டவன் கொடுத்துள்ளான். இதில் ஆறாவது அறிவை அப்பப்ப யோசிக்கிறதுக்கு யூஸ் பண்ணுங்க. கோபம் வரவே வராது. நாமெல்லாம் சாதிக்கப்பிறந்தவர்கள். கோபப்படாமல் இருப்பதே ஒரு மாபெரும் சாதனை தான். வாழ்வது இந்த பூமியில் ஒரு முறை தான். அதை கோபப்படாமல் சிறந்த முறையில் வாழ்ந்து சாதிப்போம். கோபம் வராதிருக்க யோசிப்போம்.

## படித்ததில் பிடித்தது

அந்த காலம்
ஊசி போடாத டாக்டர்
சில்லறை கேட்காத கண்டக்டர்
சிரிக்கும் போலீஸ்
முறைக்கும் காதலி
உப்பு தொட்ட மாங்கா
மொட்ட மாடி தூக்கம்
திருப்தியான ஏப்பம்
நோட்புக்கின் கடைசிபக்கம்
தூங்கதோள் கொடுத்த சக பயணி...
பார்த்த நொடியில் உரிமை எடுத்துக்கொள்ளும்
பால்ய நண்பன்
இப்பவும் டேய் என அழைக்கும் தோழி
இரவு 2 மணிக்கு கதவைத் திறந்துவிடும் அம்மா
கோபம் மறந்த அப்பா
சட்டையை ஆட்டய போடும் தம்பி
அக்கறை காட்டும் அண்ணன்
அதட்டும் அக்கா
மாட்டி விடாத தங்கை
சமையல் பழகும் மனைவி
சேலைக்கு Fleets எடுத்துவிடும் கணவன்
வழிவிடும ஆட்டோ காரர்...
High Beam போடாத லாரி ஓட்டுநர்
அரை மூடி தேங்கா..
12 மணி குல்பி
Sunday சாலை
மரத்தடி அரட்டை
தூங்கவிடாத குறட்டை
புதுநோட் வாசம்
மார்கழி மாசம்
ஜன்னல் இருக்கை
கோவில் தெப்பகுளம்
Exhibition அப்பளம்
முறைப்பெண்ணின் சீராட்டு
எதிரியின் பாராட்டு
தோசைக்கல் சத்தம்
எதிர்பாராத முத்தம்
பிஞ்சு பாதம்
எளிதில் மணப்பெண் கிடைத்தாள்
வெஸ்ட் இண்டீசை வெல்லவே முடியாது
சந்தைக்கு போக பத்து ரூபாய் போதும்
முடிவெட்ட இரண்டு ரூபாய்தான்
மிதிவண்டி வைத்திருந்தோம்.
எம்ஜிஆர், கலைஞர் உயிரோடு இருந்தார்கள்
ரஜினி, கமல் படம் ரிலிஸ்
கபில் தேவனின் கிரிக்கெட்
குமுதம், விகடன் நேர்மையாக இருந்தது
வானொலி நாடகங்களை ரசித்து கேட்டோம்
எல்லோரும் அரசு பள்ளிகளில் படித்தோம்
சாலையில் எப்போதாவது வண்டி வரும்
தமிழ் ஆசிரியர்கள் தன்னிகரற்று விளங்கினர்
மயில் இறகுகள் குட்டி போட்டன, புத்தகத்தில்
மூன்றாம் வகுப்பிலிருந்து மட்டுமே, ஆங்கிலம்
ஐந்தாம் வகுப்பு வரை அரைக்கால் டவுசர்
பேருந்துகள் கொண்டுவந்து மாலைமுரசு
விற்பவர்கள்
எந்த நிறுத்தத்தில் ஏறினாலும் உட்கார இடம்
கிடைக்கும் பேருந்தில்.,
கொளுத்தும் வெய்யிலிலும் முகமூடி அணியாதது
(Makeup) இல்லா அழகி.,
பலவருடம் ஆனாலும் நம் குறும்பை மறந்து,
நம்மை மறக்காத ஆசிரியர்.,
கூட்டமான பஸ்ல, நா அடுத்த Stoppingல
எறங்கிருவேன், நீங்க உக்காந்துக்கோங்க என்ற
வார்த்தை.,
7 கழுதை வயசானாலும் நமக்கு திருஷ்ட்டி
சுத்தும் பாட்டி., பாட்டியிடம் பம்பும் தாத்தா...
எல்லா வீடுகளிலும், ரேடியோவிலும் கேசட்டிலும்
பாடல் கேட்பது சுகமானது.
வீடுகளின் முன்பெண்கள் காலையில்
கோலமிட்டார்கள், மாலைப்பொழுதுகளில் வீட்டின்
முன் அரட்டை அடிப்பார்கள்
சினிமாவுக்கு செல்ல 2 நாளைக்கு முன்பே
திட்டமிடுவோம். ஆடி 18, தீபாவளி
பண்டிகையைக் கொண்டாட ஒரு மாதத்துக்கு
முன்பே திட்டமிடுவோம். பருவ பெண்கள்
பாவாடை தாவணி உடுத்தினர். சுவாசிக்க காற்று
இருந்தது. குடிதண்ணீரை யாரும் விலைக்கு
வாங்க வில்லை. தெருவில் சிறுமிகள்
பல்லாங்குழி ஆடுவார்கள். அவர்களைக்

கலாய்த்துக்கொண்டே
நாங்கள் நுங்கு வண்டி ஓட்டுவோம்.
இதை எழுதும் நான்
படிக்கும் நீங்கள்
இன்னும் நிறைய இருக்கு இந்த உலகத்துல
ரசிக்க... கடந்து தொலைந்து போனவை நம்
நாட்கள் மட்டுமல்ல., நம் சுகங்களும் தான்
இன்று எல்லாமே
உள்ளங்கையில் கைபேசி வந்து
எல்லாமே கனவாக... காணாமல் போய்விட்டது...!!
படித்ததில்.... நினைத்தது.... பிடித்தது
நன்றி... வாழ்க வளத்துடன்

## மாடும் மனிதனும்

வயலில் உழுதுகொண்டிருந்தார் அந்த விவசாயி. காளைக்கு கஷ்டந்தெரியக்கூடாதென்பதற்காக அதனுடன் பேசிக்கொண்டே உழுதார். மாடு நீ... முன்னால் போற. மனுஷன் நான்.. பின்னால வர்றேன். பாத்தியா...! இதான் என் தலையெழுத்து. விவசாயத்தொழில்ல நீதான் முன்னாடி நான் பின்னாடி தான். முகத்தை சோகமாக வைத்துக்கொண்டு சொன்னார். அடடா.. இந்த மனித ஜாதான் எவ்வளவு மேலானது என்று நினைத்து சிலிர்த்துப்போனது காளை. விவசாயி தொடர்ந்தார். நீயும் நானும் இந்த விவசாயத்தில் கூட்டாளி. அதனால வர்ற விளைச்சல்ல உனக்கு பாதி எனக்கு பாதி.

காளைக்கு தலைச்சுற்றியது. எவ்வளவு நேர்மை. பாதிக்குப்பாதி பங்குதர யாருக்கு மனசுவரும். பாதிப்பாதின்னா என்னபடி பங்குவைக்கலாம்? நீ முன்னால போறதால முன்னால கிடைக்குறது உனக்கு. பின்னால கிடைக்குறது எனக்கு. சரியா? என்றார் விவசாயி.

முன்னால் வர்றது எல்லாமே எனக்கா ...! பெருமிதமாய் பார்த்தது காளை. விதைவிதைத்து நாற்றுநட்ட சிலகாலத்தில் பச்சைப்பசேலென்று மாயிறிருந்தது வயல். மாட்டுக்கு வாயெல்லாம் எச்சில். விவசாயியைப் பார்த்தது. முதல்ல வந்த இதெல்லாம் உனக்கு. இதுல அப்புறமா ஒன்னு வரும். அதுமட்டும் எனக்கு. சரியென்று தலையாட்டியது காளை. கொஞ்ச நாட்களில் நெற்கதிர்கள் குதிரைவால்போல விளைந்து தரைபார்த்துக் கிடந்தன. அறுவடைநாள் வந்தது. முதலில் வந்த வைக்கோல் காளைக்கு.

பின்னர் வந்த நெல் விவசாயிக்கு. மாடு கோர்ட்டுக்கா போக முடியும்? பாகப்பிரிவினையில் அநீதியுள்ளதென்று பரிதாபமாய் பார்த்தது காளை. கவலைப்படாதே நெல்லிலும் பங்குதர்றேன். அதிலும் நமக்கு பாதிப்பாதி. சோகத்துடன் தலையாட்டியது காளை. நெல்லை உலரவைத்து, அரைத்துப் புடைத்ததும் உமியும் தவிடும் முன்னால் வந்தது. அது காளைக்கு. பின்னால் வந்த முத்துமுத்தான அரிசி முழுமையும் மனிதனுக்கு. இந்த பங்கீட்டிலும் நியாயமில்லையென்று கண்ணீர்விட்டது காளை. அழுவாதே இந்த அரிசியிலும் உனக்கு பாதி எனக்கு பாதி. சரியா? என்றார் விவசாயி. அதற்கும் சரியென்று தலையாட்டிய அந்த வாயில்லா ஜீவன், அரிசியை நோக்கிச்சென்றது பொறு... அரிசியை சோறாக்கி, அதில் முதலில் வருவது உனக்கு தான். அடுத்து வருவதுதான் எனக்கு. சோகத்துடன் தலையாட்டியது காளை. அரிசியைச் சோறாக்கி வடித்த பொழுது முதலில் வந்த சோற்றுக்கஞ்சி காளைக்கு. அடுத்து வந்த சோறு மனிதனுக்கு. காளை முரண்டு பிடித்தது.

இந்த முறை, முன்னால மனிதனுக்கு பின்னால மாட்டுக்கு என்று ஒப்பந்தத்தை மாற்றும்படி கெஞ்சியழுதது. சரியென்று ஏற்றுக்கொண்ட விவசாயி அப்படியே செய்தார். பொங்கல் திருவிழா வந்தது.

முதலில் வந்த பொங்கல் மனிதனுக்கு. அடுத்து வந்த பொங்கல் மாட்டுப்பொங்கல் ஆனது.

## தை மகளே வருக! வருக!


அன்பாலே அனைவரையும் அரவணைப்ப **தை**
ஆயுளைக் கூட்டுகின்ற ஆரோக்கிய **தை**
இன்பங்களை எப்போதும் விதைக்கின்ற **தை**
ஈகையை கடைபிடித்து காக்கின்ற **தை**
உறவுகளை மறவாமல் போற்றுகின்ற **தை**
ஊழ்வினைகள் அனைத்தையும் அகற்றுகின்ற **தை**
எல்லோருக்கும் அமைதியைத் தருகின்ற **தை**
ஏக்கத்தை இதமாக தீர்க்கின்ற **தை**
ஐயங்களை அற்புதமாக களைகின்ற **தை**
ஒற்றுமையை மனங்களில் விதைக்கின்ற **தை**
ஓயாமல் உயர்ந்திட பணிக்கின்ற **தை**
ஔடதமாய் இருந்து ஆளுகின்ற **தை**
அஃதிணையே இயல்புகளாய் கொண்ட **தை**
மகளே! வருக..! வருக..!

## கெடுவதற்கு இவ்வளவு விஷயங்களா?


நமது தமிழ் மூதாட்டி ஔவையார் எவ்வளவு அழகாக சொல்லி இருக்கிறார்...


1. பார்க்காத பயிரும் கெடும்
2. பாசத்தினால் பிள்ளை கெடும்.
3. கேளாத கடனும் கெடும்
4. கேட்கும்போது உறவு கெடும்
5. தேடாத செல்வம் கெடும்
6. தெகிட்டினால் விருந்து கெடும்
7. ஓதாத கல்வி கெடும்
8. ஒழுக்கமில்லாத வாழ்வு கெடும்
9. சேராத உறவும் கெடும்
10. சிற்றின்பம் பெயரும் கெடும்
11. நாடாத நட்பும் கெடும்
12. நயமில்லா சொல்லும் கெடும்
13. கண்டிக்காத பிள்ளை கெடும்
14. கடன்பட்டால் வாழ்வு கெடும்
15. பிரிவால் இன்பம் கெடும்
16. பணத்தால் அமைதி கெடும்
17. சினமிகுந்தால் அமைதி கெடும்
18. சிந்திக்காத செயலும் கெடும்
19. சோம்பினால் வேலை கெடும்
20. சுயமில்லா வேலை கெடும்
21. மோகித்தால் முறைமை கெடும்
22. முறையற்ற உறவும் கெடும்
23. அச்சத்தால் வீரம் கெடும்
24. அறியாமையால் முடிவு கெடும்
25. உழுவாத நிலமும் கெடும்
26. உழைக்காத உடலும் கெடும்
27. இறைக்காத கிணறும் கெடும்
28. இயற்கையை அழிக்கும் நாடும் கெடும்
29. இல்லாலில்லா வம்சம் கெடும்
30. இரக்கமில்லா மனிதம் கெடும்
31. தோகையினால் துறவு கெடும்
32. துணையில்லா வாழ்வு கெடும்
33. ஓய்வில்லா முதுமை கெடும்
34. ஒழுக்கமில்லா பெண்டிர் கெடும்
35. அளவில்லா ஆசை கெடும்
36. அச்சப்படும் கோழை கெடும்
37. இலக்கில்லா பயணம் கெடும்
38. இச்சையினால் உள்ளம் கெடும்
39. உண்மையில்லா காதல் கெடும்
40. உணர்வில்லாத இனமும் கெடும்
41. செல்வம் போனால் சிறப்பு கெடும்
42. சொல்பிறழ்ந்தல் பெயரும் கெடும்
43. தூண்டாத திரியும் கெடும்
44. தூற்றிப்பேசும் உரையும் கெடும்
45. காய்க்காத மரமும் கெடும்
46. காடழிந்தால் மழையும் கெடும்
47. குறி பிறழ்ந்தல் வேட்டை கெடும்
48. குற்றம் பார்த்தால் சுற்றம் கெடும்
49. வசிக்காத வீடும் கெடும்
50. வறுமை வந்தால் எல்லாம் கெடும்
51. குளிக்காத மேனி கெடும்
52. குளிர்ந்து போனால் உணவு கெடும்
53. பொய்யான அழகும் கெடும்
54. பொய்யுரைத்தால் புகழும் கெடும்
55. துடிப்பில்லா இளமை கெடும்
56. துவண்டிட்டால் வெற்றி கெடும்
57. தூங்காத இரவு கெடும்
58. தூங்கினால் பகலும் கெடும்
59. கவனமில்லா செயலும் கெடும்
60. கருத்தில்லா செயலும் கெடும்


இந்த 60ஐயும் அறிந்து கொண்டால்?
நமது வாழ்க்கை கெடவே கெடாது ....




**செ. வெரோனிகா**
இளங்கலை தமிழ் இலக்கியம், இரண்டாமாண்டு











P. Dhivya
Ist BBA II Shift

**P. திவ்யா**
வணிகநிர்வாகவியல் முதல் ஆண்டு
இரண்டாம் சுழ்ற்சி




**S.J. ஆறுமுகசெல்வி**
வணிக நிர்வாகவியல் முதல் ஆண்டு
இரண்டாம் சுழற்சி









**P. சங்கீதா**
தாவரவியல் மூன்றாம் ஆண்டு (த.வ.)




**R. ஷோபனா**
இளநிலை தாவரவியல் முதல் ஆண்டு




**க. ஜென்னத் பிர்தௌஸ்**
தாவரவியல் முதல் ஆண்டு (ஆ. வழி)



**ரா. துர்கா தேவி**
பி.எஸ்.சி. இயற்பியல் மற்றும்
கணினிப்பயன்பாடு இரண்டாம் ஆண்டு





**R. தாரணி**
இளநிலை தாவரவியல் முதல் ஆண்டு (ஆ வழி)





**S. சுகன்யா**

கௌரவ விரிவுரையாளர் ஆங்கில இலக்கியம்





**R. சுகந்தி**

கௌரவ விரிவுரையாளர் ஆங்கில இலக்கியம்











**நர்மதா**

உணவு அறிவியல் - ஊட்டச்சத்தியல் மூன்றாம் ஆண்டு










**ஷோபியா**

உணவு அறிவியல் - ஊட்டச்சத்தியல் மூன்றாம் ஆண்டு



**கா. கனகவள்ளி**


இளங்கலை தமிழ் இலக்கியம் முதலாம் ஆண்டு




**ப. ப்ரீத்தா**

தமிழ் இலக்கியம் முதலாம் ஆண்டு










**ப்ரீத்து குட்டி**




**K. ஐஸ்வர்யா**
உணவு அறிவியல் - ஊட்டச்சத்தியல் மூன்றாம் ஆண்டு







**செ. கௌசல்யா**
மூன்றாம் ஆண்டு உணவு அறிவியல் மற்றும்
ஊட்டச்சத்தியியல்





சுதந்திரதின விழாவின் ஒருபகுதி



சுதந்திர தின கொடியேற்றம்



குடியரசு விழா சிறப்புரை



கல்லூரி முதல்வர்
மெய்.இரெ. எழிலி அவர்கள் கொடியேற்றினார்.



பட்டொளி வீசி பறக்கின்றது தேசியப்கொடி

## நாட்டு நலப்பணித்திட்ட நிகழ்வுகள்



கபசுர குடிநீர் வழங்கியது



போலியோ சொட்டு மருந்து



கல்லூரி முதல்வரோடு சேர்ந்து
மாணவிகள் கபசுர குடிநீர் அருந்துவது




சாலைப் பாதுகாப்பு விழிப்புணர்வு பேரவை




நாட்டு நலப்பணித்திட்ட அலுவலர்கள்



உலக மகளிர் தினத்தை முன்னிட்டு இணைந்த கரங்கள் அறக்கட்டளை சார்பில் திருப்பூர் எல்.ஆர்.ஜி அரசினர் மகளிர் கல்லூரியில் மாணவிகளுக்கு சுமார் ஐநூறு 500 மரக்கன்றுகள் கொடுக்கப்பட்டது.மேலும் விழாவில் மரம் நடுவதின் முக்கியத்துவம் பற்றியும் விழிப்புணர்வு செய்யப்பட்டது. கல்லூரி சார்பாக நாட்டுநலப்பணித்திட்டம் நிகழ்ச்சியும் நடந்தது. இந்நிகழ்ச்சியில் ஆசிரியர்கள், இணைந்த கரங்கள் அறக்கட்டளை நிர்வாகிகள், கல்லூரி மாணவிகள் பலரும் கலந்து கொண்டனர்.



புற்றுநோயால் பாதிக்கப்பட்டவர்களுக்கு

முடிதானம் வழங்கிய மாணவிகள்

உலக மகளிர் தினம்




இணைந்த கரங்கள் மரக்கன்றுகள் பெற்றுக் கொள்வது

SWAYAM Cell

*Cordially Invites Faculty and Students for the Webinar*

**Enriching Academics with MOOCs: Special Emphasis on SWAYAM**

**DR.M.R.YEZHILI** *M.A.,M.Phil.,PhD.*

Principal,LRG GOVT. Arts College for Women,Tirupur

Invited Speaker

**Dr.M.Mandhirasalam,Librarian,**

**SWAYAM Coordinator,CIT,Coimbatore**


*Sunday ,01.11.2020 at 11AM*

*Coordinators:-Dr I.Priya.MrsK.Anuradha.DrA.Anbarasi*

## பயிற்சி வகுப்புகள்



Meeting details
LITTY KORIA
Turn on captions

Dr M Mandhirasalam is presenting
SWAYAM PRABHA
12:09 PM
Welcome to

# எல். ஆர். ஜி.

## அரசு மகளிர் கலைக் கல்லூரி, திருப்பூர் - 4.

**தேசியத் தர மதிப்பீடு B**

## ஆண்டு மலர்

## 2019 - 2020

**மலர் - 50**

தொலைபேசி எண்
0421 2210300

தொலை அச்சு
0421 2214933

மின்னஞ்சல்
lrggac@gmail.com

# மலர்க்குழு

## தலைவர்

திருமதி. **சு. இந்திராணி** M.Sc., M.Phil.,
முதல்வர் (பொறுப்பு)
இணைப் பேராசிரியர் மற்றும் கணிதவியல் துறைத் தலைவர்

## பதிப்புக்குழு

முனைவர். **மு. அவையாம்பாள்**
உதவிப் பேராசிரியர். தமிழ்த்துறை

முனைவர். **கோ. புவனேஸ்வரி**
உதவிப் பேராசிரியர். தமிழ்த்துறை

## பேராசிரியர்கள்

முனைவர். **மா. தமிழ்மலர்**
இணைப் பேராசிரியர் மற்றும் தமிழ்த்துறைத் தலைவர்
முனைவர். **ஜோ. கிரிஜா ஆரோக்கியமேரி**
முனைவர். **ஜா. அமைதி அரசு**
முனைவர். **ஏ.ஆர். ஈஸ்வரி**
முனைவர். **ச. அமுல்செல்வி**

## வாழ்த்துக்களுடன்

*ஏற்ற மிகு*

எல்.ஆர்.ஜி. கல்லூரியின்
2019 – 2020 ஆம் ஆண்டு மலர் படைக்க
அன்பிற்குரிய மாணவச் செல்வங்கள்
அனைவரிடமும்

அவர்தம்
எண்ணக் கருத்துக்களை
எழுத்துருவில் வடிவமைக்க
அழைப்பு விடுத்தோம்

திறமைமிக்க
மாணவர்கள் தம் எண்ணக் குவியல்களை
வண்ண வண்ண முத்துக்களில்
வடிவமைத்துத் தந்தனர்

மாணவர்களின் சிந்தனை உளி
செதுக்கிய
பேசும் கவிதைகளையும்
பேசா ஓவியங்களையும்
பொன் மாலை போல்
தொடுத்துக் கொடுத்துள்ளோம்.

கல்லூரி மாணவியரின்
கருத்துக் கோவைகளை
ஆண்டு மலரில்
அழகாய் மலர்ந்திடச் செய்த
மாணவப் படைப்பாளர்கள்
அனைவரையும்
ஒருங்கிணைத்த
முதல்வர்
மற்றும் பேராசிரியர்கள் அனைவருக்கும்
நன்றி கூறுகிறோம்.

**உங்கள் கரங்களில் ஆண்டுமலர்**
**மணம்வீசத் தொடுத்துத்தந்த**
**பதிப்புக்குழு**

# பொருளடக்கம்


1. கல்லூரி ஆண்டறிக்கை ...
2. படைப்புகள் ...
3. ஓவியங்கள் ...
4. விழாப் புகைப்படங்கள் ...



**திருமதி. சு. இந்திராணி** M.Sc., M.Phil.,

**முதல்வர் (பொறுப்பு)**

இணைப் பேராசிரியர் மற்றும் கணிதவியல் துறைத் தலைவர்

எண்ணத்தில் உயர்வு, சிந்தனையில் தெளிவு
செயலில் உறுதி அவர் தாம் எம் முதல்வர்

# எல்.ஆர்.ஜி.

## அரசு மகளிர் கலைக் கல்லூரி, திருப்பூர்.

## கல்லூரி ஆண்டறிக்கை 2019 – 2020

*ஆன்ம அதிர்வலையில் ஆழ்ந்திருக்கும்*
*மேற்கு மலை அடுக்கம்*
*குறுமணல் கொழித்தோடும்*
*நொய்யல் நதி தீரம்*
*பின்னலாடையில் மின்னும்*
*கொங்கின் இதயம் நம் திருப்பூர்*
*கார் அஞ்சு கரதலத்தால் மிளிரும் – நம்*
*எல்.ஆர்.ஜி. அரசு கல்லூரி*
*சாமானியரை சாதிக்க வைக்கும்*
*எழில்மிகு கலைக் கல்லூரி*

திருப்பூர், ஈரோடு, கோவை, நீலகிரி மாவட்டங்களிலேயே மகளிருக்காக நடத்தப்படும் ஒரே அரசு மகளிர் கலைக் கல்லூரி நமது எல்.ஆர்.ஜி. அரசினர் மகளிர் கலைக் கல்லூரி. இந்தக் கல்லூரி தமிழ் நாடு அரசு ஆணையுடன் 1971 ஆம் ஆண்டு ஜூலைத் திங்கள் 15-ம் நாள் 221 மாணவிகளுடன் செயல்படத் தொடங்கியது. திருப்பூர் மாவட்டத்தில் மகளிர்க்கென்று தனிக்கல்லூரி அமைவதற்கு அடித்தளம் அமைத்துக் கொடுத்து நிலத்தை நன்கொடையாக வழங்கிய மதிப்பிற்குரிய எல்.ஆர். கோவிந்தராஜுலு நாயுடு ஐயா மற்றும் அவர்தம் குடும்பத்தினரை நன்றியுடன் நினைவு கூர்கிறோம். நாற்பத்தி எட்டு ஆண்டுகள் கல்விப்பணியினை நிறைவு செய்த நம் கல்லூரியின் 2019 - 2020 ஆம் கல்வி ஆண்டிற்கான ஆண்டறிக்கை.

நம் கல்லூரியில் இளங்கலையில் தமிழ், ஆங்கிலம், வரலாறு, பொருளியல் ஆகிய பாடப்பிரிவுகளும், இளம் அறிவியலில் கணிதம், இயற்பியல், இயற்பியல் கணினிப் பயன்பாட்டியல், வேதியியல், விலங்கியல், நுண்ணுயிரியல், தாவரவியல், மின்னணுவியல், கணினி அறிவியல், உணவு அறிவியல் மற்றும் ஊட்டச்சத்தியல் ஆகிய பாடப்பிரிவுகளும், இளம் வணிகவியலில், வணிகவியல் மற்றும் வணிகவியல் கணினிப்பயன்பாட்டியல், வணிக நிர்வாகவியல் ஆகிய பாடப்பிரிவுகளும் பயிற்றுவிக்கப்படுகின்றன.

மேலும் முதுகலையில் தமிழ், ஆங்கிலம், வரலாறு, பொருளியல் ஆகிய பாடப்பிரிவுகளும், முதுநிலை அறிவியலில் கணிதம், வேதியியல், விலங்கியல், கணினி அறிவியல் ஆகிய பாடப்பிரிவுகளும், முதுகலை வணிகவியலும், ஆராய்ச்சி மேற்படிப்பில் ஆங்கிலம், வணிகவியல், பொருளியல், கணிதம், இயற்பியல், வேதியியல், விலங்கியல் மற்றும் கணினி அறிவியல் பாடப்பிரிவுகளும் பயிற்றுவிக்கப்படுகின்றன. இக்கல்வியாண்டில் மொத்தம் 3788 மாணவியர்கள் பயின்று வருகின்றனர்.

நம் கல்லூரியைத் திறம்பட வழி நடத்தி முதல்வராக இருந்த முனைவர் பி. பொன்முத்துராமலிங்கம் அவர்கள், கோவை மண்டலக் கல்லூரிக் கல்வி இணை இயக்குநராக 26-02-2020 அன்று பணி உயர்வு பெற்றார்.

**1. பணியிடங்கள் விபரம்**

| | | |
|---|---|---|
| 1. | முதல்வர் உட்பட அரசினரால் அங்கீகரிக்கப்பட்ட பேராசிரியர்களின் மொத்தப் பணியிடங்கள் | - 144 |
| 2. | நிரப்பப்பட்ட பேராசிரியர்களின் பணியிடங்கள் (முதல்வர் உட்பட) | - 87 |
| 3. | ஆசிரியர் அல்லாத பணியாளர்களின் மொத்தப் பணியிடங்கள் | - 30 |
| 4. | நிரப்பப்பட்ட ஆசிரியர் அல்லாத பணியாளர்களின் மொத்தப் பணியிடங்கள் | - 10 |
| 5. | அரசு நியமித்த கௌரவ விரிவுரையாளர்கள் | - 41 |
| 6. | பெற்றோர் ஆசிரியர் கழகத்தால் நியமிக்கப்பட்டவர்கள் | - 09 |
| 7. | முன்னாள் மாணவர் சங்க நிதியிலிருந்து நியமிக்கப்பட்டவர் | - 11 |
| 8. | கணினி அறிவுப் பயிற்சித் திட்ட நிதியிலிருந்து நியமிக்கப்பட்டவர்கள் | - 05 |
| 9. | விளையாட்டு குறியீட்டாளர் | - 01 |

**2. பணியிட மாற்றம் பெற்றுச் சென்ற பேராசிரியர்கள்**

1. ஆங்கிலத்துறை - முனைவர் பொ. மாலதி
2. வேதியியல் துறை - முனைவர். பெ.க. கஸ்தூரி
   - முனைவர் ரா. கார்த்திகைச்செல்வி

**3. பணியிட மாற்றம் பெற்று வந்த பேராசிரியர்கள்** - இல்லை

**4. முனைவர் பட்டம் பெற்ற பேராசிரியர்கள்**

1. தமிழ்த் துறை - முனைவர் மா. தமிழ்மலர்
2. ஆங்கிலத் துறை - முனைவர் கே. கீதா
3. வணிகவியல் துறை - முனைவர் ப. தீபா
   - முனைவர் ரா. சுகன்யா
4. வணிகவியல் கணினிப்பயன்பாடு - முனைவர் எம். கலையரசி
   - முனைவர் வெ. நிர்மலா

**5. பணி நிறைவு பெற்றவர்**

1. ஆங்கிலத்துறை - முனைவர். மு. லீலாவதி, உதவிப்பேராசிரியர் மற்றும் துறைத்தலைவர்
2. பொருளியல்துறை - முனைவர் ப. சந்திரசேகரன், உதவிப் பேராசிரியர்
3. கணிதத்துறை - திருமதி. ஆ.கு. மஹேஸ்வரி, இணைப் பேராசிரியர்

**6. புத்தறிவு (Refresher) பயிற்சியில் பங்கு பெற்ற புத்தாக்க / குறுகியகால / பேராசிரியர்கள்**

1. முனைவர். கோ. புவனேஸ்வரி - தமிழ்த்துறை
2. முனைவர் ச. அமுல்செல்வி - தமிழ்த்துறை
3. முனைவர் க. கீதா - ஆங்கிலத்துறை
4. முனைவர் வே. மலர் - ஆங்கிலத்துறை
5. முனைவர் ப. சந்திரசேகரன் - பொருளியல் துறை
6. முனைவர் ந. மணிமேகலை - பொருளியல் துறை

7. திருமதி. ப. கௌரி - பொருளியல் துறை
8. முனைவர் மு. ஆனந்தி - கணிதத்துறை
9. திருமதி. கி. கீதா பத்மினி - கணிதத்துறை
10. முனைவர் அ. கிங்சன் சாலமன் ஜீவரா - இயற்பியல் துறை
11. முனைவர் நா. மீனாட்சி சுந்தரம் - இயற்பியல் க.ப. துறை
12. முனைவர் சு. அன்னபூரணி - வேதியியல் துறை
13. முனைவர் ந. சுகந்தி - வேதியியல் துறை
14. முனைவர் க. பார்வதி - வேதியியல் துறை
15. முனைவர் கோ. சுபா - உணவு அறிவியல் & ஊட்டச்சத்தியல் துறை
16. முனைவர் ந. விமலா - கணினி அறிவியல் துறை
17. முனைவர் தி. ஜெயலட்சுமி - கணினி அறிவியல் துறை
18 முனைவர் இரா. வித்யாபானு - கணினி அறிவியல் துறை
19. முனைவர் ம. பாலாஜி பிரசாத் - மின்னணுவியல் துறை
20. திருமதி. சு. மாலதி - பொருளியல் துறை
21. திருமதி. ம.ரூபினி - தாவரவியல் துறை
22. முனைவர். மு. லீலாவதி - ஆங்கிலத்துறை
23. முனைவர். க. பார்வதி - வேதியியல் துறை
24. முனைவர் சு. வினோதினி - தாவரவியல் துறை
25. முனைவர் அ.பா. ஸ்ரீதேவி - மின்னணுவியல் துறை
26. முனைவர் ம. பாலாஜி பிரசாத் - மின்னணுவியல் துறை
27. முனைவர் ம. கிருஷ்ணவேணி - வணிகவியல் துறை
28. முனைவர் அர. ஹம்சலட்சுமி - வணிகவியல் துறை
29. முனைவர் ஆ.கு. இலக்குமிவேண்மாள் - நுண்ணுயிரியல் துறை
30. முனைவர் அ.பா. ஸ்ரீதேவி - மின்னணுவியல் துறை
31. முனைவர் ம. பாலாஜி பிரசாத் - மின்னணுவியல் துறை
32. முனைவர். ரா. செல்வி - பொருளியல் துறை
33. திருமதி ப. கௌரி - பொருளியல் துறை
34. முனைவர் ரா. உஷாதேவி - வணிகவியல் க.ப. துறை
35. முனைவர் ந. சுகந்தி - வேதியியல் துறை

மொத்தம் 35 பேராசிரியர்கள் புத்தறிவு / புத்தாக்க / குறுகிய காலப் பயிற்சிகளில் பங்கேற்றனர்

## 7. தேசிய மற்றும் சர்வதேச கலை / வணிக / அறிவியல் ஆராய்ச்சி இதழ்களில் ஆய்வுக் கட்டுரைகள் வெளியிட்ட பேராசிரியர்கள்

| எண் | துறை | பேராசிரியர்கள், ஆய்வுக்கட்டுரை தலைப்பு ஆய்விதழ் தலைப்புகள் |
|---|---|---|
| 1. | ஆங்கிலத் துறை | முனைவர் மு. லீலாவதி "Dynamic of race and gender politics in Toni Morrison Novels" என்ற தலைப்பில் இரண்டு ஆய்வுக்கட்டுரைகளும் மற்றும் முனைவர் ஆலிவ் தம்பி மூன்று ஆய்வுக்கட்டுரைகளும் "Pacific International" இதழ்களில் வெளியிட்டுள்ளனர். |
| 2. | வரலாற்றுத் துறை | பேராசிரியர் சே. ப. நசீம் ஜான் மற்றும் வரலாற்றுத் துறையின் அனைத்துப் பேராசிரியர்களும் சேர்ந்து "The Glimpses of Archaeology in the History of Tamil Nadu என்ற தலைப்பில் கட்டுரைகளைத் தொகுப்பு நூலாக வெளியிட்டுள்ளனர். |
| 3 | கணிதத்துறை | சு. ஜெயலட்சுமி மற்றும் முனைவர் அ. மனோன்மணி ஒரு சர்வதேச ஆய்வுக்கட்டுரையை, On Regular Beta closed sets in topological spaces என்ற தலைப்பில் International Journal of Science and Reserch- ல் வெளியிட்டுள்ளார்கள். |
| 4 | இயற்பியல் துறை | முனைவர் அ. கிங்சன் சாலமன் ஜீவராஜ் Dieectric Constant Measurement of Hybrid CuO Nanofluid at Various Temperatures என்ற தலைப்பில் Journal of Emerging Technologies and Innovative Research (2019) ஆய்விதழில் ஒரு ஆய்வுக் கட்டுரையும், Sensor Letters சர்வதேச ஆய்விதழில் இரண்டு ஆய்வுக் கட்டுரைகளையும் வெளியிட்டுள்ளார். |
| 5 | இயற்பியல் கணினிப் பயன்பாட்டுத் துறை | முனைவர் நா.மீனாட்சி சுந்தரம் Silicon nanowire field effect transistor biosensor என்னும் ஆய்வை Physics and Chemistry of Liquids (2019) (Elsevier) ஆய்விதழில் வெளியிட்டுள்ளார். மேலும் Development of Targeted Drug Delivery using Nano Scale Hybrid Biomaterial and Biomedical Applications என்ற ஒரு காப்புரிமை பெற்றுள்ளார். திருமதி. மு.கல்யாணி "Electro -deposition and characterization of magnetic metal doped Cobalt Oxide for super - capacitor application" என்ற ஆய்வுகளை நான்கு சர்வதேச IJRASET, IJASR, JASEM, JETIR ஆய்விதழில வெளியிட்டுள்ளார். |
| 6 | விலங்கியல் துறை | முனைவர். கே. மூர்த்திகுமார், நிக்கல் குளோரைடு, விஷத்தன்மை பற்றிய ஆய்வுகளை இரண்டு சர்வதேச ஆய்வுக்கட்டுரைகளாக 1. International Journal of Entomology & 2. Pollution Research Journal - ல் வெளியிட்டுள்ளார். |
| 7 | தாவரவியல் துறை | முனைவர் த. பாலசரவணன் production of virgin coconut from selected cocos nucifera varieties என்ற தலைப்பில் International Journal of Scientific Research in Biological Sciences (2019) எனும் ஆராய்ச்சி இதழ்களில் ஆய்வு கட்டுரை வெளியிட்டுள்ளார். |
| 8 | மின்னணுவியல் துறை | முனைவர் கி. ராஜேந்திரன் மாங்கனீசு (II) சல்பைடு நேனோ படிகங்களின் மின்காந்த பண்புகளில் வெப்பநிலையின் விளைவு என்ற தலைப்பில் Solid State Science (2019) எனும் ஆராய்ச்சி இதழ்களில் தம் ஆய்வு கட்டுரை வெளியிட்டுள்ளார். |

| எண் | துறை | பேராசிரியர்கள், ஆய்வுக்கட்டுரை தலைப்பு ஆய்விதழ் தலைப்புகள் |
|---|---|---|
| 9. | கணினி அறிவியல் துறை | முனைவர் க. சரோஜினி, A study on data mining in health care என்ற ஆய்வுக் கட்டுரையை International Journal of Sciengific & Technology Research, Vo19, Issue 02, ISSN 2277 - 8616 Title "Survey of Semantic Information Retrival Techniquies in Big data ஆய்விதழிலும், முனைவர் ந. விமலா A survey on intrusion detection system in wireless sensor network என்ற ஆய்வை JETIR ஆய்விதழிலும், முனைவர் இரா. வித்யாபானு An analysis on various attacks in MANET & machine learning classification algorithms என்ற தலைப்பில் IJRCS ஆய்விதழிலும், முனைவர் அ. அன்பரசி -1. Crop Yield prediction in machine learning models - A survey, 2. A survey on solid waste sorting & classification techniques., IJCRT (2020) முனைவர் தி. ஜெயலட்சுமி Survey of detection on patterned fabrics என்ற தலைப்பில் JETIR ஆய்விதழிலும், V. Punithavathi, IJCRT (2020) A Network on classification of Mammogram images for breast cancer detection using image processing with data mining techniques என்ற தலைப்பிலும் தமது ஆய்வு முடிவுகளை வெளியிட்டுள்ளார்கள். |
| 10 | உணவு அறிவியில் | முனைவர். கோ. சுபா, Impact of obeisty on symptoms of premenstrual syndrome என்ற தலைப்பில் Prevention management of non-communicable diseases இதழில் ஒரு ஆய்வுக்கட்டுரை வெளியிட்டுள்ளார். |
| 11 | வணிகவியல் துறை | முனைவர் அர.ஹம்சலட்சுமி IJRAR, JETIR ஆய்விதழ்களில் Post Office savings schemes & Survey, என்ற தலைப்பில் இரு ஆய்வுகளும், முனைவர் க. பிருந்தா Pramana, S & TDJ, மற்றும் IJRAR, ஆய்விதழ் -களில் Mediclaim policies, saving Plans, turmeric cultivations என்ற தலைப்பில் மூன்று ஆய்வு கட்டுரைகளும், முனைவர். வெ. சு. காஞ்சனா IJRASET ஆய்விதழ்களில் impact on smart phone users என்ற ஒரு ஆய்வும், முனைவர். எஸ். தனலட்சுமி IJRASET மற்றும் PARIPEX ஆய்விதழ்-களில் kitting employee's job performance என்ற 2 ஆய்வு கட்டுரைகளும், பி. தீபா & என். உமாமகேஸ்வரி IJRASET ஆய்விதழில் mutual fund மற்றும் growth of nationalized banks என்ற ஆய்வுகளை வெளியிட்டுள்ளார்கள். |
| 12 | வணிக நிர்வாகவியல் | முனைவர் ப. நிர்மலா தேவி Study on Packaging of Health of Health Drinks Towards Consumer Preference, A Study on Preference of Teaching Profession Among Faculty Members in Arts & Science College போன்ற ஆய்வுத் தலைப்புகளில் ஆறு ஆராய்ச்சி இதழ்களில் வெளியிட்டுள்ளார். |
| | | **இந்தக் கல்வியாண்டில் தேசிய மற்றும் சர்வதேச கலை / வணிக / அறிவியல் / ஆராய்ச்சி இதழ்களில் 23 பேராசிரியர்கள் 37 ஆய்வு கட்டுரைகள் வெளியிட்டனர்.** |

**8. தேசிய மற்றும் சர்வதேச கருத்தரங்கங்கள் மற்றும் பயிற்சி பட்டறையில் பங்கு பெற்ற பேராசிரியர்கள்**

| எண் | துறை | பேராசிரியர்கள், தேசிய மற்றும் சர்வதேச கருத்தரங்கங்கள் விவரம் |
|---|---|---|
| 1. | தமிழ்த்துறை | முனைவர். கா. அமைதி அரசு கோவை அவிநாசிலிங்கம் பல்கலையில் நடைபெற்ற பெண்களும் அரங்கமும் என்ற தலைப்பில் மூன்று நாள் பயிற்சிப் பட்டறையில் பயிற்றுநராக பங்கு பெற்றார். மேலும், தஞ்சை தமிழ் பல்கலைக்கழக நாடகத் துறையில் முனைவர் பட்ட பொது வாய்மொழி தேர்வுக்குப் புறநிலைத் தேர்வாளராக கலந்து கொண்டார்.<br>தஞ்சைத் தமிழ்ப்பல்கலைகழக கல்வியியல் மேலாண்மைத் துறையும் நாடகத்துறையும் இணைந்து நடத்திய பன்னாட்டுக் கருத்தரங்கில் கட்டுரை வழங்கினார். |
| 2. | வரலாற்றுத் துறை | பேராசிரியர் சே. ப. நசிம் ஜான் மற்றும் விரிவுரையாளர் எம். கிருஷ்ணப்பிரியா ஆகியோர் மூன்று தேசிய மற்றும் ஒரு சர்வதேச கருத்தரங்குகளிலும், விரிவுரையாளர் பீ. வாசுகி நான்கு தேசிய கருத்தரங்குகளிலும், விரிவுரையாளர்கள் எம். ஜெயசித்ரா, ஆர். காளிஸ்வரி, பி.புனிதவதி ஆகியோர் மூன்று தேசிய கருத்தரங்குகளிலும், விரிவுரையாளர்கள் கே. கற்பகம் எஸ்.மஹேஸ்வரி மற்றும் எம். கருப்பையா ஆகியோர் இரண்டு தேசிய கருத்தரங்குகளிலும், விரிவுரையாளர் கே. லதா ஒரு தேசிய கருத்தரங்கிலும் கலந்து கொண்டு தாடிக்கொம்பு பெருமாள் கோவிலின் கட்டிடக் கலை வரலாறு, பண்டைய தமிழகத்தின் நீர் நிலை மேலாண்மை, பண்டைய தமிழக கட்டிடக் கலை வரலாறு ஆகிய தலைப்புகளில் தமது ஆய்வு கட்டுரைகளை வெளியிட்டுள்ளார்கள். |
| 3. | பொருளியல் துறை | முனைவர். ந. மணிமேகலை (07-02-2020) ஈரோடு நந்தா கலை அறிவியல் கல்லூரியில் நடைபெற்ற Inclusive Banking என்ற தேசிய கருத்தரங்கில் பங்கு பெற்றார். |
| 4. | கணிதத்துறை | முனைவர் மு. ஆனந்தி கணித உருவகப்படுத்துதலில் நவீன மற்றும் பண்டைய நுட்பங்கள் (Modern and ancient techniques in mathematical modeling) (08-01-2020) என்ற தலைப்பிலான தேசிய கருத்தரங்கின் ஓர் அமர்வுக்குத் தலைமை தாங்கினார் |
| 5. | இயற்பியல் துறை | திருமதி. ஜெ. ஜெயசித்ரா, சென்னை மற்றும் தர்மபுரி, அரசு கலைக்கல்லூரிகளில் நடைபெற்ற Advanced Materials' சர்வதேச கருத்தரங்குகளில் கலந்து கொண்டார். முனைவர். அ. கிங்சன் சாலமன் ஜீவராஜ், வாரங்கல் - தேசிய தொழிற்நுட்ப கழகத்தில் நடைபெற்ற "Effective teaching and learning practices" என்ற பயிற்சிப் பட்டறையில் பங்கு பெற்றார். |

| எண் | துறை | பேராசிரியர்கள், தேசிய மற்றும் சர்வதேச கருத்தரங்கங்கள் விவரம் |
|---|---|---|
| 6. | இயற்பியல் துறை கணினிப் பயன்பாட்டுத் துறை | முனைவர் ஏ. இலக்கின குமரன், திருப்பூர் புனித ஜோசப் கல்லூரி நடத்திய இயற்பியல் கருத்தரங்கில் சொற்பொழிவு நிகழ்த்தினார். முனைவர். நா. மீனாட்சி சுந்தரம், சேலம் - 7, அரசு கலைக்கல்லூரி நடத்திய யுஜிசி தேசிய கருத்தரங்கில் நேனோ பொருட்கள் மற்றும நேனோ கட்டமைப்புகள் குறித்து (06-1-2020) உரையாற்றினார். |
| 7. | வேதியியல் துறை | முனைவர்கள் ஜே. ஸ்டார்லெட் விமலா, எஸ். அன்னபூரணி மற்றும் என். சுகந்தி ஆகியோர் கோயம்புத்தூர் பி.எஸ்.ஜி. கலை மற்றும் அறிவியல் கல்லூரியில் (02-08-2019) நடைபெற்ற ஸ்மார்ட் மற்றும் செயல்பாட்டு பொருட்கள் குறித்த தேசிய கருத்தரங்கில் ஆய்வுக் கட்டுரையை வெளியிட்டுள்ளார்கள். |
| 8. | விலங்கியல் துறை | முனைவர்கள் லிட்டி கொரியா, Zooplankton diversity and monthly variation of chinnadipalayam" என்ற தலைப்பிலும் மற்றும் முனைவர். கே. மூர்த்திகுமார் Effect of graded level replacement of soy bean meal with soya waste on growth and body composition of channel striatus fingering" என்ற தலைப்பிலும் தேசிய கருத்தரங்குகளில் தமது ஆய்வு முடிவுகளை வெளியிட்டுள்ளார்கள். |
| 9. | கணினி அறிவியல் துறை | முனைவர் க. சரோஜினி A Study on basics of data mining என்ற தலைப்பில் NCAC-2019 தேசிய கருத்தரங்கிலும், முனைவர் அ. அன்பரசி (ICICSIT' 3-4 October 2019 சர்வதேச கருத்தரங்கில் Crop yield prediction in machine learning models மற்றும் Solid waste sorting & Classification techniques என்ற தலைப்பில் இரு ஆய்வு கட்டுரைகளையும், திருமதி. வி. புனிதவதி (ICICSIT'19), An overview on classification of management images with data minig techniques" என்ற தலைப்பில் சர்வதேச கருத்தரங்கிலும், Machine learningalgorithms in Detection of Breast Lesion Mammogram Images (NCMLICC' 20) என்ற தலைப்பில் தேசிய கருத்தரங்கிலும், தமது ஆய்வு முடிவுகளை வெளியிட்டுள்ளார்கள். |
| 10 | உணவு அறிவியல் | முனைவர் கோ. சுபா, மற்றும் முனைவர் ரெ. பரிமளா ஆகியோர் உணவு அறிவியல் மற்றும் ஊட்டச்சத்தியல் துறை சார்ந்த தேசிய கருத்தரங்கில் பங்கு பெற்றனர். |
| 11 | வணிகவியல் துறை | முனைவர். அர. ஹம்சலட்சுமி, கோவை நிர்மலா கல்லூரியில் நடைபெற்ற (07-01-2020) சர்வதேச கருத்தரங்கில் 1. Post Office finance, 2. Payment Banks, 3. FMCG Industries என்ற மூன்று தலைப்புகளில் தமது ஆய்வு முடிவுகளை வெளியிட்டுள்ளார். முனைவர். ர. அம்சவேணி, கோவையில் (29-30 August 2019) Converting Academic Research into worth Commercialization" என்ற தலைப்பில் நடைபெற்ற தேசிய கருத்தரங்கில் பங்கு பெற்றார். |

| எண் | துறை | பேராசிரியர்கள், தேசிய மற்றும் சர்வதேச கருத்தரங்கங்கள் விவரம் |
|---|---|---|
| 12 | நூலகத்துறை | திருமதி. கி. அனுராதா அவர்கள் கோவை, பாரதியார் பல்கலைக்கழகத்தில் நடைபெற்ற (16 மற்றும் 17 ஆகஸ்ட் 2019) Reshaping librarianship என்ற சர்வதேச கருத்தரங்கில் பங்கு கொண்டார். கோயம்புத்தூர் பிஎஸ்ஜிஆர் கிருஷ்ணம்மாள் மகளிர் கல்லூரியில் நடைபெற்ற (18 செப்டம்பர் 2019) தேசிய கருத்தரங்கு மற்றும் திண்டுக்கல் எம்.வி. முத்தையா அரசு மகளிர் கல்லூரியில் நடைபெற்ற கருத்தரங்கிலும் பங்கு கொண்டார்.<br>திருமதி. கி. அனுராதா Digital Information Literacy : An indispensabel tool for digital Era", என்ற ஆய்வுக் கட்டுரையை ஸ்ரீ கிருஷ்ணா பொறியியல் கல்லூரியில் நடைபெற்ற (15,16 நவம்பர் 2019) Transforming Academic Libraries : 2030 என்ற சர்வதேச கருத்தரங்கில் Bibliometric என்ற ஆய்வு கட்டுரையை சமர்ப்பித்தார். |

**9. பாரதியார் பல்கலைகழகத்தின் சென்ற 2018-19 கல்வியாண்டில் பல்கலைக்கழகக் தரவரிசைப் பட்டியலில் இடம் பெற்ற மாணவியர்கள்**

பாரதியார் பல்கலைக்கழகத்தின் சென்ற 2018-19 கல்வியாண்டில் பல்கலைக் கழகத் தரவரிசைப் பட்டியலில் LRG கல்லூரி மாணவியர்கள் மொத்தம் 39 பேர் இடம் பெற்றனர். இவர்களில் இளநிலையில் 04 மாணவியரும், முதுநிலையில் 01 மாணவியும் பல்கலைக்கழகத் தரவரிசைப் பட்டியலில் முதலாம் இடம் பெற்றனர். இளநிலையில்

1. இயற்பியல் க.ப. துறையைச் சார்ந்த மாணவி செல்வி. டி. லட்சுமி
2. தாவரவியல் துறையைச் சார்ந்த மாணவி செல்வி கே. சத்தியவாணி
3. மின்னணுவியல் துறையைச் சார்ந்த மாணவி செல்வி ர.கு. திவ்யா
4. உணவு அறிவியல் துறையைச் சார்ந்த மாணவி செல்வி கே. லோகேஸ்வரி ஆகியோரும், முதுநிலையில் பொருளியல் துறையைச் சார்ந்த மாணவி செல்வி கே. சுபாஷினியும் பல்கலைக்கழகத் தரவரிசைப் பட்டியலில் முதல் இடம் பெற்றனர்.

| எண் | துறை | இளநிலை/ முதுநிலை | மாணவியர் பெயர் - தர வரிசை |
|---|---|---|---|
| 1 | தமிழ் | முதுநிலை | த. மஞ்சு - ஏழாம் இடம்<br>ரா. குணசுந்தரி - ஏழாம் இடம்<br>சு. மோகனப் பிரியா - எட்டாம் இடம் |
| 2. | ஆங்கிலம் | முதுநிலை | எ. தெரசா - ஏழாம் இடம் |
| 3 | வரலாறு | இளநிலை | ஆர். சிவகாமி - இரண்டாம் இடம்<br>ஜி. கலையரசி - மூன்றாம் இடம்<br>எஸ். கௌரி - ஐந்தாம் இடம்<br>ஜெ. சிவரஞ்சனி - ஆறாம் இடம்<br>வி. யோகேஸ்வரி - எட்டாம் இடம்<br>எஸ். கௌதமி - பத்தாம் இடம் |
| | | முதுநிலை | அ. சரண்யா - மூன்றாம் இடம்<br>என். பானுமதி - ஆறாம் இடம் |

| எண் | துறை | இளநிலை/ முதுநிலை | மாணவியர் பெயர் - தர வரிசை |
|---|---|---|---|
| 4 | பொருளியல் | இளநிலை | ஈ. ஜமுனா - மூன்றாம் இடம்<br>எம். புவனேஸ்வரி - ஒன்பதாம் இடம் |
| | | முதுநிலை | கே. சுபாஷினி - முதலாம் இடம்<br>எ. மரியா விண்ணரசி - நான்காம் இடம் |
| 5 | இயற்பியல் க.ப. | இளநிலை | டி. லட்சுமி - முதலாம் இடம்<br>கெ. சிவரஞ்சனி - இரண்டாம் இடம்<br>கெ. ரேணுகா - மூன்றாம் இடம்<br>என். காவ்யா மோள் - நான்காம் இடம்<br>எஸ். கிருத்திகா - ஐந்தாம் இடம் |
| 6 | வேதியியல் | இளநிலை | எஸ். பிருந்தா - மூன்றாம் இடம் |
| | | முதுநிலை | ரா. பெட்ரியா - இரண்டாம் இடம் |
| 7 | விலங்கியல் | இளநிலை | எம். பிரியங்கா - இரண்டாம் இடம்<br>பி. சௌந்தர்யா - மூன்றாம் இடம்<br>ஜெ. மஞ்சுளா - ஒன்பதாம் இடம் |
| | | முதுநிலை | செ. ஜெகதீஸ்வரி - இரண்டாம் இடம்<br>ரா. ஹேமா - நான்காம் இடம்<br>நா. சுகன்யா - ஆறாம் இடம் |
| 8 | தாவரவியல் | இளநிலை | கே. சத்தியவாணி - முதலாம் இடம்<br>ரேஷ்மா கே. மூர்த்தி - மூன்றாம் இடம்<br>ஆர். கவிபாரதி - ஆறாம் இடம்<br>ஜெ. கீர்த்தனா - எட்டாம் இடம் |
| 9 | மின்னணுவியல் | இளநிலை | ர.கு. திவ்யா - முதலாம் இடம் |
| 10 | கணிணி அறிவியல் | இளநிலை | எஸ். பிரியதர்ஷினி - ஐந்தாம் இடம் |
| 11 | உணவு அறிவியல் | இளநிலை | கே. லோகேஸ்வரி - முதலாம் இடம்<br>எல். ஸ்வர்ணலதா - மூன்றாம் இடம் |

**10. இக் கல்லூரியில் ஆய்வில் நிறைஞர் / முனைவர் (M.phil / Ph.D) பயின்று பட்டம் பெற்ற 22 மாணவர்கள் விபரம்**

| எண் | துறை | M. Phil மாணவியர்கள் | Ph.D. மாணவியர்கள் |
|---|---|---|---|
| 1 | தமிழ் | | முனைவர் அருண் குமார்<br>முனைவர் தங்கமணி<br>முனைவர் திலீப் குமார் |
| 2 | வரலாறு | | முனைவர் சத்யா |

| எண் | துறை | M. Phil மாணவியர்கள் | Ph.D. மாணவியர்கள் |
|---|---|---|---|
| 3 | பொருளியல் | 1. P. புவனேஸ்வரி<br>2. N. காயத்ரி<br>3. G. நிவேதிதா | |
| 4 | வணிகவியல் | 1. எஸ்.மீனாட்சி<br>2. எம். கனகலட்சுமி<br>3. பி. பவித்ரா<br>4. டி. கனிமொழி<br>5. விஷாலின் ரேஷ்மா | 1. முனைவர் ஆர். சுகன்யா<br>2. முனைவர் இ. ராஜேஸ்வரி<br>3. முனைவர் டி. மோகன சுந்தரி<br>4. முனைவர் எம். கலையரசி<br>5. முனைவர் பி. தீபா<br>6. முனைவர் எம். அகிலா<br>7. முனைவர் எம்.எஸ். கவிதா<br>8. முனைவர் வி. நிர்மலா<br>9. முனைவர் எ. ஆனந்தலட்சுமி<br>10. முனைவர் கெ. கார்த்திக் |

**11. பல்கலைக்கழகத் தேர்வில் தேர்ச்சி விகிதம்**

சென்ற ஆண்டு நடைபெற்ற பாரதியார் பல்கலைக்கழகத் தேர்வில் இளநிலையில் 96 சதவீதமும், முதுநிலையில் 98 சதவீதமும் மாணவியர் தேர்ச்சியடைந்து நம் கல்லூரிக்குப் பெருமை சேர்த்து உள்ளனர்.

**12. துறை வாரியாக மன்ற விழாக்கள்**

| எண் | துறை / தேதி | சிறப்பு விருந்தினர்கள் / பேராசிரியர்கள் | தலைப்பு |
|---|---|---|---|
| 1 | தமிழ்த் துறை<br>28-1-2020 | திரு. வி.மு. உமாபதி<br>முன்னாள் தமிழ்த்துறைத் தலைவர்,<br>கொங்குநாடு கலை அறிவியல் கல்லூரி, கோவை | சிந்திப்போம்<br>மடமை சிந்திப் போ(ம்) |
| 2 | ஆங்கிலத்துறை<br>20-02-2020 | முனைவர் சி. முரளிதரகண்ணன்<br>உதவி பேராசிரியர், ஆங்கிலத்துறை<br>அரசு கலைக் கல்லூரி, கோவை | Literature today<br>இன்றைய இலக்கியம் |
| 3 | வரலாற்றுத்துறை<br>23-1-2020 &<br>24-01-2020 | திரு. ஆ. ராஜேந்திரன்<br>நாணய சேகரிப்பு ஆர்வலர், திருப்பூர் | சோழர்கள், பல்லவர்கள் கால நாணயங்களின் கண்காட்சி |
| | | முனைவர் ஆர். ராஜவர்மன்<br>பாண்டியநாடு பண்பாட்டு மையம் | தமிழ்நாடு வரலாற்றில் தொல்லியல் ஆதாரங்கள் |
| | | திரு. ஜெ. .முல்லை அரசு<br>அரசு அருங்காட்சியம், சேலம் | தமிழ்நாடு அருங்காட்சிய -கங்களின் முக்கியத்துவம் |
| | | முனைவர் ஆர். பூங்குன்றன்<br>உதவி இயக்குநர் (ஓய்வு) தமிழ்நாடு மாநிலத் தொல்லியல் துறை | இனக்குழு மக்களின் குறியீடுகள் |
| | | முனைவர் எஸ். ரவி<br>கல்வெட்டு ஆராய்ச்சியாளர் | கொங்கு நாட்டில் தொல்லியல் ஆதாரங்கள் |
| | | திரு. எஸ். ரவிக்குமார்<br>வீரராஜேந்திரன் தொல்பொருள் ஆய்வு மையம் | தொல்லியல் ஓர் அறிமுகம் |

| எண் | துறை / தேதி | சிறப்பு விருந்தினர்கள் / பேராசிரியர்கள் | தலைப்பு |
|---|---|---|---|
| 4 | பொருளியல் துறை<br>13-02-2020 | முனைவர் T. சம்பத் குமார்<br>பொருளியல் துறை<br>அரசு கலைக் கல்லூரி, கோவை | சுதந்திரத்தில் இருந்து இந்தியப் பொருளாதாரம் |
| 5 | கணிதத் துறை<br>15-2-2020 | டாக்டர். சுகன்யா தேவி<br>மனநல மருத்துவர், திருப்பூர் மாவட்டத் தலைமை மருத்துவமனை, திருப்பூர் | கணிதம் மற்றும் மன ஆரோக்கியம் |
| 6 | இயற்பியல் துறை<br>15-02-2020 | முனைவர் ஜெ. தீபா<br>உதவி பேராசிரியர், இயற்பியல் துறை<br>அரசு கலைக் கல்லூரி, கோவை | இயற்பியல் விதிகள், வினாடி வினா, விளக்கக்காட்சி, பணி மாதிரி கண்காட்சி |
| 7 | இயற்பியல் க.ப. துறை<br>21-1-2020 | முனைவர் எம். அழகப்பன்<br>உதவி பேராசிரியர், மின்னணுவியல் தகவல்தொடர்பு பொறியியல் துறை<br>பி.எஸ்.ஜி. தொழில்நுட்பக் கல்லூரி<br>கோயம்புத்தூர் - 4. | மைக்ரோ எலக்ட்ரோ மெக்கானிக்கல் சிஸ்டம் வடிவமைப்பு மற்றும் மேம்பாடு<br>MEMS Design and Development |
| 8 | வேதியியல் துறை<br>19-2-2020 | துறைப் பேராசிரியர்கள்<br>மாணவிகளின் விளக்கக்காட்சி | Eminence in Chemistry - Paper presentation by Students |
| 9 | விலங்கியல் துறை<br>30-1-2020 | முனைவர் பி. கீதா<br>உதவிப் பேராசிரியர், அமிர்தா வித்ய விஷ்வ பீடம், கோவை. | உயிரியலில் புதிய தொழில் நுட்பங்கள் |
| 10 | நுண்ணுயிரியல் துறை<br>31-1-2020 | முனைவர். ச. சண்முகம்<br>நுண்ணுயிரியல் துறை<br>பிரசிடன்சி கல்லூரி, சென்னை | Bioremediation and its applications<br>உயிரியக்கவியல் மற்றும் அதன் பயன்பாடுகள் |
| 11 | தாவரவியல் துறை<br>10-10-2019 | முனைவர் எஸ். கற்பகவள்ளி<br>இணைப் பேராசிரியர் மற்றும் துறைத் தலைவர், கணினி அறிவியல் துறை<br>பிஎஸ்ஜிஆர் கிருஷ்ணம்மாள் மகளிர் கல்லூரி, கோயமுத்தூர் | உயிரறிவியல் மாணவர்களுக்குத் தகவல் தொழில் நுட்பத்தில் வாய்ப்பு<br>(Scope of information technology for life science students) |
| | | முனைவர் சி. அனுபிரியா<br>உதவிப் பேராசிரியர், கணினி அறிவியல் துறை, பிஎஸ்ஜிஆர் கிருஷ்ணம்மாள் மகளிர் கல்லூரி, கோயமுத்தூர் | (Biological database management System) உயிரறிவியல் மாணவர்களுக்குத் தகவல் தொழில் நுட்பத்தில் வாய்ப்பு<br>(Scope of information technology for life science students) |
| 12 | மின்னணுவியல் துறை<br>21-01-2020 | உயர்திரு எஸ். குணசேகரன் MLA அவர்கள், சட்ட மன்ற உறுப்பினர்<br>திருப்பூர் (தெ) சட்ட மன்றத் தொகுதி | மின்னணு அறிவியில் கண்காட்சி |
| 13 | கணினி அறிவியல் துறை<br>17-02-2020 | திரு. பெருமாள் பாலுசாமி<br>டெலிவரி மேலாளர் & ஸ்க்ரம் மாஸ்டர். டாடா கன்சல்டன்சி சர்வீஸ்<br>சென்னை | (Career growth & guidance in information Technology) தகவல் தொழில் நுட்பத்தில் வளர்ச்சி மற்றும் வழி காட்டுதல் |

| எண் | துறை / தேதி | சிறப்பு விருந்தினர்கள் / பேராசிரியர்கள் | தலைப்பு |
|---|---|---|---|
| 14 | உணவு அறிவியல் & ஊட்டச்சத்தியல் துறை (02-08-2019) | மருத்துவர் பிரபா ரகு | தாய்ப்பால் வார விழா உரை |
| | | திருமதி ஆர். பார்வதி VLCC ஹெல்த் கேர் லிமிடெட்ட திருப்பூர் | (eat right) 20-1-2020 |
| 15 | வணிகவியல் துறை 29-1-2020 | கவிஞர் மகுடேஸ்வரன் கோயமுத்தூர் | 'Recent trends in economic scenario' பொருளாதார சூழ்நிலையின் சமீபத்திய போக்குகள் |
| 16 | வணிகவியல் க.ப. துறை 31-01-2020 | முனைவர் எஸ். பாலமுருகன் உதவிப் பேராசிரியர் சர்வதேச வணிகவியல் துறை, அரசு கலைக் கல்லூரி, அவிநாசி | Impact of GST and Economic growth - ஜிஎஸ்டி மற்றும் பொருளாதார வளர்ச்சியின் தாக்கம் |
| 17 | வணிக நிர்வாகவியல் துறை 11-1-2020 | முனைவர் எஸ். சரவணகுமார் வணிக நிர்வாகவியல் துறைத் தலைவர் அரசு கலைக்கல்லூரி, சேலம் - 7. | Life Management |
| 18 | நூலகர் தின விழா 14-8-2019 | திரு. புருஷோத்தமன் நூலக ஆர்வலர், திருப்பூர் | வாசிப்புப் பழக்கத்தின் தேவை |

**13. கல்லூரிப் பேரவை**

2019- 2020 ஆம் கல்வி ஆண்டிற்கான கல்லூரிப் பேரவை இயற்பியல் கணினிப்பயன்பாட்டுத் துறை பொறுப்பில் செயல்பட்டு வருகிறது. பேரவைப் பொறுப்பாளர்களாக கீழ்க்காணும் மாணவிகள் தேர்ந்தெடுக்கப்பட்டனர்.

| பேரவைப் பொறுப்பு | மாணவியின் பெயர் | ஆண்டு | துறை |
|---|---|---|---|
| தலைவர் | க. சந்தியா | 3-ம் ஆண்டு | வணிகவியல் க.ப. |
| துணைத் தலைவர் | E. வெற்றிவேல் மணி | 3-ம் ஆண்டு | வணிகவியல் |
| செயலர் | S. சொக்கமாதேவி | 3-ம் ஆண்டு | வணிகவியல் |
| பொருளாளர் | M. பிரபா தேவி | 3-ம் ஆண்டு | தமிழ் |
| நுண்கலை மன்றச் செயலர் | S.. கௌசல்யா | 3-ம் ஆண்டு | வணிகவியல் க.ப. |
| விளையாட்டுத்துறைச் செயலர் | E. விஜயலட்சுமி | 3-ம் ஆண்டு | வணிகவியல் சுழற்சி I |

கல்லூரிப் பேரவைத் தொடக்கவிழா 14 ஆகஸ்டு 2019 (புதன் கிழமை) அன்று கல்லூரி முதல்வர் முனைவர். பி. பொன்முத்துராமலிங்கம் அவர்கள் தலைமையில் நடைபெற்றது. திருப்பூர் கவிஞர் க. ஜோதி அவர்கள் சிறப்பு விருந்தினராகக் கலந்து கொண்டு கவிதை வாயிலாக பல நல்ல அறிவியல் கருத்துக்களை மாணவிகளுக்கு எடுத்துரைத்தார். பேரவை பொறுப்பாளர்களை முனைவர் நா. மீனாட்சி சுந்தரம் அவர்கள் அறிமுகம் செய்து வைக்க உறுப்பினர்கள் பேரவைப் பொறுப்பு உறுதி மொழி ஏற்றனர்.

**14. பேரவை நடத்திய விழாக்கள்**

| எண் | நாள் | நிகழ்வுகள் | சிறப்பு விருந்தினர்கள் |
|---|---|---|---|
| 1. | 20-06-2019 21-6-2019 | சர்வதேச யோகா தினத்தில் | நம் கல்லூரியின் முதல்வர் தலைமையில் திருப்பூர் ஈசா யோகா மையம் சார்பில் யோகா பயிற்சி அளிக்கப்பட்டது. |
| 2. | 25-06-2019 | மனநலம் & அவசர சிகிச்சை | திரு. எ. சக்திவேல் பிள்ளை, திருமதி டி.எஸ். பிருந்தா, அவசர சிகிச்சை மற்றும் மீட்பு மையம், மனநல சமூக மையம், திருப்பூர் |
| 3. | 29-7-2019 | சாலைப் பாதுகாப்பு விழிப்புணர்வு நிகழ்ச்சி | திரு. சஞ்சய் குமார், I.P.S. காவல் துறை ஆணையர் திருப்பூர், திருமதி. உமா, I.P.S. துணை ஆணையர் (சட்டம் ஒழுங்கு மற்றும் போக்குவரத்து) |
| 4 | 15-8-2019 | சுதந்திர தின விழா | அன்று நம் முதல்வர் (பொறுப்பு) திருமதி இந்திராணி அவர்கள் கொடியேற்றி சுதந்திர தின உரை நிகழ்த்தினார். |
| 5 | 20-8-2019 | தமிழ்நாடு அரசு | செய்தி மற்றும் மக்கள் தொடர்புத் துறை சார்பில் கற்றவை கற்றபின் என்ற திரைப்படம் காண்பிக்கப்பட்டது |
| 6 | 26-1-2020 | குடியரசு தின விழா | நம் கல்லூரி முதல்வர் (பொறுப்பு) திருமதி இந்திராணி அவர்கள் கொடியேற்றி குடியரசு தின உரை நிகழ்த்தினார். |
| 7 | 28-1-2020 | வரதட்சணை எதிர்ப்பு தின விழா | டாக்டர். க. விஜயகார்த்திகேயன் IAS மாவட்ட ஆட்சியர் திருப்பூர், டாக்டர் ஏ. நிர்மலா MS அரசு மருத்துவ கல்லூரி மருத்துவமனை, திருப்பூர் |
| 8 | 30-1-2020 | சர்வோதயா தினம் | நம் கல்லூரி முதல்வர் (பொறுப்பு) தலைமையில் தீண்டாமை மற்றும் தொழுநோய் ஒழிப்பு உறுதி மொழி எடுத்துக் கொள்ளப்பட்டது. |
| 9 | 6-3-2020 | மகளிர் தின விழா மற்றும் நுண் கலை மன்ற பரிசளிப்பு நிகழ்வு | நம் கல்லூரி முதல்வர் (பொறுப்பு) திருமதி. சு. இந்திராணி அவர்கள் தலைமையில், முனைவர் C. வேதநாயகி, முன்னாள் முதல்வர், சிக்கண்ணா அரசு கலைக் கல்லூரி, திருப்பூர் மற்றும் திருமதி. கௌசல்யா தேவி வேலுசாமி, இயக்குநர், டாப்லைட் குழுமம் அவர்கள் சிறப்புரையாற்றினர். |
| 10 | 7-3-2020 | கல்லூரி ஆண்டு விழா மற்றும் பேரவை நிறைவு விழா | நம் கல்லூரி முதல்வர் (பொறுப்பு) திருமதி. சு. இந்திராணி அவர்கள் தலைமையில் சிறப்பு விருந்தினர் திருப்பூர் தெற்கு தொகுதி சட்ட மன்ற உறுப்பினர் உயர்திரு. எஸ். குணசேகரன் அவர்கள் சிறப்புரை ஆற்றினார். |

**கல்லூரியின் பிற விழாக்கள்- முத்தமிழ் விழா**

நமது கல்லூரியில் முத்தமிழ் விழா 4-3-2020 புதன் கிழமை அன்று கல்லூரி முதல்வர் (பொறுப்பு) திருமதி. சு. இந்திராணி அவர்கள் தலைமையில் (முத்தமிழ் விழாவின் நிகழ்வாக) சிறப்பு பட்டி மண்டபம் திரு. மு. துரைசாமி குழுவின் சார்பில் நடைபெற்றது. திருப்பூர், தெற்கு ரோட்டரி முன்னாள் தலைவி திருமதி. ராஜாத்தி சந்தானகிருஷ்ண, தெற்கு ரோட்டரி உறுப்பினர் திருமதி வசந்தி ஈஸ்வரன், தொழிலதிபர் திருமதி. சாந்தி செல்வராஜ் ஆகியோர் வாழ்த்துரை வழங்கினார்கள். விழா முடிவில் கலை நிகழ்ச்சிகள் நடைபெற்றன.

**நுண்கலை மன்றம்**

நமது கல்லூரியில் நுண்கலை மன்றமானது வணிகவியல் மற்றும் கணினிப் பயன்பாட்டியல் துறையின் பொறுப்பில் செயல்படுகிறது. கல்லூரி முதல்வர் (பொறுப்பு) திருமதி. சு. இந்திராணி அவர்கள் தலைமையில், 27-2-2020, 28-2-2020 மற்றும் 29-2-2020 ஆகிய மூன்று நாள்கள் நுண்கலை மன்றத்தின் சார்பில் பல்வேறு நுண்கலைப் போட்டிகள் நடைபெற்றன. இதில், முதல் நாள் 27-2-2020 மருதாணி, கோலம், நெருப்பில்லா சமையல், பயனற்ற பொருட்களிலிருந்து பயனுள்ளப் பொருளாக மாற்றுதல் போன்ற போட்டிகளும், 28-2-2020 மற்றும் 29-2-2020 ஆகிய நாட்களில், தனி நபர் பாடல், தனிநபர் நடனம், கிராமிய குழு நடனம், பிறமொழி பாடல் குழு நடனம், சிகை அலங்காரம் போன்ற போட்டிகளும் நடைபெற்றன. இக்கல்வியாண்டில் கணினி அறிவியல் துறை மாணவியர்கள் 2019 - 2020 நுண்கலை மன்ற சுழற்கோப்பையை வென்றனர். ஆங்கிலத் துறை மாணவியர்கள் சிறப்பாக செயல்பட்டு இரண்டாம் இடம் பெற்றனர்.

**விளையாட்டு விழா**

நமது கல்லூரியில் விளையாட்டு விழா 5-3-2020 வியாழக்கிழமை அன்று கல்லூரி முதல்வர் (பொறுப்பு) திருமதி சு. இந்திராணி அவர்கள் தலைமையில் நடைபெற்றது. சிறப்பு விருந்தினர் திருப்பூர், ஜெயசித்ரா கார்மென்ட்ஸ் நிர்வாக இயக்குநர், திருமதி. ஜெயசித்ரா ஆ. சண்முகம் அவர்கள் சிறப்புரை ஆற்றினார். விழா முடிவில் விளையாட்டுப் போட்டிகளில் வெற்றி பெற்ற மாணவியருக்குப் பரிசுகள் வழங்கப்பட்டன.

**கல்லூரி நூலகம்**

நம் கல்லூரி மாணவிகளுக்குப் பொது அறிவையும், நாட்டு நடப்புகள் பற்றி விழிப்புணர்வு அளித்திடவும், கல்லூரி பொது நூலகம் ஐந்து தினசரிகள், பல்வேறு வார, மாத இதழ்கள் மற்றும் பல்வேறு நூல்களுடன் காலை பத்து மணி முதல் மாலை நான்கு மணி வரை செயல்படுகிறது. மாநில அரசு நிதியிலிருந்து ரூபாய் ஒரு லட்சத்தில் பல்வேறு துறைகளுக்குத் தேவையான நூல்களும் ரூபாய் ஐந்தாயிரத்திற்குத் துறைகளுக்குத் தேவையான ஆய்விதழ்களும் பெறப்பட்டன. மத்திய அரசின் இணைய வழி சேவை மூலம் இரண்டு லட்சத்திற்கும் மேற்பட்ட நூல்களும், ஆறு லட்சத்திற்கு மேற்பட்ட மின் ஆய்விதழ்களையும் இணையம் வழி பெறப்பட்டு மாணவிகள் பயன்படுத்துகிறார்கள். 14-8-2019 அன்று நம் கல்லூரியில் நடந்த நூலகர் தின விழாவில் நூலக ஆர்வலர், திரு. புருஷோத்தமன், திருப்பூர் அவர்கள் வாசிப்பு பழக்கத்தின் தேவை பற்றி சிறப்புரையாற்றினார்.

**நாட்டு நலப்பணித் திட்டம் (NSS)**

கல்லூரி முதல்வர் அவர்களைத் தலைவராகக் கொண்டும் உதவிப் பேராசிரியர்கள் முனைவர் சா. கௌசல்யா தேவி (வணிகவியல் துறை) முனைவர் இரா. தேவி (கணிதத்துறை) முனைவர் ந. சுகந்தி (வேதியியல் துறை) ஆகியோரைத் திட்ட அலுவலர்களாகவும் கொண்டு நாட்டு நலப்பணித் திட்டம் சிறப்பாக செயல்பட்டு வருகிறது. நமது கல்லூரி சார்பில் அனைத்துத் துறைகளிலிருந்தும் மூன்று அலகுகளுக்கு நூறு மாணவிகள் வீதம் முந்நூறு மாணவிகளைத் தேர்வு செய்து மாணவியர்களுக்கு நாட்டுநலப் பணித் திட்டத்தின் குறிக்கோள்களையும் ஆளுமைத் திறமைகளையும் வெளிப்படுத்தும் விதமாக விழிப்புணர்வு முகாம்களும் பேரணிகளும் கருத்தரங்குகளும் நடைபெற்றன. 17-2-2020 முதல் 23-2-2020 வரை தூய்மை இந்தியா சிறப்பு களப்பணி முகாம் ஈட்டி வீரம் பாளையம் ஊராட்சியில் சிறப்பாக நடைபெற்றது.

**இளைஞர் செஞ்சிலுவை சங்கம் (Youth Red Cross Society) (YRC)**

இளைஞர் செஞ்சிலுவை சங்கம் சார்பில் 28-8-2019 அன்று சிக்கண்ணா அரசு கல்லூரியில் செஞ்சிலுவை சங்கம் சார்பில் நடைபெற்ற 120 பேர் கலந்து கொண்ட மாவட்ட அளவிலான பேச்சு போட்டியில் எம். ஜெயரோசலின் என்ற மாணவி முதல் பரிசு பெற்றார். செஞ்சிலுவை சங்கம் சார்பில் 17-2-2020 அன்று கொரோனா வைரஸ் பற்றிய விழிப்புணர்வு கூட்டம் நம் கல்லூரியில் நடைபெற்றது.

**தேசிய உயர்கல்வித் திட்டம் (Rashtria Uchchatar Shiksha Abhiyan) (RUSA)**

மத்திய மாநில அரசின் நிதி உதவியின் கீழ் செயல்படும் ரூசா (ராஷ்ட்ரிய உச்சதர் சிக்ஷா அபியன்) என்றழைக்கப்படும் தேசிய உயர்கல்வித் திட்டத்தின் மூலம் இந்தக் கல்வியாண்டில் ரூபாய் ஐம்பது லட்சம் மதிப்பில் நான்கு கூடுதல் வகுப்பறைகளும், ஆய்வக உபகரணங்கள் மற்றும் கணினி உபகரணங்களும் வாங்கப்பட உள்ளன. மாணவிகளுக்கு தேசிய திறன் மேம்பாட்டு மையம் மற்றும் National Institute of Fashion Design பல்துறை வல்லுநர்கள் மூலம் சிறப்பு பயிற்சிகளும் வழங்கப்பட்டன். முனைவர் த. பாலசரவணன் தாவரவியல் துறை, முனைவர் கி. ராஜேந்திரன் மின்னணுவியல் துறை அவர்களைப் பொறுப்பாளர்களாகவும் கொண்டு 28, 09-2 - 2020 ஆகிய இரு நாட்களுக்கு Fashion Utsav பேஷன் உட்சவ் எனும் நிகழ்ச்சி நம் கல்லூரியில் சிறப்பாக நடைபெற்றது.

**வேலை வாய்ப்பு பயிற்சி (Placement Training)**

கல்லூரி முதல்வர் அவர்களைத் தலைவராகக் கொண்டு, உதவி பேராசிரியர்கள் முனைவர் மு. ஆனந்தி (கணிதத்துறை), முனைவர் ந. மணிமேகலை (பொருளியல் துறை), முனைவர் வெ. சு. காஞ்சனா (வணிகவியல் துறை) முனைவர் சு. அன்னபூரணி (வேதியியல் துறை), (முனைவர் ஜி. நிர்மலா, ஆங்கிலத் துறை) ஆகியோரை ஒருங்கிணைப்பாளர்களாகக் கொண்டு போட்டித் தேர்வுகளுக்கு இலவச வேலை வாய்ப்பு பயிற்சி வகுப்புகள் சிறப்பாக செயல்பட்டு வருகிறது. நமது கல்லூரியில் மத்திய அரசின் திறன் மேம்பாட்டு சான்றிதழ் பயிற்சி நிறுவனம் Pradhan Mantri Kaushal Vikas Yojaa (PKMVY) Ministry of Skill Development & Entrepreneurship (MSDE) மற்றும் தமிழ்நாடு மாநில ஊரக மற்றும் நகர்புற வாழ்வாதார இயக்கம் சார்பில் பயிற்சி மற்றும் வேலைவாய்ப்பு முகாமில் பங்கேற்று பயனடைந்தனர். 22-2-2020 அன்று நடந்த வேலை வாய்ப்பு முகாமில் 1085 பேர் பங்கேற்று 296 பேர் வேலை வாய்ப்பினைப் பெற்றனர்.

**பொதுப்பணித் துறை (PWD)**

நமது கல்லூரியில் புதிதாக ரூபாய் 2 கோடியே 57 லட்சம் பொருட் செலவில் 8 வகுப்பறைகள் மற்றும் 3 ஆய்வுக்கூடங்களுடன் கூடிய புரட்சித் தலைவர் டாக்டர் எம்.ஜி.ஆர். நூற்றாண்டு விழா கட்டிடம் திருப்பூர் தெற்கு தொகுதி சட்ட மன்ற உறுப்பினர் உயர்திரு எஸ். குணசேகரன் அவர்களால் அடிக்கல் நாட்டப்பட்டு, மாண்புமிகு முதலமைச்சர் எடப்பாடி கே. பழனிச்சாமி அவர்களால் காணொலி காட்சி மூலம் திறந்து வைக்கப்பட்டு, திருப்பூர் தெற்கு தொகுதி சட்ட மன்ற உறுப்பினர் உயர்திரு எஸ். குணசேகரன் அவர்கள் குத்தவிளக்கேற்றி தொடங்கி வைத்தார். தற்போது கட்டிடம் புதுப்பொலிவுடன் செயல்பட்டு வருகிறது. மேலும் அன்னார் அவர்களது பெருமுயற்சியால் நம் கல்லூரியின் தென்மேற்கு பகுதியில் உள்ள கழிவுநீர்க் குழாய் பணியினை ரூபாய் 12.10 லட்சங்கள் பொருட்செலவில் மிக விரைவாகவும் சிறப்பாகவும் சீரமைத்து கொடுத்துள்ளார்.

**முன்னாள் மாணவியர் சங்கம்** (Old Students Association)

நம் கல்லூரியின் முன்னாள் மாணவியர் சங்கம் நம் கல்லூரி முதல்வர் முனைவர் பி. பொன்முத்துராமலிங்கம் அவர்கள் தலைமையில், முனைவர் க. வெண்மதி, மின்னணுவியல்துறை, முனைவர் ரெ. பரிமளா, உணவு அறிவியல் & ஊட்டச்சத்தியல் துறை, முனைவர் வே. மலர், ஆங்கிலத் துறை மற்றும் முனைவர் பானு ரவிகணேஷ், விலங்கியல் துறை அவர்களை சங்க அலுவலராகக் கொண்டு நம் கல்லூரியின் 32 வது பட்டமளிப்பு விழா சிறப்பாக நடைபெற்றது.

நம் கல்லூரியின் 32வது பட்டமளிப்பு விழா, 11 பிப்ரவரி 2020 அன்று நம் கல்லூரியின் முதல்வர் திரு. பி. பொன்முத்துராமலிங்கம் அவர்கள் தலைமையில், கோயம்புத்தூர் பாரதியார் பல்கலைக்கழகத் துணைவேநதர் முனைவர் பெ. காளிராஜ் அவர்கள் சிறப்பு விருந்தினராக கலந்து கொண்டு மாணவியர்களுக்குப் பட்டங்களை வழங்கி, விழாப் பேருரை நிகழ்த்தினார். அது சமயம் இளநிலை பாடப்பிரிவில் 808 பட்டங்களும் முதுநிலை பாடப்பிரிவில் 203 பட்டங்களும் வழங்கப்பட்டது. மேலும், பாரதியார் பல்கலைக்கழகத்தின் தரவரிசைப் பட்டியலில் இடம் பெற்ற 26 இளநிலை மற்றும் 09 முதுநிலை மாணவியருக்குச் சிறப்பு பதக்கங்கள் வழங்கப்பட்டன. முன்னாள் மாணவியர் சங்க நிதியிலிருந்து 05 கௌரவ விரிவுரையாளர்களும், 07 ஆய்வக உதவியாளர்களும் நியமிக்கப்பட்டு ஊதியம் வழங்கப்பட்டு வருகிறது.

**சுழல் சங்க கிளை** (Rotary Club)

நம் கல்லூரி முதல்வர் முனைவர் பி. பொன்முத்தராமலிங்கம் அவர்கள் தலைமையில், முனைவர் அர. ஹம்சலட்சுமி மற்றும் முனைவர் இர. குருசாமி அவர்கள் திட்ட அலுவலராகவும் இருந்து இச்சுழல் சங்க கிளை சிறப்பாக செயல்பட்டு வருகிறது. சுழல் சங்கத்தின் சார்பாக நடைபெற்ற நிகழ்வில் 27-01-2020 அன்று திரு. க. ரவிந்திரன், திருப்பூர் இயற்கை சங்கத் தலைவர் அவர்கள் "பறவைகளை பாதுகாப்போம்" என்ற தலைப்பில் சிறப்புரையாற்றினார். 28-01-2020 அன்று CNC SOLUTIONS இயக்குநர் திரு. க. பாரிவள்ளல் அவர்கள் தலைமை பண்புகள் பற்றி மாணவியருக்கு எடுத்தரைத்தார்.

**பெற்றோர் ஆசிரியர்க் கழகம்** (Parent Teacher Association (PTA)

நமது கல்லூரியில் பெற்றோர் ஆசிரியர்க் கழகம் சிறப்பாக நடைபெற்று வருகிறது. இச்சங்கத்தின் தலைவராக கல்லூரி முதல்வர் அவர்களும், துணைத் தலைவராக தாவரவியல் துறைத் தலைவர் முனைவர். சு. கீதா அவர்களும் செயல்பட்டு வருகின்றனர். மாதந்தோறும் பெற்றோர் ஆசிரியர் ஆலோசனைக் கூட்டம் நடத்தப்பட்டு மாணவியர் நலன்களுக்கான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு சிறப்புடன் செயல்பட்டு வருகிறது. இக்கழக நிதியிலிருந்து ஒன்பது பணியாளர்களுக்கு ஊதியம் வழங்கப்பட்டு வருகிறது.

**நுகர்வோர் பாதுகாப்பு குழு** (CONSUMER CLUB)

நம் கல்லூரி முதல்வர் முனைவர் பி. பொன்முத்துராமலிங்கம் அவர்கள் தலைமையில், முனைவர் ர. அம்சவேணி, வணிகவியல் துறை, முனைவர் ந. ஷீபா விலங்கியல் துறை, முனைவர் கோ. சுபா, உணவு அறிவியல் & ஊட்டச்சத்தியல்துறை மற்றும் முனைவர் சா. ஜானகி கணிதத்துறை அவர்களை ஆசிரியர் குழு உறுப்பினர்களாகக் கொண்டு நம் கல்லூரியில் மாணவிகளுக்கு பல்வேறு (28-08-2019, நம் கல்லூரி முதல்வர் முனைவர் பி. பொன்முத்துராமலிங்கம் அவர்கள்

தலைமையில், முனைவர் ர. அம்சவேணி, வணிகவியல் துறை, முனைவர் ந. ஷீபா விலங்கியல் துறை, முனைவர் கோ. சுபா, உணவு அறிவியல் & ஊட்டச்சத்தியல்துறை மற்றும் முனைவர் சா. ஜானகி கணிதத்துறை அவர்களை ஆசிரியர் குழு உறுப்பினர்களாகக் கொண்டு நம் கல்லூரியில் மாணவிகளுக்குப் பல்வேறு (28-08-2019, 11-12-2019, 13-01-2020, 20-1-2020, 21-2-2020) நாள்களில் விழிப்புணர்வுக் கூட்டங்களும், (08-1-2020, 21-2-2020) நாள்களில் ஓவியம், கவிதை, கட்டுரை போட்டிகளும், (22-1-2020, 21-2-2020) நாள்களில் பேச்சுப் போட்டிகளும் நம் கல்லூரியில் நடத்தப்பெற்றன. நுகர்வோர் உரிமைகள் எனும் தலைப்பில் வணிகவியல் துறைத் தலைவர் முனைவர். ம. கிருஷ்ணவேணி சிறப்புரை வழங்கினார். நுகர்வோர் விழிப்புணர்வு கண்காட்சி நடத்தப்பட்டது.

**கணினி அறிவுப் பயிற்சித் திட்டம் (CLP)**

2000 - 2001 கல்வி ஆண்டு முதல் தமிழக அரசின் கணினிஅறிவுப் பயிற்சித்திட்டம் மூலமாக மாணவிகளுக்குக் கணினி அறிவுப் பயிற்சி நடைபெற்று வருகிறது. இத்திட்டத்தின் மூலமாக இக்கல்வியாண்டில் 850 மாணவியர்கள் பயிற்சி பெற்றுள்ளனர். இத்திட்டம் நமது கல்லூரி முதல்வர் அவர்கள் தலைமையில் 5 சிறப்பு கணினி ஆசிரியர்களுடன் சிறப்பாக செயல்பட்டு வருகிறது.

**சுற்றுச் சூழல் குழு (Eco Club)**

நமது கல்லூரியில் சுற்றுச் சூழல் குழு முதல்வர் தலைமையில், விலங்கியல் துறை பேராசிரியர் முனைவர் ப. சுமதி மற்றும் தாவரவியல் துறைப் பேராசிரியர் திருமதி ம. ரூபிணி ஆகியோரது பொறுப்பில் செயல்பட்டு வருகிறது. 30-8-2019 அன்று பல்லடம் - சூலூர் சாலையில் உள்ள வனாலயம் வளாகத்தில் நடைபெற்ற மார்பகப் புற்றுநோய் விழிப்புணர்வு கருத்தரங்கில் 89 மாணவியர்களும் இரண்டு பேராசிரியர்களும் கலந்து கொண்டனர். சுற்றுச் சூழல் குழுவின் சார்பாக சுற்றுச் சூழல் பாதுகாத்தல், மரம் வளர்த்தல், நெகிழி ஒழிப்பு, மற்றும் மழை நீர் சேகரிப்பு ஆகியவை குறித்த செயல்பாடுகள் நம் கல்லூரி வளாகத்தில் செயல்படுத்தப்பட்டு வருகிறது.

**கல்வி உதவித் தொகை (Scholarship Details)**

2019-20ம் கல்வியாண்டில் பிற்படுத்தப்பட்டோர் நலத்துறை மூலம் 1879 மாணவியர்களும் சிறுபான்மையினர் நலத்துறை மூலம் 31 மாணவியர்களும் ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறை மூலம் (N900)மாணவியர்களும் கல்வி உதவித் தொகை பெற்றுள்ளனர்.

2019-20ம் கல்வியாண்டில் தமிழ் வழியில் கல்வி பயிலும் 513 இளநிலை மாணவியர்களுக்கு ஊக்கத்தொகையாக ரூ. 4,61,700/- (தமிழ் வழியில்) கல்வி உதவித் தொகை பெற்று வழங்கப்பட்டது.

**தூய்மை இந்தியா (Clean India) Swachh Bharath**

தூய்மை இந்தியா ஸ்வாச் பாரத் (Swatch Bharth) திட்டமானது நமது கல்லூரி முதல்வர் அவர்களைத் தலைவராகக் கொண்டு, உதவி பேராசிரியர் முனைவர் க. பிருந்தா (வணிகவியல் துறை) அவர்களைப் பொறுப்பாளராகக் கொண்டு தூய்மை இந்தியா பணிகள் சிறப்பாக நடைபெற்று வருகின்றது. மத்திய மற்றும் மாநில அரசு தூய்மைப்பணி திட்டங்களின் அறிவுறுத்தலின் படி கல்லூரி மாணவியர்களுக்கு ஜூலை 10 முதல் 31 வரை சிறப்பு கோடைகால பயிற்சி முகாம் (SBSI 2.0) நாட்டு நலப்பணித்திட்டம் உதவியுடன் நடைபெற்றது. இம்முகாமில், சுற்றுப்புறத் தூய்மை பேணுதல், நீர் மேலாண்மை, திடக்கழிவு மேலாண்மை, மாசுக்கட்டுப்பாடு, மரம் வளர்ப்பு போன்ற தலைப்புகளில்,

விளக்கவுரைகள், கவிதை, கட்டுரைப் போட்டிகள் நடைபெற்றன. ஓசை அமைப்பின் தலைவர் திரு. காளிதாஸ் அவர்கள் கலந்து கொண்டு சிறப்புரை ஆற்றினார். திருப்பூர் ரோட்டரி சங்கம் சார்பில் மாணவிகள் மற்றும் பொதுமக்களுக்குத் துணிப்பைகள், மரக்கன்றுகள் வழங்கப்பட்டன். மேலும், திருப்பூர் மாநகராட்சி உதவியுடன் நம் கல்லூரி வளாகத்தில் வழக்கமான தூய்மைப்பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றது.

## உடற்கல்வித்துறை / விளையாட்டு செயற்பாடுகள்

நமது கல்லூரியில் உடற்கல்வித் துறை, முனைவர் ப. நிர்மலா தேவி, வணிக நிர்வாகவியல் துறை பொறுப்பில் செயல்பட்டுக் கொண்டிருக்கிறது. மாணவிகளுக்கிடையே ஓட்டப் பந்தயம், சதுரங்கம், ஈட்டி எறிதல், கபடி, கோகோ, எறிபந்து, இறகுப்பந்து, நீளம் தாண்டுதல் ஆகிய விளையாட்டுகளுக்குப் பயிற்சிகள் கொடுக்கப்பட்டு போட்டிகள் நடைபெற்றன. விளையாட்டு விழா அன்று வெற்றி பெற்ற மாணவியருக்குப் பரிசுகள் வழங்கப்பட்டன.

### தேசிய / மாநில அளவில் விளையாட்டுப் போட்டியில் வெற்றி பெற்ற மாணவியர்

| Name / Major | Sponsored by | Date | District |
|---|---|---|---|
| எஸ். மஞ்சுளா முதல் ஆண்டு இளங்கலை வணிகவியல் | 17வது மாநில அளவிலான எறிபந்து சுழற்கோப்பை (ஆடவர் மற்றும் மகளிர்) தமிழ்நாடு எறிபந்து சங்கம் (Regd.) திருப்பூர் | 27-9-2019 to 29-9-2019 | மாநில அளவில் தேர்ந்தெடுக்கப்பட்டார். தேசிய அளவில் தேர்ந்தெடுக்கப்பட்டார் |
| எஸ். விஜய்பாரதி மூன்றாமாண்டு இளங்கலை பொருளியல் | திருப்பூர் நகர காவல்துறை காவல்துறை - மக்கள் தொடர்பு விளையாட்டு சந்திப்பு (கபடி) - 2020 | 04-01-2020 to 05-01-2020 | மாவட்ட அளவில் வெற்றியாளராக தேர்ந்தெடுக்கப்பட்டார் |
| | தமிழ்நாடு அரசு விளையாட்டு மேம்பாட்டு ஆணையம், திருப்பூர் மாவட்டப்பிரிவு, முதலமைச்சர் கோப்பை, மாவட்ட அளவிலான போட்டி | | மாநில அளவில் தேர்ந்தெடுக்கப்பட்டார் |
| ப. பவித்ரா முதல் ஆண்டு இளங்கலை வரலாறு | சிலம்பம் தமிழ்நாடு சிலம்பாட்டக் கழகம் நடத்திய நான்கு மாவட்டங்கள் உள்ளடக்கிய மேற்கு மண்டல அளவிலான போட்டி | | மண்டல அளவில் முதல் பரிசு தேர்ந்தெடுக்கப்பட்டார் மாநில அளவில் பங்கு பெற்றார் |

# கவிதைகள்

## ஒரு நிமிடம் கவனி

மது அருந்துங்கள் ....
புகை பிடியுங்கள்
பரிசுகளை வெல்லுங்கள்
முதல் பரிசு மரணம்
இரண்டாம் பரிசு புற்றுநோய்
மூன்றாம் பரிசு காசநோய், பக்கவாதம்
ஆறுதல் பரிசு பண நஷ்டம்

காந்தி சிலைக்கு எதிரில் மதுக்கடை!
போராட்டம் நடந்தது
இறுதியில்
காந்தி நகர்ந்துவிட்டார்

**ஜே. மைதிலி**
இயற்பியல் கணினிப் பயன்பாடு, இரண்டாம் ஆண்டு

## அம்மா

பிழையில்லாத காவியம் நீ
விலையில்லாத ஓவியம் நீ
வடிக்காத சிற்பம் நீ
சிறகடிக்காத பறவை நீ
களங்கமற்ற அன்பு நீ
எல்லையற்ற பாசம் நீ
கருவறையில்லாத தெய்வம் நீ

## தோழி

தோழியே !
உன்னைப் பற்றி எழுத
பேனாவினை எடுத்தேன்
அதன் முனை உன்னைக்
குத்துமோ என்று
எழுதாமல் தவிக்கிறேன்.

## காதல்

எதிர்ப்பார்க்காத போது
எனைப் பார்த்தாய்
இன்று எதிர்ப்பார்க்கிறேன்
எனைப் பார்ப்பாயா என்று ?

**செ. சந்தியா**
இளங்கலை தமிழிலக்கியம், மூன்றாமாண்டு

## பள்ளிப் பருவ நினைவுகள்

சமையலை சட்டென்று
முடித்து
சடைபின்ன வந்த
தாயாரிடம்,
சடை பின்னல்
சரியில்லை ...
என்று சண்டையிட்ட
இரட்டை சடை
நினைவுகள்
இழந்த நினைவுகளுள்
ஒன்று ...

**அ. மகாலட்சுமி**

## தன்னம்பிக்கை தளரவிடாதே

வாழ்க்கைப் போரில் தோற்று
என்னை ஏன் படைத்தாய் என
இறைவனை நிந்திக்கும் போதேல்லாம்
கண் எதிரே வருகின்றனர்...
கை, கால் இழந்த ஊனமுற்றோர்...
ஊன்றுகோலையே துணையாகக் கொண்டு
உலகை நடைபோடும் பார்வையற்றோர் ....
தோல்விகளால் துவண்டு விழும் போதெல்லாம்,
என் எதிரே கடந்து செல்கின்றனர் ....
பார வண்டி இழுக்கும் பாமர தொழிலாளி
தள்ளாடும் வயதிலும் தளர்நடையிலும்
தடையில்லா நம்பிக்கையில் கீரைவிற்கும் கிழவி...
தன்னம்பிக்கை கொள்கிறது மனம்
எதை இடிந்தாலும்
எதிர்காலம் இன்னும் இருக்கிறது
தன்னம்பிக்கை தளரவிடாதே !!!

**ரா. ராஜபிரியா**
இளமறிவியல், கணிதத்துறை மூன்றாமாண்டு

## வலிகள்

என் உணர்வுகள் எல்லாம்
காகித்தில் வெறும் கவிதையாக
மட்டுமே தெரியும் உங்களுக்கு
ஆனால்
வலிகள் மட்டுமே தெரியும் எனக்கு

**டி. கௌசல்யா**
இளங்கலை வரலாறு, இரண்டாம் ஆண்டு (ஆ.வ)

## எழுச்சி

தூக்கத்தில் கனவு காணாதே !...
உன் விழிகளை வழிக்கச் செய் ....
எழுச்சியோடு செயல்படு ...
முயற்சியில் திறம்படு ...
உன் கனவை ஏமாற்றி விடாதே !
அதை நிறைவேற்றப் போராடு ...
தடைகளை கண்டு தளர்ந்து விடாதே
முடியும் என்று மூச்சிருக்கம் வரை பாடுபடு...
தோல்வி உனக்கு வெட்கமல்ல
அனுபவம் தான் !...
எழுந்து நில்!
நம்பிக்கை கொள் ...
உன் கனவு நினைவாகும் வரை விடாதே !...
தொடர்ந்து கொண்டே இரு ...
ஒரு நாள் நீயும் ஆகலாம் !
அப்துல் கலாம் .....

## பதினைந்தும், இருபத்து ஆறும்

அடிமைப்படுத்தி ஆண்டான் அந்நியன் ..
காலங்கள் ஓடின வேகமாய் ...
உயிர்கள் போனதென்னவோ, உண்மைதான்..
ஆனால்,
சிந்திய கண்ணீர் வீண் போகவில்லை
அச்சமின்றி, ரத்தம் சிந்தி தேசம் காத்த
தேசத் தலைவர்களின் நினைவுகள் ...
என்றென்றும் நிலைக்கட்டும்
நம் உள்ளத்தில் !
அதுவே நம்மை
வழி நடத்தும்.

**சினேகா விஜயன்**
வணிகவில் கணினிப்பயன்பாடு, இரண்டாம் ஆண்டு

## குழந்தை

இறைவன் படைத்ததில் இயல்பு கெடாமல்
தொடரும் பட்டியிலில் இன்றும் இருக்கிறது
உன்னைப் போன்ற குட்டிச் செல்வங்களின்
குறும்பு சிரிப்பு

**கி. பவித்ரா**
நுண்ணுயிரியல் முதலாம் ஆண்டு.

## காத்திருப்பு ...!

போதி மரத்தடியில் புத்தர்
ஞானம் பெற்றார் ;
புளிய மரத்தடியில் நம்மாழ்வார்
ஞானம் பெற்றார்;
அரச மரத்தடியில் திருமூலர்
திருமந்திரம் செய்தார் ;
அதனால் எந்த மரத்தையும்
வெட்டாதீர்கள் .......!!
அது எந்த ஞானிக்காக
காத்திருக்கிறதோ .....!!!

## குருவிகளின் கேள்வி

வீடு கட்டுவதற்காக
வெட்டப்படுகின்ற
மரத்தில் ; நாம்
கூடு கட்டி
வாழ்கின்ற விவரம்
கோடாரிக்குத் தெரியுமா?

**ம. ஹரிப்பிரியா**
நுண்ணுயிரியல், மூன்றாம் ஆண்டு

## வெற்றி நிச்சயம்

நீ ஒதுக்கப்படும் சபைகளில் நிமிர்ந்து நில்
நீ புகழப்படும் சபைகளில் அடக்கமாய் நில்
நீ விமர்சிக்கப்படும் இடங்களில் பொறுமையாய இரு
நீ நேசிக்கப்படும் இடங்களில் அன்புடன் இரு
நீ ஜெயிக்கும் தருவாயில் நிதானமாக இரு
வெற்றி நிச்சயம்

**கே. திலகவதி**
வணிகவியல் துறை, முனைவர் பட்ட ஆய்வாளர்

## தமிழ் வாழ்க

அருமையானத் தாய்மொழியை
ஆர்வத்துடன் கற்றுக்கொள்ளுங்கள்
இனிமையானச் செய்தியினை
ஈகையுடன் கற்றுக்கொள்ளுங்கள்
உணர்வுகள் மிக்க கவிதைகள் - பல
ஊற்றுப்போல் உள்ளது தமிழில்
எண்ணற்ற கவிஞர்களின் படைப்புகள்
ஏணிப்படி போல் அடக்கிச் செல்கின்றன
ஐயம் இன்றி தமிழைக் கற்போம்
ஒன்றி வாழ்வோம் தமிழோடு
ஓங்கி வளரச் செய்வோம் தமிழை
ஔவைத் தமிழை ஔடதம் போன்ற தமிழை
எங்கும் இருக்கும் மனிதர்களிடம் வளரச்
செய்வோம் தமிழ்மொழியை

**ப. லோகப்பிரியா**
இளங்கலை தமிழ் இலக்கியம்(முதலாமாண்டு)

## கவிதை

மை ஊற்றி எழுதாமல்
கற்பனை எனும் பொய் ஊற்றி
எழுதும் பேனா "கவிதை"

## வறுமை

மகிழ்ச்சியோடு மழலைகள்
பள்ளிக்குச் சென்றனர்
சத்துணவுக்காக ............

## பாடம்

மண்ணெண்ணெய் விளக்கில்
ஏழை மாணவன் படித்தான்
மின் உற்பத்திப் பாடம்

**பொன்முத்துமணி**
இயற்பியல், கணினிப்பயன்பாடு, இரண்டாம் ஆண்டு

## உணராத வரி(லி)கள் உரைக்கிறேன் கேளுங்கள்

இவ்வுலகில்
பெண்ணாகப் பிறக்கவும்
பெண்மையாய்த் திகழுவும் அவள்
பேரார்வம் கொள்கிறாள்
ஆனால் ஏனோ,
அனைத்தையும் இழந்தவள் போல
நம்மை அலைக்கழிக்கவும் ஒருசில நேரங்களில்
ஆத்திரத்தோடும் காட்சியளிக்கிறாள் ....
ஏன் என்றால்
காரணம் .
தன் மறுஉருவை இங்கு யாரும்
மதிக்கவும் ....... மதிகொண்டு
அறியவும் .... உணர மறுப்பதால் ........

**கி. சரண்யா**
முதுகலை தமிழிலக்கியம், இரண்டாமாண்டு

## வீழ்வது எழவே

தன் குழந்தை
விழுவதைக் கண்டு
தானாக ஓடிவரும்
தாயின் கால்கள் ஒரு நிமிடம் நின்றன
என் குழந்தை இப்போது தானாக எழட்டும் என்று

**ப. ரஞ்சனி**
இளங்கலை தமிழ் இலக்கியம், முதலாம் ஆண்டு

## வாழ்க்கையின் வலி

சிறு இதயத்தில்
பெருந் துண்பத்துடன்
கண்ணில் நீர் வழிய
உதட்டில் பொய் புன்னகையுடன்
துன்பம் என்னைத் துரத்த
விலகி ஓடி
இறுதியில் ......
இல்லத்தை விட்டு
வாழ்வின் எல்லைக்கு வந்தேன்
வாழ்க்கையின் வலி மொத்தமாய் புரிகிறது

**ப. ரஞ்சனி**
இளங்கலை தமிழ் இலக்கியம், முதலாம் ஆண்டு

## மகனைப் பிரிந்த தாயின் நிலை

உன் குதல் கேட்க
காத்திருக்கும் அவளுக்கு
ஊரில் இருந்து வந்து
கதவுதட்டும் ஓசையானது
கருப்பையில் இருக்கையில் நீ
உதைத்ததைப் போன்று
உணர்வாள் ........
நீ பிறக்கும் போது
எத்தனை ஆசையோடு வலி
நிறைந்த கண்ணில்
உன்னைப் பார்த்தாளோ, அத்தனை
ஆசையோடு உன்னைப்
பிரிந்த வலியில் உன்
முகத்தைப் பார்ப்பாள்.......

**வெற்றிவேல் மணி**
வணிகவியல், கணினிப்பயன்பாடு, மூன்றாம் ஆண்டு

## மலர்களின் மகத்தான குரல்

சவம் சென்ற சாலை.....
சிதறிக் கிடந்த
பூக்களின் முணுமுணுப்பை
எந்த கால்களும் கேட்கவில்லை......
யாரோ இறந்ததற்கு
எங்களை ஏன் ?
கொன்றீர்கள் என்பதை !
எங்கள், வர்ணங்கள் வேறுவேறு
என்றாலும் அதில் ஜாதி கிடையாது.
எங்கள் நறுமணம் நூறு
என்றாலும் அதில் போலி கிடையாது!
எங்களை மதிக்காமல் மதிப்பவர்களே!
நீங்கள் இறந்தால் மீண்டும் பிறப்பதில்லை......
நாங்கள் உதிர்வதே மலர்வதற்காக தான் .......

**ரா. ராஜபிரியா**
இளமறிவியல் கணிதவியல் துறை, மூன்றாம் ஆண்டு

## கணிதப் புதிர்

1. ஒரு அரசர் தன் மந்திரி ஒருவரிடம் இரண்டு மாம்பழங்களைக் கொண்டுவரச் சொல்கிறார். மந்திரி மாம்பழங்களைக் கொண்டுவர மாந்தோப்பிற்குச் செல்கிறார். அத்தோப்பினுள் நுழையும் முன், அவர் மூன்று தோட்டக்காவலர்களைக் கடந்து செல்ல வேண்டும். அம்மூன்று காவலர்களும், மந்திரியாருக்கு ஒரு நிபந்தனை கூறுகிறார்கள். மந்திரி தான் கொண்டு வரும் மாம்பழங்களில் பாதிப்பங்கையும், மேற்கொண்டு ஒரு மாம்பழத்தையும் முதல் காவலாளியிடம் கொடுத்தால் தான், அவரைக் கடந்து செல்ல முடியும். இதே போன்று அடுத்த இரண்டு காவலாளிகளும், இதே நிபந்தனையைக் கூறுகின்றனர். மந்திரி நிபந்தனையை ஏற்றுக்கொண்டு, உள்ளே சென்று மாம்பழங்களைப் பறித்துவிட்டு, வெளியே வரும்பொழுது, நிபந்தனையை நிறைவேற்றுகிறார். இறுதியாக, அவர் கையில், அரசர் கேட்டபடி, இரண்டு மாம்பழங்கள் மட்டுமே இருக்கிறது எனில், அவர் எத்தனை மாம்பழங்களைப் பறித்து வந்திருப்பார்?
**விடை : 30**

2. ஒரு ஊரில் மூன்று கோயில்களும், அம்மூன்று கோயில்களுக்கு முன்பு முறையே மூன்று குளங்களும் உள்ளன. ஒருவர், மூன்று கோயில்களுக்கும் பூக்கள் கொடுக்க விரும்புகிறார். ஒரு கோயிலுக்குப் பூக்களைப் கொடுக்கம் முன், அப்பூக்களைக் கோயிலின் முன்பிருக்கும் குளத்தில் நனைக்க வேண்டும் என்பது அவ்வூரின் வழக்கம். அந்த குளங்களில் உள்ள ஒரு சிறப்பு என்னவென்றால், குளத்தின் நீரின் பூக்கள் நனைந்தால், பூக்களின் எண்ணிக்கை இரட்டிப்பாகும். இவ்வாறிருக்க, அந்த நபர் மூன்று கோயிலுக்கும் சமமான எண்ணிக்கையில் பூக்களைக் கொடுக்க எண்ணினால், எத்தனைப் பூக்களைக் கோயிலுக்கு எடுத்துச் சென்றிருப்பார்?

- அவர் கொண்டு சென்ற பூக்களின் எண்ணிக்கை - 7
- அவர் ஒவ்வொரு கோயிலுக்கும் கொடுத்த பூக்களின் எண்ணிக்கை - 8

**கணித விந்தை !!!**

121, 242, 484 என்னும் மூன்று எண்களானது, முதல் எண்ணின் இரண்டு மடங்குகள் ஆகும். இவ்வெண்களை, அதன் இலக்கங்களின் கூடுதலால் வகுக்கும்போது, விடையானது, மூன்று எண்களுக்கும் சமமாகவே வரும்.

$$\frac{121}{1+2+1} = 30.25 \qquad \frac{242}{2+4+2} = 30.25 \qquad \frac{484}{4+8+4} = 30.25$$

**வே. வளர்மதி**
இளம் அறிவியல் கணிதம், இரண்டாம் ஆண்டு (ஆ.வ)

## DR. KALAM'S MOTIVATIONAL QUOTES TO BECOME A SUCCESSFUL PERSON

1. You cannot change your future but you can change your habits and your habits will change your life
2. Life is a difficult game. You can win it only by retaining your brith right to be a person
3. Man needs difficulties in life because they are necessary to enjoy the success.
4. End is not end in fact END means "Effort Never Dies". If you fail, don't give up because FAIL means FIRST Attempt in Learing"
5. Excellence is a continuous process and not an accident.
6. Don't read success stories, you will get only a message; Read failure stories, you will get some ideas to get success
7. One of the very important characteristics of a student is to question. Let the students ask questions.
8. Black colour is sentimentally bad but every black board makes the student's life brighter.
9. Your best teacher is your last mistake
10. You have to dream before your dreams can come true.
11. If you want to shine like a sun. First burn like a sun.
12. Success is when your signature changes to autograph.
13. Without your involvement your cannot succeed. With your involvement you cannot fail.
14. Be more dedicated to making solid achievements than in running after swift but synthetic happiness
15. To succeed in your mission, you must have single - minded devotion to your goal.

**S. DHARSHANA**
B.Sc., maths, IInd year

## LIST OF FIRST WOMEN IN INDIA

1. First Indian Women Doctor - Anandi Gopal Joshi (1886)
2. First Woman President of INC - Annie Besant (1917)
3. First Indian Woman President of INC - (Sarojini Naidu - (1925)
4. First Indian Woman Airline Pilot - Sarla Thakral (1936)
5. First Indian Woman to swim across English channel - Arati saha (1959)
6. First Indian Woman to get Arjuna Award - Stephie D'souza (1963)
7. First Indian Woman to become Miss World - Miss Reita Faria - (1966)
8. First Indian Woman to win Gold in Asian Games - Kamalijeet Sandhu (1970)
9. First Indian Woman to get Bharat Ratna - Indira Gandhi (1971)
10. First Indian Woman to get Jnanpith Award - Ashapoorna Devi (1976)
11. First Indian Woman to get Nobel Prize - Mother Terasa (1979)
12. First Indian Woman to win Oscar Award - Bhanu Athaiya (1983)
13. First Indian Woman to Climb Mt. Everest - Bachendri Pal (1984)
14. First Woman to get Ashok chakra - Nirja Bhanot (1987)
15. First Woman Judge of Supreme Court - Meera Sahib Fatima Bibi (1989)
16. First Indian Woman to become Miss Universe - Susmita Sen (1994)
17. First Indian Woman to win Booker Prize - Arundhati Roy (1997)
18. First Indian Woman to go to Space - Kalpana Chawla (1997)
19. First Woman Musician to get Bharat Ratna - MS Subbalaskhmi (1998)
20. First Indian Woman to win Medal in Olymbic - karnam Malleswari (2000)
21. First India's Woman to win WTA Title - Sarojini Naidu (1947 - 1949)
22. First India's Woman Governor (UP) - Sarojini Naidu (1647 - 1949)
23. First Indian Woman Ambassador at UN - Vijayalakshmi Pandit (1947 - 1949)
24. First Woman Union Minister (Minister of Health) - Rajkumari Amrita Kaur (1947 - 1957)
25. First Woman Chief Minister of State (UP) - Sucheta Kripalani (1963 - 1967)
26. India's First Woman Prime Minister - Indira Gandhi (1966-1977)
27. India's First Woman IPS Officer - Kiran Bedi (1975)
28. First Indian Woman to climb mt. Everest twice - Santhosh yadhav (1992 - 1993)
29. India's First Woman President - Pratiba Patil (2007 - 2012)
30. First transgender woman to be a police officer in India (Dharmapuri) - K. Prithika Yashini (2017)

## THE FOUR SMART STUDENTS :

One night four college students were out partying late night and didn't study for the test which was scheduled for the next day. In the morning, they thought of a plan.

They made themselves look dirty with grease and dirt. Then they went to the Dean and said they had gone out to a wedding last night and on their way back the tire of their car burst and they had to push the car all the way back. So they were in no condition to take the test.

The Dean thought for a minute and said they can have the re-test after 3 days. They thanked him and said they will be ready by that time.

On the third day, they appeared before the dean. the dean said that as this was a special Condition Test, all four were required to sit in separate classrooms for the test. They all agreed as they had prepared will in the last 3 days.

The Test consisted of only 2 questions with the total of 100 points :

1. your name? ___ (1 Points)
2. Which tir burst? _____ (99 Points)
   (a) Front Left (b) Front Right
   (c) Back Left (d) Back Right

**Moral of the Story :**

Take responsibility or you will learn your lesson.

**B. Samsath**
English Department

## உலக நாடுகளில் தாய்மொழிக் கல்வி

**முன்னுரை :**

உலக நாடுகளில் தாய்மொழிக் கல்வி என்ற தலைப்பில் எழுதப்பட்ட கட்டுரை இங்கெ இணைக்கப்பட்டுள்ளது. என்றும் கல்வி மொழி தாய்மொழியாக இருப்பதே சிறந்ததாகவும். பெருமை தரக்கூடியதாகவும் அமையும்.

**அறிவை வளர்க்கும் கருவி :**

சுவீடனில் பிறந்து வளரும் பிற மொழி குழந்தைகளுக்கு அவரவர் தாய்மொழியில் பேசி, கற்று தொடர்ந்து தாய்மொழியின் அறிவினைக் குழந்தை பெற்றுச் சிறக்க, சுவீடன் கல்வி துறை செயலாற்றிக் கொண்டிருக்கிறது. பிற மொழிக் குழந்தைகளுக்கான தாய் மொழிக் கல்வியின் அவசியம் பற்றி சுவீடன் கல்வித்துறை அவசியம் என்ற ஆய்வுகளின் அடிப்படையிலான அறிவியல் உண்மையைக் கல்வியாளர்களும் குழந்தை மருத்துவர்களும் ஏற்றுக்கொண்டிருக்கின்றனர். அவர்களின் குரலை இந்த அரசுகள் பிரதிப்பலிக்கிறது. அவரவர் தாய்மொழியில் கற்க வைப்பதன் மூலம் குழந்தைகளின் மனநல வளர்ச்சியும், பள்ளிக்கல்வியில் கற்பதில் கூர்மையும், அவர்கள் பிற மொழிகள் கற்கும் திறனும் கிடைக்கப் பெறுகிறார்கள்.

சுவீடனில் வளரும் பிற மொழிக் குழந்தைகள் கல்வியல் சிறந்து விளங்க அவரவர் தாய் மொழியைக் கற்பது மிக முக்கியம், என கருவதுவதால் பெரும் பொருளாதாரத்தை சுவீடன் அரசு செலவழிக்கிறது. அவர்களை பொறுத்தவரை அது செலவு அல்ல! சமூக முதலீடு.

**“ காற்றில் அலைகழிக்கப்படும் தூசு**
**போல ஒன்றுக்கும் உதவாதவன்**
**என்று எவருமே இருக்கக்கூடாது:**
**ஒவ்வொருவரும் மிளிர வேண்டும்**
**கோடானுகோடி விண்மீன் திரள்கள்**
**ஒவ்வொன்றும் ஒளிருவதைப் போல ........”** இவ்வாறு

வாசுகி சுகோம்லின்ஸ்கி என்பவர் கல்வியின் சிறப்பை உணர்ந்து கூறியுள்ளார்.

**ஐரோப்பிய நாடுகளில் தாய்மொழி**

ஐரோப்பிய நாடுகள் பெரும்பாலும் தன் நாட்டில் வளரும் பிற மொழியினரின் குழந்தைகளுக்கு அவரவர் தாய்மொழி கல்வியை வழங்கி வருகிறார்கள். மேலும், ஐரோப்பிய நாடுகள் பெருமானவற்றால், முழுமையான தனித்துவமான தமிழ் பள்ளிக்கூடங்களே தனி மனிதர்களாலும் தனி அமைப்புகளாலும் சர்வதேச அளவில் ஒருங்கிணைந்த தமிழர் அமைப்புகளாலும், அந்தந்த நாட்டு அரசின் பொருளாதார, அலுவலக ஒத்துழைப்பில் நடத்தப்பட்டு வருகிறது. இது தமிழுக்கு மட்டுமல்ல, பல மொழியினருக்கும் அவரவர் தாய் மொழி கல்விக்கு ஐரோப்பிய நாடுகள் ஒத்துழைப்பும் அங்கீகாரமும் வழங்குகின்றன. ஐரோப்பிய நாடுகளிலும் ஜப்பான், கொரியா, சீனா என அனைத்து நாடுகளிலும் பள்ளிக் கல்வி முதல் கல்லூரி கல்வி, பட்டப்படிப்பு வரை அவரவர் தாய்மொழியிலேயே கற்கும் கல்விக் கொள்கை இருக்கிறது.

**நாம் தமிழ் மக்கள்**
**நாம் நமது தாய்மொழி**
**வாயிலாகக் கல்வி**
**கற்றலே சிறப்பு. அதுவே**
**இயற்கை முறை ........**

என்று திரு. வி. கல்யாணசுந்தரனார் அவர்கள் தாய்மொழியின் சிறப்பைக் கூறியுள்ளார்.

நமீபியா அரசாங்கம் (1955 - 76) ஆம் ஆண்டு வரையில் ஆப்பிரிக்கா நாடுகளில் ஆங்கில வழிக் கல்வியோ அல்லது மக்களோடு தொடர்பில்லாத ஆப்பிரிக்கா மொழிக் கல்வியே இருந்தது. இதே காலக்கட்டத்தில் தென் ஆப்பிரிக்கா மற்றும் நமீபிய நாடுகளில் அனைத்து ஆப்பிரிக்கா மொழியே கல்வி மொழியாக இருந்தது. தாய்மொழிக்கல்வித் திட்டத்தால், பள்ளி இறுதி ஆண்டில் மாணவர்கள் 83% எண்ணிக்கை உயர்ந்தது. ஏனைய ஆப்பிரிக்கா நாடுகள், பிற மொழிக் கல்வித் திட்டத்திற்குச் செய்த செலவுகளைக் காட்டிலும் தென் ஆப்ரிக்கா பாதியளவு பொரளதாதாரத்தையே கல்விக்கு செலவிட்டிருந்தது. 1990-களில் தென் ஆப்பிரிக்கா

நாடு தன் கல்விக்கொள்கையை ஆங்கில மொழியில் பின்பற்றத் தொடங்கியது. பள்ளி இறுதி ஆண்டில் மாணாக்கர் வீதம் 44% ஆக குறைந்தது. இதற்குக் காரணம் தாய்மொழி வழக்கத்தில் இல்லாததே ஆகும்.

**தாய் மொழியைப் போற்றி**
**வீழ்ந்த நாடும் இல்லை ..........!**
**தாய் மொழியைப் புறக்கணித்து**
**வாழ்ந்த நாடும் இல்லை .........!**

இதற்கு நல்ல உதாரணம் நமீபியா

காந்தியடிகள் கருத்து

பயிற்று மொழி குறித்துச் சிந்திக்காமல் கல்வி கற்பிப்பது, அடித்தளம் இல்லாமல் கட்டத்தை எழுப்புவதைப் போன்றது.

கவி இரவீந்திரநாத் தாகூரின் ஈர்ப்பான இலக்கிய நடையின் உயர்வுக்குக் காரணம் ஆங்கிலத்தில் அவருக்கு உள்ள அறிவு மட்டுமன்று, தம்முடைய தாய்மொழியில் அவருக்கு இருந்த பற்றுதலுந்தான் காரணம்.

முன்கிராம் பேசும்போது குழந்தைகள், ஆண்கள், பெண்கள் அனைவரும் மிகுந்த ஈடுபாடுடன் கேட்கிறார்கள். இதற்குக் காரணம் அவர்தம் தாய்மொழி ஆகும்.

ஜெகதீஷ் சந்திரபோஸ், பி.சி. இராய் முதலியோரின் சாதனைகளைக் கண்டு, நாம் மகிழ்ச்சியடைகிறோம்.

**தாய்மொழி மூலம் கல்வி**
**அமைந்திருந்தால்,**
**நம்மிடையே பல**
**போஸ்களும். இராய்களும்**
**தோன்றியிருப்பார்கள் .........!**

போன்ற கருத்துகளை காந்தியடிகள் தாய்மொழியின் சிறப்புகளாக கூறுகிறார்கள்.


**முடிவுரை :**

பள்ளிக்கூடம் வீட்டைப் போன்று இருக்க வேண்டும். குழந்தைகளுக்கு வீட்டில் தோன்றும் எண்ணங்களுக்கும். பள்ளியல் தோன்றும் எண்ணங்களுக்கும் நெருங்கிய தொடர்பு இருக்க வேண்டும்.

தாய் மொழிகளின் தேவையை அறிந்த ஐ.நா. இரண்டாயிரமாவது ஆண்டு முதல் ஒவ்வோர் ஆண்டிலும் பிப்ரவரி இருபத்து ஒன்றாம் நாளை **உலக தாய் மொழி** நாளாக அறிவித்துள்ளது. மேலும் இரண்டாயிரத்து எட்டாம் ஆண்டை உலக தாய் மொழிகளின் ஆண்டாகவே அறிவித்துள்ளது.

**"தாய்மொழியே என்றும் நமது உயிர்மொழி"**

**கா. ஜோதி**
இளங்கலை இயற்பியல், இரண்டாம் ஆண்டு







**J. Mythili**
II B.Sc., Physics CA




**M. Anshiya**
B.Sc., Physics CA II Year




**P. Vijay Lakshmi**
B.Com II, II shift



**M. Subathra**
II Botany




**S. Dharsana**
II B.Sc., Maths





R. Haripiya
B.Com., I Year




P. Sneha
I B.Com., I Shift




P. Sangeetha
II Year, B.Sc., Botany





N. Kalkki (EM)
B.A., History II Year



K. Madhunila
II B.Sc., Mathematics



நிவிதா ஸ்ரீ. சோ
II B.Sc., விலங்கியல்



R. Iswarya
III-B.Sc., Mathematics (EM)




P. Ranjani
I B.A., Tamil Litt.

# பேரவை விழாக்கள்





பேரவைத் தொடக்க விழா

திருப்பூர் கவிஞர். **க. ஜோதி** – சிறப்பு விருந்தினர்

# சுதந்திர தின விழா



திருமதி. **சு. இந்திராணி** அவர்கள்
முதல்வர் (பொறுப்பு)



முனைவர். **எ. இலக்கின குமரன்** அவர்கள்
பேரவைப் பொறுப்பாசிரியர்
இயற்பியல் கணினிப் பயன்பாட்டுத்துறைத் தலைவர்

# குடியரசு தினவிழா



முதல்வர் (பொறுப்பு) சிறப்புரை



மாணவியின் கருத்துரை

# சர்வதேச யோகா தினத்தில் யோகா பயிற்சி





திருப்பூர் ஈசா யோகா மையம் சார்பில் யோகா பயிற்சி

# சர்வோதய தினம்





30-1-2020 அன்று தீண்டாமை மற்றும் தொழுநோய் ஒழிப்பு உறுதிமொழி

# முத்தமிழ் விழா




விழாவில் வாழ்த்துரை
திருமதி. **சு. இந்திராணி** அவர்கள்
முதல்வர் (பொறுப்பு)




திரு. **மு. துரைசாமி** அவர்கள் குழு
பட்டிமண்டபம்

# கல்லூரி ஆண்டு விழா




ஆண்டறிக்கை வாசித்தல்
முனைவர் **எ. இலக்கினகுமரன்** அவர்கள்
பேரவைப் பொறுப்பாசிரியர்



திருப்பூர் தெற்குத் தொகுதி, சட்டமன்ற உறுப்பினர்
உயர்திரு. **எஸ். குணசேகரன்** அவர்கள்

# பட்டமளிப்பு விழா



சிறப்பு விருந்தினர், பல்கலைக்கழகத் துணைவேந்தர்
முனைவர் **பெ. காளிராஜ்** அவர்கள்
பாரதியார் பல்கலைக்கழகம்



பல்கலைக்கழகத் தரவரிசைப் பெற்ற
மாணவியர்



சிறப்பு விருந்தினர் பட்டம் வழங்குதல்

# நூலகர் தினம்




திரு. **புருஷோத்தமன் ஐயா** அவர்களின்
சிறப்புரை

# சுழல் சங்க கிளை (Rotary Club)





திரு. **க. ரவீந்திரன்** அவர்கள்
திருப்பூர், இயற்கை சங்கத் தலைவர்

# விளையாட்டு விழா



திருப்பூர், ஜெயசித்ரா கார்மெண்ட்ஸ்,
நிர்வாக இயக்குநர்



கயிறு இழுத்தல் போட்டி

# நாட்டு நலப்பணித் திட்டம்



ஈட்டி வீரம்பாளையம் ஊராட்சி
தூய்மை இந்தியா சிறப்பு களப்பணி



நெகிழி ஒழிப்பு – துணிப்பை வழங்குதல்

# நுண்கலை மன்ற விழா




மண் மணம் மாறாத மங்கையரின் பொலிவு




என்னவென்று சொல்வதம்மா

## மகளிர் தின விழா



சிறப்பு விருந்தினர்,
முனைவர். **சி. வேதநாயகி** அவர்கள், முன்னாள் முதல்வர்,
சிக்கன்னா அரசு கலைக்கால்லூரி, திருப்பூர்

## நுகர்வோர் பாதுகாப்புக் குழு



நுகர்வோர் பாதுகாப்புச் சட்டம் குறித்த
கலந்துரையாடல்

# பேரவை நிறைவு விழா




பேரவைப் பொறுப்பாசிரியர்
மகிழ்வுரை



பேரவைப் பொறுப்பாளர்கள்

# மன்ற விழாக்கள்

## தமிழ்த் துறை



**திரு. வி. உமாபதி** அவர்கள்
கோயம்புத்தூர்

## ஆங்கிலத் துறை



டாக்டர். **C. முரளீதரக்கண்ணன்** அவர்கள் M.A., M.Phil., Ph.D.,
Asst. Prof. PG & Research Dept. of English, Coimbatore

## வரலாற்றுத்துறை



முனைவர். **ஆர். ராஜவர்மன்** அவர்கள்
திரு. **ஜே. முல்லை அரசு** அவர்கள்
முனைவர். **ஆர். பூங்குன்றன்** அவர்கள்


எல்.ஆர்.ஜி. கல்லூரியில்
நாணயவியல் கண்காட்சி

தமிழ்ப் பண்பாட்டு மையம்
திரு. **ஆறுமுகம் ராஜேந்திரன்** அவர்கள்

## பொருளாதாரத் துறை



முனைவர். **T. சம்பத்குமார்** அவர்கள்
உதவிப் பேராசிரியர், அரசு கலைக் கல்லூரி, கோவை.

## வணிகவியல் துறை




கவிஞர். **மகுடேஸ்வரன்** அவர்கள்
Export Consultant, Sri Exports, Tirupur

## வணிகவியல் க.ப. துறை



முனைவர். **எஸ். பாலமுருகன்** அவர்கள்
உதவிப் பேராசிரியர், அவிநாசி

## வணிக நிர்வாகவியல் துறை



முனைவர். **எஸ். சரவணகுமார்** அவர்கள்
வணிக நிர்வாகவியல் துறைத்தலைவர், அரசு கலைக்கல்லூரி
சேலம் - 7.

## கணிதத் துறை



டாக்டர் **யூ. சுகன்யா** MBBS, DPM அவர்கள்
Maths & Mental Health

## இயற்பியல் துறை




டாக்டர் **ஜே. தீபா** அவர்கள்
உதவிப் பேராசிரியர்,
அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரி, கோவை

## இயற்பியல் கணினிப் பயன்பாட்டுத் துறை



முனைவர் **நா. அழகப்பன்** அவர்கள்
உதவிப் பேராசிரியர்
பி.எஸ்.ஜி. தொழில்நுட்பக் கல்லூரி, கோவை

## வேதியியல் துறை



Eminence in Chemistry
டாக்டர் **S. கீதா** அவர்கள்
இணைப்பேராசிரியர் மற்றும்
தாவரவியல் துறைத்தலைவர்

## விலங்கியல் துறை



முனைவர். **ப. கீதா ஸ்ரீகாந்த்** அவர்கள் M.Sc., M.Phil., Ph.d.,
உதவிப் பேராசிரியர், அமிர்தா விஷ்ய வித்யா பீடம், கோவை

## தாவரவியல் துறை



முனைவர் **எஸ். கற்பகவள்ளி** அவர்கள்
இணைப் பேராசிரியர் மற்றும் கணினி அறிவியல் துறைத் தலைவர்
பூ.ச.கோ. கிருஷ்ணம்மாள் மகளிர் கல்லூரி. கோவை

## கணினி அறிவியல் துறை



**Mr. Perumal Balusamy MCA**
Delivery Manager and Science Master, Chennai

## மின்னணுவியல்



உயர்திரு. **S. குணசேகரன்** அவர்கள் MLA
திருப்பூர் – தெற்கு

## நுண்ணுயிரியல் துறை




முனைவர். **ச. சண்முகம்** அவர்கள்
உதவிப் பேராசிரியர், நுண்ணுயிரியல் துறை,
பிரசிடன்சி கல்லூரி, சென்னை

# உணவு மற்றும் ஊட்டச்சத்தியல்



உலக தாய்ப்பால் வார விழிப்புணர்வு முகாம்
– கல்லூரி



உலக தாய்பால் வார விழிப்புணர்வு முகாம்
அரசு மருத்துவமனை, திருப்பூர்

# எம்.ஜி.ஆர். நூற்றாண்டு விழாக் கட்டிடத் திறப்பு நிகழ்ச்சி



கட்டிடத்தின் முகப்புத் தோற்றம்



முதல்வர்,
முனைவர். **பி. பொன்முத்துராமலிங்கம்** M.Sc., M.Phil., Ph..,
குத்துவிளக்கு ஏற்றல்



இணைப்பேராசிரியர், தாவரவியல் துறைத் தலைவர்,
முனைவர். **சு. கீதா** அவர்கள்
குத்துவிளக்கு ஏற்றுதல்



சிறப்பு விருந்தினர்,
திருப்பூர் தெற்கு சட்டமன்ற உறுப்பனிர்
**உயர்திரு. குணசேகரன்** அவர்களுக்குப்
பொன்னாடை அணிவித்தல்

# எல். ஆர். ஜி.

## அரசு மகளிர் கலைக் கல்லூரி, திருப்பூர் - 4.

தேசியத் தர மதிப்பீடு B

ஆண்டு மலர்

2018 - 2019

மலர் - 49


தொலைபேசி எண்

0421 2210300

தொலை அச்சு

0421 2214933

மின்னஞ்சல்

lrggac@gmail.com

# மலர்க்குழு

## தலைவர்

டாக்டர். **P. பொன் முத்துராமலிங்கம்** M.Sc., M.Phil., Ph.D.,
முதல்வர்

## பதிப்புக்குழு

முனைவர். **ஜோ. கிரிஜா ஆரோக்கியமேரி**
உதவிப் பேராசிரியர். தமிழ்த்துறை

முனைவர். **ஏ.ஆர். ஈசுவரி**
உதவிப் பேராசிரியர். தமிழ்த்துறை

## பேராசிரியர்கள்

முனைவர். **மா. தமிழ்மலர்**
இணைப் பேராசிரியர் மற்றும் தமிழ்த்துறைத் தலைவர்
முனைவர். **ஜா. அமைதி அரசு**
முனைவர். **மு. அவையாம்பாள்**
முனைவர். **கோ. புவனேசுவரி**
முனைவர். **ச. அமுல் செல்வி**




டாக்டர். **P. பொன் முத்துராமலிங்கம்** M.Sc., M.Phil., Ph.D.,
முதல்வர்

தெளிந்த சிந்தனை, செயலில் உறுதி
ஆய்ந்த மதி நுட்பம் அவர் தாம் எம் முதல்வர்

## வாழ்த்துக்களுடன்

*ஏற்ற மிகு*

எல்.ஆர்.ஜி. கல்லூரியின்
2018 – 2019 ஆம் ஆண்டு மலர் படைக்க
அன்பிற்குரிய மாணவச் செல்வங்கள்
அனைவரிடமும்

அவர்தம்
எண்ணக் கருத்துக்களை
எழுத்துருவில் வடிவமைக்க
அழைப்பு விடுத்தோம்

திறமைமிக்க
மாணவர்கள் தம் எண்ணக் குவியல்களை
வண்ண வண்ண முத்துக்களில்
வடிவமைத்துத் தந்தனர்

மாணவர்களின் சிந்தனை உளி
செதுக்கிய
பேசும் கவிதைகளையும்
பேசா ஓவியங்களையும்
பொன் மாலை போல்
தொடுத்துக் கொடுத்துள்ளோம்.

கல்லூரி மாணவியரின்
கருத்துக் கோவைகளை
ஆண்டு மலரில்
அழகாய் மலர்ந்திடச் செய்த
மாணவப் படைப்பாளர்கள்
அனைவரையும்
ஒருங்கிணைத்த
முதல்வர்
மற்றும் பேராசிரியர்கள் அனைவருக்கும்
நன்றி கூறுகிறோம்.

**உங்கள் கரங்களில் ஆண்டுமலர்**
**மணம்வீசத் தொடுத்துத்தந்த**
**பதிப்புக்குழு**

# பொருளடக்கம்


1. கல்லூரி ஆண்டறிக்கை ...
2. படைப்புகள் ...
3. ஓவியங்கள் ...
4. விழாப் புகைப்படங்கள் ...

# எல்.ஆர்.ஜி.

## அரசு மகளிர் கலைக் கல்லூரி, திருப்பூர்.

# கல்லூரி ஆண்டறிக்கை 2018 – 2019

*ஆன்ம அதிர்வலையில் ஆழ்ந்திருக்கும்*
*மேற்கு மலை அடுக்கம்*
*குறுமணல் கொழித்தோடும்*
*நொய்யல் நதி தீரம்*
*பின்னலாடையில் மின்னும்*
*கொங்கின் இதயம் நம் திருப்பூர்*
*கார் அஞ்சு கரதலத்தால் மிளிரும் – நம்*
*எல்.ஆர்.ஜி. அரசு கல்லூரி*
*சாமானியரை சாதிக்க வைக்கும்*
*எழில்மிகு கலைக் கல்லூரி*

திருப்பூர், ஈரோடு, கோவை, நீலகிரி மாவட்டங்களிலேயே மகளிருக்காக நடத்தப்படும் ஒரே அரசு மகளிர் கலைக் கல்லூரி எல்.ஆர்.ஜி. அரசினர் மகளிர் கலைக் கல்லூரி, இந்தக் கல்லூரி அரசு ஆணையுடன் 1971-ஆம் ஆண்டு ஜுலைத் திங்கள் 15-ம் நாள் 221 மாணவிகளுடன் செயல்படத் தொடங்கியது. திருப்பூர் மாவடத்தில் மகளிர்க்கென்று தனிக்கல்லூரி அமைவதற்கு அடித்தளம் அமைத்துக் கொடுத்து, நிலத்தை நன்கொடையாக வழங்கிய மதிப்பிற்குரிய எல்.ஆர்.ஜி. குடும்பத்தினரை நன்றியுடன் நினைவு கூறுகிறோம். 47 ஆண்டுகள் கல்விப்பணியினை நிறைவு செய்த நம் கல்லூரியின் 2018-2019 ஆம் கல்வி ஆண்டிற்கான ஆண்டறிக்கை.

இளங்கலையில், தமிழ், ஆங்கிலம், வரலாறு, பொருளாதாரம் ஆகிய பாடப்பிரிவுகளும், இளம் அறிவியலில் கணிதம், இயற்பியல், இயற்பியல் கணினிப் பயன்பாடு, வேதியியல், விலங்கியல், நுண்ணுயிரியல், தாவரவியல், மின்னணுவியல், கணினி அறிவியல், உணவு அறிவியல் மற்றும் ஊட்டசத்தியல் ஆகிய பாடப்பிரிவுகளும், இளம் வணிகவியல், வணிகவியல் மற்றும் வணிகவியல் கணினிப்பயன்பாடு, வணிக நிர்வாகவியல் ஆகிய பாடப்பிரிவுகளும், முதுகலையில் தமிழ், ஆங்கியலம், வரலாறு, பொருளாதாரம், கணிதம், கணினி அறிவியில், விலங்கியல், வேதியியல் மற்றும் வணிகவியல் ஆகிய பாடப்பிரிவுகளும், கணிதம், இயற்பியல், வேதியியல், விலங்கியல் மற்றும் கணினி அறிவியல் பாடப்பிரிவுகளும் பயிற்றுவிக்கப்படுகின்றன. இக்கல்வியாண்டில் மொத்தம் 3635 மாணவியர்கள் பயின்று வருகின்றனர்.

நம் கல்லூரியின் முதல்வராக முனைவர். பி. பொன் முத்துராமலிங்கம் அவர்கள் 30-06-2018 அன்றுமுதல் பொறுப்பேற்று செவ்வனே திறம்பட செயல்பட்டு வருகிறார்.

**பணியிடங்கள் விபரம்:**

1. முதல்வர் உட்பட அரசினால் அங்கீகரிக்கப்பட்ட மொத்தப் பணியிடங்கள்-142
2. நிரப்பப்பட்ட ஆசிரியர் பணியிடங்கள் (முதல்வர் உட்பட)-90
3. ஆசிரியரல்லாத பணியாளர்களின் மொத்தப் பணியிடங்கள்-30
4. நிரப்பப்பட்ட ஆசிரியரல்லாத பணியாளர்களின் எண்ணிக்கை-09
5. அரசு நியமித்த கௌரவ விரிவுரையாளர்களின் எண்ணிக்கை-39
6. பெற்றோர் ஆசிரியர் கழகத்தால் நியமிக்கப்பட்டவர்கள் -39
7. முன்னாள் மாணவியர் சங்க நிதியிலிருந்து நியமிக்கப்பட்டவர்களின் எண்ணிக்கை - 07
8. கணினி அறிவுப் பயிற்சித் திட்ட நிதியிலிருந்து நியமிக்கப்பட்டவர்களின் எண்ணிக்கை - 05
9. விளையாட்டு குறியீட்டாளர் - 01

**பணியிட மாற்றம் பெற்றுச் சென்ற பேராசிரியர்கள்**

1. முனைவர். N. இரமாபிரபா - தமிழ்த்துறை
2. முனைவர். A. புனிதா - தமிழ்த்துறை
3. முனைவர். N. மகாலட்சுமி - தமிழ்த்துறை
4. முனைவர். A. சக்திவேல் - வரலாற்றுத்துறை
5. திருமதி. E. தமிழ்மணி - கணிதத்துறை
6. முனைவர். S. சண்முகம் - நுண்ணுயிரியல்
7. முனைவர். K. ஆர்த்தி - கணினி அறிவியல்
8. முனைவர். S. தாமரைச்செல்வி - வேதியியில்
9. முனைவர். T. அமுதா - வேதியியல்
10. முனைவர். R. தமிழ்ச்செல்வி - வேதியியல்
11. முனைவர். C.R. கற்பகம் - வணிகவியல்
12. திருமதி V. லட்சுமிபிரபா - உடற்கல்வி இயக்குநர்

**பணியிட மாற்றம் பெற்று வந்த பேராசிரியர்கள்**

1. முனைவர். S. கீதா - கணினி அறிவியல்
2. முனைவர். G. வேதா - வணிக நிர்வாகவியல்

**முனைவர் பட்டம் பெற்ற பேராசிரியர்கள்**

1. முனைவர். மு. ஆனந்தி - கணிதத் துறை
2. முனைவர். கோ. சுபா - உணவு மற்றும் ஊட்டச்சத்தியியல்
3. முனைவர். க. வெண்மதி - மின்னணுவியல்

4. முனைவர். வே. மலர் - ஆங்கிலம்

பணி ஓய்வு பெற்றவர்கள்

1. முனைவர். பெ. எஸ்தர் ஜாய்ஸ் - முதல்வர்
2. முனைவர். த. ரமணி - தமிழ்த் துறை
3. திருமதி. ப. இந்திராணி - வரலாற்றுத் துறை

புத்தறிவுப் **(Refresher)** பயிற்சியில் பங்கு பெற்ற பேராசிரியர்கள்

1. முனைவர். மு. அவையாம்பாள் - தமிழ்த்துறை
2. முனைவர். ந. மகாலட்சுமி - தமிழ்த்துறை
3. முனைவர். கு. கல்பனா கார்த்தி - ஆங்கிலத்துறை
4. திருமதி. க. கீதா - ஆங்கிலத்துறை
5. முனைவர். பெ. மாலதி - ஆங்கிலத்துறை
6. முனைவர். ஆலிவ்தம்பி - ஆங்கிலத்துறை
7. முனைவர். ஜி. நிர்மலா - ஆங்கிலத்துறை
8. முனைவர். ரா. செல்வி - பொருளாதாரத்துறை
9. முனைவர். எம். சிவமணி - பொருளாதாரத்துறை
10. முனைவர். வெ.பா. உஷா - பொருளாதாரத்துறை
11. முனைவர். அ. மனோன்மணி - கணிதத்துறை
12. திருமதி. சு. ஜெயலட்சுமி - கணிதத்துறை
13. முனைவர். மு. ஆனந்தி - கணிதத்துறை
14. முனைவர்.சா. ஜானகி - கணிதத்துறை
15. முனைவர். இரா. தேவி - கணிதத்துறை
16. முனைவர். ஜெ. மைக்கேல் அன்னாஸ்பின்னலி-கணிதத்துறை
17. திருமதி. ஜெ. ஜெயசித்ரா - இயற்பியல் துறை
18. முனைவர். பா. எஸ்தர் - இயற்பியல் துறை
19. முனைவர். இல. பிரியா - இயற்பியல் துறை
20. முனைவர். அ. கிங்சன் சாலமன் ஜீவராஜ் - இயற்பியல் துறை
21. முனைவர். ஆ. இலக்கினகுமரன் - கணினி பயன்பாடு
22. முனைவர். நா. மீனாட்சி சுந்தரம் - இயற்பியல் துறை
23. திருமதி. சு. கிருஷ்ணவேணி - வேதியியல் துறை
24. முனைவர். தி. சாந்தி - வேதியியல் துறை
25. முனைவர். ரா. கார்த்திகை செல்வி - வேதியியல் துறை
26. முனைவர். கே. மூர்த்திகுமார் - விலங்கியல் துறை
27. முனைவர். கே. பானு ரவி கணேஷ் - விலங்கியல் துறை
28. முனைவர். செ. சுதா - வேதியியல் துறை
29. முனைவர். சு. வினோதினி - தாவரவியல் துறை

30. முனைவர். இர. குருசாமி - தாவரவியல் துறை
31. முனைவர். த. பாலசரவணன் - தாவரவியல் துறை
32. முனைவர். இர. சிவகுமார் - தாவரவியல் துறை
33. முனைவர். ர. காந்திமதி - நுண்ணுயிரியல் துறை
34. முனைவர். அ.பா. ஸ்ரீதேவி - மின்னணுவியல்
35. முனைவர். க. வெண்மதி - மின்னணுவியல்
36. முனைவர். க. சரோஜினி - கணினி அறிவியில் துறை
37. முனைவர். அ. அன்பரசி - கணினி அறிவியல் துறை
38. முனைவர். எஸ். கீதா - கணினி அறிவியல் துறை
39. முனைவர். ம. கிருஷ்ணவேணி - வணிகவியல் துறை
40. முனைவர். க. பிருந்தா - வணிகவியல் துறை
41. முனைவர். வெ.சு. காஞ்சனா - வணிகவியல் துறை
42. முனைவர். ஜெ. சுகந்தி - வணிகவியல் துறை
43. முனைவர். ரா. கௌசல்யா தேவி - வணிகவியல் துறை
44. முனைவர். ரா. அம்சவேணி - வணிகவியல் துறை
45. முனைவர். சே. சசிகலா - வணிகவியல் கணினி பயன்பாட்டுத்துறை
46. முனைவர். தி.நாகநந்தி - வணிகவியல் கணினி பயன்பாட்டுத்துறை

**தேசிய மற்றும் சர்வதேச கருத்தரங்கம் மற்றும் பயிற்சிப் பட்டறையில் பங்கு பெற்ற பேராசிரியர்கள்**

**சர்வதேச அளவில் (International) - 06**

முனைவர். கோ. புவனேஸ்வரி - 09-11-2018 கொழும்பு தமிழ்ச் சங்கம் ஸ்ரீலங்காவில் நடைபெற்ற ஆய்வு கருத்தரங்கில் பங்கு பெற்று ஆய்வுக் கட்டுரை சமர்ப்பித்தார்.

முனைவர். அ. கிங்சன் சாலமன் ஜீவராஜ் - 16.04-2018 முதல் 20-04-2018 International Conferences - INUP Hands on Nano Fabrication Technologies இந்திய தொழில்நுட்ப நிறுவனம் (IIT) - மும்பை and 12-07-2018 முதல் 13-07-2018 Awareness - Cum - Training Programme on Plasma Science & Technology and Energy From Nucler Fusion. இந்திய அறிவியல் நிறுவனம், பெங்களூரு.

Dr. Litty Koria, Dr. P. Sumathi - (17-12-2018) - International Conferences - Research tools in biological science at J.K.K. Nataraja College of Arts & Science Kumarapalayam and (30-01-2019) Economic prospects of life science at G.V.G. Vishalakshi College For Women.

Dr. S. Sasikala - (12-10-2018) - International Conferences - An Emergence of cloud computing in E-Commerce word on paradigm shift towards cloud banking at Sankara College of Arts and Science (08-09-2018) - AComparitive study on customer satisfication towards online & offline shopping Global issues innovation & Future challenges in Business Econamics & management.

தேசிய அளவில் (National) - 22
பயிற்சிப்பட்டறை (Workshop) - 08

அறிவியல் இதழ்களில் (Journals) ஆய்வுக்கட்டுரைகள் வெளியிட்ட பேராசிரியர்கள்

சர்வதேச அளவில் (International) மற்றும் தேசிய அளவில் (National) - 26

**பாரதியார் பல்கலைக்கழகத்தின் 2017-18ம் கல்வியாண்டில் பல்கலைக்கழகத் தரவரிசைப் பட்டியலில் இடம் பெற்ற மாணவியர்கள் விவரம்**

| வ.எண். | துறை | பெயர் | தரம் |
|---|---|---|---|
| 1 | வரலாற்றுத்துறை | M. தீபா | முதல் இடம் |
| | | D. யோகஸ்ரீ | நான்காம் இடம் |
| | | J. உமாமகேஸ்வரி | ஐந்தாம் இடம் |
| | | G. தமிழரசி | ஆறாம் இடம் |
| | | A. சுபைரா | ஒன்பதாம் இடம் |
| | | D. விஷ்ணுபிரியா | பத்தாம் இடம் |
| 2 | பொருளாதாரத் துறை | E. காயத்ரி | மூன்றாம் இடம் |
| | | S. யோகேஷ்வரி | ஆறாம் இடம் |
| | | S. காயத்ரி | எழாம் இடம் |
| | | S. ஶ்ரீதீஷ்வரி | எட்டாம் இடம் |
| | | P. யோகனப்பிரியா | பத்தாம் இடம் |
| 3 | கணிதத்துறை | R. சுவாதி | முதல் இடம் |
| | | J. ஹேமபிரியா | ஒன்பதாம் இடம் |
| 4 | இயற்பியல் துறை | H. ஆஷிபா | மூன்றாம் இடம் |
| | | S. பவஸ்ரீ | ஏழாம் இடம் |
| 5 | இயற்பியல் மற்றும் கணினி துறை பயன்பாடு துறை | S. பவானி | முதல் இடம் |
| | | K.M. காவ்யா | இரண்டாம் இடம் |
| | | G. கௌசல்யா | மூன்றாம் இடம் |
| 6 | விலங்கியல் துறை | M. லோகநாயகி | மூன்றாம் இடம் |
| | | J. கிருத்திகா | பத்தாம் இடம் |
| 7 | தாவரவியல் துறை | R. மாலதி | நான்காம் இடம் |
| | | S. சர்மிளா பேகம் | ஏழாம் இடம் |
| | | K. இந்துமதி | பத்தாம் இடம் |

| வ.எண். | துறை | பெயர் | தரம் |
|---|---|---|---|
| 8 | உணவு அறிவியல் மற்றும் ஊட்டச்சத்தியல் துறை | M. வித்யா | இரண்டாம் இடம் |
| 9 | மின்னணுவியல் துறை | P. வித்யா | இரண்டாம் இடம் |
| 10 | கணினி அறிவியல் துறை | M. பிரியங்கா | இரண்டாம் இடம் |

**முதுகலைப் பாடப்பிரிவுகள்**

| வ.எண். | துறை | பெயர் | தரம் |
|---|---|---|---|
| 1 | ஆங்கிலத் துறை | A. தெரசா | ஏழாம் இடம் |
| 2 | வரலாற்றுத் துறை | G. கீதாஞ்சலி | முதல் இடம் |
| 3 | பொருளாதரத் துறை | P. புவனேஷ்வரி | நான்காம் இடம் |
| | | M. முபீன் | ஆறாம் இடம் |
| 4 | கணிதவியல் துறை | V. யோகமாயா | மூன்றாம் இடம் |
| | | T. செல்வலட்சுமி | பத்தாம் இடம் |
| 5 | வேதியியல் துறை | V. கௌதமி | நான்காம் இடம் |
| 6 | விலங்கியல் துறை | K. தமிழரசி | நான்காம் இடம் |
| 7 | கணினி அறிவியல் துறை | A. ரம்யா | முதல் இடம் |

**பல்கலைக் கழகத் தேர்ச்சி விழுக்காடு**

| துறை | Pass Percentage % | | Distinction | |
|---|---|---|---|---|
| | UG | PG | UG | PG |
| தமிழ் | 96% | 100% | - | 2.5% |
| ஆங்கிலம் | 100% | 100% | Nil | 2.8% |
| வரலாறு | 97.5% | 100% | 2% | 6% |
| பொருளாதாரம் | 100% | 100% | - | - |
| கணிதம் | 95.5% | 90% | 48% | 28% |

### பல்கலைக் கழகத் தேர்ச்சி விழுக்காடு

| துறை | Pass Percentage % | | Distinction | |
|---|---|---|---|---|
| | UG | PG | UG | PG |
| இயற்பியல் துறை | 95% | - | 40% | - |
| இயற்பியல் கணினி பயன்பாடு | 88.23% | - | 10% | - |
| வேதியியல் | 72.5% | 78% | 8.5% | 22% |
| விலங்கியல் | 77% | 100% | 21% | 85% |
| தாவரவியல் | 97.5% | - | 11% | - |
| நுண்ணுயிரியல் | 58.33% | - | 4.2% | - |
| உணவு அறிவியல் மற்றும் ஊட்டச்சத்தியல் | 71% | - | 4.1% | - |
| மின்னணுவியல் | 100% | - | 30% | - |
| கணினி அறிவியல் | 100% - I<br>98% - II | 100% | 29% - I<br>26% - II | 100% |
| வணிகவியல் | 92% - I<br>96.3% - II | 100% | Nil | Nil |
| வணிகவியல் கணினி பயன்பாடு | 96.4% - I<br>96.27% - II | - | - | - |

இவ்வாண்டு நம் மாணவிகள் 35 பேர் பல்கலைக்கழகத் தரவரிசைப் பட்டியலில் இடம் பெற்று நம் கல்லூரிக்குப் பெருமை சேர்த்துள்ளனர்.

| S.No. | Department | M.Phil | | Ph.D | |
|---|---|---|---|---|---|
| | | P.T | F.T | P.T | F.T |
| 1 | English | 1 | 4 | 8 | - |
| 2 | Commerce | - | 4 | 3 | - |
| 3 | Mathematics | - | - | 2 | - |
| 4 | Physics | - | - | - | - |
| 5 | Chemistry | - | - | - | - |
| 6 | Economics | - | Registered -3<br>Completed | - | - |
| 7 | zoology | Registered -1<br>Completed | Registered -1<br>Completed | Registered -1<br>Completed | - |
| 8 | Computer Science | - | - | Registered -19 | - |

2010-2013 ஆம் ஆண்டு இளமறிவியல் விலங்கியல் பாடப்பிரிவில் நமது கல்லூரியில் படித்த பி. கௌசல்யா என்ற மாணவி ஜூலை - 2012 ஆம் ஆண்டு நடந்த TNPSC Group IV ல் தேர்வில் வெற்றி பெற்று Junior Asst., ஆக பணியாற்றினார்

2015 ஆம் ஆண்டு நடைபெற்ற TNPSC Group II தேர்வில் வெற்றி பெற்று Junior Employment Officer ஆக பணியமர்த்தப்பட்டார். தற்போது 2017 ஆம் ஆண்டு நடந்த TNPSC Group I தேர்வில் மாநிலத்தில் முதல் மாணவியாகத் தேர்ச்சியடைந்து Deputy Collector ஆக பணியேற்க உள்ளார்.

இம்மாணவிகளுக்கும் அவர்களுக்கு வழி காட்டிய பேராசிரியப் பெருந்தகைகளுக்கும் பாராட்டுகளை உரித்தாக்கிக் கொள்கிறோம்.

**கல்லூரிப் பேரவை**

2018-19ஆம் கல்வி ஆண்டிற்கான கல்லூரிப் பேரவை மின்னணுவியல் துறை பொறுப்பில் செயல்பட்டு வருகிறது.

கல்லூரிப் பேரவை தொடக்கவிழா 20-08-2018 அன்று கல்லூரி முதல்வர் முனைவர். பி. பொன் முத்துராமலிங்கம், அவர்கள் தலைமையில் நடைபெற்றது.

திருப்பூர் தெற்கு ரோட்டரி சங்கத் தலைவரும், வழக்குரைஞர் உயர்திரு. Rtn. ஆ. கனகராஜ் அவர்கள் சிறப்பு விருந்தினராகக் கலந்து கொண்டார். அவர் தமது சிறப்புரையில் பெண் கல்வியின் சிறப்பினையும் தனி மனித ஒழுக்கத்தையும் பற்றி பல அருமையான கருத்துக்களை சிறப்பாக எடுத்துரைத்தார். மேலும் கல்லூரிக்கு ரூபாய் 12 லட்சம் மதிப்பளவில் மேசை, நாற்காலிகள், ஆய்வக மேசைகள், Water Doctor, Incinerator போன்ற பல உபகரணங்களை வழங்க திருப்பூர் தெற்கு ரோட்டரியின் மூலம் ஏற்பாடு செய்து கொடுத்துள்ளார்.

பேரவைப் பொறுப்பாளர்களை மின்னணுவியல் துறை பேராசிரியர் முனைவர். கி. ராஜேந்திரன் அவர்கள் அறிமுகம் செய்து வைத்துள்ளார். பேரவை உறுப்பினர்கள் “ பேரவை பொறுப்பு உறுதிமொழி” ஏற்றனர்.

**பேரவைப் பொறுப்பாளர்கள் :**

1. பேரவைத் தலைவி : V. சௌந்தர்யா, மூன்றாம் ஆண்டு வணிகவியல்
2. பேரவைத் துணைத்தலைவி : G. நர்மதா, மூன்றாம் ஆண்டு நுண்ணுயிரியல்
3. பேரவைப் பொருளாளர் : K. பிரித்தா, மூன்றாம் ஆண்டு மின்னணுவியல்
4. நுண்கலை மன்றச் செயலர் : S. சரோஜா, மூன்றாம் ஆண்டு வரலாறு
5. விளையாட்டு மன்றச் செயலர் : M. ரம்லா பேகம், மூன்றாம் ஆண்டு வரலாறு

ஆகியோர் தேர்ந்தெடுக்கப்பட்டனர்.

### துறை சார்ந்த மன்றச் செயலாளர்கள் :

| வ.எண். | துறை | பெயர் | வகுப்பு |
|---|---|---|---|
| 1. | தமிழ் | சி. பிரியதர்சினி | மூன்றாம் ஆண்டு தமிழ் இலக்கியம் |
| 2. | ஆங்கிலம் | மா. பவித்ரா | மூன்றாம் ஆண்டு ஆங்கிலம் |
| 3. | வரலாறு | சி. கௌரி | மூன்றாம் ஆண்டு வரலாறு |
| 4. | பொருளாதாரம் | வீ. நித்ய ஸ்ரீ | மூன்றாம் ஆண்டு பொருளாதாரம் |
| 5. | கணிதம் | மா. கல்பனா | மூன்றாம் ஆண்டு கணிதம் |
| 6. | இயற்பியல் | மு. ஸ்ரீஜா | மூன்றாம் ஆண்டு இயற்பியல் |
| 7. | இயற்பியல் (க.ப.) | பி. பிந்துஜா | மூன்றாம் ஆண்டு இயற்பியல் (க.ப.) |
| 8. | வேதியியல் | மோ. சுகன்யா | மூன்றாம் ஆண்டு வேதியியல் |
| 9. | விலங்கியல் | மு. பிரியங்கா | மூன்றாம் ஆண்டு விலங்கியல் |
| 10. | தாவரவியல் | ரா. கவிபாரதி | மூன்றாம் ஆண்டு தாவரவியல் |
| 11. | நுண்ணுயிரியல் | ஈ. நித்யா | மூன்றாம் ஆண்டு நுண்ணுயிரியல் |
| 12. | உணவு மற்றும் ஊட்டச்சத்தியல் | மோ. சுகன்யா | மூன்றாம் ஆண்டு உணவு மற்றும் ஊட்டச்சத்தியல் |
| 13. | மின்னணுவியல் | ப. வைஷ்ணவி | மூன்றாம் ஆண்டு மின்னணுவியல் |
| 14. | கணினி அறிவியல் | ஆ. கிருபாநந்தினி | மூன்றாம் ஆண்டு கணினி அறிவியல் |
| 15. | வணிகவியல் | மோ. ஏஞ்சல் கிறிஸ்டி | மூன்றாம் ஆண்டு வணிகவியல் |
| 16. | வணிகவியல் (க.ப.) | மு.அ.பர்ஹானா தபசும் | மூன்றாம் ஆண்டு வணிகவியல் (க.ப.) |
| 17. | வணிக நிர்வாகவியல் | அ. மதுமிதா | இரண்டாம் ஆண்டு வணிக நிர்வாகவியல் |

### பேரவை நடத்திய விழாக்கள் :

| வ. எண். | விழாக்கள் | நாள் | சிறப்பு விருந்தினர்கள் |
|---|---|---|---|
| 1 | ஈஷா யோகா - International Yoga Day | 26-06-2018<br>27-06-2018 | ஈஷா யோகா மையத்தின் சார்பாக முதல்வர் பொறுப்பு பேராசிரியை S. இந்திராணி (கணிதத்துறை) அவர்கள் முன்னிலையில் உபயோகா பயிற்சி அளிக்கப்பட்டது. |
| 2 | உழவர் பாதுகாப்புத் திட்டம் | 14-07-2018 | மாவட்ட வருவாய் அலுவலர் தலைமையில் முதலமைச்சரின் உழவர் பாதுகாப்புத் திட்டத்தின் கீழ் உறுப்பினராக பதிவு பெற்ற பெற்றோர்களின் மகள்களுக்கு கல்வி உதவித்தொகை வழங்கும் முகாம் நடைபெற்றது. |

| வ. எண். | விழாக்கள் | நாள் | சிறப்பு விருந்தினர்கள் |
|---|---|---|---|
| 3 | சுதந்திர தின விழா | 15-08-2018 | முனைவர். P. பொன்முத்துராமலிங்கம் கல்லூரி முதல்வர், எல்.ஆர்.ஜி. கல்லூரி |
| 4 | கல்லூரி பேரவைத் தொடக்க விழா | 20-08-2018 | உயர்திரு. Rtn. Adv. M. கனகராஜ் MA.ML., அவர்கள், தலைவர், திருப்பூர் தெற்கு ரோட்டரி |
| 5 | பொங்கல் விழா | 12-01-2019 | முனைவர். P. பொன்முத்துராமலிங்கம் கல்லூரி முதல்வர், எல்.ஆர்.ஜி. கல்லூரி |
| 6 | குடியரசு தின விழா | 26-01-2019 | முனைவர். P. பொன்முத்துராமலிங்கம் கல்லூரி முதல்வர், எல்.ஆர்.ஜி. கல்லூரி |
| 7 | சர்வோதய தினம் | 30-01-2019 | முதல்வர் தலைமையில் சர்வசமய பிரார்த்தனை, தீண்டாமை ஒழிப்பு உறுதிமொழி மற்றும் தொழுநோய் ஒழிப்பு உறுதிமொழி எடுத்துக் கொள்ளப்பட்டது. |
| 8 | கல்லூரி ஆண்டு விழா | 07-03-2019 | Sky. V. சுந்தரராஜன், நிறுவனர், Sky Group of Companies, Tirupur. |
| 9 | மகளிரர் தினம் மற்றும் பேரவை நிறைவு விழா | 08-03-2019 | திருமதி. அ. கயல்வழி, இ.கா.ப. காவல் கண்காணிப்பாளர், திருப்பூர் மவாட்டம். |

## பிற விழாக்கள்

### முத்தமிழ் விழா

5-3-2019 சிறப்பு விருந்தினர் மதிப்பிற்குரிய. திரு. அ. கலியமூர்த்தி, முன்னாள் மாவட்டக் காவல் துறைக் கண்காணிப்பாளர் அவர்கள் சிறப்புரையாற்றினார். சங்கமம் நாட்டுப்புறக் கலைக்குழுவினரின் "வள்ளிக்கும்மி" என்ற நிகழ்ச்சி திரு. க. செந்தில்குமார் அவர்களின் தலைமையில் நடைபெற்றது.

### நுண்கலை மன்றம்

நமது கல்லூரியில் நுண்கலை மன்றமானது நுண்ணுயிரியல் துறை பொறுப்பில் செயல்பட்டு வருகிறது. இக் கல்வி ஆண்டில் 2019 ஜனவரி 21, 22, 23 ஆகிய மூன்று நாட்கள் நுண்கலைமன்றப் போட்டிகள், சிறப்பாக நடத்தப்பட்டன. திருப்பூர் குமரன் கலைக்கல்லூரி இணை பேராசிரியரும் வணிகவியல் துறைத்தலைவருமான முனைவர் டி. வசந்தி மற்றும் அதே கல்லூரியின் உடற்கல்வி இயக்குனர் முனைவர். எம்.எஸ். முருகேஸ்வரி, கலை இயக்குனர் திருமதி. விக்னா ஜான் ஆகியோர் நடுவர்களாக செயல்பட்டனர்.

21-01-2019 அன்று மேடையில்லாப் போட்டிகளான மருதாணியிடுதல், உபயோகமற்ற பொருட்களை உபயோகமாக்குதல், நெருப்பின்றி சமைத்தல், கோலமிடுதல் போன்ற போட்டிகளும் 22-01-2019, 23-01-2019 அன்று மேடைப்போட்டிகளான தனிநபர் பாடல், கிராமியக்குழு நடனம், தனிநபர் நடனம், பிறமொழி பாடல் குழு நடனம் மற்றும் சிகை

அலங்காரம் முதலிய போட்டிகளும் நடைபெற்றன. 2018-19 நுண்கலை மன்ற சுழற்கோப்பையைக் கணினி அறிவியல் துறை மாணவியர் கடந்த ஆண்டின் தொடர்ச்சியாக இந்த ஆண்டும் தக்கவைத்துக் கொண்டனர்.

**விளையாட்டு விழா**

06-03-2019 அன்று நமது கல்லூரி வளாகத்தில் விளையாட்டு விழா நடைபெற்றது. அது சமயம் Dr. K. Venkatacham, Director Incharge, Department of Physical Education, Periyar University, Salem அவர்கள் சிறப்புவிருந்தினராகக் கலந்து கொண்டு பல்வேறு விளையாட்டுப் போட்டிகளில் பங்குபெற்று வெற்ற பெற்ற மாணவியர்களுக்குப் பரிசுகளை வழங்கி விழாவைச் சிறப்பித்தார்.

மன்ற விழாக்கள் :

| வ. எண். | துறை | நாள் | சிறப்பு விருந்தினர் | தலைப்பு |
|---|---|---|---|---|
| 1 | தமிழ் | 11-1-2019 | முனைவர். எம். மீனாட்சி, இணைப் பேராசிரியர், தமிழ்த்துறை, அரசு கலைக் கல்லூரி, கோயமுத்தூர். | இலக்கியமும் வாழ்வும் |
| 2 | ஆங்கிலம் | 01-02-2019 | Dr. Umesh Shivaram Jagadev, Associate Professor of English, Sangamner College, Pune, Maharastra | Communicative Approach to Literary Studies |
| 3 | வரலாறு | 28-01-2019 | 1. முனைவர். திரு. பூங்குன்றன், உதவி ஆணையர் (பணி நிறைவு) தொல் பொருள் ஆய்வாளர், கோவை | கொங்கு மண்டலத்தில் வாணிபம் |
| | | | 2. திரு. ரவிக்குமார், பி.இ., வீரராஜேந்திரன் தொல்லியல் மற்றும் வரலாற்று ஆய்வு மையம், திருப்பூர் | கொங்கு மண்டலத்தில் இதுவரை கண்டறிப்பட்டுள்ள நடுகற்கள் |
| 4 | பொருளாதாரம் | 14-02-2019 | Dr. S. JANAKI RAMAN, Asst. Prof. of Economics, Govt. Arts College, Coimbatore. | The Indian Economy Prospects & Challenges |
| 5 | கணிதம் | 08-02-2019 | Dr. N.SIVAKUMAR Asst. Prof., Essor of maths, Hindustan Arts & Science College, Coimbatore. | How to crack Mathematics Problems in Govt Related Competetive Exams & MNC's |
| 6 | இயற்பியல் | 29-01-2019 | Dr. L. CHANDARA, Asst. Prof. & HOD of Physics, Chikkaiah Naicker College, Erode. | Physics and Life |
| 7 | இயற்பியல் க.ப. | 29-01-2019 | Dr. S. Harikrishna Etti,Asst, Prof.Essor of Medical Physics, Bharathiar University, Coimbatore | Perspective of Medical Physics & Career Awareness. |

| வ. எண். | துறை | நாள் | சிறப்பு விருந்தினர் | தலைப்பு |
|---|---|---|---|---|
| 8 | மின்னணுவியல் | 15-02-2019 | Dr. R. MAHENDRAN, Asst. Prof., Department of Electronics, Govt Arts College, Kulithalai. | Career Guidance & Job Opportunities |
| 9 | வேதியியல் | 18-02-2019 | Paper Presentation by students of Chemistry | Awareness in Chemistry |
| 10 | விலங்கியல் | 19-02-2019 | Dr. P. JEGANATHAN M.Sc., Ph.D., Scientist, Nature Conservation Foundation, Mysore. | Birds in our life |
| 11 | தாவரவியல் | 2-02-2019 | Dr. SARAN, MD, Rotary President Tirupur. | அழிவில்லா ஆரோக்கியம் |
| 12 | கணினி அறிவியல் | 7-02-2019 | Mr. JEGADISH SELVARAJ, Founder and CEO, We5 Solution and Academy Mumbai. | Recent Trends and Job Opportunities in Information Technology |
| 13 | நுண்ணுயிரியல் | 10-02-2019 | Dr. K. PANNEER SELVAM Asst. Prof. in Micro Biology Government Arts College, Manarkudi | Foldscope |
| 14 | உணவு மற்றும் ஊட்டச்சத்தியல் | 10-01-2019 | Dr. ANGELIN ESTHER PREETHI, HOD, Prof. Department of FSN, RVS College, Sulur. | Minor Millets for Food Security |
| 15 | வணிகவியல் | 13-02-2019 | Mr.P. MARIMUTHURAJ, Senior Business Manager, Tally Sollution Pvt Ltd, Covai. | Commerce Education - A, Road to Success |
| 16 | வணிகவியல் (சு.ப.) | 8-02-2019 | Dr. DEVI, Principal, Govt. Arts College Palladam. | Life Ethics for Women |
| 17 | வணிக நிர்வகவியல் | 11-02-2019 | Dr. A. VELAVAN, Head Department of Business Administration, Government Arts College, Dharumapuri - 5. | India's Opportunity in 2020 |

**தேசிய கருத்தரங்கு - இயற்பியல் துறை**

2019 ஜனவரி 24, 25 ஆகிய இரண்டு நாட்கள் **"Nanomaterials"** என்ற தலைப்பில் தேசிய கருத்தரங்கு (NCN-2019) Department of Science and Technology (DST) நிதி உதவியுடன் நடைபெற்றது. சென்னை சத்தியபாமா பல்கலைக் கழகத்தின் துணைவேந்தர், முனைவர். சுந்தர் மனோகரன் சிறப்பு விருந்தினராகக் கலந்து கொண்டு கருத்தரங்கினைத் தொடங்கி வைத்து, சிறப்புரையாற்றினார். மொத்தம் 85 ஆராய்ச்சிக் கட்டுரைகள் கருத்தரங்கில் சமர்ப்பிக்கப்பட்டன. புதுடெல்லியில் உள்ள National Physical Laboratory (NPL) ஹைதராபாத்தில் உள்ள ARCI, பெங்களூருவில் உள்ள ராமன் ஆராய்ச்சி மையம், காரைக்குடியில் உள்ள மத்திய மின் வேதியியல் ஆய்வகம் மற்றும் இந்திராகாந்தி அணு ஆராய்ச்சி மையம் போன்ற மத்திய அரசின் ஆராய்ச்சி நிறுவனங்களில் பணிபுரியும் ஆறு மூத்த விஞ்ஞானிகள் மற்றும்

முன்னணி கல்வி நிறுவனங்களில் பணியாற்றும் மூன்று பேராசிரியர்கள் கலந்து கொண்டு சிறப்புரை வழங்கினர். சிறந்த ஆய்வுக்கட்டுரைகள் தெரிவு செய்யப்பட்டு, சான்றிதழ்கள் வழங்கப்பட்டன. ஆராய்ச்சி மாணவர்கள், முதுகலை மாணவர்கள், பிற கல்லூரிப் பேராசிரியர்கள், இளங்கலை இயற்பியல் துறை மாணவிகள் ஆக மொத்தம் 150 பேர் கருத்தரங்கில் பங்கு பெற்று பயனடைந்தனர்.

**உடற்கல்வித் துறை**

நமது கல்லூரியில் உடற்கல்வி துறையானது முனைவர் ப.நிர்மலா தேவி, வணிக நிர்வாகவியல் துறைத்தலைவர் பொறுப்பில் செயல்பட்டுக்கொண்டிருக்கிறது. மாணவிகளுக்கிடையே 100மீ, 200மீ,400மீ, 800மீ, ஓட்ட பந்தயம், சதுரங்கம், ஈட்டி எறிதல், கபடி, கோகோ, எறிபந்து, இறகுபந்து, நீளம் தாண்டுதல், டென்னிகைட் ஆகிய விளையாட்டுகளுக்குப் பயிற்சிகள் கொடுக்கப்பட்டு போட்டிகள் நடைபெற்றன. விளையாட்டு விழா அன்று வெற்றி பெற்ற மாணவியருக்குப் பரிசுகள் வழங்கப்பட்டன.

பாரதியார் பல்கலைக்கழகம் நடத்திய பல்வேறு கல்லூரிக்கிடையேயான தடகள போட்டியில் எமது கல்லூரி மாணவிகள் பங்கேற்றனர்.

ஈரோடு, திண்டல் ரோட்டரிகிளப் நடத்தய பதினோராவது Rotract District Sport Meet- ல் கலந்து கொண்டு மாணவிகள் 100மீ ஓட்டப்பந்தயத்தில் முதலாவது இடமும், 200மீ ஓட்டப்பந்தயத்தில் இரண்டாவது இடமும் வென்றனர்.

**பெற்றோர் ஆசிரியர் கழகம் (PTA)**

நமது கல்லூரியில் பெற்றோர் ஆசிரியர் கழகம் சிறப்பாக நடைபெற்று வருகிறது. இச்சங்கத்தின் தலைவராக கல்லூரி முதல்வர், முனைவர். பி. பொன்முத்துராமலிங்கம் அவர்களும், துணைத்தலைவராக தாவரவியல் துறைத்தலைவர், முனைவர் சு. கீதா அவர்களும் செயல்பட்டு வருகின்றனர். மாணவியரின் நலன் கருதி மாதந்தோறும் பெற்றோர் ஆசிரியர் ஆலோசனைக்கூட்டம்நடத்தப்பட்டு அதற்குரிய நடவடிக்கைகளும் எடுக்கப்பட்டு சிறப்புடன் செயல்பட்டு வருகிறது. ஒரு தட்டச்சர், ஒரு ஆய்வக உதவியாளர், ஒரு நூலக உதவியாளர், இரண்டு காவலர்கள், மூன்று துப்புரவுப் பணியாளர்கள் ஆகியோர் நியமிக்கப்பட்டு இக்கழக நிதியிலிருந்து ஊதியம் வழங்கப்பட்டு வருகிறது.

**நாட்டு நலப்பணித் திட்டம்**

கல்லூரி முதல்வர் முனைவர் பி. பொன்முத்துராமலிங்கம் அவர்கள் தலைவராக கொண்டு, தமிழ்த்துறை உதவிப்பேராசிரியர் முனைவர் ஏ.ஆர். ஈஸ்வரி, வணிகவியல்துறை உதவிப்பேராசிரியர் முனைவர் சா. கௌசல்யாதேவி, கணிதத்துறை உதவிப்பேராசிரியர் முனைவர் இரா.தேவி ஆகியோரை திட்ட அலுவலர்களாகவும் கொண்டு நாட்டு நலப்பணி திட்டம் செயல்பட்டு வருகின்றது. நமது கல்லூரி சார்பில் அனைத்து துறைகளிலிருந்தும் மூன்று அலகுகளுக்கு 100 மாணவிகள் வீதம் 300 மாணவிகளைத் தேர்வு செய்து மாணவியர்களுக்கு நாட்டு நலப்பணி திட்டத்தின் குறிக்கோள்களையும்

ஆளுமைத் திறமைகளையும் வெளிப்படுத்தும் விதமாக விழிப்புணர்வுப் பேரணிகளும் கருத்தரங்குகளும் நடைபெற்றன.

இந்த கல்வியாண்டில், நமது கல்லூரியில் வளாகத் தூய்மைப்பணி, 26-6-2018 அன்று போதை ஒழிப்பு விழிப்புணர்வுப் பேரணி, 27-6-2018 அன்று யோகாவின் முக்கியத்துவம் பற்றிய விழிப்புணர்வு, 9-7-2018 அன்று தொழில் முனைவோர் பேரணி, 24-7-2018 அன்று நெகிழித்தவிர்ப்பு மற்றும் துணிப்பை பயன்படுத்துதல் பற்றிய விழிப்புணர்வு வகுப்புகள், NSS மாணவிகள் மூலம் நடத்தப்பட்டன. 12-9-2018 அன்று உலக தற்கொலைத் தடுப்பு வாரத்தில் கட்டுரைப்போட்டி மற்றும் ஓவியப்போட்டி நடத்தப்பட்டது. 14-9-2018 அன்று தற்கொலைத் தடுப்பு பற்றிய விழிப்புணர்வு உரையை திருமதி. டாக்டர். ஆர் சுகன்யாதேவி, மனநல மருத்துவர் மாணவிகளுக்கு வழங்கினார். 18-9-2018 மற்றும் 19-9-2018 ஆகிய தினங்களில் லோட்டஸ் மருத்துவமனை மூலம் இலவச கண் பரிசோதனை முகாம் கல்லூரி வளாகத்தில் நடைபெற்றது. 26-9-2018 முதல் 2-10-2018 வரை நாட்டு நலப்பணி திட்டத்திற்கான சிறப்பு முகாம் சென்னிமலைப்பாளையம், காளிபாளையம் மற்றும் புதுப்பாளையத்தில் ஏழு நாட்கள் நடத்தப்பட்டன. இம்முகாமில் கோவில் மற்றும் பள்ளிவளாகத் துப்புரவு பணி, சாலைப்பாதுகாப்பு பேரணி, பெண்கள் கல்வி மற்றும் சட்ட பாதுகாப்பு விழிப்புணர்வு உரை ஆகியன போற்றத்தக்க வகையில் நடத்தப்பட்டன. நமது கல்லூரி வளாகத்தில் 29-10-2018 அன்று லஞ்ச ஒழிப்பு விழிப்புணர்வு உறுதி மொழி எடுத்தல், 31-10-2018 அன்று பேரிடர் மேலாண்மை பற்றிய குறுநாடகம், 6-2-2019 அன்று மரக்கன்று வழங்குதல் போன்ற நிகழ்வுகள் நடைபெற்றன. 7-12-2018 அன்று கஜா புயல் நிவாரணப் பொருட்கள் திரட்டுதல், எய்ட்ஸ் விழிப்புணர்வு உறுதிமொழி போன்ற பல்வேறு நிகழ்வுகள நமது கல்லூரியின் நாட்டு நலப்பணித்திட்டம் மூலம் சிறந்த முறையில் நடத்தப்பட்டன.

**செஞ்சுருள் (RRC) & செஞ்சிலுவை (YRC) சங்கம்**

10-08-2018 மற்றும் 8-02-2019 ஆகிய 2 நாட்கள், நமது கல்லூரியில் தேசிய குடற்புழு நீக்க நாளை முன்னிட்டு ஆரம்ப சுகாதாரநிலையத்தின் மூலமாகக் குடற்புழு நீக்க மாத்திரைகள் இளநிலை மாணவிகளுக்கு வழங்கப்பட்டது.

14-02-2018 முதல் 16-02-2018 வரை மூன்று நாட்கள் இந்திய செஞ்சுருள்சங்கத்தின் நிதியுதவியுடன் பாரதியார் பல்கலைக்கழகத்தில் நடைபெற்ற Orientation Training Program -க்கு நமதுத கல்லூரியைச் சேர்ந்த 2 மாணவியர்கள் பயிற்சி மேற்கொண்டனர்.

**கணினி அறிவுப் பயிற்சித் திட்டம் (CLP)**

2000-2001 கல்வி ஆண்டு முதல் தமிழக அரசின் கணினி பயிற்சித்திட்டம் மூலமாக முதலாமாண்டு மாணவிகளுக்குக் கணினிஅறிவுப்பயிற்சி நடைபெற்று வருகிறது. இத்திட்டத்தின் மூலமாக இக்கல்வியாண்டில் 850 மாணவியர்கள் பயன்பெற்றுள்ளனர். இத்திட்டம் நமது கல்லூரி முதல்வர் அவர்கள் தலைமையில் 5 கணினி ஆசிரியர்களுடன் சிறப்பாகச்செயல்பட்டு வருகிறது.

**RUSA - தேசிய உயர்கல்வித் திட்டம்**

மத்திய மாநில அரசின் நிதி உதவியின் கீழ் செயல்படும் RUSA -என்றழைக்கப்படும் தேசிய உயர் கல்வித் திட்டத்தில் கடந்த ஆண்டில் கல்லூரி கட்டமைப்பு பயன்பாட்டிற்காக ரூபாய் 2-கோடி நிதி ஒதுக்கீடு பெறப்பட்டது. இதில் ரூ. 70 லட்சம் மதிப்பீட்டில் வகுப்பறைகளும் 30 லட்சம் மதிப்பீட்டில் பயன்பாட்டில் உள்ளன. மீதமுள்ள 1-கோடி மதிப்பிற்கான பணிகள் விரைவில் ஆரம்பிக்கப்படும் நிலையில் உள்ளது. இத்திட்டம் நமது கல்லூரியில் திறம்பட நிறைவேறிட வணிகவில் பேராசிரியை முனைவர். க. பிருந்தா ஒருங்கிணைப்பாளராக சிறப்புடன் செயல்பட்டு வருகிறார்.

**பொதுப்பணித்துறை (PWD)**

2018 - 2019 ஆம் கல்வி ஆண்டில் திட்டமில்லா செலவினத்தின் கீழ் ரூ. 25,00,000/- தமிழக அரசால் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு கல்லூரியின் பராமரிப்புப்பணிகள் நடைபெற்று வருகின்றன. மேலும் கல்லூரியில் புதிதாக எம்.ஜி.ஆர். நூற்றாண்டு விழா கட்டிடத்திற்கு ரூ. 2 கோடியே 57 லட்சம் செலவில் 8 வகுப்பறைகள் மற்றும் 3 ஆய்வு கூடங்களுக்கான கட்டுமானப்பணிகள் நடைபெற்று வருகின்றன.

**வேலை வாய்ப்பு தகவல் மையம்**

வேலைவாய்ப்பு தகவல் மையம் மூலமாக விழிப்புணர்வு கருத்தரங்கம் மற்றும் Essay Competition in Role of Internet in Employment Opportunities 11-7-2018 அன்று நடைபெற்றது. 4-7-2018 முதல் 30-10-2018 வரை போட்டி தேர்விற்கான இலவசப் பயிற்சி வகுப்புகள் திருப்பூர் மாவட்ட வேலை வாய்ப்பு அலுவலகத்தில் நடைபெற்றது. 19-12-2018 அன்று Academic Innovation & Entrepreneurship Development, Personality Development -பற்றி பயிற்சி வகுப்புகள் நடைபெற்றன. 24-12-2018 அன்று நடந்த வேலை வாய்ப்பு முகாமில் 80 மாணவிகள் தேர்வு செய்யப்பட்டனர். 31-12-2018 அன்று நடைபெற்ற ஆசிரியர் பணிக்கான தேர்வில் 40 மாணவிகள் தேர்ச்சி பெற்றனர். TNPSC -தேர்விக்கான பயிற்சி வகுப்பு 04-02-2019 முதல் 28-02-2019 வரை நடைபெற்றது.

**பல்வேறு போட்டிகளில் பரிசு பெற்ற மாணவியர்களின் விவரங்கள்**

| வ. எண். | போட்டி | நாள் & இடம் | பரிசு | பரிசு பெற்றோர் |
|---|---|---|---|---|
| 1 | கவிதை போட்டி | 11-9-2018 திருப்பூர், மாவட்ட ஆட்சியர் அலுவலகம், திருப்பூர் | முதல் பரிசு தொகை ரூ. 10,000 | ரா. ராம் திலகா (II M.Com) |
| 2 | பேச்சுப் போட்டி | 01-08-2018 திருப்பூர், மாவட்ட ஆட்சியர் அலுவலகம், திருப்பூர் | முதல் பரிசு | G. ரஞ்சிதா (இயற்பியல் க.ப) |
| 3 | பேச்சுப் போட்டி | 01-08-2019 திருப்பூர், மாவட்ட ஆட்சியர் அலுவலகம், திருப்பூர் | இரண்டாம் பரிசு | P. துளசிமணி (I பி.ஏ. தமிழ்) |
| 4 | ஓவியப் போட்டி | 06-12-2018 திருப்பூர், மாவட்ட ஆட்சியர் அலுவலகம், திருப்பூர் | முதல் பரிசு | A. நவீனா (I பி.ஏ. ஆங்கிலம்) |

| வ. எண். | போட்டி | நாள் & இடம் | பரிசு | பரிசு பெற்றோர் |
|---|---|---|---|---|
| 5 | ஓவியப் போட்டி | 06-12-2018 திருப்பூர், மாவட்ட ஆட்சியர் அலவலகம், திருப்பூர் | இரண்டாம் பரிசு | M. ஜனாய் (I பி.எஸ்.சி. விலங்கியல்) |
| 6 | ஓவியப் போட்டி | 06-12-2018 திருப்பூர், மாவட்ட ஆட்சியர் அலவலகம், திருப்பூர் | மூன்றாம் பரிசு | G. வைஷ்ணவி (I பி.எஸ்.சி. உணவு அறிவியல் மற்றும் ஊட்டச்சத்தியியல்) |
| 7 | ஓவியப் போட்டி | 11-09-2018 | ரூ. 1000 | **K**. சோபனா (I பி.எஸ்.சி. தாவரவியல்) |
| 8 | கட்டுரைப் போட்டி | 11-6-2018 Jaivabai School, Tirurpur. | இரண்டாம் பரிசு | M. காயத்ரி (II எம்.ஏ. வரலாறு) |
| | | 31-7-2018 Jaivabai School, Tirupur | முதல் பரிசு | |
| 9 | கட்டுரைப் போட்டி | திருப்பூர், மாவட்ட ஆட்சியர் அலுவலகம், திருப்பூர் | முதல் பரிசு | S. இந்து ரேகா (III பி.ஏ. வரலாறு) |
| 10 | Quiz | Erode Arts & Science College Erode, 5-2-2019 | இரண்டாம் பரிசு | D. பிரீத்தி<br>R. சௌந்தர்யா<br>(II M.Sc., Maths) |
| 11 | Quiz | AVP College of Arts & Science College, Tiurpur. 28-12 | இரண்டாம் பரிசு | A. மைதிலி<br>V. கோகிலா<br>(I M.Sc., Maths) |
| 12 | Quiz | Vellalar College for Women Erode. 24-8-2018 | முதல் பரிசு | D. ப்ரீத்தி<br>R. சௌந்தர்யா<br>(I M.Sc., Maths) |
| 13 | Paper Presentation | 20-2-2019 Sri Ramakrishna Mission Vidhayalaya Arts and Science College, Coimbatore. | - | கோ. ஹரிணி (II பி.எஸ்.சி. இயற்பியல்)<br>ப. ஆனந்த தர்ஷினி (I பி.எஸ்.சி. இயற்பியல்) |
| 14 | Drawing | திருப்பூர், மாவட்ட ஆட்சியர் அலுவலகம், திருப்பூர் | இரண்டாம் பரிசு | M. ஜனாய் (I பி.ஏ. ஆங்கிலம் |
| 15 | Athlete (100M) | கொங்கு வேளாளர் கல்லூரி பெருந்துறை | முதல் பரிசு | M. சரண்யா (III பி.ஏ. ஆங்கிலம்) |
| 16 | Running Race (200M) | கொங்கு வேளாளர் கல்லூரி பெருந்துறை | இரண்டாம் பரிசு | S. பரமேஸ்வரி (I பி.ஏ. வரலாறு) |

| வ. எண். | போட்டி | நாள் & இடம் | பரிசு | பரிசு பெற்றோர் |
|---|---|---|---|---|
| 17 | Kabadi | கொங்கு வேளாளர் கல்லூரி பெருந்துறை | இரண்டாம் பரிசு | R. மகேஸ்வரி<br>P. அபிராமி<br>S. பரமேஸ்வரி<br>(I பி.ஏ. வரலாறு) |
| 18 | Shuttle | Kongu Vellalar College | மூன்றாம் பரிசு | R. லாவண்யா<br>(III பி.எஸ்.சி வேதியியல்) |
| | | Vellalar College | முதல் பரிசு | R. லாவண்யா<br>(III பி.எஸ்.சி வேதியியல்) |
| 19 | Shuttle (Single) | Play Balminton Academy | இரண்டாம் பரிசு | R. லாவண்யா<br>(III பி.எஸ்.சி வேதியியல்) |
| 20 | Shuttle (Doubles) | Vellalar College, Erode | முதல் பரிசு | R. ராம்திலகா<br>(III M.Com) |
| 21 | Kabadi | Kongu Vellalar College | இரண்டாம் பரிசு | S. சௌந்தர்யா<br>(III பி.எஸ்.சி வேதியியல்) |
| 22 | Kabadi | Vellalar College, Erode | இரண்டாம் பரிசு | ரா. ராம் திலகா<br>(III M.Com.) |
| 23 | Marathon | Perundurai | Runner | D. Thenarasi<br>(III B.Com II Shift) |
| 24 | Dance - Solo | Kamadhenu College | மூன்றாம் பரிசு | T. Meena<br>(III B.Com II Shift) |

**கல்வி உதவித் தொகை**

2018 - 19ம் கல்வியாண்டில் பிற்படுத்தப்பட்டோர் நலத்துறை மூலம் 1757 மாணவியர்களும் சிறுபான்மையினர் நலத்துறை மூலம் 114 மாணவியர்களும் ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறை மூலம் 842 மாணவியர்களும் கல்வி உதவித்தொகை பெறவுள்ளனர்.

2018-19ம் கல்வியாண்டில் தமிழ் வழியில் கல்வி பயிலும் 748 இளநிலை மாணவிகளுக்கு ஊக்கத்தொகையாக ரூ. 4,30,200/-, 478 மாணவியர்களுக்கு பெற்று வழங்கப்பட்டது.

குறிப்பு : அரசாணை (நிலை) எண் 196 உயர்கல்வி (ஜி1) துறை, நாள் 20-08-2018ன் படி 2018-19 ஆம் கல்வியாண்டு முதல் தமிழ்வழி கல்வி ஊக்கத்தொகை ரூ. 400/- லிருந்து ரூ. 900/- ஆக உயர்த்தப்பட்டுள்ளது.

கடந்த ஆண்டு (2017-18) நிலுவைத் தொகை (46X400) ரூ. 18400/- விலங்கியல் மற்றும் வேதியியல் துறையில் பயிலும் 46 மாணவியர்களுக்கு பெற்று வழங்கப்பட்டுள்ளது.

**நன்கொடை வழங்கியவர்கள்**

திரு. மணியம் ராமசாமி அவர்கள் கல்லூரிக்கு மரதளவாடங்கள் வாங்க் ரூ. 25000/- நன்கொடை வழங்கினார்.

முத்தமிழ் விழாவிற்க திருமதி. இராசாத்தி சந்தானகிருஷ்ணன், திருமதி. வசந்தி ஈஸ்வரன், திருமதி. சாந்தி செல்வராஜ் ஆகிய மூவரும் ரூ. 15000/- நன்கொடை வழங்கினார்கள்.

**முன்னாள் மாணவர் சங்கம் (OSA)**

2018-19 ஆம் கல்வி ஆண்டில் முதல்வர் அவர்கள் தலைமையில் 5 பேராசிரியர்கள் ஒருங்கிணைந்து 2 பட்டமளிப்பு விழாக்களை சிறப்புடன் நடத்தினர்.

7-9-2018 அன்று நடந்த பட்டமளிப்பு விழாவில் 2013 முதல் 2016 வரை பயின்ற இளநிலை மாணவிகளுக்கு கரூர், அரசுக் கலைக் கல்லூரி முதல்வர் முனைவர். சி. ஜோதி வெங்கடேஸ்வரன் அவர்கள் பட்டங்களை வழங்கி பட்டமளிப்பு விழா உரை நிகழ்த்தினர். அதுசமயம் இளநிலை பாடப்பிரிவில் 685 பட்டங்களும், முதுநிலைப் பிரிவில் 190 பட்டங்களும் வழங்கப்பட்டன.

மேலும் பாரதியார் பல்கலைக்கழகத் தரவரிசையில் இடம் பெற்ற 33 மாணவிகளுக்குச் சிறப்பு பதக்கங்கள் வழங்கப்பட்டன.

30-1-2019 அன்றுநடைபெற்ற பட்டமளிப்பு விழாவில் காரைக்குடி, அழகப்பா பல்கலைக்கழகத்தின் வணிகவியல் துறைத் தலைவரும், பேராசிரியருமான முனைவர். குருமூர்த்தி அவர்கள் பட்டங்களை வழங்கி பட்டமளிப்பு விழா உரை நிகழத்தினார். அதுசமயம் இளநிலை பிரிவில் 782 பட்டங்களும் முதுநிலைப் பிரிவில் 195 பட்டங்களும் வழங்கப்பட்டன. மேலும், பாரதியார் பல்கலைக்கழக தரவரிசையில் இடம் பெற்ற 36 மாணவிகளுக்குச் சிறப்பு பதக்கங்களும் வழங்கப்பட்டன. முன்னாள் மாணவர் சங்கத்தின் நிதியிலிருந்து 2 கௌரவ விரிவுரையாளர்களும் 6 ஆய்வக உதவியாளர்களும் நியமிக்கப்பட்டு ஊதியம் வழங்கப்பட்டு வருகிறது.

பொது நூலகம்

நமது கல்லூரி பொது நூலகத்தில் மாணவியர் மற்றும் ஆசிரியர்கள் பயன்பாட்டிற்கென தினசரிகள் மற்றும் பல்வேறு வகையான வார, மாத இதழ்களும், ஆராய்ச்சிக் கட்டுரைகளை வெளியிடும் பத்திரிக்கைகளும் நூலக ஒதுக்கீட்டு நிதியிலிருந்து பெறப்பட்டு வழங்கப்படுகின்றன.

மாநில அரசு நிதியிலிருந்து 1.50 லட்சம் மதிப்புள்ள நூல்கள் இந்த கல்வியாண்டில் பெறப்பட்டுள்ளது. மொத்தமாக 37,710 நூல்கள் கல்லூரி நூலகத்தின் மூலம் மாணவியர் பயன்பாட்டிற்கு வழங்கப்படுகின்றன. 6,000க்கும் மேற்பட்ட மின் இதழ்களும் 1,00,000 மேற்பட்ட மின் நூல்களும் INFLIB NET என்ற இணைய சேவையும் அளிக்கப்படுகிறது.

12-8-2019 நூலகர் தினத்தன்று கவிதை கட்டுரை மற்றும் பேச்சுப் போட்டிகள் நடத்தப்பட்டு நூலகர் தின விழாவானது, திருப்பூர் மாவட்ட ஆட்சியர் Dr. K.S. பழனிச்சாமி அவர்களைப் சிறப்பு விருந்தினராகக் கொண்டு சிறப்புடன் நடைபெற்றது.

நுகர்வோர் பாதுகாப்புக்குழு

நுகர்வோர் பாதுகாப்புக்குழுக் கூட்டம் 10-1-2019, 7-2-2019 ஆகிய 2 நாட்கள் நமது கல்லூரி வளாகத்தில் நடைப்பெற்றது. நுகர்வோர் பாதுகாப்பு மற்றும் விழிப்புணர்வு பற்றிய கருத்துரைகள் மாணவியர்களுக்கு எடுத்துரைக்கப்பட்டன.

**சுழல் சங்க கிளை (Rotary Club)**

கல்லூரி முதல்வர் முனைவர் பி. பொன் முத்துராமலிங்கம் அவர்கள் தலைமையில் 28-12-2018 அன்று புதியதாக சுழல் சங்க கிளை Rtn. Dr. சரண் அவர்கள் தொடங்கி வைத்தார். மாணவியர் Rotracts என்று அழைக்க ஏற்று கொண்டனர். 02-02-2019 அன்று Dr. டெய்சி சரண் அவர்கள் ஆரோக்கியப் புதையல் பற்றி சிறப்புரை வழங்கினார்கள்.

# கவிதைகள்

## அப்பா

நீ தந்த வித்தினில் விதையாய் முளைத்தேன்
என் தாயின் கருவறையில்
நான் நடைபயின்ற முதல் பஞ்சுமெத்தை உன் மார்பல்லவா
தாயின் தாலாட்டு பாடலால் உறங்கிய நாட்களை விட
என்னை நீ தலைகோதித் தூங்க வைத்த
நாட்கள் எனக்கு சுகமல்லவா
நீ வளரும் வரையில் அன்பையும்
வளர்ந்தபின் கண்ணில் கோபத்தையும்
இதயத்தில் பாசத்தையும் வைத்திருக்கும் ஒரே உறவல்லவா
நான் மற்றவர்முன் மிடுக்கென
உடையணிய வேண்டும் என்று தான் - நீ
சட்டை வாங்கக் கூட மறந்தாயா ?
நான் கண்ட உலகை நீ காண
வேண்டும் என்றாள் என் தாய்
ஆனால் நீயோ, நான் காணாத உலகையும்
நீ ஆள வேண்டும் என்றாயே
தாய் என்னை கருவறையில்
ஈரைந்து திங்கள் சுமந்தாள் - நீ எம் இருவரையும்
உன் நெஞ்சினில் சுமக்கிறாய்
நீ உனது வாழ்க்கையையே என்னை
ஆளாக்கிக் காண வேண்டும் என்று எருவாய் ஆக்கினாய்
நிச்சயமாக அந்த எருவில் எரிந்து வாழ்வின்
வெற்றிக் கனியினை பறித்திடுவேன்
என்னை தலைக்கு மேல் உட்கார வைத்து
ஊர்வலம் கூட்டிச்சென்று அழகு பார்த்த உன்னை
என்றும் தலைகுனிய விடமாட்டேன்.

**மா. கல்பனா**
கணிதம் (3ஆம் ஆண்டு)

## தாய்த்தமிழ்

தமிழே நீர் உயிர்காற்று
உம்மை சுவாசிப்பதா ?
இல்லை நேசிப்பதா ? ....

தமிழ் சுவாசிப்பவனுக்கு காற்று !
நேசிப்பவனுக்கு உயிர் !

என் காற்றில் ஒலியாய் கலந்து
மொழியாய் வருவது தமிழ் !!!

இருண்டு இருக்கும் இருட்டில்
ஒளியாய் வந்து ...
வழியை காட்டினாய்...

என் தாய் மொழியே
என் தமிழ் மொழியே....

### விவசாயி

ஏர்பிடித்து உழவு செய்கின்றவரால் யாரிடமும்
கையேந்தாமல் வாழ முடியாது ....
ஆனால்
ஏர்பிடித்து உழவு செய்கின்றவரிடம் யாராலும்
கையேந்தாமல் வாழ முடியாது ...

### நட்பு

என் முன்னால் எப்பொழுதும்
சிரிக்கும் என் நண்பன்
முதல் முறையாக அழுகிறான்...

எழுந்து துடைக்க நிற்கிறேன்
நான் ...
இறந்து கிடப்பதையும் மறந்து .....

**நா. ஜோதிகா**
இளங்கலை தமிழ் இலக்கியம் இரண்டாண்டு

### கவிதை

தன் இனத்தையும் மொழியையும்
பாடாத கவிதை வேரில்லாத மரம்
கூடில்லாத பறவை

### முயற்சி

முட்டாமல் விதை முளைக்காது
உளி தட்டாமல் சிலையேது
முயலாமல் உலகில் உயர்வேது
நாம் முயன்றால் முடியாததேது?
வெல்லாமல் செல்வது குற்றமல்ல
ஏதும் செய்யாமல் நிற்றலே குற்றமாம்
யாரையும் சாடியும் தேடியும்
நாடியும் விடியும் என்றே இருக்காதே
நீ முயன்று சாதனை படைத்திடு .........

### காலத்தை வென்ற மொழி

அகரத்திற்கு நிகராய் எழுத்துண்டோ
அன்னைக்கு நிகராய் உறவுண்டோ - உலகில்
தமிழுக்கு நிகராய் மொழியுண்டோ
தரணியில் குறைசொல்வோர் யாருமுண்டோ?

கல்லும் மண்ணும் தோன்றும் முன்னே
கடலையும் வானையும் அளந்த மொழி - உயர்
கன்னித் தமிழாய் புகழ்படைத்த என்றும்
காலத்தை வென்றே நின்ற மொழி

கணினிக்கும் தமிழே ஏற்றமொழி
கன்னலை விஞ்சும் எங்கள் மொழி - உயர்
தமிழைக் கற்றால் உயிர்காக்கும்
தரணியெங்கும் புகழ் சேர்க்கும்

**சி. மீனாட்சி**
இயற்பியல் துறை, இரண்டாம் ஆண்டு

### தேசப்பற்று

கவிதை எழுத நான் ஒரு
கவிஞன் அல்ல
ஓவியம் வரைய நான் ஒரு
ஓவியன் அல்ல
சிலை செதுக்க நான் ஒரு
சிற்பியும் அல்ல
ஆனால்
தேசத்தை காக்கும் ஒரு நல்ல
குடிமகளாக இருப்பேன் .....

**P. Ranganayagi**
III B.Com., I Shift

### நட்பு

கதிரவன் தந்து போன
ஒளியில் தான்
இரவெல்லாம் புன்னகைக்கிறது
வெண் நிலவு
தோழியே ....
நீ தந்து சென்ற அழகான நேசமே
நினைவுகளாக என்னுள் வாழ்கிறது !!!

## நட்பு

நினைத்தவுடன் மனதிற்குள் மகிழ்ச்சி ....
பார்த்தவுடன் இதயத்திற்குள் துடிப்பு ....
உயிர் என்ற நண்பர்களிடம்
கள்ளமில்லா ஒரு புன்னகை
அந்த புன்னகையின் ஒளியில்
பொய்யில்லா நட்பு
மீண்டும் ஒரு கல்லூரி பருவம்
தோள் சாய ஒரு தோழி

## ஆசிரியர்கள்

மாதா, பிதா, குரு, தெய்வம் என்பதில்
நம் மூன்றாம் தெய்வம் ஆசிரியர்கள் ...
அவர்கள் நம்முடைய ஆறாம்
அறிவிற்கு கல்வி புகட்டி
கூர்மை சேர்த்தவர்கள் ...
நாளைய சமுதாயத்திற்கு
நல்லெண்ணம் போதிப்பவர்கள்.....
இவர்களை இந்த உலகமே
போற்றி வணங்கும் ....

**அ. மஞ்சுளா**
மூன்றாம் ஆண்டு பி.எஸ்.சி. விலங்கியல்

## அப்பா

நான் கண்ட கடவுள் நீ!
எனக்காக உன்
கனவை கலைத்து என்னையே
உன் கனவாக ஏற்ற
கடவுள் என் "**அப்பா**"

## பெண்ணே

சுதந்திரம் என்பது உன் கையில்
தான். கையளவு கை பேசியில் இல்லை
மற்றவர்களுக்காக உன்னை
மாற்றாதே நீ மாற்றத்தை
ஏற்படுத்தும் அளவுக்கு நீ மாறு !

**S. Bharathi**
III B.Com., II Shift

## FRIENDS

Goods Friends care for
Each other,
Close Friends understand
Each other,
But True Friends stay
Forever....

Beyond Words,
Beyond Distance,
Beyond Time.

## WOMEN

W - Wheel of Family
O - Ocean of Knowledge
M - Mirror of Children
E - Everything of Women
N - Navigator of lite boat.

**E. Vijayalakshmi**
III B.Com., II Shift

## முயற்சி

விதி ஆயிரம் கதவுகளை மூடினாலும்
முயற்சி ஒரு ஜன்னலையாவது திறக்கும்
முடங்கிவிடாதே...!?
தொடர்ந்து முயற்சி செய்...

## அப்பாவின் காதல்

உலகில் பெண் விரும்பும் முதல் ஆண்
அப்பா தான்
காமம் கலங்காமல் காதலிப்பது
அவர் மட்டும் தான் ....
அவர் தரும் குச்சிமிட்டாய்களும்
மகள் தரும் எச்சில் முத்தங்களுமே
காதல் பரிசுகள் தான் ......
என் மகள் !

**E. Vijayalakshmi**
III B.Com., II Shift

## சிறுதுளி நம்பிக்கையில் வாழ்க்கையின் விதைகள்

சிறுசெடியையும், பூக்களாய் பார்
அன்பாய் மலரும்
மழை மேகத்தை கூட வானவில்லாய் பார்
வண்ணமாய் உன்மேல் தூவும்
சின்ன சந்தோஷத்தை, பெரிதாக
உணர்ந்து பார் !
ஒரு நிமிடத்தில் மெய் சிலிர்க்க செய்யும்
உன் நம்பிக்கையை வாழ்க்கையில்
விதைத்து பார்
உலகமே உன் வசமாக அமையும் !

## அனுபவம்

விடியல் என்பது ஒருமுறை வருவது
மட்டுமல்ல
தினசரி வருவது......
அனுபவத்தை போல !

## நட்பு

மனதில் இனிமையானது
அன்பில் ஆழமானது
வார்த்தையில் புனிதமானது

**M. Aruna**
M.Com Final Year

## ஒற்றுமையே பலம்

நம்பிக்கை வழி ஒன்று கண்டேன்
நல்வழி பாதையில் செல்ல
என்ன ஒரு ஆச்சரியம் கண்டேன்
எறும்பு கூட வரிசையில் செல்வதென்று...
என்று நான் காண்பேனோ
மனிதனின் ஒற்றுமையை !!

## வல்லரசு நாடு

நேர்கொண்ட பார்வையும் நிமிர்ந்த நடையும்
நல்லெண்ண ஒழுக்கமும் நாடறிந்த அறிவும்
நன்மை விளைக்கும் செயலும், வாள் போன்ற
வீரமும், சுவை மிகுந்த பேச்சும்
செழுமையான பசுமையும் நாட்டில் நிலவிட
மாணவர்கள் எழுச்சி நிலைத்திட
மக்கள் விழித்திட வேண்டும் !!!

**ர. மகேஸ்வரி**
II B.Com., II Shift

## ஹைக்கூ

மாலையில் படையெடுத்து வந்து
என்னை வசீகரிக்க
நினைக்கும் வண்ண
கொள்ளையர்கள்
**இரவின் மேகங்கள்**

தனியாக நிற்கிறேன்
துணையாக யாருமில்லை
**– இப்படிக்கு தெருவிளக்கு**

எத்தனை முறை சீவினாலும்
தன் வாழ்வின் கடைசிவரை
ஓயாமல் காகிதங்களில்
தன்னை அச்சிட்டுக் கொண்டே இருக்கிறது
**– என் பென்சில்**

**சுகந்தி**

## வாழ்க்கை பயணம்

எங்கே செல்கிறது நமது வாழ்க்கைப் பயணம் ?

தண்ணீர் நிரம்பிய ஏரிகள்
தற்போது தார்சு நிரம்பிய வீட்டுமனைகள்

வரிகேட்டு அன்று வெள்ளையன் ஆண்டான்
வரிவாங்கி இன்று கொள்ளையன் ஆள்கின்றான்

நிலையில்லா விலைவாசி மட்டும்
நிலைத்திருக்கிறது எப்போதும்

பெருமைக்கு நடும் சில மரங்கள்
பெருமைமிக்க வாழ்க்கைக்கு
வெட்டப்படும் பல மரங்கள்

கல்வியை விலையாக்கிய பாடசாலைகள்
கருணை என்றால் என்ன? என்று கேட்கும்
கல்நெஞ்சக்காரர்கள்

வளர்ந்து நிற்கும் எம் பசுமையை அழித்துப்
போடப்படும் பசுமை வழிச்சாலைதான்
எதிர்காலத்திற்கு பசியை போக்குமோ?

நல்லவனாக இருக்க நாடகமாட வேண்டும
இல்லையேல் நடைப்பிணமாக வாழ கற்றுக் கொள்ள
வேண்டும்

ஒரு பக்கம் பார்த்தால் போராட்டம்
மறு பக்கம் பார்த்தால் தேரோட்டம்

சுத்தத்திற்கு கொண்டாடப்படும் சுற்றுச்சூழல் தினமோ
வருடம் ஒருமுறை

ஆனால் அசுத்தப்படுத்தும் செயல்களோ
நம் அன்றாட வாழ்வின் நடைமுறை

ஒரு பக்கம் பார்த்தால் வளர்ச்சி
மறு பக்கம் பார்த்தால் மறுமலர்ச்சி
ஆனால்
அதன் உண்மைப் பக்கம் வெறும் வீழ்ச்சி

திசைமாறிச் செல்லும் எதிர்காலதை
மாற்ற வழி ஏதும் உண்டோ?
..........?

**சி. பானுப்பிரியா**
முதுகலை வணிகவியல் இரண்டாம் ஆண்டு

## மனிதனிடம் ஒரு கேள்வி

அவதி அவதியாய் வேலைக்குச் சென்று
ஆடம்பரமாய் வாழ்ந்து
அன்பை இழந்து
அறிவை இழந்து
பண்பை இழந்து
அழிவை நோக்கி
மண்ணை அடைய விரைவாய்
செல்கிறாயோ !........

## மகிழ்ச்சிக்கான வழி

நிலையில்லாத வாழ்க்கையில்
நிலையில்லாதவற்றை நம்பி
முறையில்லாமல் வாழ்வதை விட
அவற்றை தவிர்த்து
பிழையில்லாமல் வாழ கற்றுக்கொள்
குறையில்லாமல் மகிழ்ச்சி கிடைக்கும்.

## பெருமிதம்

இளமை பருவத்தில் நாடு போற்றும்
நற்செயல்களைச் செய்ய பழகிக்கொள்!
முதுமைப் பருவத்தில் அவற்றை
நினைத்துப் பெருமிதம் கொள் !....

## படிப்பு

பணம், பதவி, பாசம் வரும் போகும்
படிப்பு வரும்... போகாது .......

## அரசியல் தலைவனிடம் ஒரு கேள்வி

குடிமக்களின் நலனுக்காக ஆட்சி
செய்கிறோம் என்று சொல்லும் அரசியல்
தலைவர்களே குடிமக்களின் நலனைக்
கெடுக்கும் **குடியை (மது)** முழுமையாக
ஒழிக்காமல் இருப்பது ஏன்? அதுவும்
குடிமக்களின் நலனுக்காகவோ?.......

**பாண்டி மீனா .கு**
III இளம் வணிகவியல் II சுழற்சி

## நொய்யல் ஆறு ஓரமாய்

என்ன வளம் இல்லை என்பது மாறி
என்ன மீதம் உள்ளது என்றாகி விட்டது
மரங்களின் துகில் உரியவரும்
துரியோதனன்கள் ஆகிவிட்டோம்
எதிர்பாராமல் குளிர்ந்த காற்று, மண்வாசனையோடு
ஓர் பனித்துளி என் கைகளை நினைத்தது.
பிரிந்து செல்ல மனமில்லை உறைந்து கிடக்கிறேன்
என் மழையோடு... நகரவாசலிலே!
மரமே உன்னை வைப்பவனுக்கு கூலி இல்லை
வெட்டுபவனுக்கே கூலி, வைப்பவனுக்கும் கூலி என்றால் தான்
நகரமும் பசுமையாய் மாறுமோ!
இதன்காரணமாக வறுமையை வரமாக்கிக்கொண்டோம்.
தங்கள் இருப்பிடம் தொலைந்து அகதியாக தாயும்
புள்ளினங்கால் உங்களுக்கு மட்டுமே தெரியும் மரத்தின் அருமை
இரண்டடி தோண்டி செடி நட தெரியாமல், ஓராயிரம் அடிக்கு
நுண்துளை கிணறு தோண்டி, அங்கு
எதிர்கால சந்ததிகளுக்கு சவக்குழி செய்து கொண்டிருக்கிறோம்.
கேணி நீரெல்லாம்... கேன் நீராய் ஆனது
என் நொய்யலும்...? சாக்கடை ஆனது
இந்நிலை மாறாதோ...! என

சிந்தித்தவளாய், நின்றுகொண்டிருக்கிறேன்
காலையில் ஓடும் சாக்கடை நீரின்
சலசலப்பை கேட்டவளாய்...


**ஆ. சூர்யா.**
இரண்டாம் ஆண்டு இயற்பியல் துறை





**E. Karpagam**
B.Sc., Physics III yr.


கண்ணுக்குள்ளே கலை நயம்



**S. Nivetha**
I M.Com.,







வண்ணத்துப்பூச்சியாய்
சிறகடித்தேன்
வன்முறையால்
மண்ணில் வீழ்ந்தேன்....


நிலவிலாவது
பெண்ணிற்கு
நிம்மதி
கிடைக்கட்டும்.....

**P. SANGEETHA**
I B.Sc., Botany TM


மனிதத்தை வென்ற புனிதம்



**B. Kiruthika**
II B.Com., II Shift




**S. Sowmiya**
B.Sc., Botany ist Year



எதுவும் சில காலம் !

கண்ணீரும் தான் ......

**S. Rajeswari**
II B.Sc., Chemistry



**K. Nivetha**
B.Sc., Physics 3rd Year



**M. Arulmozhi**
II B.Com., II Shift



**V. Sharon Sophia**
B.Sc., Physics 3rd year



**M. Pavithra**
I B.Com., I Shift



# பேரவை விழாக்கள்





பேரவைத் தொடக்க விழா

# சுதந்திர தின விழா





# குடியரசு தினவிழா





முதல்வர் உரை

## முத்தமிழ் விழா



**திரு. அ. கலியமூர்த்தி த.க.ப.**
முன்னாள் மவாட்ட காவல்துறை கண்காணிப்பாளர்
திருச்சிராப்பள்ளி

## இலக்கிய மன்ற விழா



முனைவர் **எம். மீனாட்சி** எம்.ஏ.பி.எட்.எம்.ஃபில், பி.எச்டி,
தமிழ் இணைப் பேராசிரியர்,
அரசு கலைக் கல்லூரி, கோவை

## நுண்கலை மன்ற விழா



முதல்வரின் தொடக்க விழா உரை



வேற்று மொழிகுழு நடனம்



கிராமிய குழு நடனம்

## இயற்பியல் துறை தேசிய கருத்தரங்கம்



# கல்லூரி ஆண்டு விழா





# பட்டமளிப்பு விழா









# நூலகர் தினம்




டாக்டர். K.S. **பழனிச்சாமி** IAS
மாவட்ட ஆட்சியர்



நூலகத்தின் சார்பாக நடத்தப்பட்ட பல்வேறு போட்டிகளில் வென்ற மாணவிகளுக்கு சிறப்பு விருந்தினர் மாவட்ட ஆட்சியர் பரிசுகள் வழங்கினார்.

# விளையாட்டு விழா




**முனைவர். க. வெங்கடாசலம்,** இயக்குநர்
உடற்கல்வித்துறை, பெரியார் பல்கலைக்கழகம்
சேலம்



மாணவிகள் கையிறு இழுத்தல் போட்டி





# பேரவை நிறைவு விழா










# மகளிர் தின விழா



திரு. **மணியம் அய்யா** அவர்கள்



திரு. **இராஜாத்தி அம்மையார்** அவர்கள்

# மன்ற விழாக்கள்

## தமிழ்த் துறை



**திரு. அ. கலியமூர்த்தி த.க.ப.**
முன்னாள் மவாட்ட காவல்துறை கண்காணிப்பாளர்
திருச்சிராப்பள்ளி

## ஆங்கிலத் துறை



## வரலாற்றுத்துறை



தொழிலதிபர் **M.M. ராமசாமி** அவர்கள்
கோவை




முதல்வர் குத்துவிளக்கு ஏற்றுகிறார்

## பொருளாதாரத் துறை



முனைவர். S. **ஜானகிராமன்**
உதவிப் பேராசிரியர், பொருளாதாரத்துறை, கோவை

## வணிகவியல் துறை




திரு. **மாரிமுத்துராஜ்**
மூத்த நிர்வாக மேலாளர், Tally Solutions Private Ltd, கோவை

## வணிகவியல் க.ப. துறை



முனைவர் **எஸ். தேவி**
முதல்வர், அரசு கலைக் கல்லூரி, பல்லடம்

## வணிக நிர்வாகவியல் துறை



முனைவர் **A. வேலன்** அவர்கள்
துறைத் தலைவர் வணிக நிர்வாகவியல்
அரசு கலைக்கல்லூரி, தர்மபுரி

## கணிதத் துறை



டாக்டர். **என். சிவக்குமார்** அவர்கள்
Asso. Prof of Maths, Hindustan Arts College, Cbe.

## இயற்பியல் துறை



முனைவ**ர். சந்திரா**
உதவிப் பேராசிரியர் மற்றும் துறைத்தலைவர்
சிக்கயநாயக்கர் கல்லூரி, ஈரோடு

## வேதியியல் துறை



டாக்டர் **பி. பொன் முத்துராமலிங்கம்**
முதல்வர்

## விலங்கியல் துறை



முனைவர். **ப. ஜெகநாதன்**
இயற்கை பாதுகாப்பு நிறுவனம்

# தாவரவியல் துறை



திரு. Rtn. MD. Dr. **சரண்**
TPresident, Rotary, Tirupur.

# நுண்ணுயிரியல் துறை



முனைவர் **க. பன்னீர் செல்வம்** அவர்கள்
உதவிப் பேராசிரியர் மற்றும் துறைத் தலைவர்
எம்.ஆர். அரசு கலைக் கல்லூரி, மன்னார்குடி

# மின்னனுவியல் துறை



டாக்டர். **மகேந்திரன்**
உதவி பேராசிரியர், அரசுக்கலைக் கல்லூரி, குளித்தலை

# இயற்பியல் மற்றும் கணினி பயன்பாட்டுத் துறை



டாக்டர். S. **ஹரிகிருஷ்ணா**
Medical Physics Bharathiar University, கோவை

# கணினி அறிவியல் துறை



திரு. **ஜெகதீஷ் செல்வராஜ்** அவர்கள்
நிறுவனர் மற்றும் சி.இ.ஓ.
We5 Solution Academy, Mumbai



இந்தியாவின் வேலை வாய்ப்புகள் 2020